அக்டோபர் - 2024

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

# நடப்பு நிகழ்வுகள்










**1. அண்மையில், மார்பர்க் வைரஸ் பாதித்ததாக அறிவித்த ஆப்பிரிக்க நாடு எது?**



அ. தான்சானியா

ஆ. கென்யா

இ. சோமாலியா

**ஈ. ருவாண்டா ☑**

★ அண்மையில், ருவாண்டாவில் மார்பர்க் வைரஸ் பாதித்ததால் ஆறு பேர் இறந்தனர். மார்பர்க் வைரஸ் நோய் (MVD) என்பது மனிதர்களையும் விலங்குகளையும் பாதிக்கும் அரிதான ஆனால் கடுமையான இரத்தக்கசிவு காய்ச்சலாகும். MVD ஆனது *Filoviridae* குடும்பத்தைச் சேர்ந்த எபோலா வைரஸைப் போலவே மார்பர்க் வைரஸால் ஏற்படுகிறது. இந்த வைரஸ் முதன்முதலில் 1967இல் ஜெர்மனியின் மார்பர்க் நகரத்தில் கண்டறியப்பட்டது; இது பாதிக்கப்பட்ட பச்சை குரங்குகளுடன் தொடர்புடையதாகும். ஆப்பிரிக்க பழ வௌவால்களே இவ்வைரஸின் முதன்மை ஓம்புயிரி ஆகும்; உடல் திரவங்களுடனான நேரடி தொடர்புமூலம் இது பரவுகிறது.

**2. ஐநா பாதுகாப்பு அவையில் இந்தியாவின் நிரந்தர உறுப்பினருக்கான முன்னெடுப்பை ஆதரித்த நாடு எது?**



அ. நேபாளம்

ஆ. இலங்கை

**இ. பூடான் ☑**

ஈ. மியான்மர்

★ ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 79ஆவது அமர்வின்போது, சீர்திருத்தப்பட்ட ஐநா பாதுகாப்பு அவையில் நிரந்தர இடம்பெறுவதற்கான இந்தியாவின் முன்னெடுப்புக்கு பூடான் பிரதமர் ஷேரிங் டோப்கே தனது வலுவான ஆதரவை தெரிவித்தார். இந்தியாவின் குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சி மற்றும் உலகளாவிய தெற்கில் உள்ள தலைமை இந்த அந்தஸ்துக்கு தகுதியானது என்று அவர் வலியுறுத்தினார். சமீபத்தில் குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளின் பிரிவில் பூடான் இடம்பெற்றது.

**3. அண்மைய தரவுகளின்படி, பிரதமர் சூர்யா கர்: மஃப்ட் பிஜிலி யோஜனாவின்கீழ் மேற்கூரை சூரியவொளி மின் ஆற்றல் உற்பத்தி நிறுவுந்திறனில் நாட்டிலேயே முன்னணியில் உள்ள மாநிலம் எது?**



**அ. குஜராத் ☑**

ஆ. இராஜஸ்தான்

இ. மத்திய பிரதேசம்

ஈ. கர்நாடகா

★ குஜராத் மாநிலத்தில் பிரதமர் மஃப்ட் பிஜிலி சோலார் யோஜனா திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள சூரியவொளித் தகடுகளை பிரதமர் நரேந்திர மோதி பார்வையிட்டார். பிரதமர் சூர்யா கர்: மஃப்ட் பிஜிலி சோலார் யோஜனாவானது நிதி மானியங்கள் மற்றும் எளிதான நிறுவலை வழங்குவதன்மூலம் மேற்கூரை சூரியவொளி மின்னுற்பத்தியை ஊக்குவிக்கிறது. இதன்மூலம் குடும்பங்கள் ஒவ்வொரு மாதமும் 300 அலகு வரை இலவச மின்சாரம் பெறலாம். 4,195 MW உடன் குஜராத் மாநிலம் முதலிடத்திலும், 2,487 MW உடன் மகாராஷ்டிரா இரண்டாமிடத்திலும், 1,269 MW உடன் ராஜஸ்தான் மூன்றாமிடத்திலும் உள்ளது. இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட மேற்கூரை சூரியவொளி மின்னுற்பத்தித் திறன் 13,889 MW ஆகும்.

**4. ஹெபடைடிஸ் E வைரஸின் (HEV) ரோகாஹெபெவைரஸ் ராட்டி வகையின் முதன்மை மூலம் எது?**



அ. பன்றிகள்

**ஆ. எலிகள் ☑**

இ. கொசுக்கள்

ஈ. பறவைகள்

★ "எலி HEV" என்று பொதுவாக அழைக்கப்படும் ரோகாஹெப் வைரஸ் ராட்டி திரிபானது முதன்மையாக எலிகளில் வாழ்கிறது மற்றும் மனிதர்களைப் பாதிக்கிறது என்று சமீபத்திய ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. 2018இல் அதன் முதல் மனித பாதிப்பு பதிவாகியது; அவை பெரும்பாலும் பச்சை பன்றி இறைச்சியின் நுகர்வுடன் இணைக்கப்படுகிறது. எலி HEV பன்றிகளைப்பாதித்து அவற்றில் பரவக்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஹெபடைடிஸ் E ஒரு குறிப்பிடத்தக்க உலகளாவிய சுகாதார பிரச்சினையாக உள்ளது.

**5. அண்மையில், தொழுநோயை ஒழித்த உலகின் முதல் நாடாக மாறிய நாடு எது?**

**அ. ஜோர்டான் ☑**

ஆ. இந்தியா

இ. கென்யா

ஈ. ரஷ்யா



★ தொழுநோயை ஒழித்த முதல் நாடாக ஜோர்டான் மாறியுள்ளதென உலக சுகாதார நிறுவனம் உறுதிசெய்துள்ளது. இந்தச் சாதனைக்கு விரிவான பொது சுகாதார பிரச்சாரங்கள், முன்கூட்டியே கண்டறிதல் முயற்சிகள் மற்றும் இலவச சிகிச்சை திட்டங்கள் காரணமாகக் கூறப்படுகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நோயின் பரவலைத் தடுப்பதிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் சமூகக்கல்வி முக்கியப்பங்காற்றியுள்ளது.

**6. சவுக்கு மரத்தின் பூர்வீக நாடு எது?**

அ. ரஷ்யா

**ஆ. ஆஸ்திரேலியா ☑**

இ. இலங்கை

ஈ. பிரான்ஸ்



★ கஜா புயல் தாக்கி ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாட்டின் வேதாரண்யத்தில், விவசாயிகள் சவுக்கு மரத்தின் முதல் அறுவடைக்குத் தயாராகி வருகின்றனர். ஆஸ்திரேலியாவைப் பூர்வீகமாகக் கொண்ட சவுக்கு மரம், 19ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டது. *Casuarina equisetifolia*, *glauca*, *cunninghamaina*, மற்றும் *junghuniana* அக்கையா 4 சவுக்கு இனங்கள் இந்தியாவில் பயிரிடப்படுகின்றன. அதன் நைட்ரஜனை நிலைநிறுத்தும் திறன் மற்றும் பல்வேறு மண் மற்றும் தட்பவெப்ப நிலைகளுக்கு ஏற்றவாறு தகவமைத்துக்கொள்வது போன்றவை அதனை நடவுசெய்வதற்கு ஏற்றதாக மாற்றுகிறது. சவுக்கு இனங்கள் வெப்பமண்டல, மிதவெப்ப மண்டல மற்றும் மத்திய தரைக்கடல் பகுதிகளில் நன்றாக வளரும். 10°C முதல் 33°C வரையிலான வெப்பநிலையிலும், 700–2000 மிமீ மழைப்பொழிவிலும் இது நான்கு செழித்து வளரும்.

**7. உணவு மற்றும் பொது வழங்கல் அமைச்சகத்தின் கூற்றுப்படி, உலக அளவில் எத்தனால் உற்பத்தி மற்றும் நுகர்வில் இந்தியாவின் தரநிலை என்ன?**

அ. 1ஆவது

ஆ. 2ஆவது

**இ. 3ஆவது ☑**

ஈ. 4ஆவது




★ முதன்மையாக கரும்பிலிருந்து பெறப்பட்ட எத்தனாலின் உலகின் மூன்றாவது மிகப்பெரிய உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோராக இந்தியா மாறியுள்ளது. உணவு மற்றும் பொது வழங்கல் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷியின் கூற்றுப்படி, கடந்த பத்தாண்டுகளில் கரும்பு சாகுபடி 18% அதிகரித்து, சர்க்கரை உற்பத்தியில் 40 சதவீதம் உயர்வுக்கு பங்களித்துள்ளது. குறைந்தபட்ச ஆதரவு விலைமூலம் அரசினாதரவு உழவர்களின் வருவாயை மேம்படுத்தியுள்ளது.

**8. "*Garra zubzaensis* மற்றும் *Psilorhynchus kosygini*" என்றால் என்ன?**



**அ. மீன் ☑**

ஆ. சிலந்தி

இ. தவளை

ஈ. நாய்

★ நாகாலாந்தில் இரு புதிய மீன் இனங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அவை, *Garra zubzaensis* மற்றும் *Psilorhynchus kosygini* ஆகும். இவை வேகமாக ஓடும் நீரோடைகளில் காணப்படும் சிறிய நன்னீர் மீன்களாம். *Garra zubzaensis* ஆனது கோஹிமாவில் பாயும் பிரம்மபுத்திராவின் துணையாறான சூப்சா ஆற்றில் காணப்பட்டது. *Psilorhynchus kosygini* ஆனது டெபுய்கி ஆற்றில் கண்டுபிடிக்கப்பட்டது; இது பெரெனில் உள்ள பராக் ஆற்றின் துணை ஆறாகும்.

**9. 2024 – ஜூனியர் உலக வுஷு சாம்பியன்ஷிப்பில் இந்தியா வென்ற பதக்கங்களின் எண்ணிக்கை எத்தனை?**



அ. 5

ஆ. 8

**இ. 7 ☑**

ஈ. 2

★ புருனேயில் நடைபெற்ற ஜூனியர் உலக வுஷு சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய அணி ஏழு (07) பதக்கங்களை வென்றது. இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது. ஆண்களுக்கான ஜூனியர் 48 கிகி பிரிவில் சீனாவின் காங் ஹுவான்ரானை வீழ்த்தி ஆர்யன் தங்கம் வென்றார். சிறுவர்களுக்கான 48 கிலோ (குழந்தைகள்) பிரிவில் ஈரானின் அலிரேசா ஜமானியை வீழ்த்தி சௌர்யா மற்றொரு தங்கம் வென்றார். தாவோலு ஜியான் ஷு சி குரூப் பிரிவில் நங் மிங்பி போர்புகன் வெள்ளிப்பதக்கம் வென்றார். 56 கிலோ பிரிவில் தனிஷ் நாகர் வெண்கலம் வென்றார். அபிஜீத் (60 கிலோ), திவ்யன்ஷி (60 கிலோ பெண்கள்), யுவராஜ் (42 கிலோ) ஆகியோர் வெண்கலப்பதக்கங்களையும் பெற்றனர். இதில் 24 பேர்கொண்ட இந்திய அணி பங்கேற்றது.

**10. செயற்கைக்கோள் சிதைவு நிகழ்வை ஆராய்வதற்காக அண்மையில் 'DRACO பணி'யை அறிவித்த விண்வெளி அமைப்பு எது?**



அ. ISRO

**ஆ. ESA ☑**

இ. NASA

ஈ. CNSA

★ ஐரோப்பிய விண்வெளி முகமையானது (ESA) 2027ஆம் ஆண்டில் DRACO (Destructive Reentry Assessment Container Object) என்ற செயற்கைக்கோளை அனுப்பவுள்ளது. செயற்கைக்கோள்கள் எவ்வாறு பிரிகின்றன என்பது குறித்த தரவுகளைச் சேகரிப்பதன்மூலம் விண்வெளிக் குப்பைகளைக் குறைக்க உதவுவதை DRACO நோக்கமாகக் கொண்டுள்ளது. வளிமண்டலத்துடனான பொருள் தொடர்புகள் உட்பட, மீண்டும் நுழைவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கத்தையும் இந்தப் பணி ஆய்வுசெய்யும். ஐரோப்பிய நிறுவனமான டீமோஸ் 200 கிகி எடைகொண்ட இந்தச் செயற்கைக்கோளை உருவாக்கவுள்ளது.

**11. அண்மையில், உலக தடகள கான்டினென்டல் டூரில் ஆடவருக்கான 5,000 மீட்டர் ஓட்டத்தில் தங்கப்பதக்கம் வென்றவர் யார்?**

**அ. குல்வீர் சிங் ☑**

ஆ. பிரகாஷ் தோமர்

இ. விஜேந்திர சர்மா

ஈ. யோகேஷ் குமார்



★ ஜப்பானில் நடந்த உலக தடகள கான்டினென்டல் டூரில் 5,000 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் 26 வயதான இந்திய வீரர் குல்வீர் சிங் தங்கப்பதக்கம் வென்றார். அவர் 13 நிமிடம் 11.82 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்து புதிய தேசிய சாதனையை படைத்தார். முன்னதாக மார்ச் மாதம், கலிபோர்னியாவில் 27 நிமிடங்கள் 41.81 வினாடிகளில் 10,000 மீ தேசிய சாதனையை அவர் படைத்தார். அவரது முயற்சி சுரேந்தர் சிங்கின் பதினாறு ஆண்டுகால சாதனையை முறியடித்தது.


**12. லெப்டோஸ்பிரோசிஸ் என்பது எந்த வகையான உயிரினத்தால் ஏற்படுகிறது?**

**அ. பாக்டீரியா ☑**

ஆ. வைரஸ்

இ. பூஞ்சை

ஈ. புரோட்டோசோவா



★ பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அண்மையில் லெப்டோஸ்பிரோசிஸ் (Leptospirosis) நோயால் பாதிக்கப்பட்டார். லெப்டோஸ்பிரோசிஸ் என்பது மனிதர்களையும் விலங்குகளையும் பாதிக்கும் ஒரு பாக்டீரியா நோயாகும்; இது பாதிக்கப்பட்ட விலங்கின் சிறுநீர் அல்லது அசுத்தமான சூழலில் தொடர்புமூலம் பரவுகிறது. இது வெட்டுக்காயங்கள் அல்லது சளிமூலம் உடலில் நுழையலாம். உலக சுகாதார அமைப்பு (WHO) இதை ஒரு குறிப்பிடத்தக்க (குறிப்பாக வெப்பமண்டல பகுதிகளில்) பொதுச் சுகாதார அச்சுறுத்தலாக அங்கீகரிக்கிறது. காய்ச்சல், தசைவலி, கடுமையான சந்தர்ப்பங்களில் கல்லீரல் பாதிப்பு ஆகியவை இந்நோயின் அறிகுறிகளாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சிறுசேமிப்புகளுக்கான வட்டி விகிதங்களில் மாற்றமில்லை.**

2024–25 நிதியாண்டின் 3ஆவது காலாண்டில் சிறுசேமிப்புகளுக்கான வட்டி விகிதம் மாற்றமில்லாமல் தொடரும் என மத்திய நிதியமைச்சகம் அறிவித்துள்ளது. இதன்படி அக்டோபர்.01 முதல் டிச.31 வரையிலான காலகட்டத்தில் முந்தைய மூன்று மாதங்களில் இருந்த வட்டி விகிதம் தொடரும். பெண் குழந்தைகளுக்கான செல்வமகள் சேமிப்புத் திட்டத்துக்கு 8.2 சதவீத வட்டி வழங்கப்படும். 3 ஆண்டு நிரந்தர வைப்புக்கான வட்டி விகிதம் 7.1 சதவீதமாக நீடிக்கும்.

பொது வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி 7.1%, அஞ்சலக சேமிப்புக் கணக்கு வட்டி 4 சதவீதமாகவே இருக்கும். 115 மாதங்களில் முதிர்வடையும் கிசான் விகாஸ் பத்திரத்துக்கான வட்டி 7.5% என்ற அளவில் தொடர்ந்து வழங்கப்படும். தேசிய சேமிப்புத் திட்டத்துக்கான வட்டி 7.7%ஆக தொடரும், மாதந்தோறும் வட்டி வழங்கப்படும் நிரந்தர வைப்புக்கு 7.4 சதவீதம் வட்டி கிடைக்கும் என்று நிதியமைச்சக அறிவிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

**2. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக ஷமீம் அகமது பொறுப்பேற்பு.**

அலாகாபாத் உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக பணியாற்றிய நீதிபதி ஷமீம் அகமது, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டார். இதைத் தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 67ஆக உயர்ந்துள்ளது. இருப்பினும், 8 நீதிபதி பணியிடங்கள் காலியாகவே உள்ளன.

---

**3. அக்டோபர்.01: தன்னார்வ இரத்த தான நாள்.**

இரத்ததானம் செய்தால் உடலில் புதிய செல்கள் உருவாகி தானம் செய்வோரின் உடல்நலனும் காக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இதற்கென 107 அரசு ரத்த மையங்களும், 247 தனியார் ரத்த மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இரத்த மையங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்காக 'e-RaktKosh' என்ற இணையதளமும் செயல்பாட்டில் உள்ளது. இந்தத் தளத்தில் முகாம் மற்றும் இரத்த கொடையாளர்கள் விவரங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

---

**4. அக்டோபர்.01: சர்வதேச முதியோர் நாள்.**

சர்வதேச முதியோர் நாளானது ஆண்டுதோறும் அக்டோபர்.01ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. "தலைமுறைகளுக்கு இடையேயான பிணைப்பு" என்கிற கருப்பொருளை மையமாகக்கொண்டு, முதியவர்களை மதித்து கவனித்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் ஒருமாதகால நிகழ்வுகளுக்கு நடுவண் அரசு திட்டமிட்டுள்ளது. "60இல் வாழ்க்கை தொடங்குகிறது" என்கிற தலைப்பில் ஒரு கலாசார நிகழ்வு அக்.24ஆம் தேதி நடைபெறவுள்ளது.

மூத்த குடிமக்களுக்கு உதவி சாதனங்களை வழங்கவும், அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்தவும், நாடு முழுவதும் 51 இடங்களில் "ராஷ்ட்ரிய வயோஸ்ரீ" முகாம்கள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

---


## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8


---

**1. NAMASTE திட்டத்துடன் தொடர்புடைய தொழிலாளர் குழு எது?**

அ. வேளாண் தொழிலாளர்கள்

**ஆ. தூய்மைப் பணியாளர்கள் ☑**

இ. சுகாதாரப் பணியாளர்கள்

ஈ. கட்டுமானத் தொழிலாளர்கள்

★ சாக்கடை & அழுகுத்தொட்டி தூய்மைப்படுத்தும் தொழிலாளர்களுக்கு உதவுவதற்கும், சாக்கடை தூய்மைப்படுத்தலை இயந்திரமயமாக்குவதற்கும் இந்திய அரசாங்கம் NAMASTE திட்டத்தை அறிமுகப்படுத்தியது. 38,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்களில் பட்டியலின சாதியிலிருந்து (SC) 68.9% பேரும், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிலிருந்து 14.7% பேரும் மற்றும் பட்டியல் பழங்குடியினரிலிருந்து 8.3% பேரும் இந்தப் பணியில் உள்ளனர். கையால் சுத்தஞ்செய்த காரணத்தால் 2019 மற்றும் 2023க்கு இடையில் மட்டும் 377 இறப்புகள் நிகழ்ந்துள்ளன. கையால் சுத்தஞ்செய்வதால் ஏற்படும் இறப்புகளைத் தடுப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2. அண்மையில், நகர்ப்புற ஆளுகைக் குறியீட்டில் முதலிடத்தைப் பிடித்த மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா ☑**

இ. கர்நாடகா

ஈ. மகாராஷ்டிரா

★ இந்தியாவிலுள்ள நகரங்களை மதிப்பிடும் பிரஜா அறக்கட்டளையின் நகர்ப்புற ஆளுகைக் குறியீட்டில் (UGI) கேரள மாநிலம் முதலிடம் பெற்றுள்ளது. 59.31/100 மதிப்பெண்கள் பெற்று, நிதி அதிகாரம் மற்றும் உள்ளூர் நிர்வாகத்தில் கேரளம் சிறந்து விளங்கியது. 55.10 மதிப்பெண்களுடன் ஒடிஸா மாநிலம் இரண்டாவது இடத்தைப் பிடித்தது. இது இந்தியா முழுவதும் நகர்ப்புற நிர்வாகத்தின் போட்டித்தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

**3. இந்தியாவில் கப்பல் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிபி போக்குவரத்து அமைச்சகத்தால் அண்மையில் தொடங்கப்பட்ட திட்டத்தின் பெயர் என்ன?**

அ. கலாஷ் திட்டம்

**ஆ. குரூஸ் பாரத் திட்டம் ☑**

இ. சமுத்ராயன் திட்டம்

ஈ. மேற்குறிப்பிட்ட எதுவும் இல்லை



★ மத்திய அமைச்சர் சர்பானந்த சோனோவால் குரூஸ் பாரத் மிஷனை 2024 செப்டம்பர்.30 அன்று மகாராஷ்டிராவின் மும்பையில் தொடக்கினார். சுற்றுலாவுக்கான உலகளாவிய மையமாக இந்தியாவை மாற்றுவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப்போக்குவரத்து அமைச்சகமானது பல்வேறு ஒழுங்குமுறை நிறுவனங்களின் உதவியுடன் இத்திட்டத்தைச் செயல்படுத்தும். இந்தத் திட்டம் 2024 அக்டோபர்.01 முதல் 2029 மார்ச்.31 வரை மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படும்.

**4. 'எரிபஸ்' மலை அமைந்துள்ள கண்டம் எது?**

அ. ஆஸ்திரேலியா ஆ. ஐரோப்பா

**இ. அண்டார்டிகா ☑** ஈ. ஆப்பிரிக்கா



★ அண்டார்டிகாவின் இரண்டாவது மிகப்பெரிய எரிமலையான எரிபஸ், எதிர்பாராதவிதமாக தங்கத்தூளைக் கக்கி, அறிவியலாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. பொதுவாக, எரிமலையானது நீராவி, வாயுக்கள் மற்றும் பாறைகளைக் கக்கும், ஆனால் இதிலிருந்து சிறிய படிகப்படுத்தப்பட்ட தங்கத்துகள்கள் வெளிவருகின்றன. இந்தத் துகள்கள் எரிமலையிலிருந்து 621 மைல் தொலைவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன; இதன் மதிப்பு சுமார் $6,000 (₹5 லட்சம்) ஆகும். மற்ற எரிமலைகள் வாயு அல்லது திரவ வடிவில் தங்கத்தை உற்பத்தி செய்யும்போது, எரிபஸ் மலை தனித்தன்மையுடன் காற்றில் பறக்கும் திடமான தங்கத்துகள்களை வெளியிடுகிறது.

### 5. இந்தியாவிற்கும் கீழ்க்காணும் எந்த நாட்டிற்கும் இடையே 'KAZIND' பயிற்சி நடத்தப்படுகிறது?



அ. எகிப்து

ஆ. ஆஸ்திரேலியா

**இ. கஜகஸ்தான் ☑**

ஈ. தஜிகிஸ்தான்

★ KAZIND பயிற்சியின் 8ஆவது பதிப்பு செப்.30 முதல் அக்.13 வரை உத்தரகண்ட் மாநிலம் ஆலியில் நடைபெறுகிறது. இது இந்தியாவுக்கும் கஜகஸ்தானுக்கும் இடையிலான வருடாந்திர கூட்டு இராணுவப்பயிற்சியாகும். இந்தியாவின் தரப்பில் குமான் படைப்பிரிவு மற்றும் இந்திய வான்படையைச்சேர்ந்த 120 பேர் பங்கேற்கின்றனர். கஜகஸ்தானின் குழுவில் தரைப்படை மற்றும் வான்வழித் தாக்குதல் துருப்புக்களின் பணியாளர்கள் உள்ளனர். இந்தப்பயிற்சியானது அரை–நகர்ப்புற மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான கூட்டு ராணுவ திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 6. மொராக்கோவில் ஒருங்கிணைப்பு செய்யப்படும் இந்தியாவில் உருவாக்கப்பட்ட கவச வாகனத்தின் பெயரென்ன?




அ. BMP-2

**ஆ. Wheeled Armoured Platform (WhAP) ☑**

இ. ஸ்ட்ரைக்கர்

ஈ. சர்வத்ரா

★ வீல்டு ஆர்மர்டு பிளாட்ஃபார்ம் 8x8 என்பது டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிட் மற்றும் மொராக்கோ ராயல் ஆர்ம்ட் ஃபோர்சஸ் ஆகியவற்றுக்கு இடையேயான உத்திசார் கூட்டாண்மையின் ஒருபகுதியாக மொராக்கோவின் காசா பிளாங்காவில் இறுதி ஒருங்கிணைப்புக்கு உட்பட்ட ஓர் இந்திய வாகனமாகும். இந்த இலகுரக கவச வாகனத்தால் துருப்புக்களைக் கொண்டுசெல்லமுடியும். கண்காணிப்பு உட்பட பல்வேறு செயல்களை இதனால் செய்யமுடியும்.

### 7. 2024–25இல் இந்தியாவின் நிதிப்பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) சதவீதத்தில் எவ்வளவு இருக்கும்?




அ. 5.6%

**ஆ. 4.9% ☑**

இ. 6.5%

ஈ. 3.8%

2024–25 நிதியாண்டில் இந்தியாவின் நிதிப்பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.9%ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது; இது 2023–24இல் 5.6%ஆகக்குறையும். வருவாய் மற்றும் செலவினங்களுக்கிடையே உள்ள இடைவெளியை வலியுறுத்தி, நிதிப்பற்றாக்குறையை ₹16,13,312 கோடியாகக் கட்டுப்படுத்த அரசு இலக்கு வைத்துள்ளது. அரசின் கடன் தேவைகள் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார ஆரோக்கியத்தைப் புரிந்துகொள்வதற்கு

நிதிப்பற்றாக்குறை முக்கியமானது; ஏனெனில் இது மொத்த செலவினத்திற்கும் மொத்த வருவாய்க்கும் இடையிலான வேறுபாட்டை பிரதிபலிக்கிறது.

**8. ஒவ்வோர் ஆண்டும், 'சர்வதேச முதியோர் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. அக்டோபர் 1 ☑**

ஆ. அக்டோபர் 2

இ. அக்டோபர் 3

ஈ. அக்டோபர் 4

★ 34ஆவது சர்வதேச முதியோர் நாள் 2024 அக்.01 அன்று அனுசரிக்கப்பட்டது. இந்த நாள் முதுமையின் சவால்கள் மற்றும் வாய்ப்புகளை எடுத்துக்காட்டுகிறது. இது முதியோரின் பங்களிப்புகளையும் ஞானத்தையும் அங்கீகரிக்கிறது. 65 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களை ஐநா வயது முதிர்ந்தோர் என வரையறுக்கிறது. இந்தியாவில் இந்த வரையறை 60 வயது அல்லது அதற்கு மேற்பட்டதாக உள்ளது. 1990ஆம் ஆண்டு ஐநா தீர்மானத்திற்குப் பிறகு, 1991 அக்.01 முதல் இந்நாள் அனுசரிக்கப்பட்டு வருகிறது. "Ageing with Dignity: The Importance of Strengthening Care and Support Systems for Older Persons Worldwide" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**9. தொட்டுணர முடியா கலாச்சார பாரம்பரியத்திற்கான UNESCO கூட்டமைப்பிடமிருந்து அண்மையில் அங்கீகாரம் பெற்ற யக்ஷகானா தொடர்பான நிறுவனம் எது?**

**அ. கெரமானே இடகுஞ்சி மகாகணபதி யக்ஷகா மண்டலி ☑**



ஆ. ஸ்ரீமாயா யக்ஷகானா கலாகேந்திரா


இ. யக்ஷகான குருகுலம்

ஈ. யக்ஷகானா ஆராய்ச்சி மையம்

★ 1934இல் மறைந்த கெரமானே சிவராம ஹெக்டேவால் நிறுவப்பட்ட கெரமானே இடகுஞ்சி மகாகணபதி யக்ஷகானா மண்டலிக்கு UNESCO அங்கீகாரமளித்துள்ளது. எதிர்கால சந்ததியினருக்கு கல்வி கற்பிப்பது மற்றும் யக்ஷகானத்தை வீழ்ச்சியிலிருந்து பாதுகாப்பது, அதன் பொருத்தத்தையும் உயிர்ச்சக்தியையும் உறுதிசெய்வதே இதன் நோக்கமாகும். யக்ஷகானா என்பது ஒரு பாரம்பரிய நாடக வடிவமாகும்; இது 11 மற்றும் 16ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் கடலோர கர்நாடகம் மற்றும் கேரளத்தின் சிலபகுதிகளில் தோன்றியது. வைஷ்ணவ பக்தி இயக்கத்தால் ஈர்க்கப்பட்ட இது நடனம், இசை, உரையாடல்கள், ஆடைகள் மற்றும் அதீத அலங்காரம் ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது.

**10. சமீபத்தில், 2022ஆம் ஆண்டிற்கான 'தாதாசாகேப் பால்கே வாழ்நாள் சாதனையாளர் விருது' பெற்றவர் யார்?**

அ. இரஜினிகாந்த்



**ஆ. மிதுன் சக்ரவர்த்தி ☑**

இ. கமல்ஹாசன்

ஈ. சத்யராஜ்

★ பழம்பெரும் நடிகர் மிதுன் சக்ரவர்த்தி 2022ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் மிகவுயரிய சினிமா விருதான "தாதாசாகேப் பால்கே வாழ்நாள் சாதனையாளர்" விருதைப் பெற்றார். திரைப்பட விழாக்களின் இயக்குநரகத்தால் ஆண்டுதோறும் தேசிய திரைப்பட விருதுகளில் வழங்கப்படுகிற இது, இந்திய சினிமாவுக்கு சிறந்த பங்களிப்புகளை வழங்கியோரை அங்கீகரிக்கிறது. இந்த விருது தங்கத்தாமரை, ₹10 லட்சம் ரொக்கப்பரிசு, சால்வை ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்திய சினிமாவின் தந்தை தாதாசாகேப் பால்கேவைக் கௌரவிப்பதற்காக இந்திய அரசால் நிறுவப்பட்ட இந்த விருது முதன்முதலில் 1969இல் நடிகை தேவிகா இராணிக்கு வழங்கப்பட்டது.

**11. அண்மையில், மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் தண்ணீரை பயனுள்ள வகையில் மறுபயன்பாடு செய்வதை ஊக்குவிப்பதற்காக, "ஜல் ஹி அமிர்தம்" என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ள அமைச்சகம் எது?**



அ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑

ஆ. ஜல் சக்தி அமைச்சகம்

இ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் தட்பவெப்பநிலை மாற்ற அமைச்சகம்

★ வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் தரத்தை மேம்படுத்துவதற்கும் நகர்ப்புறங்களில் அதன் மறுசுழற்சியை மேம்படுத்துவதற்கும், 'AMRUT 2.0'இன்கீழ், "ஜல் ஹி அமிர்தம்" திட்டத்தைத் தொடங்கியது. நல்ல தரமான மறுசுழற்சி செய்யக்கூடிய தண்ணீரை உற்பத்தி செய்வதற்காக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிர்வகிக்க மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை ஊக்குவிப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. நகரங்களுக்கிடையே போட்டியை வளர்ப்பதற்கும், பயனுள்ள நீர்மேலாண்மைக்கான அவற்றின் திறன்களை மேம்படுத்துவதற்கும் இது சுத்தமான நீர் வழங்கு அமைப்பை அறிமுகப்படுத்துகிறது.

**12. அண்மையில் இந்தியாவால் அறிமுகப்படுத்தப்பட்ட உலகின் முதல் அரசாங்க நிதியுதவியுடன்கூடிய பன்முகட்டு பெருமொழி போல்மத்தின் (Multimodal Large Language Model) பெயர் என்ன?**



அ. அந்த்ரிக்ஷ்

ஆ. GTS-5

**இ. பாரத்ஜென் ☑**

ஈ. இந்தியாPT5

★ பொதுச்சேவை வழங்கல் மற்றும் குடிமக்களின் ஈடுபாட்டை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட, 'பாரத்ஜென்' AIஐ மத்திய அமைச்சர் Dr ஜிதேந்திர சிங் புது தில்லியில் தொடங்கினார். இது உலகின் முதல் அரசாங்க நிதியுதவி பெறும் பன்முகட்டு பெருமொழி போல்மமாகும்; இது இந்திய மொழிகளில் திறமையான மற்றும் உள்ளடக்கிய AIஐ உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது. இந்தத்திட்டம் முடிவடைய ஈராண்டுகள் ஆகும். அரசு, தனியார், கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இது பயனளிக்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழ்நாடு 13 துறைகளில் தேசிய அளவில் முதலிடம்.**

வறுமை ஒழிப்பு, சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, பெண்கள் நலன் உள்ளிட்ட 13 துறைகளில் தமிழ்நாடு தேசிய அளவில் முதலிடம் வகிப்பதாக நடுவணரசின் NITI ஆயோக் புள்ளிவிவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுமட்டும் இன்றி, மத்திய அரசின் புள்ளியியல் துறை சார்பில் வெளியான புள்ளிவிவரத்தில் இந்தியாவில் அதிக தொழிற்சாலை நிறுவல்களைக்கொண்ட மாநிலம் தமிழ்நாடு எனவும், வேலைவாய்ப்பு வழங்குவதிலும் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**2. ஐந்து பேருக்கு காந்தியடிகள் காவலர் விருது: தமிழ்நாடு அரசு.**

மதுவிலக்கு அமலாக்கப் பணியில் சிறப்பாகச் செயல்பட்ட ஐந்து பேருக்கு காந்தியடிகள் காவலர் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த விருதுடன், பரிசுத்தொகையாக ஒவ்வொருவருக்கும் ₹40 ஆயிரம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3. தமிழ்நாடு முழுவதும் இன்று (அக்.02) கிராமசபைக்கூட்டங்கள்.**

காந்தி ஜெயந்தியையொட்டி, தமிழ்நாடு முழுவதும் கிராமசபைக் கூட்டங்கள் (அக்.2) நடைபெறவுள்ளன. இதற்கான அறிவுறுத்தல்களை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. கிராமசபைக் கூட்ட நிகழ்வுகளை, 'நம்ம கிராம சபை' என்னும் திறன்பேசி செயலிமூலம் பதிவேற்றம் செய்ய வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

---

**4. பேறுகால உயிரிழப்புகளைத் தடுக்க சிறப்பு செயலாக்கக் குழு: அரசாணை வெளியீடு.**

தமிழ்நாட்டில் பேறுகால உயிரிழப்பு விகிதம் 1 லட்சம் பிரசவங்களுக்கு 45.5 என்ற விகிதத்தில் உள்ளது. அதனைக் கட்டுப்படுத்தற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகிறது. தேசிய நலவாழ்வு குழும இயக்குநரகத்தின் பரிந்துரையின்படி, மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலரைத் தலைவராகக் கொண்ட பதினெட்டு பேர்கொண்ட குழு அமைக்கப்படவுள்ளது. இதேபோன்று மாவட்ட அளவில் ஆட்சியர் தலைமையில் 10 பேர்கொண்ட குழு அமைக்கப்படும்.

---

**5. தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பில் தமிழ்நாடு முதலிடம்.**

2022–23 நிதியாண்டில் தொழிற்சாலைகள் குறித்த மதிப்பீட்டறிக்கையில் அதிக தொழிற்சாலைகள் கொண்டதிலும், அதிக வேலைவாய்ப்புகளை வழங்கியதிலும் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பது NITI ஆயோக் புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறன், மதிப்புக் கூட்டுதல், வேலைவாய்ப்பு, மூலதன உருவாக்கம் போன்றவற்றின் அடிப்படையில், தொழிற்சாலைகள் குறித்த மதிப்பீட்டு அறிக்கை ஆண்டுதோறும் தயாரிக்கப்படுகிறது. இந்த ஆய்வு அறிக்கையில் 2022–23ஆம் ஆண்டின் விலை நிலவரம் அடிப்படையில், மொத்த மதிப்பு கூட்டுதல் (GVA) அதற்கு முந்தைய (2021–22) ஆண்டைவிட 7.3% அதிகரித்துள்ளது. இக்காலகட்டத்தில் உள்ளீட்டுப் பொருள்களின் அளவு 24.4 சதவீதம் அதிகரித்துள்ளது. அதே சமயத்தில், உற்பத்திப் பொருளின் அளவு 21.5 சதவீதம் அதிகரித்துள்ளதாக ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

மதிப்புக்கூட்டுதலில் மகாராஷ்டிர மாநிலம் முதலிடத்தை வகிக்கிறது. அடுத்து இரண்டாவது, மூன்றாவது இடத்தில் முறையே குஜராத், தமிழ்நாடு உள்ளன. அதிக நபர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கிய மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடு (15%) முதலிடத்தில் உள்ளது. மற்ற மாநிலங்கள் முறையே மகாராஷ்டிரம் (12.8%), குஜராத் (12.6%), உத்தர பிரதேசம், கர்நாடகம் ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

---

**6. இராணுவ மருத்துவப்பிரிவில் முதல் பெண் இயக்குநர் பொறுப்பேற்பு.**

இந்திய இராணுவ மருத்துவச் சேவைகளின் முதல் பெண் இயக்குநராக கடற்படை துணைத்தளபதியும் மருத்துவருமான ஆர்த்தி சரின் பொறுப்பேற்றுக்கொண்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது. மருத்துவப் பணியாளர்களுக்குப் பாதுகாப்பான பணியிடச் சூழலை உறுதிப்படுத்துவதற்கு உச்சநீதிமன்றத்தால் அண்மையில் அமைக்கப்பட்ட தேசிய பணிக் குழுவில் ஆர்த்தி சரின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. சமூக நீதி & அதிகாரமளித்தல் துறை மற்றும் NALSA ஆகியவற்றால் அண்மையில் தொடங்கப்பட்ட, 'SARTHIE 1.0' என்ற முன்னெடுப்பின் நோக்கம் என்ன?**

அ. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பது

**ஆ. விழிப்புணர்வு மற்றும் சட்ட உதவியின்மூலம் பின்தங்கிய சமூகங்களுக்கு அதிகாரமளிப்பது ☑**

இ. இந்தியாவில் சுற்றுலாவை ஊக்குவிப்பது

ஈ. இளைஞர்களிடையே டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்துவது

★ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையும் தேசிய சட்ட சேவைகள் ஆணையமும் இணைந்து பின்தங்கிய சமூகங்களான பட்டியலின சாதிகள், 3ஆம் பாலினத்தோர் மற்றும் நாடோடி பழங்குடியினரை மேம்படுத்துவதற்காக 'SARTHIE 1.0' என்ற முன்னேப்பை அறிமுகப்படுத்தியுள்ளன.

★ சமூகநலத்திட்டங்களை திறம்பட அணுகுவதை ஊக்குவிப்பதற்காக விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் சட்ட ஆதரவை வழங்குவது இந்த முன்னெடுப்பின் நோக்கமாகும். இது சமூக நீதியை முன்னேற்றுவதற்கு நிர்வாக மற்றும் நீதித்துறைக்கு இடையேயான ஒத்துழைப்பை எளிதாக்குகிறது. NALSA ஆனது 1987இன் சட்ட சேவைகள் அதிகாரசபை சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டது. இது தகுதியான நபர்களுக்கு இலவச சட்ட சேவைகளை வழங்குகிறது மற்றும் மக்கள் நீதிமன்றத்தை நடத்துகிறது.

**2. அண்மையில், மிகவும் அருகிவிட்ட இருவாழ்விகளான, *Micrixalus spelunca* மற்றும் *Nyctibatrachus indraneili* ஆகிய இரண்டும் காணப்பட்ட புலிகள் காப்பகம் எது?**

அ. களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம்

ஆ. ஆனைமலை புலிகள் காப்பகம்

**இ. முதுமலை புலிகள் காப்பகம் ☑**

ஈ. சத்தியமங்கலம் புலிகள் காப்பகம்



★ முதுமலை புலிகள் சரணாலயத்தில் மிகவும் அருகிவிட்ட இருவாழ்வி இனங்களான, *Micrixalus spelunca* (குகையில் ஆடும் தவளை) மற்றும் *Nyctibatrachus indraneili* (இரவு தவளை) ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முதுமலை புலிகள் காப்பகமானது தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ளது; இது நீலகிரி உயிர்க்கோள காப்பகத்தின் ஒருபகுதியாகும். இந்த உயிர்க்கோள காப்பகத்தில் கேரள மாநிலத்தில் உள்ள வயநாடு வனவிலங்கு சரணாலயம், கர்நாடகத்தின் பந்திப்பூர் தேசியப்பூங்கா, தமிழ்நாட்டின் முக்கூர்த்தி தேசியப்பூங்கா மற்றும் அமைதிப்பள்ளத்தாக்கு ஆகியவை அடங்கும்.

**3. அண்மையில், "உலக வளர்ச்சி அறிக்கையை" வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. உலக வங்கி ☑**

ஆ. IMF

இ. FAO

ஈ. UNEP

★ உலக வங்கியின் சமீபத்திய உலக வளர்ச்சி அறிக்கை நடுத்தர வருமானப் பொறியில் கவனம் செலுத்துகிறது; தற்போது இந்தப்பொறியிலிருக்கும் பொருளாதாரங்கள் முன்னேற்றம் அடைய கிட்டத்தட்ட 75 ஆண்டுகள் ஆகலாம் என்பதை அது எடுத்துக்காட்டுகிறது. கடந்த 1987 முதல், உலக வங்கி பொருளாதாரங்களை நான்கு வகைகளாக வகைப்படுத்தியுள்ளது: உயர் வருமானம், மேல் நடுத்தர வருமானம், குறைந்த நடுத்தர வருமானம் மற்றும் குறைந்த வருமானம். அதிக வருமானங்கொண்ட நாடுகள் 41இலிருந்து 86ஆக இரட்டிப்பாகும் அதே வேளையில், குறைந்த வருமானங்கொண்ட நாடுகள் 49இலிருந்து 26ஆக குறைந்துள்ளன.

★ தற்போது, 108 நடுத்தர வருமான நாடுகள் உள்ளன; உலக மக்கள்தொகையில் 75% மற்றும் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 38% அவை பங்களிப்பு செய்கின்றன.

**4. கிட்டத்தட்ட இரு மாதங்களுக்குப் பூமியைச் சுற்றிவரவுள்ள, அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட, 'சிறு திங்களின்' பெயர் என்ன?**



அ. 2024 PT5 ☑

ஆ. அர்ஜுனா

இ. சாஸ்த்ரா

ஈ. NEO 2024

★ "2024 PT5" என்பது பூமியின் ஈர்ப்புவிசையால் அண்மையில் உள்ளிழுக்கப்பட்ட ஒரு சிறு சிறுகோள் ஆகும்; இது தோராயமாக 53 நாட்களுக்கு பூமியைச் சுற்றிவரும். "அர்ஜுனா சிறுகோள் பாதை" எனப்படும் சிறுகோள்களின் குழுவைச் சேர்ந்தது இது. இந்த நிகழ்வானது அறிவியல் ஆய்வுக்கு ஓர் அரிய வாய்ப்பை வழங்குகிறது. இந்தச் சிறு கோளை வெறுங்கண்ணால் காணமுடியாத அளவுக்கு மங்கலானதாக இருக்கும். 2024 நவ.25 அன்று பூமியின் சுற்றுப்பாதையிலிருந்து அது வெளி செல்லும்.

**5. அண்மையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிதியுதவி எவ்வளவு?**



அ. 600 கோடி ரூபாய்

**ஆ. 675 கோடி ரூபாய் ☑**

இ. 700 கோடி ரூபாய்

ஈ. 750 கோடி ரூபாய்

★ வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குஜராத், மணிப்பூர் மற்றும் திரிபுரா மாநிலங்களுக்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ₹675 கோடி வழங்க நடுவணரசு ஒப்புதலளித்துள்ளது. கனமழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக குஜராத்துக்கு ₹600 கோடியும், மணிப்பூருக்கு ₹50 கோடியும், திரிபுராவுக்கு ₹25 கோடியும் கிடைக்கும். உள்துறை அமைச்சகம் இந்த மாநிலங்களுக்கு உதவுவதற்கான உறுதிப்பாட்டை வலியுறுத்தியது. அஸ்ஸாம், மிசோரம், கேரளா, நாகாலாந்து, ஆந்திர பிரதேசம், தெலுங்கானா மற்றும் பீகார் உள்ளிட்ட பிற மாநிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

**6. NITI ஆயோக் ஆனது கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் பெண்கள் தொழில்முனைவோர் தளத்தின் முதல் மாநில அத்தியாயத்தை அறிமுகப்படுத்தியது?**




அ. தெலுங்கானா ☑

ஆ. கேரளா

இ. மகாராஷ்டிரா

ஈ. ஒடிசா

★ NITI ஆயோக் தெலுங்கானாவில் பெண்கள் தொழில்முனைவோர் தளத்தின் (WEP) முதல் மாநில அத்தியாயத்தை அறிமுகப்படுத்தியது. இது WE Hub மற்றும் மாநில அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் செய்யப்பட்டது. நிதிப்பற்றாக்குறை மற்றும் வழிகாட்டுதல்போன்ற பிரச்சினைகளை சமாளிப்பதன்மூலம் இந்தத் தளம் பெண் தொழில்முனைவோருக்கு ஆதரவளிக்கிறது. இது டிஜிட்டல் திறன்கள், நிதிச்சேவைகள் மற்றும் சந்தை இணைப்புகளில் கவனஞ்செலுத்துகிறது. 30,000க்கும் மேற்பட்ட பெண் தொழில்முனைவோர் மற்றும் 400 வழிகாட்டிகள் இந்தத் தளத்தின் ஒருபகுதியாக உள்ளனர். WE Hub மாநிலத்தில் WEP தொடர்பான செயல்பாடுகளை வழிநடத்தும்.

**7. ஐந்நூறு மீட்டர் துளை கோள தொலைநோக்கி (FAST) அமைந்துள்ள நாடு எது?**

அ. ஆஸ்திரேலியா

ஆ. ரஷ்யா

**இ. சீனா ☑**

ஈ. இந்தியா



★ ஐந்நூறு மீட்டர் துளை கோள தொலைநோக்கியை (Five–Hundred Aperture Spherical Telescope) விரிவுபடுத்தும் இரண்டாம்கட்ட பணியை சீனா தொடங்கியுள்ளது. குய்ஷோ மாகாணத்தில் அமைந்துள்ள FAST, 500 மீட்டர் விட்டம் மற்றும் 30 கால்பந்து மைதானங்களுக்கு சமமான ஒரு பெறும்பகுதிகொண்ட உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் உணர்திறன்கொண்ட ரேடியோ தொலைநோக்கி ஆகும்.

★ நடுநிலை ஹைட்ரஜனைக் கண்டறிதல், துடிப்பு விண்மீன் கண்டறிதல், புவியீர்ப்பு அலை கண்டறிதலில் பங்கேற்பது மற்றும் வேற்றுலக நுண்ணறிவைத் தேடுதல் ஆகியவை இதன் இலக்குகளில் அடங்கும். உயர்தெளிவுத்திறன் கொண்ட வானாய்வுகளுக்காக FAST பன்னாட்டு வலையமைப்புகளிலும் இணைகிறது. ஆஸ்திரேலியாவில் உள்ள ICRAR மற்றும் ஐரோப்பிய தென் கூர்நோக்ககம் ஆகியவற்றுடன் இணைந்து தரவமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**8. அண்மையில், இந்தியாவின் முதல் மீ மின்தேக்கி உற்பத்தி நிலையம் திறக்கப்பட்டுள்ள இடம் எது?**

**அ. கண்ணூர், கேரளா ☑**

ஆ. இந்தூர், மத்திய பிரதேசம்

இ. சென்னை, தமிழ்நாடு

ஈ. நாசிக், மகாராஷ்டிரா



★ கேரள மாநிலத்தின் கண்ணூரில் அமைந்துள்ள கெல்ட்ரானில் இந்தியாவின் முதல் மீ மின்தேக்கி (super capacitor) உற்பத்தி ஆலையை கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் திறந்து வைத்தார். ISROஇன் ஒத்துழைப்புடன் ₹42 கோடி முதலீட்டில் இந்த ஆலை உருவாக்கப்பட்டுள்ளது. இது கேரளாவின் மின்னணு தொழிற்துறையை மேம்படுத்தும், பாதுகாப்பு மற்றும் மின்சார வாகனங்கள்போன்ற துறைகளை ஆதரிக்கும். நாள்தோறும் 2,000 மீ மின்தேக்கிகளை உற்பத்தி செய்வதை இலக்காகக் கொண்ட இந்த ஆலை உலகளாவிய தரத்தை பூர்த்திசெய்கிறது.

**9. 2025–26ஆம் ஆண்டுக்குள் தேசிய சமையல் எண்ணெய் – பனையெண்ணெய் (NMEO–OP) திட்டத்தின்கீழ், எத்தனை லட்சம் லிட்டர் கச்சா பனையெண்ணெய் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது?**

அ. 5 இலட்சம் டன்

**ஆ. 11.20 இலட்சம் டன் ☑**

இ. 2.50 இலட்சம் டன்

ஈ. 16.50 இலட்சம் டன்



★ NMEO–OPஇன்கீழ் நிலையான எண்ணெய்ப்பனை சாகுபடிகுறித்த தேசிய அளவிலான ஆலோசனை அரங்கம் சமீபத்தில் நடைபெற்றது. இந்தியாவில் எண்ணெய்ப்பனை சாகுபடி மற்றும் கச்சா பனையெண்ணெய் உற்பத்தியை மேம்படுத்துவதுகுறித்து இந்த அரங்கம் கவனம் செலுத்தியது. தேசிய சமையல் எண்ணெய் – பனையெண்ணெய் (NMEO–OP) திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நிலையான நடைமுறைகள் மற்றும் உத்திகள்பற்றி விவாதிக்க பல்வேறு பங்குதாரர்களை இது உள்ளடக்கியிருந்தது.

★ எண்ணெய்ப்பனை சாகுபடி மற்றும் கச்சா பனையெண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கோடு 2021 ஆகஸ்டில் இந்தியாவால் NMEO–OP தொடங்கப்பட்டது. இது வடகிழக்குப்பகுதி மற்றும் அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளில் கவனம் செலுத்துகிறது. இத்திட்டத்தின் நிதிச்செலவு நடுவணரசின் ₹8,844 கோடியையும் சேர்த்து ₹11,040

கோடியாகும். 2025–26ஆம் ஆண்டுக்குள் எண்ணெய்ப்பனை சாகுபடியை 3.5 இலட்சம் ஹெக்டேரிலிருந்து 10 இலட்சம் ஹெக்டேராகவும், கச்சா பனையெண்ணெய் உற்பத்தியை 11.20 இலட்சம் டன்னாகவும் உயர்த்த இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### 10. அன்ன தர்பன் அமைப்புடன் தொடர்புடைய அமைப்பு எது?

அ. NITI ஆயோக்

**ஆ. இந்திய உணவுக்கழகம் (FCI) ☑**

இ. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம்

ஈ. APEDA

★ இந்திய உணவுக்கழகம் அதன் டிஜிட்டல் மாற்றத்திட்டமான அன்ன தர்பனுக்கான கணினி ஒருங்கிணைப்பாளராக கோ.ஃபோர்ஜ் நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது. ஊடாடும், பயனர் நட்பு வடிவமைப்புடன் விநியோகச் சங்கிலி நிர்வாகத்தை நெறிப்படுத்தவும் மேம்படுத்தவும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது உத்திசார்ந்த மற்றும் செயல்பாட்டு முடிவுகளை ஆதரிக்க தரவு பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தும். இந்தத் திட்டம் திறன்பேசியிலிருந்து அணுகுவதற்கு முன்னுரிமை அளிப்பதோடு உள் மற்றும் வெளிப்புற அமைப்புகளை ஒருங்கிணைக்கும்.

### 11. இந்திய இராணுவத்தால் நடத்தப்படும், "சாணக்யா பாதுகாப்பு உரையாடல் – 2024"இன் கருப்பொருள் என்ன?

**அ. Drivers in Nation Building: Fuelling Growth through Comprehensive Security ☑**




ஆ. India's Path to Viksit Bharat

இ. Securing India and Indo-Pacific Region

ஈ. Innovations in Military Technology

★ இந்திய ராணுவம், நில போர் ஆய்வுகள் மையத்துடன் இணைந்து, 'சாணக்யா பாதுகாப்பு உரையாடல்–2024'இன் இரண்டாவது பதிப்பை, "தேசத்தைக் கட்டமைப்பதில் ஓட்டுநர்கள்: விரிவான பாதுகாப்பின்மூலம் வளர்ச்சியைத் தூண்டுதல்" என்ற கருப்பொருளில் நடத்தவுள்ளது. இந்த நிகழ்வு, 2024 அக்டோபர்.24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் புது தில்லியில் நடத்தப்படும்.

★ "2047ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த பாரதத்திற்கான இந்தியாவின் பாதையை மேம்படுத்துதல்" என்ற கருப்பொருளில் ராணுவத்தளபதி உபேந்திர திவிவேதி தமது எண்ணங்களை கலந்துரையாடலில் பகிர்ந்துகொண்டார். சாணக்யா பாதுகாப்பு பேச்சுவார்த்தை ஆழமான விவாதங்களுக்கு வழிவகுக்கும், உத்திசார் கூட்டாண்மைகளை வளர்க்கும் மற்றும் தேசிய பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான செயல் நுண்ணறிவுகளை உருவாக்குவதில் பங்களிக்கும். தேசிய மற்றும் பன்னாட்டுத் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் துறைசார் வல்லுநர்கள் தங்கள் நிபுணத்துவத்தை பகிர்ந்துகொள்ளவும், வளர்ச்சியின்மூலம் பாதுகாப்புகுறித்த சொற்பொழிவில் பங்களிக்கவும் இது ஒரு தளத்தை வழங்கும்.

### 12. அண்மையில், அஸ்ஸாமின் போடோ சமூகத்தினரால் உற்பத்தி செய்யப்படும் எந்தப் பாரம்பரிய பானத்திற்கு புவிசார் குறியீடு கிடைத்தது?

அ. போடோ டோன்பா

**ஆ. போடோ ஜோ குவ்ரன் ☑**



இ. போடோ அபோர்

ஈ. போடோ அரோனை

- ★ சென்னையில் உள்ள புவிசார் குறியீடுகள் பதிவகம் அஸ்ஸாமில் உற்பத்தி செய்யப்படும் எட்டுத்தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடுகளை வழங்கியுள்ளது. இதில் 16.11% மதுசாரங்கொண்ட அரிசியில் உற்பத்தி செய்யப்படும் பொங்கு மதுவகையான, 'போடோ ஜோ குவ்ரன்' மற்றும் புளித்த மீனுணவான 'போடோ நாபம்' ஆகியவை அடங்கும்.
- ★ சிவபெருமானின் வழித்தோன்றல்கள் என நம்பப்படும் போடோ சமூகம், அரிசியில் உற்பத்தி செய்யப்படும் பொங்கு மதுவைக் காய்ச்சும் மற்றும் உட்கொள்ளும் ஒரு நீண்ட நெடிய வழக்கத்தைக் கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழ்நாட்டில் மகப்பேறு இறப்பு விகிதம் குறைவு.**

மகப்பேறு இறப்பு விகிதம் இந்திய அளவில் 1 லட்சம் பேருக்கு 72 என உள்ள நிலையில், தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு 55ஆக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஓராண்டுக்குள் 55லிருந்து 46ஆகக்குறைந்துள்ளது. நடப்பாண்டில் ஒரே ஆண்டில் 9ஆகக் குறைந்துள்ளது. தமிழ்நாட்டில் முழுமையாக மகப்பேறு இறப்பு இல்லாத மாவட்டங்களாக விழுப்புரமும், விருதுநகரும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**2. SC., ST மாநில ஆணைய தலைவர் நியமனம்.**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் தலைவராக ஓய்வுபெற்ற நீதிபதி S. தமிழ்வாணன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் 3 ஆண்டுகளுக்கு தலைவராகச் செயல்படுவார்.

---


# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. Volatiles Investigating Polar Exploration Rover (VIPER) திட்டத்துடன் தொடர்புடைய விண்வெளி நிறுவனம் எது?**



அ. ISRO

**ஆ. NASA ☑**

இ. CNSA

ஈ. ESA

★ தாமதம் மற்றும் அதிக செலவுகள் காரணமாக NASA Volatiles Investigating Polar Exploration Rover (VIPER) திட்டத்தை இரத்து செய்தது. இரத்து செய்வதற்குமுன் VIPER முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டு பகுதியளவுக்குச் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது. நீர்க்கட்டி மற்றும் பிற வளங்களுக்காக திங்களின் தென்துருவத்தை ஆராய்வது NASAஇன் இந்தத் திட்டத்தின் நோக்கமாக இருந்தது. VIPER திட்டமானது, இந்தியாவை உள்ளடக்கிய அமெரிக்க தலைமையிலான ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கையின் ஒருபகுதியாக இருந்தது.

**2. தூய்மை இந்தியா இயக்கம்–நகர்ப்புறம் 2.0 ஆனது கீழ்க்காணும் எந்த ஆண்டுக்குள் பேற்று நிலநிரப்பல்களை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது?**

அ. 2025

**ஆ. 2026 ☑**

இ. 2027

ஈ. 2028

★ 2021ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தூய்மை இந்தியா இயக்கம்–நகர்ப்புறம் 2.0, 2025–2026 காலகட்டத்திற்குள் இந்தியாவிலுள்ள அனைத்து பேற்று நிலநிரப்பல்களையும் அகற்றுவதை இலக்காகக் கொண்டுள்ளது. தற்போதைய நிலவரப்படி, 2,421 பேற்று நிலநிரப்பல்களில் 474 அகற்றப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட 2,617 ஏக்கர் நிலமானது பூங்கா மற்றும் ஒருங்கிணைந்த கழிவுமேலாண்மைத் திட்டங்கள்போன்ற மாற்றுப் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆமதாபாத், நாக்பூர், புனே மற்றும் லக்னோ போன்ற நகரங்கள் நகர்ப்புற வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையில் இத்திட்டத்தின் தாக்கத்தை வெளிப்படுத்தும் விதமாக இத்தளங்களை மாற்றியமைத்துள்ளன.

**3. RoDTEP (ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மீதான சுங்கங்கள் மற்றும் வரிகளைக் குறைத்தல்) திட்டத்துடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**

அ. நிதி அமைச்சகம்

ஆ. வெளியுறவு அமைச்சகம்

**இ. வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் ☑**

ஈ. வேளாண் அமைச்சகம்

★ RoDTEP (ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மீதான சுங்கங்கள் மற்றும் வரிகளைக் குறைத்தல்) திட்டமானது உள்நாட்டு கட்டண வீத பகுதி (DTA) அலகுகளுக்கு 2025 செப்.30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 2021 ஜனவரியில் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட RoDTEP, ஏற்றுமதியாளர்களின் சுங்கங்கள் மற்றும் வரிகளை திருப்பிச் செலுத்துகிறது. உலகளாவிய வர்த்தக விதிகளுக்கு இணங்காததற்காக உலக வர்த்தக அமைப்பில் சவால் செய்யப்பட்ட Merchandise Exports from India Scheme (MEIS)க்கு மாற்றாக இந்தத்திட்டம் உள்ளது. உற்பத்தி மற்றும் விநியோகத்தின் போது ஏற்படும் செலவுகளுக்கு ஏற்றுமதியாளர்கள் இழப்பீடு பெறுவதை RoDTEP உறுதிசெய்கிறது.

**4. "எதிர்கால தொற்றுநோய்க்கான தயார்நிலை & அவசரகால பதிலளிப்பு–செயல்பாட்டிற்கான ஒரு கட்டமைப்பு" என்ற தலைப்பிலான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?**

அ. NITI ஆயோக் ☑

ஆ. இந்திய ரிசர்வ் வங்கி

இ. இந்திய உணவுக் கழகம்

ஈ. அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் குழுமம்

★ "எதிர்கால தொற்றுநோய்க்கான தயார்நிலை மற்றும் அவசரகால பதிலளிப்பு – செயல்பாட்டிற்கான ஒரு கட்டமைப்பு" என்ற தலைப்பிலான நிபுணர் குழு அறிக்கையை NITI ஆயோக் வெளியிட்டுள்ளது. எதிர்கால பொதுச் சுகாதார அவசர நிலைகளுக்கு விரைவாக பதிலளிப்பதற்கான ஒரு செயல்திட்டத்தை இந்த அறிக்கை வழங்குகிறது.

★ COVID–19 என்பது கடைசி தொற்றுநோய் அல்ல எனவும்; எதிர்கால அச்சுறுத்தல்களில் 75% விலங்குவழி பரவல் நோய்களாகவே இருக்கலாம் என இந்த அறிக்கை கூறுகிறது. தொற்றுநோய்களுக்கான நூறு நாள் பதிலளிப்பு திட்டத்தை வழங்குகிற இந்த அறிக்கை, நிர்வாகம், தரவு மேலாண்மை மற்றும் கூட்டாண்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. சட்டத்தை வலுப்படுத்துதல், கண்காணிப்பு மற்றும் திறனை வளர்ப்பதை இது பரிந்துரைக்கிறது. எதிர் கால பாதிப்புகளை திறம்பட நிர்வகிப்பதை இந்தக் கட்டமைப்பு தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.


**5. அண்மையில், எந்த நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், விழித்திரை கண்ணீர் மற்றும் நீரிழிவால் ஏற்படும் விழித் திரை அழிவுக்கான சிகிச்சை முறையை உருவாக்கியுள்ளனர்?**

அ. ஐஐடி பம்பாய்

ஆ. ஐஐடி தில்லி

இ. ஐஐடி மெட்ராஸ் ☑

ஈ. ஐஐடி கான்பூர்



★ மெட்ராஸ் ஐஐடியின் ஆராய்ச்சியாளர்கள், விழித்திரையில் மருந்து உள்ளிடலை மேம்படுத்துதற்காக லேசான லேசர் தூண்டப்பட்ட வெப்பச்சலனத்தைப் பயன்படுத்தி விழித்திரை கண்ணீர் மற்றும் நீரிழிவால் ஏற்படும் விழித்திரை அழிவு நோய்க்குச் சிகிச்சையளிப்பதற்கான ஒரு புதிய முறையைக் கண்டுபிடித்துள்ளனர். இந்தப் புதுமையான அணுகுமுறை இந்தியாவில் விழித்திரை கோளாறுகளுள்ள சுமார் பதினொரு மில்லியன் மக்களுக்குப் பயனளிக்கும். தற்போது, லேசர் அடிப்படையிலான நுட்பங்கள் விழித்திரை கண்ணீர், நீரிழிவு நீரிழிவால் ஏற்படும் விழித்திரை அழிவு, விழிப்புள்ளி திரவக்கோர்வை மற்றும் விழித்திரை நரம்படைப்புபோன்ற நிலைமைகளுக்கு சிகிச்சையளிக்க பயன்படுத்தப்படுகின்றன.

**6. ஆண்டுதோறும் நடைபெறும் இந்திய கடற்படை மாநாடான 'இந்தோ–பசிபிக் பிராந்திய உரையாடல்–2024'இன் கருப்பொருள் என்ன?**

அ. Resource-Geopolitics and Security in the Indo-Pacific ☑

ஆ. Evolving Maritime Strategies within the Indo-Pacific

இ. Operationalising the Indo-Pacific Oceans Initiative

ஈ. Geopolitical Impacts Upon Indo-Pacific Maritime Trade and Connectivity

★ 2024 – இந்தோ–பசிபிக் பிராந்திய உரையாடல் என்பது புது தில்லியில் நடைபெற்ற வருடாந்திர இந்திய கடற்படை மாநாடு ஆகும். இந்த மாநாட்டின் கருப்பொருள், "இந்தோ–பசிபிக் பகுதியில் வள–புவிசார் அரசியல் மற்றும் பாதுகாப்பு" என்பதாகும். இந்தோ–பசிபிக் பிராந்திய உரையாடல் என்பது இந்திய–பசிபிக் கடல்சார் பாதுகாப்பைப்பற்றி விவாதம் மேற்கொள்ளும் சர்வதேச மூலோபாய ஈடுபாட்டிற்கான இந்தியக் கடற்படையின் முக்கிய தளமாகும்.

★ இந்த ஆண்டின் மாநாடு புவிசார் அரசியலில் பாரம்பரிய மற்றும் புதிய கடல்சார் வளங்களின் தாக்கத்தை எடுத்துக் காட்டுகிறது; எதிர்கால புவிசார் அரசியலை வடிவமைக்கும் ஹைட்ரோ–கார்பன்கள்போன்ற கடல்சார் ஆற்றல் வளங்களில் இது கவனம் செலுத்துகிறது.

**7. கனரக தொழில்துறை அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட, 'PM E–DRIVE' திட்டத்தின் நோக்கம் என்ன?**

**அ. மின்சார வாகன (EV) பயன்பாட்டை ஊக்குவிப்பது மற்றும் மின்னேற்ற உள்கட்டமைப்பை நிறுவுவது ☑**

ஆ. பொதுப்போக்குவரத்து பயன்பாட்டைக் குறைப்பது



இ. பெட்ரோல் வாகன உற்பத்தியை அதிகரிப்பது

ஈ. மேற்கூறியவை எதுவுமில்லை

★ மத்திய கனரக தொழில்துறை அமைச்சகமானது PM Electric Drive Revolution in Innovative Vehicle Enhancement (PM E–DRIVE) என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது. இந்தத் திட்டம் மின்சார வாகன (EV) பயன்பாட்டை ஊக்குவிப்பது மற்றும் மாசில்லா போக்குவரத்திற்காக நாடு முழுவதும் அத்தியாவசிய மின்னேற்ற (charging) உள்கட்டமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மின்சார இருசக்கர வாகனங்கள், முச்சக்கர வாகனங்கள், அவசர ஊர்திகள், சரக்குந்துகள் மற்றும் பிற வளர்ந்துவரும் EVகளுக்கான மானியங்கள் இந்தத் திட்டத்தின் முக்கிய கூறுகளில் அடங்கும். ஈராண்டுகளில் ₹10,900 கோடி நிதிச்செலவில், அதிக EV பயன்பாடு உள்ள நகரங்களில் பொது மின்னேற்ற நிலையங்கள் நிறுவப்படும்.

**8. அண்மையில், மக்கள் திட்ட பரப்புரையைத் (ஜன்–யோஜனா அபியான்) தொடங்கியுள்ள அமைச்சகம் எது?**

அ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஆ. வேளாண் அமைச்சகம்

पंचायती राज मंत्रालय
Ministry of Panchayati Raj

**இ. பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் ☑**

ஈ. உள்துறை அமைச்சகம்

★ பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் ஜன்–யோஜனா அபியான் எனப்படும் மக்கள் திட்ட பரப்புரையைத் தொடங்கியுள்ளது. 'சப்கி யோஜனா சப்கா விகாஸ்' என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டுள்ள இப்பரப்புரையானது, 2025–26க்கான கிராமப்பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதில் கவனம் செலுத்துகிறது. 2.55 லட்சம் கிராமப் பஞ்சாயத்துகளில் சிறப்பு கிராமசபைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அடிமட்ட ஜனநாயகத்தை வலுப்படுத்துவதும், கிராமப்புற இந்தியாவில் உள்ள அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

**9. முப்பத்து மூன்று (33) ஊர்வன இனங்கள் மற்றும் முப்பத்து ஆறு (36) இருவாழ்வி இனங்கள் பதிவுசெய்யப்பட்ட ஊர்வன–இருவாழ்வி கணக்கெடுப்பு நடத்தப்பட்ட புலிகள் காப்பகம் எது?**

அ. ஆனைமலை புலிகள் காப்பகம்




**ஆ. முதுமலை புலிகள் காப்பகம் ☑**

இ. சத்தியமங்கலம் புலிகள் காப்பகம்

ஈ. களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம்

★ தற்போது, 'MTR மசினகுடி பிரிவு' என்று அழைக்கப்படும் முதுமலை புலிகள் காப்பகத்தில் அண்மையில் ஊர்வன–இருவாழ்வி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அப்போது அறிவியலுக்குப் புதியதும், பல்லுயிரிகளும் கண்டறியப்பட்டன. கடல்மட்டத்திலிருந்து 300 முதல் 2,000 மீ உயரத்தில் உள்ள வாழ்விடங்களை இக்கணக்கெடுப்பு உள்ளடக்கியது. இது 33 ஊர்வன இனங்களையும், 36 இருவாழ்வி இனங்களையும் இனம் கண்டுள்ளது; அதில் பல்வேறு இனங்கள் மேற்குத்தொடர்ச்சிமலைகளைப் பூர்வீகமாகக் கொண்டவை.

**10. அண்மையில், "உலக பசுமைப்பொருளாதார மன்றம்" தொடங்கப்பட்ட இடம் எது?**

**அ. துபாய் ☑**

ஆ. புது தில்லி

இ. பாரிஸ்

ஈ. லண்டன்




★ சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ளும் நோக்கோடு உலகளாவிய தலைவர்களை ஒன்றிணைக்கும் உலக பசுமைப் பொருளாதார மன்றம் துபாயில் தொடங்கப்பட்டது. ஷேக் முகமது பின் ரஷீத் அல் மக்தூமின் ஆதரவின்கீழ், "Empowering Global Action: Unlocking Opportunities and Advancing Progress" என்பதாகும். தட்பவெப்பநிலை தணிப்புக்கான பன்னாட்டு ஒத்துழைப்பு மற்றும் வளங்குன்றா வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறைகள் குறித்து இதன் அமர்வுகள் கவனஞ்செலுத்தின.


**11. 2025ஆம் ஆண்டு கோ–கோ உலகக்கோப்பையை நடத்துகிற நாடு எது?**

**அ. இந்தியா ☑**

ஆ. நேபாளம்

இ. பூடான்

ஈ. சீனா



★ கோ–கோ உலகக்கோப்பைப் போட்டியானது எதிர்வரும் 2025இல் இந்தியாவில் நடைபெறுமென இந்திய கோ–கோ கூட்டமைப்பும் பன்னாட்டு கோ–கோ கூட்டமைப்பும் அறிவித்தன. இந்நிகழ்வில் 6 கண்டங்களைச்சேர்ந்த 24 நாடுகள் பங்கேற்கின்றன; இதில் ஆடவர் மற்றும் மகளிர் என 16 அணிகள் பங்கேற்கின்றன. கோ–கோவை ஊக்குவிக்க, KKFI ஆனது 10 நகரங்களில் உள்ள 200 பள்ளிகளில் கோ–கோவை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

**12. 25ஆவது இருவாச்சி திருவிழாவிற்காக வேல்சுடன் கூட்டிணைந்துள்ள மாநில அரசு எது?**

அ. அஸ்ஸாம்

ஆ. மிசோரம்

**இ. நாகாலாந்து ☑**

ஈ. மணிப்பூர்



★ 25ஆவது இருவாச்சி திருவிழாவிற்காக நாகாலாந்து மாநிலம் வேல்ஸை பங்குதாரராக ஒப்பந்தம் செய்துள்ளது. நாகாலாந்து மாநில முதலமைச்சர் நெய்பியு ரியோ தனது வேல்ஸ் பயணத்தின்போது, வேல்ஸ் அரசு, பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் வேல்ஸ் ஆர்ட்ஸ் இன்டர்நேஷனல் ஆகியவற்றுடன் இணைந்து இந்த ஒப்பந்தத்தை அறிவித்தார். இது, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதையும், பொதுமக்களிடையேயான தொடர்பை மேம்படுத்துவதையும், இளையோர்க்கான வாய்ப்புகளை உருவாக்குவதையும் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மு. மேத்தா, பி. சுசீலாவுக்கு கலைத்துறை வித்தகர் விருது.**

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டு நினைவினைப் போற்றிடும் வகையில் கவிஞர் மு. மேத்தா, பின்னணிப்பாடகி பி. சுசீலா ஆகியோருக்கு, "கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர்" விருதை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. தமிழ்த்திரையுலகில் சிறந்து விளங்கிடும் வாழ்நாள் சாதனையாளர்களைப் போற்றிப் பாராட்டிடும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில், "கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருது" ஒவ்வோர் ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான ஜூன்.03ஆம் நாளான்று வழங்கப்படும் என்றும், தேர்ந்தெடுக்கப்படும் விருதாளர்களுக்கு ₹10 லட்சமும், நினைவுப்பரிசும் வழங்கப்படும் என்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சகம் கடந்த 2022ஆம் ஆண்டு அறிவித்தது.

---

**2. வனவிலங்கு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு அவசியம்: வனத்துறை அமைச்சகம்.**

நாடு முழுவதும் ஆண்டுதோறும் அக்.2 முதல் அக்.8 வரை ஒரு வாரம் வனவுயிரின வாரமாக வனத்துறையினரால் கொண்டாடப்பட்டு வருகிறது. இதில், வனவிலங்குகளை பாதுகாப்பது குறித்தும், மனித–விலங்கு மோதல்களை தடுப்பது குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டின் நிலப்பரப்பில் தற்போது 20.31% வனப்பகுதி உள்ளது. தமிழ்நாட்டில் தற்போது 5 தேசியப்பூங்காக்கள், 17 வனவுயிரின சரணாலயங்கள், 17 பறவைகள் சரணாலயங்கள், 3 உயிர்கோள பாதுகாப்பு பெட்டகங்கள் மற்றும் 5 புலிகள் காப்பகம் ஆகியவை உள்ளன. 2017–18ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் மொத்தம் 2,761 யானைகள் இருந்த நிலையில், 2024ஆம் ஆண்டில் யானைகளின் எண்ணிக்கை 3,063ஆக உயர்ந்துள்ளது. அதன்படி, கடந்த ஐந்து ஆண்டுகளில் 302 யானைகள் அதிகரித்துள்ளன. அதேபோல், 2022–23 ஆண்டுகளின் தரவுகளின்படி தமிழ்நாட்டு வனப்பகுதிகளில் இருக்கும் புலிகளின் எண்ணிக்கை 306ஆக உயர்ந்துள்ளது.

---

**3. 72 விமானங்களின் கண்கவர் சாகச ஒத்திகை.**

இந்திய வான்படை தொடங்கப்பட்டு 92ஆவது ஆண்டு நிறைவைக்கொண்டாடும் வகையில், மெரீனா கடற்கரையில், அக்.06ஆம் தேதி பிரம்மாண்ட விமான சாகச நிகழ்ச்சி நடைபெற்றது.

---

**4. TN Alert செயலி.**

வானிலை முன்னெச்சரிக்கை, மழையின் அளவு, ஏரிகளில் நீர் இருப்பு நிலவரம் உள்ளிட்டவை குறித்து அறிய, "TN Alert" என்ற செயலியை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது.

---

**5. அக்.05: 'தனிப்பெருங்கருணை நாள்':: திருவருட்பிரகாச வள்ளலாரின் பிறந்தநாள்.**

---

**6. அனைத்து அரசுப்பள்ளிகளிலும், 'மகிழ் முற்றம்' மாணவர் அமைப்பு: ₹2 கோடியில் செயல்படுத்த முடிவு.**

அனைத்து அரசுப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே தலைமைப்பண்பை வளர்க்கும் வகையில் மாணவர் குழு அமைப்பு, 'மகிழ் முற்றம்' என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

**திட்டத்தின் நோக்கம்:** குழுவாக இணைந்து செயல்படுதல், சமூக மனப்பான்மை, வேற்றுமைகள் இல்லாத பரஸ்பர ஆதரவு ஆகியவை மாணவர் குழு அமைப்பின் முதன்மை நோக்கமாகும். அனைத்து அரசுப்பள்ளிகளிலும் மாணவர் குழு அமைப்பை, 'மகிழ் முற்றம்' என்ற பெயரில் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

# IMPORTANT LINKS

TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

WINMEEN: INSTALL THE WINMEEN APP
DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. 26ஆவது நீர், ஆற்றல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் கண்காட்சி (WETEX) நடத்தப்பட்ட இடம் எது?**

அ. சென்னை

**ஆ. துபாய் ☑**

இ. கோயம்புத்தூர்

ஈ. மாஸ்கோ

★ துபாயில் அமைந்துள்ள உலக வர்த்தக மையத்தில் நடைபெற்ற 26ஆவது நீர், ஆற்றல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் கண்காட்சியில் (WETEX) 29 முன்னணி இந்திய நிறுவனங்கள் பங்கேற்கின்றன. துபாய் மின்சாரம் மற்றும் நீர் ஆணையத்தால் (DEWA) ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், நீர் சுத்திகரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் தொழில்நுட்பங்களில் புதுமைகளை வெளிப்படுத்தும் வகையில் அக்.03 வரை நடைபெறுகிறது. 2022 மே மாதத்தில் ஏற்பட்ட விரிவான பொருளாதாரக் கூட்டாண்மை ஒப்பந்தத்திற்குப் பிறகு ஐக்கிய அரபு அமீரகம்–இந்தியா பொருளாதார உறவு மிகவும் வலுப்பெற்றுள்ளது. இவ்விரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக அளவு $84.5 பில்லியனை எட்டும் என்றும் 2027ஆம் ஆண்டில் $100 பில்லியனாக அது இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2. புளூட்டோவின் எந்த நிலவில், கரியமில வாயு ($CO_2$) மற்றும் ஹைட்ரஜன் பெராக்சைடு ($H_2O_2$) வாயுக்கள் இருப்பதை அறிவியலாளர்கள் அண்மையில் கண்டறிந்துள்ளனர்?**

**அ. சரோன் ☑**



ஆ. நிக்ஸ்

இ. ஹைட்ரா

ஈ. கெர்பரோஸ்

★ புளூட்டோவின் மிகப்பெரிய நிலவான சரோனில் கரியமில வாயு (CO2) மற்றும் ஹைட்ரஜன் பெராக்சைடு (H2O2) வாயுக்கள் இருப்பதை அறிவியலாளர்கள் அண்மையில் கண்டறிந்தனர். 1,214 கிமீ விட்டத்துடன் புளூட்டோவில் பாதி அளவுடைய சரோன், கடந்த 1978இல் கண்டுபிடிக்கப்பட்டது. இது கிரேக்க புராணங்களில் இறந்த ஆத்மாக்களின் படகு வீரரின் பெயரால் அழைக்கப்படுகிறது. சரோனின் நிறை புளூட்டோவின் பத்தில் ஒரு பங்கிற்கு மேல் உள்ளது, அது இரட்டை குள்ளக்கோள் அமைப்பை உருவாக்குகின்றது. புளூட்டோவிற்கும் சரோனுக்கும் இடையிலான தூரம் 19,640 கிமீ ஆகும். சரோன் ஆனது புளூட்டோவை 6.4 பூமி நாட்களில் சுற்றிவருகிறது.

**3. அண்மையில், இந்தியாவின் கடல்சார் கரிமநீக்க மாநாடு நடைபெற்ற இடம் எது?**

அ. பெங்களூரு



**ஆ. புது தில்லி ☑**

இ. ஹைதராபாத்

ஈ. சென்னை

★ மத்திய துறைமுக அமைச்சகமும் ஆசிய வளர்ச்சி வங்கியும் இணைந்து நடத்திய இந்தியாவில் கடல்சார் கரிமநீக்க மாநாடு புது தில்லியில் நடந்து முடிந்தது. பசுமையான கப்பல் போக்குவரத்து மற்றும் வளங்குன்றா துறைமுக செயல்பாடுகளின் முக்கியத்துவத்தை இது வலியுறுத்தியது. இது இந்தியாவின் கடல்சார் துறையை உலகளாவிய தட்பவெப்பநிலை இலக்குகளுடன் ஒருங்கமைப்பதை நோக்கமாகக்கொண்டது. ஹரித் சாகர் பசுமை துறைமுக வழிகாட்டுதல்கள் மற்றும் 2070ஆம் ஆண்டுக்குள் நிகர சுழிய கரியமில வாயு உமிழ்வை அடைவதற்கான இலக்கு போன்ற முன்முயற்சிகளைப்பற்றியும் இம்மாநாடு விவாதித்தது.

**4. இந்தியாவில் இளையோரின் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்காக நடுவணரசு தொடங்கியுள்ள புதிய திட்டத்தின் பெயர் என்ன?**




அ. PM உள்ளகப் பயிற்சி திட்டம் ☑

ஆ. இளையோர் அதிகாரமளிக்கும் முன்னெடுப்பு

இ. டிஜிட்டல் உள்ளகப் பயிற்சி திட்டம்

ஈ. திறன் இந்தியா திட்டம்

★ பிரதமர் உள்ளகப் பயிற்சி திட்டமானது (PM Internship Scheme) அண்மையில் இந்தியாவில் உள்ள இளையோர்க்கு வேலைவாய்ப்பை மேம்படுத்தும் வகையில் வணிகச்சூழல்களில் நடைமுறை அனுபவத்தை அளிக்கும் வகையில் தொடங்கப்பட்டது. ஐந்தாண்டுகளில் முன்னணி 500 நிறுவனங்களில் சுமார் 1 கோடி இளையோருக்கு உள்ளகப் பயிற்சி வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகமானது இணைய நுழைவின்மூலம் இச்சோதனைத் திட்டத்தை மேற்பார்வையிடும். பயிற்சியாளர்கள் அரசாங்கத்திடமிருந்து ₹4,500 மாதாந்திர உதவித்தொகையைப் பெறுவார்கள்; மேலும் CSRமூலம் நிறுவனங்களிடமிருந்து ₹500 பெறுவார்கள். பிரதமர் ஜீவன் ஜோதி பீமா யோஜனா மற்றும் பிரதமர் சுரக்ஷா பீமா யோஜனா ஆகியவற்றின்கீழ், ஒருமுறை வழங்கப்படும் ₹6,000 மானியமும் காப்பீடும் வழங்கப்படும்.

**5. மத்திய அரசின் நிதியுதவித் திட்டங்களின்மூலம் வேளாண்மை அமைச்சகத்தின்கீழ் உருவாக்கப்பட்ட இரண்டு குடைத்திட்டங்கள் யாவை?**

அ. பிரதமர் ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா (PM-RKVY) மற்றும் கிரிஷோன்னதி யோஜனா (KY) ☑



ஆ. எண்ணெய் வித்துக்கள் மற்றும் டிஜிட்டல் வேளாண்மைக்கான தேசிய திட்டம்

இ. பிரதமர் கிஸ்ஸான் சம்மன் நிதி மற்றும் பிரதமர் ஃபசல் பீமா யோஜனா

ஈ. மண் சுகாதார மேலாண்மை மற்றும் தேசிய தோட்டக்கலை திட்டம்

★ பிரதமர் தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக்கூட்டத்தில், வேளாண் & உழவர்கள் அமைச்சகத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மத்திய அரசு பொறுப்பேற்கும் அனைத்து திட்டங்களையும் பிரதமரின் ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் திட்டம், உணவு விடுதி திட்டம் மற்றும் கிரிஷோன்னதி திட்டம் ஆகிய இரண்டு குடைத்திட்டங்களாக சீரமைப்பதற்கான வேளாண் மற்றும் உழவர்கள் நலத்துறையின் முன்மொழிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

★ பிரதம அமைச்சரின் ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் திட்டம் நீடித்த வேளாண்மையை ஊக்குவிக்கும். அதேநேரத்தில் கிரிஷோன்னதி திட்டம், உணவுப்பாதுகாப்பு மற்றும் விவசாய தன்னிறைவு குறித்து பேசும். பல்வேறு கூறுகளின் திறமையான & திறம்பட்ட அமலாக்கத்தை உறுதிசெய்ய அனைத்து கூறுகளும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும். பிரதமரின் ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் திட்டம், கிரிஷோன்னதி திட்டம் ஆகியவை மொத்தம் முன்மொழியப்பட்ட ₹1,01,321.61 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இத்திட்டங்கள் மாநில அரசுகள்மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

★ திட்டங்களைச் சீரமைப்பதன்மூலம், மாநிலத்தின் வேளாண்மைத் துறைகுறித்த விரிவான செயல்முறைத் திட்ட ஆவணத்தை முழுமையான முறையில் தயாரிக்க மாநிலங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இந்த உத்திசார் ஆவணம் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனில் கவனம் செலுத்துவதோடு மட்டுமல்லாமல், பருவநிலை நெகிழ்திறன் வேளாண்மை மற்றும் வேளாண் பொருட்களுக்கான மதிப்புச் சங்கிலி அணுகுமுறையை உருவாக்குதல் போன்ற வளர்ந்து வரும் பிரச்சினைகளையும் கையாள்கிறது.

**6. ஆயுதப்படை மருத்துவ சேவைகளின் (DG AFMS) தலைமை இயக்குநராகப் பணியாற்றிய முதல் பெண் அதிகாரி யார்?**



அ. பரிஷா சந்தோஷி

ஆ. புனிதா அரோரா

இ. ஆர்த்தி சரின் ☑

ஈ. ஷாலிசா தாமி

★ அறுவை சிகிச்சை நிபுணர் வைஸ் அட்மிரல் ஆர்த்தி சரின், ஆயுதப்படை மருத்துவ சேவைககளின் (DG AFMS) தலைமை இயக்குநராகப் பணியாற்றிய முதல் பெண்மணி ஆனார். DG AFMS ஆனது ஆயுதப்படைகளுக்கான மருத்துவக்கொள்கை விஷயங்களை மேற்பார்வையிடுகிறது மற்றும் மத்திய பாதுகாப்பு அமைச்சகத்திற்கு அறிக்கை செய்கிறது. இந்தப் பதவிக்கு வருவதற்குமுன், அவர் கடற்படை மற்றும் வான்படைக்கான DG மருத்துவ சேவைகள் மற்றும் புனே ஆயுதப்படை மருத்துவக்கல்லூரியின் இயக்குநர் உட்பட முக்கிய பதவிகளை வகித்தார். அவரது 38 ஆண்டுகால வாழ்க்கையில், அவர் இந்திய ஆயுதப்படையின் மூன்று கிளைகளிலும் பணியாற்றினார். 2024இல் 'அதி விஷிஸ்ட் சேவா' பதக்கம் உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

**7. உள்நாட்டு எரிசக்தித் திறனை அதிகரிப்பதற்காக, இந்தியா, கீழ்க்காணும் எதனுடன் இணைந்துள்ளது?**

அ. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் தூய்மையான தொழில்நுட்பத்திற்கான சங்கம்

**ஆ. பன்னாட்டு எரிசக்தி திறன் மையம் ☑**

இ. அமெரிக்க எரிசக்தித் துறை

ஈ. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனம்

★ பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை, எரிசக்தி திறன் மையத்தில் இந்தியா உறுப்பினராவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. கடந்த 2020இல் நிறுவப்பட்ட இந்த உலகளாவிய தளம், உலகம் முழுவதும் எரிசக்தி செயல்திறனை ஊக்குவிக்கிறது. இந்த மையம் அறிவு, சிறந்த நடைமுறைகள் மற்றும் புதுமையான தீர்வுகளைப் பகிர்ந்துகொள்ள அரசுகள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் தனியார்துறை நிறுவனங்களை ஒன்றிணைக்கிறது. இந்த மையத்தில் இணைவதன்மூலம், வல்லுநர்கள் மற்றும் வளங்களின் பரந்த வலையமைப்பிற்கான அணுகலை இந்தியா பெறும், இது அதன் உள்நாட்டு எரிசக்தி திறன் முன்முயற்சிகளை மேம்படுத்த உதவும்.

★ 2024 ஜூலை நிலவரப்படி, பதினாறு நாடுகள் (அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, டென்மார்க், ஐரோப்பிய ஆணையம், பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான், கொரியா, லக்சம்பர்க், ரஷ்யா, சவுதி அரேபியா, அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம்) மையத்தில் இணைந்துள்ளன. இந்த மையத்தின் உறுப்பினர் என்ற முறையில், மற்ற உறுப்புநாடுகளுடன் ஒத்துழைப்பு, தனது சொந்த நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளில் இருந்து கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள்மூலம் இந்தியா பயனடையும். எரிசக்தி திறன் கொண்ட தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளை ஊக்குவிப்பதன்மூலம் காலநிலை மாற்றத்தை நிவர்த்தி செய்வதற்கான உலகளாவிய முயற்சிகளுக்கும் நாடு பங்களிக்கும். இந்த மையத்தை செயல்படுத்தும் அமைப்பாக இந்தியாவின் சார்பில் எரிசக்தி திறன் மேம்பாட்டு அமைப்பு (BEE) நியமிக்கப்பட்டுள்ளது.

**8. அண்மையில், நடுவணரசால் கீழ்க்காணும் எந்தெந்த மொழிகளுக்கு செம்மொழித்தகுதி வழங்கப்பட்டுள்ளது?**

**அ. மராத்தி, பாலி, பிராகிருதம், அஸ்ஸாமி மற்றும் வங்காளம் ☑**




ஆ. உருது, கொங்கனி மற்றும் மைதிலி

இ. பஞ்சாபி, டோக்ரி, நேபாளி மற்றும் போடோ

ஈ. காஷ்மீரி மற்றும் மெய்டே

★ பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், மராத்தி, பாலி, பிராகிருதம், அஸ்ஸாமி, வங்காளம் ஆகிய மொழிகளுக்குச் செம்மொழித் தகுதி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. 2004 அக்.12 அன்று "செம்மொழிகள்" என்ற புதிய பகுப்பை உருவாக்க நடுவணரசு முடிவுசெய்தது. இதையடுத்து செம்மொழித்தகுதிக்கு முன்மொழியப்பட்ட மொழிகளை ஆய்வுசெய்ய 2004 நவம்பரில் சாகித்திய அகாதமியின்கீழ் கலாச்சார அமைச்சகத்தால் மொழியியல் வல்லுநர்கள் குழு அமைக்கப்பட்டது. 2005 நவம்பரில் அளவுகோல்கள் திருத்தப்பட்டன. இதன் பின்னர் மத்திய அரசு, இதுவரை கீழ்க்கண்ட மொழிகளுக்கு செம்மொழித்தகுதியை வழங்கியுள்ளது: தமிழ் – 12/10/2004, சமற்கிருதம் – 25/11/2005, தெலுங்கு & கன்னடம் – 31/10/2008, மலையாளம் – 08/08/2013, ஒடியா–01/03/2014.

★ **செம்மொழிகளுக்கான மாநிலங்கள்:** மகாராஷ்டிரா (மராத்தி), பீகார், உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம் (பாலி, பிராகிருதம்), மேற்கு வங்கம் (வங்காளம்), அஸ்ஸாம் (அஸ்ஸாமி) ஆகியவை சம்பந்தப்பட்ட முதன்மை மாநிலங்கள்.

**9. அண்மையில், இந்தியாவுடன் இணைந்த, "பன்னாட்டு மருத்துவ சாதன ஒழுங்குமுறை மன்றத்தின்" நோக்கம் என்ன?**

அ. மருத்துவச் சுற்றுலாவை ஊக்குவிப்பது

**ஆ. மருத்துவச் சாதன விதிமுறைகளைச் சீரமைப்பது ☑**

இ. மருத்துவச் சாதனங்களை உற்பத்தி செய்வது

ஈ. மேற்கூறிய எதுவும் இல்லை

★ மத்திய சுகாதாரம் & குடும்பநல அமைச்சகத்தின்கீழ் இயங்கும் மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பானது பன்னாட்டு மருத்துவச் சாதன ஒழுங்குமுறை மன்றத்தின் இணை உறுப்பினரானது. பன்னாட்டு மருத்துவச் சாதன கட்டுப்பாட்டாளர்கள் மன்றம் (IMDRF), 2011இல் நிறுவப்பட்டது, இது சர்வதேச மருத்துவச் சாதன ஒழுங்குமுறைகளின் ஒத்திசைவு மற்றும் ஒருங்கிணைப்பை விரைவுபடுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட உலகளாவிய மருத்துவ சாதன கட்டுப்பாட்டாளர்களின் கூட்டுக்குழுவாகும்.

★ IMDRF உறுப்பினர்களில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், இங்கிலாந்து, பிரேசில், ரஷ்யா, சீனா, தென்கொரியா, சிங்கப்பூர் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகிய நாடுகளின் தேசிய ஒழுங்குமுறை அதிகாரிகள் அடங்குவர். IMDRFஇல் இணை உறுப்பினர் அந்தஸ்து பெறுவது, நம்பகத்தன்மைக்கு குறிப்பிடத்தக்க வாய்ப்புகளை வழங்குவதுடன், உலகெங்குமுள்ள ஒழுங்குமுறை ஆணையங்களுடன் ஒத்துழைப்பையும் வழங்கும். ஓர் இணை உறுப்பினராக, IMDRFஇன் திறந்த அமர்வுகளில் இந்தியா பங்கேற்கும்.

**10. சமீபத்தில், 'உலகளாவிய உத்திசார் ஆயத்தநிலை, தயார்நிலை மற்றும் பதிலளிப்புத் திட்டத்தைத்' தொடங்கிய அமைப்பு எது?**

அ. உலக வங்கி

**ஆ. உலக சுகாதார நிறுவனம் (WHO) ☑**

இ. UNEP

ஈ. ILO

★ உலக சுகாதார அமைப்பானது (WHO) "உலகளாவிய உத்திசார் ஆயத்தநிலை, தயார்நிலை மற்றும் பதிலளிப்புத் திட்டத்தை" அறிமுகப்படுத்தியுள்ளது. டெங்கு மற்றும் ஜிகா மற்றும் சிக்குன்குனியாபோன்ற ஏடிஸ்மூலம் பரவும் கொசு வழி பரவும் வைரஸ்களை ஒருங்கிணைக்கப்பட்ட உலகளாவிய நடவடிக்கையின்மூலம் எதிர்த்துப் போராடுவதே இதன் நோக்கமாகும். இத்திட்டமானது 2025 செப்டம்பர் வரை ஓராண்டுக்குமேல் இயங்கும். இது ஐந்து முக்கிய கூறுகளில் கவனஞ்செலுத்துகிறது. அவை, அவசரகால ஒருங்கிணைப்பு, கூட்டு கண்காணிப்பு, சமூகப்பாதுகாப்பு, பாதுகாப்பான மற்றும் அளவிடக்கூடிய பராமரிப்பு மற்றும் எதிர் நடவடிக்கைகளுக்கான அணுகல்.

**11. இந்திய இராணுவத்திற்கு முதலாவது, 'ஆகாசதீரன் வான் பாதுகாப்பு அமைப்பை' வழங்கிய அமைப்பு எது?**

அ. DRDO

**ஆ. பாரத் மின்னணு நிறுவனம் (BEL) ☑**

இ. HAL

ஈ. BHEL

★ பாரத் மின்னணு நிறுவனமானது (BEL) வான் பாதுகாப்பு கட்டுப்பாடு மற்றும் அறிக்கையிடல் அமைப்புக்கான 100 கட்டுப்பாட்டு மையங்களை (ஆகாசதீரன்) இந்திய இராணுவத்திற்கு வழங்கியுள்ளது. எறிகணை மற்றும் ஏவுகணை தாக்குதல்கள்போன்ற வான்வழி அச்சுறுத்தல்களில் இருந்து நாட்டைப் பாதுகாப்பதில் இக்கட்டுப்பாட்டு மையங்கள் முக்கிய பங்குவகிக்கும்.

12. **அண்மையில், காவல்துறையினருக்கான சைபர் கமாண்டோ பயிற்சியைத் தொடங்கிய நிறுவனம் எது?**

அ. ஐஐடி பம்பாய் ஆ. ஐஐடி கான்பூர்

**இ. ஐஐடி மெட்ராஸ் ☑** ஈ. ஐஐடி ரூர்க்கி

★ IIT–மெட்ராஸின் பிரவர்தக், காவல்துறையினருக்கான சைபர் கமாண்டோ பயிற்சித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இந்த 6 மாத திட்டம் மத்திய உள்துறை அமைச்சகத்தின் முன்முயற்சியாகும். இது இந்தியா முழுவதும் உள்ள சட்ட அமலாக்க நிறுவனங்களுக்கு சிறப்பு சைபர் பயிற்சியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தற்போதுள்ள சைபர் கிரைம் செல்களைப் போலல்லாமல், எதிர்வினை நடவடிக்கைகளில் இது கவனம் செலுத்துகிறது. இத்திட்டம் இணைய அச்சுறுத்தல்களைச் சமாளிக்க ஒரு செயலூக்கப் படையை உருவாக்கும். சைபர் குற்றங்களை திறம்பட எதிர்த்துப்போராடுவதற்கும் தடுப்பதற்கும் காவல்துறையின் திறன்களை இந்தப்பயிற்சி மேம்படுத்தும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்திய கடற்படை, ஓமன் இராயல் கடற்படையுடன் 5 நாள் கடல்சார் பாதுகாப்பு கூட்டுப்பயிற்சி.**

இந்திய கடற்படை நீண்டதூரப்பயிற்சிக்கு முதன்முறையாக ஓமன் நாட்டிற்கு பயணம் மேற்கொண்டுள்ளது. இந்திய கடற்படையின் முதலாவது பயிற்சிப்படைப்பிரிவும், இந்திய கடலோரக் காவல்படை வீரர்களும் 5 நாள் பயிற்சியில் பங்கேற்றுள்ளதாக பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக இப்பயிற்சி நடைபெற்று வருகிறது.

---

**2. மதுரையில் நவ.21இல் உலக கவிஞர்கள் மாநாடு.**

இந்தியாவிலேயே முதல்முறையாக உலக கவிஞர்கள் மாநாடு மதுரையில் நவ.21ஆம் தேதி நடைபெறவுள்ளதாக தமிழ் வளர்ச்சித் துறை தெரிவித்துள்ளது. 1980இல் அமெரிக்காவில் ரோஸ்மேரி என்பவர் உலக கவிஞர்கள் மாநாட்டை முதன்முறையாக நடத்தினார்.

---


## IMPORTANT LINKS

TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

WINMEEN: INSTALL THE WINMEEN APP
DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. ஒன்பது நாள் நிகழும் 'பிரம்மோற்சவம்' கீழ்க்காணும் எந்தக் கோவிலில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது?**



அ. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோவில்

**ஆ. திருமலை திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருக்கோவில் ☑**

இ. அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவில்

ஈ. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோவில்

★ திருப்பதியில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருக்கோவில், 9 நாள் நிகழும் 'பிரம்மோற்சவம்' திருவிழாவிற்காக தயாராகி வருகிறது. இது திருமலை திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருக்கோவிலில் சுவாமி புஷ்கரிணி ஏரியில் கொண்டாடப்படுகிறது. மனிதகுலத்தைக்காத்த வெங்கடேசப்பெருமானுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பிரம்ம தேவர் இவ்விழாவைத்தொடங்கினார். கூடுதல் மாதத்துடன்கூடிய சந்திர மாதங்களில், இரண்டு பிரம்மோற்சவங்கள் நடத்தப்படுகின்றன. அவை சாலகத்லா மற்றும் நவராத்திரி ஆகும். 2024இல், அதிக மாதம் இல்லாததால் ஒரேயொரு பிரம்மோற்சவம் (சலகட்லா) நடைபெற்றது. பாரம்பரிய தூய்மைப்படுத்தல் நிகழ்வான கோவில் ஆழ்வார் திருமஞ்சன சடங்கானது, பிரம்மோற்சவம் மற்றும் பிற முக்கிய திருவிழாக்களுக்கு முந்தைய செவ்வாய் கிழமைகளில் நிகழ்கிறது.

**2. சிஞ்சோலி வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. மகாராஷ்டிரா

**ஆ. கர்நாடகா ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. ஒடிசா

★ கல்யாண–கர்நாடக பகுதியிலுள்ள சிஞ்சோலி வனவுயிரி சரணாலயத்தில் செந்நாய்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சிஞ்சோலி வனவிலங்கு சரணாலயம் கர்நாடகா மாநிலம் கலபுர்கி மாவட்டத்தில் சந்திரம்பள்ளி அணையைச்சுற்றி அமைந்துள்ளது. தென்னிந்தியாவின் முதல் வறண்டநில வனவிலங்கு சரணாலயமான இது, 2011ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. இந்தச் சரணாலயம் வறண்ட மற்றும் ஈரமான இலையுதிர் காடுகள், கருவேலம் மற்றும் தேக்கு தோட்டங்களைக் கொண்டுள்ளது. கர்நாடகாவின் வடக்கே பாதுகாக்கப்பட்ட பகுதியாக உள்ள இங்கு, சந்தனம், சிவப்பு மணற்பரப்பி, வெளிமான், வரிகழுதைப்புலி, ஓநாய் மற்றும் பழந்தின்னி வெளவால்கள் உள்ளிட்ட பல்வேறு தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் உள்ளன.

**3. கீழ்க்காணும் எந்த நாட்டின் முதல் பெண் அதிபராக கிளாடியா ஷீன்பாம் பதவியேற்றார்?**



அ. பஹாமாஸ்

**ஆ. மெக்ஸிக்கோ ☑**

இ. வியட்நாம்

ஈ. ஜமைக்கா

★ மெக்ஸிக்கோ நாட்டின் முதல் பெண் அதிபராக கிளாடியா ஷீன்பாம் பதவியேற்றார். பெண்களின் உரிமைகளை வலுப்படுத்தவும், பன்னாட்டு முதலீட்டிற்கான பாதுகாப்பான இடமாக மெக்ஸிக்கோவை மாற்றுவதாகவும் அவர் உறுதியளித்தார். 62 வயதான கிளாடியா ஷீன்பாம், ஓர் அறிவியலாளரும் மெக்ஸிக்கோ நகரத்தின் முன்னாள் மேயரும் ஆவார். பதவியேற்ற நாளிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு அவர் அப்பதவியை வகிப்பார்.

**4. "EnviStats India 2024: Environment Accounts" வெளியீட்டின் 7ஆவது இதழை வெளியிட்ட அமைச்சகம் எது?**

அ. சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்

**ஆ. புள்ளியியல் & திட்ட அமலாக்க அமைச்சகம் ☑**

இ. நிதி அமைச்சகம்

ஈ. வேளாண்மை அமைச்சகம்

★ புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம், "EnviStats India 2024: Environment Accounts" வெளியீட்டின் 7ஆவது இதழை வெளியிட்டது. 'EnviStats' இயற்கை வளங்கள், சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் நிர்வாகத்திற்கான அரசாங்க முயற்சிகள்பற்றிய தகவல்களை உள்ளடக்கியது. சுற்றுச்சூழல் கணக்குகளை தொகுப்பதற்காக இது சுற்றுச் சூழல்–பொருளாதார கணக்கியல் அமைப்பின் கட்டமைப்பைப் பின்பற்றுகிறது. கடந்த 2013 முதல் 2021 வரை ஈர நிலங்களின் பரப்பு சுமார் 8% அதிகரித்துள்ளது. 2000 முதல் 2023 வரை 72% மற்றும் பாதுகாக்கப்பட்ட நிலங்களின் பரப்பளவில் 16% அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது. 2023–24க்கான மண் நல அட்டைத் தரவைப் பயன்படுத்தி மண் ஊட்டச்சத்துக் குறியீட்டையும் இந்த அறிக்கை புதுப்பிக்கிறது.

**5. ICC மகளிர் T20 உலகக்கோப்பையின் 9ஆவது பதிப்பை நடத்துகிற நாடு எது?**



அ. ஆஸ்திரேலியா

**ஆ. ஐக்கிய அரபு அமீரகம் ☑**

இ. இங்கிலாந்து

ஈ. இந்தியா

★ 9ஆவது ICC மகளிர் T20 உலகக்கோப்பை ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜாவில் தொடங்கியது. பத்து அணிகள் பங்கேற்கும் இந்தப்போட்டி அக்.03–20 வரை நடைபெறுகிறது. இந்தியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை ஆகிய அணிகளுடன் 'A' பிரிவில் இடம்பெற்றுள்ளது. 'B' பிரிவில் வங்கதேசம், இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, தென்னாப்பிரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகள் உள்ளன. ஹர்மன்ப்ரீத் கௌர் தலைமையிலான இந்தியா, இந்த நிகழ்வில் தனது முதல் ICC பட்டத்தை வெல்ல எண்ணுகிறது.

**6. அண்மையில், இந்தியப்பிரதமரால் கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் 'பஞ்சாரா விராசத் அருங்காட்சியகம்' திறந்து வைக்கப்பட்டது?**



அ. ஒடிசா

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. கர்நாடகா

ஈ. மத்திய பிரதேசம்

★ மகாராஷ்டிர மாநிலம், வாஷிமில் உள்ள போகர்தேவியில் பஞ்சாரா சமூகத்தின் பாரம்பரியத்தை எடுத்துரைக்கும் 'பஞ்சாரா விராசத் அருங்காட்சியகத்தை' பிரதமர் நரேந்திர மோதி திறந்து வைத்தார். நான்கடுக்கு பஞ்சாரா விராசத் அருங்காட்சியகம் பஞ்சாரா சமூகத்தின் வளமான பாரம்பரியத்தை அவர்களின் தலைவர்களின் உருவப்படங்கள் மற்றும் வரலாற்று மரபுகள்மூலம் காட்சிப்படுத்துகிறது.

**7. '*Pseumenes siangensis*' என்ற புதிய வகை குயவக்குளவியானது கீழ்க்காணும் எந்த வடகிழக்கு மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?**



அ. அஸ்ஸாம்

ஆ. நாகாலாந்து

**இ. அருணாச்சல பிரதேசம் ☑**

ஈ. மிசோரம்

★ பூச்சியியல் வல்லுநர்கள் அருணாச்சல பிரதேசத் மாநிலத்தில் ஒரு புதிய வகை குயவக்குளவி உயிரினத்தைக் கண்டுபிடித்து அதற்கு '*Pseumenes siangensis*' என்று பெயரிட்டுள்ளனர். '*Eumeninae*' என்ற துணைக்குடும்பத்தில் உள்ள '*Pseumenes*' இனத்தைச் சேர்ந்த இது, முதன்மையாக கீழைப்பகுதியில் காணப்படுகிறது.

★ தனித்து வாழும் இக்குளவிகள் தங்கள் இளமுயிரிகளுக்காக சிறிய, பானைபோன்ற மண் கூடுகளைக் கட்டுகின்றன. அருணாச்சல பிரதேச மாநிலத்தின் மேல் சியாங் மாவட்டத்தில் காணப்பட்ட இந்த இனம், அம்மாநிலத்தின் சியாங் பள்ளத்தாக்கின் பெயரால் அழைக்கப்படுகிறது. 30.2 மிமீ நீளமே உள்ள இது, கம்பளிப்பூச்சிகள் மற்றும் பூச்சிகளை உண்பதன்மூலம் பூச்சிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

### 8. தேசிய வேளாண் குறியீட்டை (NAC) உருவாக்கியுள்ள அமைப்பு எது?

அ. வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (NABARD)

ஆ. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR)

**இ. இந்தியத் தரநிலைகள் பணியகம் (BIS) ☑**

ஈ. வேளாண் அமைச்சகம்

★ இந்தியத் தரநிலைகள் பணியகமானது (BIS) தேசிய கட்டிடம் மற்றும் மின்சாரக் குறியீடுகளைப் போலவே தேசிய வேளாண் குறியீட்டை (National Agricultural Code) உருவாக்கி வருகிறது. பயிர் தேர்வு முதல் அறுவடைக்குப் பிந்தைய செயல்பாடுகள் வரை முழு வேளாண்மை சுழற்சியையும் NAC உள்ளடக்கும். இது இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்: அனைத்து பயிர்களுக்கும் பொதுவான கொள்கைகள் மற்றும் நெல், கோதுமை, எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகளுக்கான பயிர்–குறிப்பிட்ட தரநிலைகள். இது உழவர்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் வேளாண்மையில் அதிகாரிகளுக்கு வழிகாட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது இந்திய வேளாண்மையில் தரமான தரநிலைகள், முடிவெடுத்தல் மற்றும் திறன் மேம்பாட்டை ஆதரிக்கும்.

### 9. சமீபத்தில், "இணை மாவட்டம்" முன்னெடுப்பு என்ற புதிய நிர்வாக மாதிரியை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

**ஆ. அஸ்ஸாம் ☑**

இ. கேரளா

ஈ. இராஜஸ்தான்

★ அஸ்ஸாம் மாநிலம் "இணை மாவட்டம்" என்ற முன்னெடுப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. பாரம்பரிய சிவில் துணைப் பிரிவு முறையை மாற்றியமைக்கும் புதிய ஆளுகை மாதிரியான இதில், உள்ளூர்மயமாக்கப்பட்ட கட்டுப்பாட்டிற்கு மாவட்ட ஆணையர்களுக்கு இருக்கும் அதே அதிகாரங்களை இணை–மாவட்ட ஆணையர்களுக்கு இருக்கும். நிர்வாகத்தைப் பரவலாக்குவதையும், நிர்வாகத்திற்கான அணுகலை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு, இந்தியாவிலேயே முதல் முறையாக இதுபோன்று தொடங்கப்பட்ட முதல் முயற்சி இதுவாகும்.

### 10. அண்மையில், மூன்றாவது 25T பொல்லார்ட் புல் (BP) இழுபடகான, 'அஷ்வா' பணியில் இணைக்கப்பட்ட நகரம் எது?

அ. விசாகப்பட்டினம்

ஆ. மும்பை

**இ. கொல்கத்தா ☑**

ஈ. சென்னை



★ 3ஆவது 25T பொல்லார்ட் புல் இழுபடகான, 'அஷ்வா' 2024 அக்.03 அன்று கொல்கத்தாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. 'அஷ்வா' இந்திய அரசின் "இந்தியாவில் தயாரிப்போம்" முயற்சியின் ஒருபகுதியாகும். இது இந்திய கப்பல் பதிவேடு வகைப்பாடு விதிகளின்படி கட்டப்பட்டுள்ளது. இந்த இழுபடகு இந்தியக் கடற்படையின் செயல்பாட்டுத் திறன்களை உயர்த்தும், முக்கியமான பணிகளுக்கு உதவும் மற்றும் கடல்சார் ஆதரவு உள்கட்டமைப்பை மேம்படுத்தும்.

**11. "2024 – வறட்சி தாங்குந்தன்மை+10 மாநாடு" நடைபெற்ற இடம் எது?**

**அ. ஜெனீவா, சுவிட்சர்லாந்து ☑**

ஆ. பாரிஸ், பிரான்ஸ்

இ. லண்டன், ஐக்கிய இராச்சியம்

ஈ. புது தில்லி, இந்தியா

★ 2024 செப்.30 முதல் அக்.02 வரை சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் நடைபெற்ற வறட்சி தாங்குந்தன்மை+10 (DR +10) மாநாடு, உலகளாவிய வறட்சிக்கான தயார்நிலை மற்றும் தாங்கும் தன்மையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியது. தேசிய வறட்சிக்கொள்கை குறித்த முதல் உயர்மட்டக் கூட்டம் தொடங்கி பத்தாண்டு நிறைவை இது குறிக்கிறது. இம்மாநாடு கொள்கை வகுப்பாளர்கள், வல்லுநர்கள் மற்றும் பயிற்சியாளர்களை ஒன்றிணைத்து வறட்சி மேலாண்மையில் முன்னேற்றங்கள் குறித்து விவாதித்தது. தட்பவெப்பநிலை மாற்றம் காரணமாக வறட்சி அடிக்கடி ஏற்படுவதால், வறட்சி இடர்களுக்கு முறையான தீர்வுகாண்பதற்கும் நிலையான வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் பயனுள்ள கொள்கைகள் மற்றும் உலகளாவிய வழிமுறைகளின் அவசியத்தை இம்மாநாடு வலியுறுத்தியது.

**12. முக்கியமான தாதுப்பொருட்களுக்கான விநியோகச்சங்கிலியை மேம்படுத்துவதற்காக, இந்தியா, அண்மையில் எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

அ. ரஷ்யா

**ஆ. அமெரிக்கா ☑**

இ. ஆஸ்திரேலியா

ஈ. பிரான்ஸ்



★ இந்தியாவும் அமெரிக்காவும் முக்கியமான கனிம விநியோகச்சங்கிலிகளை விரிவுபடுத்துவதற்கும் பன்முகப்படுத்து –வதற்குமான ஒரு புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன. இந்தத் துறையில் நெகிழ்திறனுக்கான இவ்விருநாடுகளின் வலிமையை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இது உபகரணங்கள், சேவைகள், கொள்கைகள் மற்றும் முக்கியமான கனிமங்களின் ஆய்வு & செயலாக்கத்தின் வணிக வளர்ச்சிக்கான சிறந்த நடைமுறைகளில் கவனம் செலுத்துகிறது. 2024 அக்டோபரில் நடைபெற்ற ஆறாவது அமெரிக்க–இந்திய வர்த்தக உரையாடலின்போது நடைபெற்ற விவாதங்களைத் தொடர்ந்து, குறைகடத்திகள் மற்றும் தூய எரிசக்தியில் புதுமையான சூழலமைப்புகளை மேம்படுத்துவதற்கான பரந்த முயற்சிகளின் ஒருபகுதியாக இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'மக்களைத்தேடி மருத்துவம்' திட்டத்துக்கு ஐநா விருது.**

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும், "மக்களைத்தேடி மருத்துவம்" என்ற திட்டத்துக்கு ஐநா அமைப்பு விருது அறிவித்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. தொற்றாநோய்களை கட்டுப்படுத்துவதில் முதன்மையான மற்றும் சிறப்பான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவதற்காக ஐநா அமைப்பின் விருது தமிழ்நாட்டின் சுகாதாரத்துறைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2021 ஆகஸ்ட்.05 அன்று "மக்களைத்தேடி மருத்துவம் திட்டம்" தொடங்கப்பட்டது.

---

**2. ₹16,800 கோடி முதலீட்டில் இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் இடையே உணவு வழித்தடம்.**

இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் இடையே $2 பில்லியன் டாலர்கள் (சுமார் ₹16,800 கோடி) முதலீட்டில் உணவு வழித் தடம் அமைக்கப்படவுள்ளதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.

---

**3. இரு அமெரிக்கர்களுக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு.**

மருத்துவத்துக்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த விக்டர் ஆம்புரோஸ், கேரி ருவ்குன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மனித உடலில் மரபணு செயல்பாடுகள் எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகிறது என்பதை அறிவதற்கு அடிப்படையான 'மைக்ரோ RNA' என்ற செல்லை கண்டுபிடித்ததற்காக இவர்கள் இந்த உயரிய பரிசுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்தாண்டு, COVID-19 பாதிப்புக்கு எதிரான பயனுள்ள 'mRNA' தடுப்பூசியை உருவாக்கியதற்காக ஹங்கேரியைச் சேர்ந்த சாகன் பல்கலை பேராசிரியர் கேட்டலின் கரிக்கோ, அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகப் பேராசிரியர் டுரூ வீஸ்மேன் ஆகிய இருவருக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

ஒவ்வோர் ஆண்டும் மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய 6 துறைகளில் சிறந்த சாதனை படைத்தவர்களுக்கு உலகின் மிகவுயரிய நோபல் பரிசு வழங்கி கௌரவிக்கப்படுகிறது. பரிசு அறிவிக்கப்பட்டவர்களுக்கு ஸ்டாக்ஹோமில் வரும் டிசம்பர்.10 அன்று நடைபெறும் விருதை நிறுவிய ஆல்பிரெட் நோபலின் நினைவு நாள் விழாவில் விருதுகள் வழங்கப்படும்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. DRDOஆல் உருவாக்கப்பட்ட, "VSHORADS" என்பது என்ன வகையான ஏவுகணை?**

அ. வான்வழி எச்சரிக்கை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு

**ஆ. Man-portable air-defence system (MANPADS) ☑**

இ. Terminal High Altitude Area Defence System (THAAD)

ஈ. மேற்கூறியவை எதுவுமில்லை



★ ராஜஸ்தானின் பொக்ரானில் மூன்று வெற்றிகரமான சோதனைகளுடன் நான்காம் தலைமுறை Very SHOrt Range Air Defence System (VSHORAD) மேம்பாட்டு சோதனைகளை DRDO நிறைவுசெய்தது. ஆள் எடுத்துச்செல்லக்கூடிய வான்–பாதுகாப்பு அமைப்பான VSHORAD என்பது குறுகிய தூரங்களில் குறைந்த உயர வான்வழி இடர்களை வீழ்த்த வடிவமைக்கப்பட்டுள்ளது. ஐதராபாத்தில் உள்ள DRDOஇன் ஆராய்ச்சி மையமான இமாரத், தொழில்துறை கூட்டாளர்களுடன் இணைந்து இதனை உருவாக்கியுள்ளது. குறும்படிவாக்கப்பட்ட ரியாக்ஷன் கண்ட்ரோல் சிஸ்டம் (RCS) மற்றும் ஒருங்கிணைந்த பறப்பு மின்னணுவியல்போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களை இந்த ஏவுகணை கொண்டுள்ளது. இது இரட்டை உந்துதல் திட மோட்டார்மூலம் இயக்கப்படுகிறது.

**2. அண்மையில், "வணிகம்–தயார்நிலை குறியீட்டை" உருவாக்கிய அமைப்பு எது?**

அ. UNDP

**ஆ. உலக வங்கி ☑**

இ. IMF

ஈ. WEF

★ இந்தியா தனது மாநில வணிகத்தயார்நிலை தரவரிசையை புதிய உலக வங்கி B–READY குறியீட்டுடன் சீரமைக்கிறது. B–READY (Business–READY Index) என்பது கைவிடப்பட்ட எளிதாக தொழில் தொடங்குதல் தரவரிசைக்கு மாற்றாக உள்ளது. இது ஒழுங்குமுறை கட்டமைப்பு, பொதுச்சேவைகள் மற்றும் செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் உலகளாவிய பொருளாதாரங்களின் வணிகச்சூழலை மதிப்பிடுகிறது.

★ எண்மமயமாக்கல், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் பாலின சமத்துவம் ஆகியவை இதன் முக்கிய கூறுகளாகும். ஒரு வணிகத்தின் சுழற்சி வட்டத்தில் தொடக்கம் முதல் நிறைவு வரையுள்ள பத்து அளவுருக்களை இந்தக் குறியீடு மதிப்பிடுகிறது. ஒருநாட்டின் ஒழுங்குமுறை மற்றும் கொள்கைச்சூழலை மதிப்பிடுவதற்கு உலகளாவிய நிறுவல்கள் இதைப் பயன்படுத்தும்.


**3. 'சீரெஸ்' ஆனது அண்மையில் எந்த வகையான வான்பொருள் என வகைப்படுத்தப்பட்டது?**

**அ. குள்ளக்கோள் ☑**

ஆ. சிறுகோள்

இ. வால் நட்சத்திரம்

ஈ. சந்திரன்



★ சீரெஸ் அதன் நிறைகாரணமாக ஒரு சிறுகோள் என்ற வகைப்பாட்டிலிருந்து ஒரு குள்ளகக்கோளாக மறுவகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பர்டூ பல்கலைக்கழகம் மற்றும் NASAஇன் சமீபத்திய ஆய்வுகள், அதன் மேலோடு 90% பனியால் ஆனது என்றும் இது ஒரு நீர்நிறைந்த கோளமாக இருந்திருக்கலாம் என்றும் கூறுகிறது. கண்டுபிடிப்புகள் NASAன் டான் பணியின் தரவை அடிப்படையாகக் கொண்டவை; இது சீரெஸின் பள்ளம் மற்றும் பனிக்கட்டி கலவை பற்றிய நுண்ணறிவுகளை வழங்கியது.

**4. புவிசார் குறியீடு பெற்ற போடோ நாபம் மற்றும் போடோ ஒன்ட்லா ஆகியவை சார்ந்த மாநிலம் எது?**

அ. மிசோரம்

**ஆ. அஸ்ஸாம் ☑**



இ. ஒடிஸா

ஈ. ஜார்கண்ட்

★ சென்னையில் உள்ள புவிசார் குறியீடுகள் பதிவகம், போடோ நாபம் மற்றும் போடோ ஒன்ட்லா உட்பட அஸ்ஸாமில் இருந்து வந்த எட்டு தயாரிப்புகளுக்கு புவிசார் குறியீட்டை வழங்கியுள்ளது. போடோ நாபம் என்பது இரண்டு முதல் மூன்று மாதங்களில் காற்றில்லா முறையில் தயாரிக்கப்படும் ஒரு புளித்த மீன் உணவாகும். போடோ ஒன்ட்லா என்பது பூண்டு மற்றும் இஞ்சியுடன் பதப்படுத்தப்பட்ட அரிசித்தூளாகும். போடோ ஜூ குவ்ரான், மைப்ரா ஜூ பித்வி, போடோ ஜூ கிஷி, போடோ குவ்கா, போடோ நர்சி மற்றும் போடோ அரோனை ஆகியன பிற 6 பொருட்களாகும்.

**5. 'SIPCOT' என்பது கீழ்க்காணும் எந்த மாநிலத்தின் தொழிற்பூங்காவாகும்?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கர்நாடகா


இ. கேரளா

ஈ. ஆந்திர பிரதேசம்

★ SIPCOT அல்லது தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் என்பது தமிழ்நாட்டில் தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கோடு கடந்த 1971இல் நிறுவப்பட்டது. 50 தொழில் பூங்காக்களுடன் இது 3,290 தொழிற்துறை அலகுகளை உருவாக்கியுள்ளது மற்றும் லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் $1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை இலக்காகக் கொண்டு, மாநிலத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டது. SIPCOT ஆனது துறைசார்ந்த பூங்காக்கள், புத்தாக்க மையங்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான நிலையான வீடுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

**6. எந்த வைரஸிற்கான நிகழ்நேர PCR கண்டறியும் சோதனையான 'Alinity m MPXV' மதிப்பீட்டிற்கு அண்மையில் WHO ஒப்புதல் அளித்துள்ளது?**

**அ. Mpox ☑**



ஆ. ஜிகா

இ. டெங்கு

ஈ. எபோலா

★ உலக சுகாதார அமைப்பு (WHO) 'Alinity m MPXV' மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது; இது mpox–க்கான நிகழ்நேர PCR சோதனையாகும். இந்தச் சோதனையானது தோலிலுள்ள புண்களில் ஒற்றியெடுக்கப்பட்ட பஞ்சுருண்டையைப் பயன்படுத்தி வைரஸைக் கண்டறிந்து, உடனடி முடிவுகளை வழங்குகிறது. ஐயத்திற்கிடமான mpox பாதிப்புகளை விரைவாக உறுதிப்படுத்த சுகாதாரப் பணியாளர்களுக்கு இது உதவுகிறது; அது பரவலைக் கட்டுப்படுத்த உதவுகிறது. 'Alinity m MPXV' மதிப்பீடு என்பது WHOஇன் எமர்ஜென்சி யூஸ் லிஸ்டிங்கின் (EUL) முதல் mpox சோதனையாகும்; இது சுகாதார அவசரகாலங்களில் விரைவாக கிடைக்கும். Mpox என்பது விலங்குவழி பரவும் வைரஸ் நோயாகும், இது மனித தொடர்பு மற்றும் பாதிக்கப்பட்ட விலங்குகள்மூலம் பரவுகிறது.

**7. 'ஆதி கௌரவ சம்மான்' விருதை நிறுவியுள்ள மாநில அரசு எது?**

**அ. இராஜஸ்தான் ☑**

ஆ. குஜராத்

இ. ஹரியானா

ஈ. பஞ்சாப்



★ 2024 அக்.04 அன்று இராஜஸ்தானின் மன்கர் தாமில் நடந்த முதல் ஆதி கௌரவ சம்மான் சமரோவில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு கலந்துகொண்டார். இராஜஸ்தான் அரசாங்கத்தால் நிறுவப்பட்ட ஆதி கௌரவ சம்மான் விருதில் மூன்று பிரிவுகள் உள்ளன: ஆதிரத்னா, ஆதி சேவை மற்றும் ஆதி கிராமோத்தன் கௌரவ் சம்மான்.

★ விளையாட்டு, கல்வி மற்றும் கலாச்சாரத்தில் சிறந்து விளங்கும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு ஆதிரத்னா கௌரவ சம்மான் விருதுகள் வழங்கப்படுகின்றன. ஆதி சேவா கௌரவ சம்மான், பட்டியல் பழங்குடியினருக்கான முன்மாதிரியான சேவையை அங்கீகரிக்கிறது. சமூகப்பொருளாதார மேம்பாட்டிற்காக கிராமப் பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து சமிதிகள் மற்றும் ஜில்லா பரிஷத்களுக்கு ஆதி கிராமோத்தன் கௌரவ சம்மான் வழங்கப்படுகிறது.

**8. 2024 அக்டோபர் நிலவரப்படி அந்நியச்செலாவணி கையிருப்பின் அடிப்படையில் பின்வரும் நாடுகளில் முதல் நான்கு நாடுகள் எவை?**

**அ. சீனா, ஜப்பான், சுவிட்சர்லாந்து மற்றும் இந்தியா ☑**

ஆ. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா

இ. உக்ரைன், நியூசிலாந்து, வங்கதேசம் மற்றும் மியான்மர்

ஈ. ஐக்கிய அரபு அமீரகம், மாலத்தீவுகள், சிங்கப்பூர் மற்றும் இந்தோனேசியா



★ இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு சமீபத்தில் முதன்முறையாக $700 பில்லியனைத் தாண்டியது. அவ்வாறு செய்யும் நான்காவது நாடாக இந்தியாவாகும். 2024ஆம் ஆண்டில், இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு $87.6 பில்லியன் அதிகரித்துள்ளது; இது முந்தைய ஆண்டின் $62 பில்லியனைவிடவும் அதிகமாகும். 2024 அக்டோபர் நிலவரப்படி, அதிக அந்நியச் செலாவணி இருப்புகொண்ட முதல் நான்கு நாடுகள்: சீனா, ஜப்பான், சுவிட்சர்லாந்து மற்றும் இந்தியா.

**9. எப்போது 2024 – தேசிய வனவிலங்கு வாரம் அனுசரிக்கப்பட்டது?**

அ. செப்டம்பர் 1-7

**ஆ. அக்டோபர் 2-8 ☑**

இ. நவம்பர் 10-16

ஈ. டிசம்பர் 20-26




★ இந்தியாவில் 2024 – தேசிய வனவிலங்கு வாரம் 2024 அக்.02 முதல் 08 வரை, "நமது இயற்கை பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் – Safeguarding Our Natural Heritage" என்ற கருப்பொருளுடன் கொண்டாடப்பட்டது. கடந்த 1955ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்ட வனவிலங்கு நாளிலிருந்து உருவான இந்நிகழ்வு கடந்த 1957இல் முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது. இந்திய வனவிலங்கு வாரியத்தால் 1952இல் நிறுவப்பட்ட இது, வனவிலங்கு பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தலை நோக்கமாகக்கொண்டது. வனவிலங்கு வாரமானது, பாதுகாப்பை ஊக்குவிப்பதிலும், இந்தியாவின் வளமான பல்லுயிர் பெருக்கத்தை முன்னிலைப்படுத்துவதிலும் கவனஞ்செலுத்துகிறது.

**10. பெண் கல்விக்காக, "நிஜுத் மொய்னா" என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

**அ. அஸ்ஸாம் ☑**

ஆ. மணிப்பூர்

இ. நாகாலாந்து

ஈ. மிசோரம்



★ அஸ்ஸாம் மாநில அரசு குழந்தைத் திருமணத்தை எதிர்த்துப் போராடவும், மாணவிகள் உயர்கல்வியைத் தொடரவும் "நிஜுத் மொய்னா" திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டம் மாதாந்திர உதவித்தொகையை வழங்குகிறது: 11–12 வகுப்பு மாணவிகளுக்கு ₹1,000, பட்டப்படிப்பு பயிலும் மாணவிகளுக்கு ₹1,250 மற்றும் முதுகலை மாணவிகளுக்கு ₹2,500. இத்திட்டத்திற்குத் தகுதிபெற, மாணவிகள் தவறாமல் வகுப்புகளுக்குச் செல்லவேண்டும், ஒழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும், தேர்வுகளில் சிறப்பாகச் செயல்படவேண்டும்; மேலும் முதுகலை பட்டப்படிப்பை முடிக்கும் வரை மணம்புரிதல் கூடாது. இம்முயற்சி அஸ்ஸாம் மாநிலத்தின் பெண்களை மேம்படுத்துவதையும், கல்வியை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**11. உலக பருத்தி நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. அக்டோபர் 6

**ஆ. அக்டோபர் 7 ☑**

இ. அக்டோபர் 8

ஈ. அக்டோபர் 9




★ பருத்தியின் உலகளாவிய முக்கியத்துவத்தை எடுத்துரைக்க ஆண்டுதோறும் அக்.07ஆம் தேதி உலக பருத்தி நாள் கொண்டாடப்படுகிறது. பருத்தி உழவர்களும் பருத்தித்தொழிலும் எதிர்கொள்ளும் சவால்கள்குறித்த விழிப்புணர்வை இந்நாள் ஏற்படுத்துகிறது. பருத்தி ஜவுளித்தொழிலில் மட்டுமின்றி கால்நடைத்தீவனம், மருத்துவப்பொருட்கள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றிற்கும் பயன்படுத்தப்படுகிறது. உலக அளவில் பருத்தி உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

**12. இந்தியா, கீழ்க்காணும் எந்த நகரத்தில், '2024 – மலபார் கடற்படை பயிற்சியை' நடத்துகிறது?**

அ. மும்பை

**ஆ. விசாகப்பட்டினம் ☑**

இ. சென்னை

ஈ. கொச்சி



★ குவாட் நாடுகளின் கூட்டுக்கடற்படைப் பயிற்சியை இந்தியா அக்.08–18 வரை விசாகப்பட்டினத்தில் நடத்துகிறது. மலபார்–2024 என்று பெயரிடப்பட்ட இந்தப் பயிற்சியில், இந்திய–பசிபிக் பிராந்தியத்தில் ஒத்துழைப்பை மையமாகக் கொண்ட கடல் மற்றும் துறைமுக கட்டங்கள் அடங்கும். இது வழிகாட்டப்பட்ட ஏவுகணை அழிப்பான்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் போர் விமானங்கள்போன்ற பல்வேறு இந்தியக் கடற்படை ஆயுதங்களை ஈடுபடுத்தும். மலபார் பயிற்சியானது கடந்த 1992ஆம் ஆண்டில் அமெரிக்க–இந்திய பயிற்சியாகத் தொடங்கப்பட்டு, கடல்சார் சவால்களை எதிர்கொள்வதற்கும், இயங்குதிறனை மேம்படுத்துவதற்குமான ஒரு பலதரப்பு நிகழ்வாக உருவானது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இருவருக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு.**

இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு நடப்பாண்டில் இருவருக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. அமெரிக்காவைச் சேர்ந்த ஜான் ஹோபீல்டு, கனடாவைச் சேர்ந்த ஜியோபெரி ஹின்டன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இயற்பியல் கூறுகளிலிருந்து இன்றைய ஆற்றல்மிகு இயந்திர கற்றலுக்கான அடிப்படை நடைமுறைகளை மேம்படுத்தியற்காக நோபல் பரிசுக்கு இவர்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.

---

**2. 104 செயற்கைக்கோள்களை செலுத்திவிட்டு... 8 ஆண்டுகளுக்குப் பிறகு புவிக்குத் திரும்பிய PSLV C37!**

கார்டோசாட்–2டி உள்பட 104 செயற்கைக்கோள்களுடன் விண்ணில் செலுத்தப்பட்ட PSLV C37 ஏவுகணையின் 4ஆம் நிலை, 8 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் புவிக்குத் திருப்பிக்கொண்டுவரப்பட்டு கடலில் விழ வைக்கப்பட்டது. படமாக்கல் செயற்கைக்கோளான கார்டோசாட்–2டி, கடந்த 2017 பிப்.15ஆம் தேதி விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

---

**3. ஆண்டுக்கு ₹46,000 கோடி இறால் ஏற்றுமதி.**

இந்தியா ஆண்டுக்கு ₹46,000 கோடி மதிப்பிலான இறால் மீன்களை ஏற்றுமதிசெய்வதாக மத்திய மீன்வளம், கால் நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதியில், தற்போது இறால் மீன்கள் மட்டும் 70% பங்களிப்பை வழங்குவதுடன், ஆண்டுக்கு சுமார் பத்து இலட்சம் மெட்ரிக் டன் இறால் மீன்கள் உற்பத்தி செய்யப்பட்டு, ₹46,000 கோடி மதிப்புள்ள இறால் மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

---

## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அக்.04–10 வரை கொண்டாடப்பட்ட, "2024 – உலக விண்வெளி வாரத்துக்கான" கருப்பொருள் என்ன?**

அ. Space and Climate Change ☑




ஆ. Space and Sustainability

இ. Women in Space

ஈ. The Moon: Gateway to the Stars

★ உலக விண்வெளி வாரமானது 2024 அக்.04–10 வரை கொண்டாடப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும், இது ஐநா பொதுச் சபையின் கருப்பொருளைப் பின்பற்றி கொண்டாடப்படுகிறது. "விண்வெளி மற்றும் தட்பவெப்பநிலைமாற்றம்" என்பது நடப்பு 2024இல் கடைப்பிடிக்கப்பட்ட உலக விண்வெளி வாரத்துக்கான கருப்பொருளாகும். இக்கருப்பொருள் தீவிர வானிலை மற்றும் தட்பவெப்பநிலை மாற்றத்தை நிவர்த்தி செய்வதில் விண்வெளி அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் பங்கை எடுத்துக்காட்டுகிறது. பூமியின் தட்பவெப்பநிலைபற்றிய நமது புரிதலையும் நிர்வாகத்தையும் விண்வெளி ஆய்வு எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதைப்பற்றி மக்களுக்குக் கற்பித்தல் மற்றும் ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2. 2024ஆம் ஆண்டுக்கான பல்லுயிர் பெருக்கத்திற்கான, 'மிடோரி பரிசு' யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?**

**அ. வேரா வோரோனோவா மற்றும் யசபெல் அகஸ்டினா கால்டெரோன் கார்லோஸ் ☑**

ஆ. ஜேன் குடால் மற்றும் டேவிட் அட்டன்பரோ

இ. அசாத் செர்ஹால் மற்றும் ஆல்ஃபிரட் ஓட்டெங்-யெபோவா

ஈ. கேத்தி மெக்கின்னன் மற்றும் கிரேட்டா துன்பெர்க்

★ 2024 – பல்லுயிர் பெருக்கத்திற்கான மிடோரி பரிசு கஜகஸ்தானைச் சேர்ந்த வேரா வொரோனோவா மற்றும் பெருவைச் சேர்ந்த யசபெல் அகஸ்டினா கால்டெரோன் கார்லோஸ் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. உயிரியல் பன்முகத்தன்மைக்கான பேரவையுடன் இணைந்து AEON சுற்றுச்சூழல் அறக்கட்டளையால் இப்பரிசு நிறுவப்பட்டது. பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் வளங்குன்றா தன்மைக்கு தனிநபர்கள் ஆற்றும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை இது அங்கீகரிக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இவ்விருது வழங்கப்படுகிறது.

**3. அண்மையில், உத்தர பிரதேச மாநிலத்தின் எந்த வனவிலங்கு பூங்காவில் ஓர் அரிய பழுப்புநிற கண்குத்திப் பாம்பு கண்டுபிடிக்கப்பட்டது?**

**அ. துத்வா தேசியப்பூங்கா ☑**



ஆ. ஹஸ்தினாபூர் வனவிலங்கு சரணாலயம்

இ. கிஷன்பூர் சரணாலயம்

ஈ. மேற்கூறியவை எதுவுமில்லை

★ ஓர் அண்மைய தகவல்களின்படி, உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள துத்வா தேசியப்பூங்காவில் ஓர் அரிய பழுப்புநிற கண்குத்திப்பாம்பு தென்பட்டது. துத்வா தேசியப்பூங்காவின் வரலாற்றில் அல்லது உத்தர பிரதேச மாநிலம் முழுவதும் இதுவரை ஆவணப்படுத்தப்படாத ஓர் இனமாக இது வெளிப்பட்டது. 2019இல் அரிதான செம்பவளநிற ஓலைப்பாம்பு மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இது, துத்வாவில் கண்டறியப்பட்டுள்ள இரண்டாவது குறிப்பிடத்தக்க ஊர்வன கண்டுபிடிப்பு ஆகும்.

**4. எந்தெந்த நாடுகளின் முச்சந்திக்கு அருகில் லிபுலேக் கணவாய் அமைந்துள்ளது?**

அ. இந்தியா, மியான்மர் மற்றும் வங்காளதேசம்

**ஆ. இந்தியா, நேபாளம் மற்றும் சீனா ☑**

இ. இந்தியா, பூடான் மற்றும் சீனா

ஈ. சீனா, பூட்டான் மற்றும் நேபாளம்

★ புனித கைலாய சிகரத்தினை யாத்ரீகர்கள் அண்மையில் இந்திய எல்லையில் உள்ள பழைய லிபுலேக் கணவாயில் இருந்து தரிசித்தனர். லிபுலேக் கணவாய் என்பது உத்தரகாண்டில் உள்ள ஓர் உயரமான கணவாய் ஆகும்; இது இந்தியா, நேபாளம் மற்றும் சீனாவின் முச்சந்திக்கருகில், 5,334 மீ உயரத்தில் அமைந்துள்ளது. இது உத்தரகாண்ட் மாநிலத்தை திபெத்துடன் இணைப்பதோடு இமயமலைக்கு நுழைவாயிலாக செயல்படுகிறது. இது பித்தோராகரில் உள்ள வியாஸ் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. 1992இல் சீனாவுடனான வர்த்தகத்திற்காக இது திறக்கப்பட்டது. கைலாய மானசரோவர் யாத்திரையின் ஒருபகுதியான இது, சிவபெருமானின் இருப்பிடமாக நம்பப்படும் கைலாய மலையாகும்.

**5. WHOஇன் தென்கிழக்காசியாவிற்கான பிராந்தியக்குழுவின் 77ஆவது அமர்வின் தலைவராகத் தெரிவானவர் யார்?**

அ. இராஜ்நாத் சிங்

**ஆ. JP நட்டா ☑**

இ. அனுப்ரியா பட்டேல்

ஈ. ஜாதவ் பிரதாப்ராவ்



★ மத்திய சுகாதார அமைச்சர் JP நட்டா உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்காசியாவிற்கான பிராந்தியக்குழுவின் 77ஆவது அமர்வின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தக் குழு தென்கிழக்காசிய பிராந்தியத்தில் WHOஇன் சுகாதாரக்கொள்கைகளை வடிவமைக்கிறது. புது தில்லியில் தொடங்கிய 3 நாள் அமர்வில், வங்கதேசம், இந்தியா, இந்தோனேஷியா, இலங்கை மற்றும் பிற தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் பங்கேற்றனர். பொதுச்சுகாதார அமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் முக்கிய தொற்றுநோயியல் மற்றும் மக்கள்தொகைசார்ந்த சவால்களை எதிர்கொள்வதில் இந்த அமர்வு கவனம் செலுத்தியது.

**6. பெருவில் நடந்த ISSF ஜூனியர் உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில், இந்தியா, எத்தனை பதக்கங்களை வென்றது?**

அ. 18

ஆ. 20

**இ. 24 ☑**

ஈ. 30

★ பெருவில் நடைபெற்ற ISSF ஜூனியர் உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில் இந்திய துப்பாக்கிச்சுடும் வீரர்கள் 13 தங்கம், 3 வெள்ளி மற்றும் 8 வெண்கலம் என 24 பதக்கங்களை வென்றனர். இத்தாலி இரண்டாவது இடத்தையும், நார்வே மூன்றாவது இடத்தையும் பிடித்தன. இறுதிநாளில், ஆடவர் 50 மீ பிஸ்டல் பிரிவில் தீபக் தலால், கமல்ஜீத் மற்றும் இராஜ் சந்திரா தங்கப்பதக்கம் வென்றனர். அடுத்த முக்கிய நிகழ்வான ISSF உலகக்கோப்பை இறுதிப்போட்டி புது தில்லியில் அக்.13–18 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.


**7. அண்மையில் தனது ஓய்வை அறிவித்த தீபா கர்மாகருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

**அ. சீருடற்பயிற்சி ☑**

ஆ. பூப்பந்து

இ. ஹாக்கி

ஈ. டென்னிஸ்



★ ஒலிம்பிக் வீராங்கனையும் காமன்வெல்த் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்றவருமான தீபா கர்மாகர் சீருடற் பயிற்சியிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார். பன்னாட்டு அங்கீகாரம் பெற்ற முதல் இந்திய பெண் ஜிம்னாஸ்ட்

இவர்தான். அவர், 2016 – ரியோ ஒலிம்பிக்கில் புரோடுனோவா வால்ட் விளையாடி பதக்கத்தை தவறவிட்டார். 2014 – காமன்வெல்த் போட்டியில் வெண்கலப்பதக்கமும், 2018 – துர்கியே உலகக்கோப்பையில் தங்கமும் வென்றார் தீபா கர்மாகர். 2024ஆம் ஆண்டு உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் நடந்த ஆசிய மகளிர் ஆர்ட்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன்ஷிப் போட்டியிலும் தங்கம் வென்றார்.

**8. மைக்ரோ RNAஐக் கண்டுபிடித்ததற்காக, 2024ஆம் ஆண்டு உடலியல் (அ) மருத்துவத்துக்கான நோபல் பரிசு யாருக்கு வழங்கப்பட்டது?**

அ. ஹான்ஸ் கிளெவர்ஸ் மற்றும் எரிக் டோபோல்

**ஆ. விக்டர் ஆம்ப்ரோஸ் மற்றும் கேரி ருவ்குன் ☑**

இ. ஸ்டூவர்ட் ஓர்கின் மற்றும் பீட்டர் பார்ன்ஸ்

ஈ. பால் ரிட்கர் மற்றும் பிரான்சிஸ் காலின்ஸ்



★ 2024ஆம் ஆண்டுக்கான உடலியல் (அ) மருத்துவத்திற்கான நோபல் பரிசு அறிவியலாளர்கள் விக்டர் ஆம்ப்ரோஸ் மற்றும் கேரி ருவ்குன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. மைக்ரோ RNAஇன் கண்டுபிடிப்பு மற்றும் படியெடுத்தல் மரபணு ஒழுங்குமுறைக்குப் பிந்தைய அதன் பங்கிற்காக அவர்கள் அங்கீகரிக்கப்பட்டனர். மரபணு செயல்பாட்டைக் கட்டுப்படுத்த மைக்ரோ RNA முக்கியமானது. உயிரினங்கள் எவ்வாறு உருவாகின்றன மற்றும் செயல்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்வதற்கு அவர்களின் கண்டுபிடிப்பு இன்றியமையாதது என்று நோபல் அவை கூறியுள்ளது. வெற்றியாளர்கள் 11 மில்லியன் ஸ்வீடிஷ் குரோனாக்களைப் (சுமார் $1.1 மில்லியன்) பெறுவார்கள்.

**9. எந்த ஆற்றின்மீது ஹிராகுட் அணை கட்டப்பட்டுள்ளது?**

அ. நர்மதை

ஆ. கோதாவரி

இ. கிருஷ்ணா

**ஈ. மகாநதி ☑**




★ கிழக்கு இந்தியாவின் முக்கிய திட்டமான ஹிராகுட் அணையுடன் இணைக்கப்பட்டுள்ள கால்வாய் வலையமைப்பு புதுப்பிக்கப்படவுள்ளது. ஹிராகுட் அணை இந்தியாவின் மிகநீளமான அணை மற்றும் உலகின் மிகநீளமான மண் அணையாகும்; இதன் நீளம் 25.79 கிமீ ஆகும். இது மகாநதி ஆற்றின் குறுக்கே, ஒடிசாவின் சம்பல்பூருக்கு மேல் 15 கிமீ தொலைவில் கட்டப்பட்டுள்ளது. இந்த அணை 746 சதுர கிமீ பரப்பளவில் ஆசியாவின் மிகப்பெரிய செயற்கை ஏரியான ஹிராகுட் நீர்த்தேக்கத்தை உருவாக்குகிறது. 1957இல் தொடங்கப்பட்ட இது, விடுதலைக்குப் பிந்தைய இந்தியாவின் முதல் மிகப்பெரிய பல்நோக்கு ஆற்றுப்பள்ளத்தாக்கு திட்டமாகும்.

**10. 2024 – இந்திய வான்படை நாள் கொண்டாடப்பட்ட தேதி எது?**

**அ. அக்டோபர்.08 ☑**

ஆ. அக்டோபர்.09

இ. அக்டோபர்.10

ஈ. அக்டோபர்.11




★ ஒவ்வோர் ஆண்டும் அக்.08 அன்று நாட்டிற்காக தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த வீரர்கள் & விமானிகளை கௌரவிக்கும் வகையில், இந்திய வான்படை நாளை இந்தியா கடைப்பிடிக்கிறது. இந்த ஆண்டு, இந்திய விமானப் படையின் 92ஆவது ஆண்டு நிறைவைக்குறிக்கிறது. சென்னை மெரினா கடற்கரையில் இந்த நாளுக்கான நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த ஆண்டிற்கான கருப்பொருள், "பாரதிய வாயுசேனா: சக்ஷம், சஷக்த் ஔர் ஆத்மநிர்பர் – Potent, Powerful, and Self-Reliant" என்பதாகும்.

**11. கஜகஸ்தான் தனது முதல் அணுமின் நிலையத்தை கீழ்க்காணும் எந்த ஏரிக்கு அருகில் நிறுவுகிறது?**



அ. அலகோல் ஏரி

ஆ. லெமூரியா ஏரி

**இ. பால்காஷ் ஏரி ☑**

ஈ. கிரைவ் ஏரி

★ உலகின் முன்னணி யுரேனியம் உற்பத்தியாளரான கஜகஸ்தான், ஆற்றல் திறனை அதிகரிக்க தனது முதல் அணுமின் நிலையத்தை உருவாக்க பரிசீலித்து வருகிறது. பால்காஷ் ஏரிக்கு அருகில் உள்ள இடம், கடந்த சோவியத் கால அணுசக்தி சோதனைகள் காரணமாக மில்லியன் கணக்கானவர்களை கதிர்வீச்சுக்கு ஆளாக்கியதன் காரணமாக குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

**12. அண்மையில் ஒடிஸாவில், கீழ்க்காணும் எந்த அரிய வகை சிறுத்தை இனம் தென்பட்டது?**



அ. பனிச்சிறுத்தை

**ஆ. கருஞ்சிறுத்தை ☑**

இ. அரேபிய சிறுத்தை

ஈ. ஜாவான் சிறுத்தை

★ அனைத்து ஒடிsaa சிறுத்தை மதிப்பீடு–2024இன் அடிப்படையில் மூன்று வனப்பிரிவுகளில் கருஞ்சிறுத்தைகள் எனப்படும் அரிய வேங்கைகள் இருப்பதாக ஒடிஸா தெரிவித்துள்ளது. குறிப்பாக வேட்டையாடலால் பாதிக்கப்பட்ட இந்த இனத்தைப் பாதுகாக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒடிஸாவில் மொத்தம் 696 சிறுத்தைகள் இருப்பதாக கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. சிமிலிபால் புலிகள் காப்பகத்தில் தனித்தன்மை வாய்ந்த அரச வங்கப் புலிகள் மிகுந்துள்ளன.


# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. நி–க்ஷய் போஷன் திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. இரத்தசோகை நோயாளிகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளிப்பது

ஆ. பின்தங்கிய குழுவிற்கு சுகாதார சேவைகளை உறுதி செய்வது

**இ. காசநோயாளிகளுக்கு ஊட்டச்சத்து ஆதரவுக்கான ஊக்கத்தொகைகளை வழங்குவது ☑**

ஈ. இருதய நோய்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டது

★ மத்திய சுகாதார அமைச்சகமானது நி–க்ஷய் போஷன் திட்டத்தின்கீழ் காசநோயாளிகளுக்கான மாதாந்திர ஊட்டச்சத்து ஆதரவை ₹500இலிருந்து ₹1,000ஆக உயர்த்தியுள்ளது. நி–க்ஷய் போஷன் திட்டமானது தேசிய சுகாதார இயக்கத்தின்கீழ், 2018 ஏப்ரல் மாதத்தில் தொடங்கப்பட்டது. இது தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ், நேரடி பலன் பரிமாற்றத் திட்டமாகும். இத்திட்டம் காசநோயாளிகளுக்கு ஊட்டச்சத்து ஆதரவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அறிவிக்கப்பட்ட அனைத்து காசநோயாளிகளும் இத்திட்டத்தின் தகுதியான பயனாளிகளாவர்.

**2. அண்மையில் புது தில்லியில் ஹம்சஃபர் கொள்கையை அறிமுகப்படுத்திய அமைச்சகம் எது?**

அ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்

**ஆ. சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் ☑**

இ. பாதுகாப்பு அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

★ மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் 2024 அக்.07 அன்று புது தில்லியில் ஹம்சஃபர் கொள்கையை அறிமுகப்படுத்தியது. இந்தக் கொள்கையை நிதின் கட்கரி முக்கிய அதிகாரிகள் முன்னிலையில் அறிமுகப்படுத்தினார். ஹம்சஃபர் கொள்கையானது தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் விரைவுச்சாலைகளில் பயண வசதியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நெடுஞ்சாலைகளில் உணவகங்கள், எரிபொருள் நிலையங்கள் மற்றும் காயமாற்று மையங்கள்போன்ற உலகத்தரம்வாய்ந்த வசதிகளை மேம்படுத்துவதில் இது கவனம் செலுத்துகிறது. பயணிகள் நன்கு பராமரிக்கப்பட்ட, சுகாதாரமான சேவைகளை அணுகலாம். NHAIஇன் 'ராஜ்மார்க் யாத்ரா' என்ற செயலியில் சேவை வழங்குநர் விவரங்களை எளிதாகக்காணலாம்.

**3. அண்மையில், "உலகளாவிய நீர்வள அறிக்கையை" வெளியிட்ட அமைப்பு எது?**

அ. UNDP

ஆ. பன்னாட்டு செலாவணி நிதியம்

**இ. உலக வானிலை அமைப்பு ☑**

ஈ. உலக வங்கி

★ நடப்பு 2023ஆம் ஆண்டின் உலகளாவிய நீர்வளங்களின் நிலை அறிக்கை, கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக உலகளாவிய ஆறுகளுக்கு இது மிகவும் வறண்ட ஆண்டு என வெளிப்படுத்துகிறது. இந்த ஆண்டறிக்கையானது 2021ஆம் ஆண்டு முதல் உலக வானிலை அமைப்பினால் வெளியிடப்பட்டு வருகிறது. இது பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு ஆதாரங்களில் இருந்து எடுக்கப்பட்ட நீர்வளங்கள் பற்றிய விரிவான கண்ணோட்டத்தை வழங்குகிறது.

★ கடந்த ஐந்தாண்டுகளில் இயல்பற்ற ஆற்றின் நீரோட்டங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர்வரத்து பரவலாகக் காணப்படுகிறது. அனைத்து பனிப்பாறை பகுதிகளும் 2023இல் பனியிழப்பைச் சந்தித்தன. உலகளவில் 600 ஜிகா டன்களுக்கு மேல் தண்ணீர் இழப்பு ஏற்பட்டுள்ளது; மேலும் 3.6 பில்லியன் மக்களுக்கு போதுமான தண்ணீர் வசதி இல்லை. இந்த எண்ணிக்கை 2050ஆம் ஆண்டில் 5 பில்லியனுக்கும் அதிகமாக உயரும் எனக்கணிக்கப்பட்டுள்ளது, இது நிலையான வளர்ச்சி இலக்கு–6ஐ அடைவதில் தோல்வியைக் குறிக்கிறது.

**4. திருக்குறுங்குடி கோவில்கள் அமைந்துள்ள மாநிலம் எது?**



**அ. தமிழ்நாடு ☑**

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கேரளா

ஈ. கர்நாடகா

★ நம்பிராயர் கோவில், திருமலை நம்பி கோவில், அணிலீஸ்வரர் கோவில் உள்ளிட்ட திருக்குறுங்குடி கோவில்கள் தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ளன. இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறை (ASI) சமீபத்தில் இந்தத் திருக்கோவில்களில் இருந்து பாண்டியர் காலத்திய ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளை ஆவணப்படுத்தியுள்ளது. இக்கோவில் கல்வெட்டுகள் வரலாற்று நன்கொடைகளை வெளிப்படுத்துகின்றன; கோவில் விளக்குகளுக்கு செம்மறி ஆடுகள் மற்றும் தோட்டங்களுக்கு வரியில்லா நிலம். விஜயநகர ஆட்சியின்போது இந்தப் பகுதியின் வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் மத நடைமுறைகளை இது எடுத்துக்காட்டுகிறது.

**5. உலக உயிரியல் பூங்காக்கள் மற்றும் மீன்காட்சியகங்கள் சங்கமானது (WAZA) சமீபத்தில் இந்தியாவில் உள்ள எந்த விலங்கியல் பூங்காவின் உறுப்புத்துவத்தை நிறுத்தி வைத்தது?**

**அ. தில்லி உயிரியல் பூங்கா ☑**

ஆ. கொல்கத்தா உயிரியல் பூங்கா

இ. மும்பை உயிரியல் பூங்கா

ஈ. லக்னோ உயிரியல் பூங்கா

★ உலக உயிரியல் பூங்காக்கள் மற்றும் மீன்காட்சியகங்களின் சங்கம் (WAZA) தேசிய விலங்கியல் பூங்கா அல்லது தில்லி உயிரியல் பூங்காவின் உறுப்புத்துவத்தை நிறுத்தி வைத்தது. அவ்வுயிரியல் பூங்காவில் உள்ள ஒற்றை ஆப்பிரிக்க யானையின் மோசமான நிலைகுறித்த கவலைகள் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. WAZA என்பது உயிரியல் பூங்காக்கள் மற்றும் மீன்காட்சியகங்களுக்கான உலகளாவிய அமைப்பாகும். இந்த அமைப்பின் நோக்கம் விலங்கு பராமரிப்பு, சூழல் கல்வி மற்றும் உலகளாவிய பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துவது.

**6. ஓய்வுபெறும் அரசு ஊழியர்களின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்காக அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட இணையதளத்தின் பெயர் என்ன?**

அ. சுரக்ஷா

**ஆ. அனுபவ் ☑**



இ. நிஷ்சித்

ஈ. சங்கல்ப்

★ பிரதமர் நரேந்திர மோதியின் வழிகாட்டுதலின் பேரில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர் நலத்துறையானது 'அனுபவ்' என்ற இணையதளத்தை அறிமுகப்படுத்தியது. இத்தளம் ஓய்வுபெறும் மற்றும் ஓய்வுற்ற அரசு ஊழியர்கள் தங்கள் பணி அனுபவங்களை பகிர்ந்துகொள்ள அனுமதிக்கிறது. சமர்ப்பிப்புகளை ஊக்குவிப்பதற்காக 2015இல் ஒரு வருடாந்திர விருதுகள் திட்டம் உருவாக்கப்பட்டது; இதன் விளைவாக 10,886 எழுதுதல்கள் வெளியிடப்பட்டன. இதுவரை, 78 சிறந்த பதிவுகள் 59 அனுபவ விருதுகளையும் 19 ஜூரி சான்றிதழ்களையும் பெற்றுள்ளன.

★ தேசிய அனுபவ விருதுகள் திட்டம்–2025 ஆனது நடுவண் அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களை விருதுகளுக்காக தங்கள் எழுத்துப்பதிவுகளை சமர்ப்பிக்க வரவேற்கிறது. முதல் முறையாக, மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் ஊழியர்களும் பங்கேற்க தகுதிபெற்றுள்ளார்கள். ஓய்வூதியம் பெறுவோருக்கான சமர்ப்பிப்பு காலம் ஓய்வுக்குப்பின் ஓராண்டிலிருந்து மூன்று ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

**7. அண்மையில், எந்த விலங்கியல் பூங்காவின் சிவப்புப்பாண்டா திட்டம், 2024 – WAZA பாதுகாப்பு விருதுக்கான இறுதிப் போட்டியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது?**




**அ. பத்மஜா நாயுடு இமயமலை விலங்கியல் பூங்கா ☑**

ஆ. நேரு விலங்கியல் பூங்கா

இ. நந்தன்கானன் விலங்கியல் பூங்கா

ஈ. சாமராஜேந்திரா விலங்கியல் பூங்கா

★ டார்ஜிலிங்கில் அமைந்துள்ள பத்மஜா நாயுடு இமயமலை விலங்கியல் பூங்காவின் சிவப்புப்பாண்டா திட்டம், 2024 – WAZA பாதுகாப்பு விருதுக்கான இறுதிப்போட்டியாளராகத் தெரிவாகியுள்ளது. 2022 மற்றும் 2024க்கு இடையில் 9 சிறைபிடிக்கப்பட்ட சிவப்புப்பாண்டாக்கள் மேற்கு வங்காளத்தின் சிங்காலிலா தேசியப்பூங்காவில் விடுவிக்கப்பட்டன.

★ உயிரியல் பூங்கா நிறுவனங்கள் மற்றும் இந்திய அரசாங்கத்துடன் வாழ்விட மறுசீரமைப்புக்காக இந்த விலங்கியல் பூங்கா ஒத்துழைக்கிறது. சிவப்புப்பாண்டாக்கள் மற்றும் பிற அழிந்து வரும் உயிரினங்களின் கருமுட்டை/விந்தணு, திசுக்கள் மற்றும் DNAஐப் பாதுகாக்க இது ஓர் உயிரி–வங்கி மற்றும் மரபணு வள வசதியைக் கொண்டுள்ளது. நவ.7 அன்று ஆஸ்திரேலியாவின் டரோங்கா உயிரியல் பூங்காவில் நடைபெறும் 79ஆவது WAZA வருடாந்திர மாநாட்டில் விருது வென்ற பூங்கா அறிவிக்கப்படும்.

**8. இந்திய காட்டுக்கழுதை (*Equus hemionus khur*) முதன்மையாகக் காணப்படுகிற மாநிலம் எது?**



அ. மகாராஷ்டிரா

**ஆ. குஜராத் ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. ஒடிஸா

★ குஜராத்தில் இந்திய காட்டுக்கழுதைகளின் (*Equus hemionus khur*) எண்ணிக்கை 2020இல் இருந்த 6,082இல் இருந்து 2024இல் 7,672ஆக அதிகரித்துள்ளது; இது 26.14% அதிகரிப்பாகும். குர் என்பது ஆசிய காட்டுக்கழுதையின் (*Equus hemionus*) ஒரு கிளையினமாகும், இது ஒருவகை காட்டுக்கழுதை என்றும் அழைக்கப்படுகிறது. இது முதன்மையாக குஜராத்தின் லிட்டில் ரான் ஆஃப் கட்சில் காணப்படுகிறது. லிட்டில் ரான் ஆஃப் கட்ச் என்பது ஒரு ஈர நிலமும் பாலைவனமுமாகும்; மேலும் குர் என்பது பொதுவாக ஒரு தாவர உண்ணியாகும். IUCNஆல் அழிந்து வரும் நிலையில் வகைப்படுத்தப்பட்டுள்ள இவ்விலங்கு, வனவிலங்குப் பாதுகாப்புச்சட்டம், 1972இன் அட்டவணை–Iஇன்கீழ் பட்டியலிடப்பட்டுள்ளது.

**9. உலக தொலைத்தொடர்பு தரநிலைப்படுத்தல் அவை – 2024 நடைபெறும் நகரம் எது?**

**அ. புது தில்லி ☑**




ஆ. சென்னை

இ. கோயம்புத்தூர்

ஈ. காக்கிநாடா

★ உலக தொலைத்தொடர்பு தரநிலைப்படுத்தல் அவையானது 2024 அக்.14–24 வரை புது தில்லியில் நடைபெறுகிறது. கடந்த 2002 முதல் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூட்டப்படும் இது, ITU தரநிலைப்படுத்தல் துறையின் ஆளும் மாநாடாகும். தொலைத்தொடர்பு தரப்படுத்தலுக்கான ஆய்வுக்குழுக்களின் பணித்திட்டம் மற்றும் கட்டமைப்பை இது வரையறுக்கிறது. நடப்பு 2024ஆம் ஆண்டு மாநாட்டை நடத்துவது உலகளாவிய தொலைத்தொடர்பு தரநிலைகளை அமைப்பதில் இந்தியாவிற்கு ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். இந்த நிகழ்வு 2024 அக்.14 அன்று ICT தரநிலை கொள்கை விவாதங்களில் கவனம் செலுத்தி, உலகளாவிய தரநிலை கருத்தரங்கத்துடன் தொடங்கும்.

**10. அண்மையில், வனப்பாதுகாப்பை மேம்படுத்த, 'GREEN PLUS' திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநில அரசு எது?**



அ. அஸ்ஸாம்

**ஆ. மேகாலயா ☑**

இ. சிக்கிம்

ஈ. நாகாலாந்து

★ மேகாலயா மாநில முதல்வர் கான்ராட் K சங்மா வனப்பகுதியை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் பசுமை மேகாலயா+ திட்டத்தைத் தொடங்கினார். வனப்பகுதிகளைக் காப்பதற்கு ரொக்கப்பரிசை வழங்குவதன்மூலம் வனப்பாதுகாப்பை விரிவுபடுத்துவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. குறைந்தபட்சம் 30 ஆண்டுகளுக்கு இயற்கை வனங்களைக் காப்பதில் உறுதிபூண்டுள்ள தனிநபர்கள் மற்றும் சமூகங்களை ஆதரிக்கும் சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளுக்கான (PES) கொள்கையை இது பின்பற்றுகிறது. இந்த முன்முயற்சியானது 2022இல் தொடங்கப்பட்ட மாநிலத்தின் PES திட்டத்தின் ஒருபகுதியாகும். 50,000 ஹெக்டேர்களை பாதுகாப்பதை இது இலக்கு வைத்துள்ளது.

**11. 21ஆவது ASEAN–இந்தியா உச்சிமாநாடு மற்றும் 19ஆவது கிழக்கு ஆசிய உச்சிமாநாட்டை நடத்துகிற நாடு எது?**




அ. மியான்மர்


**ஆ. லாவோ PDR ☑**

இ. மலேசியா

ஈ. இந்தோனேசியா

★ 21ஆவது ASEAN–இந்தியா உச்சிமாநாடு மற்றும் 19ஆவது கிழக்கு ஆசிய உச்சிமாநாடு ஆகியவை தற்போதைய ASEAN தலைவரான லாவோ PDRஆல் நடத்தப்படுகிறது. இந்தியா தனது செயல்படு கிழக்கு கொள்கையின் ஒரு தசாப்தத்தை கொண்டாடுகிறது, ஆசியான் உறவுகளை முக்கிய மையமாக கொண்டுள்ளது. ஆசியான்–இந்தியா உச்சிமாநாடு அவர்களின் விரிவான மூலோபாய கூட்டாண்மையின் முன்னேற்றத்தை மதிப்பிடும் மற்றும் எதிர்கால ஒத்துழைப்பை விவாதிக்கும். கிழக்கு ஆசிய உச்சி மாநாடு மூலோபாய நம்பிக்கையை வளர்க்கிறது மற்றும் முக்கிய பிராந்திய பிரச்சினைகளை விவாதிக்க தலைவர்களை அனுமதிக்கிறது. இந்த மாநாட்டின் போது பிரதமர் மோடி இருதரப்பு சந்திப்புகளை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**12. 'Unified Genomic Chip'ஐ உருவாக்கிய அமைப்பு எது?**



அ. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR)

**ஆ. கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை (DAHD) ☑**

இ. இந்திய உணவுக் கழகம்

ஈ. வேளாண் அமைச்சகம்

★ இந்தியப் பிரதமர் அண்மையில், 'ஒருங்கிணைந்த மரபியல் சில்லு' என்ற ஒரு முன்னெடுப்பைத் தொடங்கினார். இந்தியாவில் உயர்தர கால்நடைகளை முன்கூட்டியே கண்டறிந்து பால்பண்ணையின் செயல்திறனை மேம்படுத்த விவசாயிகளுக்கு உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த மரபியல் சில்லில் இரண்டு பதிப்புகள் உள்ளன: கால்நடைகளுக்கான, 'கௌ சில்லு' மற்றும் எருமைக்கான, 'மஹிஷ் சில்லு'.

★ கால்நடை பராமரிப்பு மற்றும் பால்பண்ணைத் துறையால் உருவாக்கப்பட்ட இச்சில்லு, இளம், உயர்தர காளைகளை முன்கூட்டியே கண்டறிந்து தகவலறிந்த முடிவுகளை எடுக்க விவசாயிகளுக்கு உதவுகிறது. இது குறிப்பாக இந்திய கால்நடை இனங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பிரதமர் இன்று லாவோஸ் பயணம் – ASEAN மாநாட்டில் பங்கேற்பு**

ASEAN–இந்தியா உச்சிமாநாடு மற்றும் கிழக்காசிய உச்சிமாநாட்டில் பங்கேற்க இரண்டு நாள் சுற்றுப்பயணமாக பிரதமர் நரேந்திர மோதி அக்.10 அன்று லாவோஸ் நாட்டுக்குச் சென்றார். ASEAN–இந்தியா இடையிலான 21ஆவது உச்சிமாநாடு மற்றும் 19ஆவது கிழக்காசிய உச்சிமாநாடு ஆகியவை லாவோஸின் வியன்டியன் நகரில் அக்.10 & 11 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது.

---

**2. விடுதலைப்போராட்ட வீரர்கள் 3 பேருக்கு சிலைகள்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.**

விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவனின் முக்கியத் தளபதியாகத் திகழ்ந்து அவரது மடியில் உயிர்நீத்த மாவீரன் வெண்ணிக்காலாடியின் தியாக வீரத்தைப் போற்றும் வகையில் தென்காசி மாவட்டம் நெல்கட்டும் செவல் கிராமம் பச்சேரியில் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, சிவகங்கையை மீட்டிட படைதிரட்டி 'வீரமங்கை' வேலுநாச்சியாரின் மெய்க்காப்பாளராக விளங்கிய குயிலி, எரியெண்ணெயைத் தடவிக்கொண்டு வெள்ளையரின் ஆயுதக்கிடங்கில் குதித்து அழித்துத் தியாகச்சுடராகி ஒளிர்ந்தார். அவரது நினைவுப்போற்றும் வகையில், சிவகங்கை மாவட்டம் இராகினிப்பட்டியில் அமைந்துள்ள வேலு நாச்சியார் மணிமண்டப வளாகத்தில் குயிலித்தாய்க்கு சிலை நிறுவப்பட்டது.

இதேபோன்று, வீரபாண்டிய கட்டபொம்மனை தூக்கிலிட்டோருக்கு பாடம் புகட்டுவேன் என வீர முழக்கமிட்டார், தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர். அதன்படியே செய்தும் காட்டினார். அவரது வீரத்தைப் போற்றும் வகையில் திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் எத்தலப்பர் நாயக்கருக்கு சிலையும், நினைவு அரங்கமும் அமைக்கப்பட்டுள்ளது.

---

**3. ரத்தன் டாடா காலமானார்!**

தொழிலதிபர் ரத்தன் டாடா (86) மும்பையில் காலமானார். 1991–2012 வரையில் டாடா குழுமத்தின் தலைவராக அவர் பதவி வகித்து வந்தார். அவருக்கு 2000ஆம் ஆண்டு 'பத்ம பூஷண்' விருதும், 2008ஆம் ஆண்டில் 'பத்ம விபூஷண்' விருதும் வழங்கி நடுவண் அரசு கௌரவித்தது.

---

**4. இலவச அரிசி திட்டம்: 4 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு; மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

ஏழைகளுக்கு மக்களுக்கு உணவு பாதுகாப்பு சட்டம் மற்றும் பிற நலத்திட்டங்களின் கீழ், வரும் 2028ஆம் ஆண்டு வரை இலவச செறிவூட்டப்பட்ட அரசி விநியோகத்தைத் தொடர மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தின் வழிகாட்டு நடைமுறையின் அடிப்படையில் இரும்புச்சத்து, போலிக் அமிலம், Vit B12 ஆகிய நுண்ணூட்டச்சத்துக்கள் செறிவூட்டப்பட்ட அரிசி ஏழை மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

பிரதமரின் இலவச உணவு தானிய விநியோகத் திட்டம் உள்ளிட்ட அனைத்து நலத்திட்டங்களின் கீழ் ஏழை மக்களுக்கு விநியோகிக்கப்படும் செறிவூட்டப்பட்ட இலவச அரசி விநியோகத்தை வரும் 2024ஆம் ஆண்டு ஜூலை முதல் 2028ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை தொடர மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. கேரளாவின் பெரியாறு புலிகள் காப்பகத்தின் பங்கேற்பு வன மேலாண்மை திட்டத்தின் பெயர் என்ன?**

**அ. விடியல் வனப்பாதுகாப்பு சங்கம் ☑**

ஆ. மறையூர் முன்னெடுப்பு

இ. சந்தனமர பாதுகாப்பு திட்டம்

ஈ. புலிகள் பாதுகாப்பு அமைப்பு




★ கேரளாவின் பெரியாறு புலிகள் காப்பகத்தில் உள்ள பங்கேற்பு வன மேலாண்மை திட்டம், "விடியல் வனப்பாதுகாப்பு சங்கம் – The Dawn Forest Protection Group" என்று அழைக்கப்படுகிறது. முன்னாள் வேட்டையாடிகளை தீவிரமாக ஈடுபடுத்துகிற இத்திட்டம், அவர்களுக்கு சுற்றுலா வழிகாட்டுதல் மற்றும் வேட்டையாடுதல் எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்ற மாற்று வாழ்வாதாரங்களை வழங்குகிறது. பெரியாறு புலிகள் சரணாலயத்தில் வேட்டையாடுவதை கணிசமாகக் குறைத்து, அப்பகுதியின் சந்தனக்காப்புக்காடுகளைப் பாதுகாக்கும் வகையில் இத்திட்டம் திகழ்கிறது.

**2. அண்மையில், கர்நாடகாவின் எந்தப் புல்வெளி பாதுகாப்பு இருப்பாக அறிவிக்கப்பட்டது?**

அ. சித்ரதுர்கா புல்வெளி

ஆ. கோலார் புல்வெளி

**இ. ஹெசரகட்டா புல்வெளி ☑**

ஈ. நாகர்ஹோலே புல்வெளி



★ கர்நாடக மாநில வனவிலங்கு வாரியம் அண்மையில் ஹெசரகட்டா புல்வெளியை பெரும் ஹெசரகட்டா புல்வெளி பாதுகாப்பு இருப்பாக அறிவிக்க ஒப்புதலளித்தது. நகர்ப்புற விரிவாக்கத்தின் மத்தியில் பெங்களூருவில் பசுமையான இடங்களைப் பாதுகாப்பதை இந்த முடிவு நோக்கமாகக் கொண்டுள்ளது. இப்பகுதி பல ஏரிகள் மற்றும் வனப்பகுதிகள் உட்பட 5,010 ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ளது. இந்த நடவடிக்கை சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான நீண்டகால கோரிக்கைகளுக்குத் தீர்வுகாண்கிறது.


**3. அண்மையில், இந்தியாவால் பொதுச்சுகாதாரப்பிரச்சனை என்பதிலிருந்து நீக்கப்பட்ட, 'கண்ணிமை நோய்' என்பது என்ன வகையான தொற்று?**

**அ. பாக்டீரியா ☑**

ஆ. பூஞ்சை

இ. வைரஸ்

ஈ. ஒட்டுண்ணி



★ உலக சுகாதார நிறுவனமானது இந்தியா 'கண்ணிமை நோய் – Trachoma'ஐ ஒரு பொதுச் சுகாதாரப் பிரச்சனை என்பதிலிருந்து நீக்கிவிட்டதாக அறிவித்துள்ளது. தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் இந்தச் சாதனையை எட்டிய மூன்றாவது நாடு இந்தியா. '*Chlamydia Trachomatis*' என்ற பாக்டீரியாவால் ஏற்படுகிற கண்ணிமை நோயானது கண்களைப்பாதிக்கிறது. இது பாதிக்கப்பட்ட நபரின் கண்கள், கண்ணிமைகள், மூக்கு (அ) தொண்டையிலிருந்து சுரக்கும் தொடர்புமூலம் பரவுகிறது. சிகிச்சையளிக்கப்படாவிட்டால், அது மீளமுடியாத குருட்டுத்தன்மைக்கு வழி கோலுகிறது. மோசமான சுற்றுச்சூழல் நிலைமைகளில் உள்ள சமூகங்களை இது முதன்மையாகப் பாதிக்கிறது. உலகளவில் 150 மில்லியன் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர், அதில் 6 மில்லியன் பேர் பார்வையற்றவர்கள் என்ற நிலையில் உள்ளனர்.

**4. அண்மையில், உஸ்தாத் அலாவுதீன் கான் விழாவை ஏற்பாடு செய்த மாநிலம் எது?**

**அ. மத்திய பிரதேசம் ☑** ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கேரளா ஈ. கர்நாடகா

MADHYA PRADESH
The heart of Incredible India

★ அண்மையில் மத்திய பிரதேச மாநிலத்தில் உஸ்தாத் அலாவுதீன் கான் விழா நடத்தப்பட்டது. மத்திய பிரதேசத்தின் மைகார் என்ற இடத்தில் நடைபெறும் இந்த விழா புகழ்பெற்ற இசைக்கலைஞர் உஸ்தாத் அலாவுதீன் கானுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. 3 நாட்கள் நடைபெறும் இந்நிகழ்வில் நாடு முழுவதிலுமிருந்து பல புகழ்பெற்ற பிரமுகர்களின் நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. இது மத்திய பிரதேச கலாசாரத்துறை, உஸ்தாத் அலாவுதீன் கான் இசை மற்றும் கலை அகாதெமி மற்றும் மைகார் மாவட்ட நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; அக்.10 வரை இது நடக்கிறது. உஸ்தாத் அலாவுதீன் கான் மத்திய பிரதேசத்தின் இசை பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்காக அறியப்பட்டவராவார்.

**5. 2024 – இயற்பியலுக்கான நோபல் பரிசு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?**



அ. டொனால்ட் பி. ஷ்னைடர் மற்றும் ஜோயல் நாதன் பட்லர்


**ஆ. ஜான் ஹாப்ஃபீல்ட் மற்றும் ஜெஃப்ரி ஹிண்டன் ☑**

இ. சுபீர் சர்க்கார் மற்றும் ஜோஸ் பிளாண்ட்- ஹாவ்தோர்ன்

ஈ. மேக்ஸ் பிளாங்க் மற்றும் ரிச்சர்ட் ஃபெய்ன்மேன்

★ 2024 – இயற்பியலுக்கான நோபல் பரிசு ஜான் ஹாப்ஃபீல்ட் மற்றும் ஜெஃப்ரி ஹிண்டன் ஆகியோருக்கு செயற்கை நரம்பியல் வலையமைப்புகள்மூலம் இயந்திரக்கற்றலில் அவர்கள் மேற்கொண்ட பணிக்காக வழங்கப்பட்டுள்ளது. இயந்திரக்கற்றல் என்பது செயற்கை நுண்ணறிவின் ஒரு கிளையாகும்; இது தரவுகளிலிருந்து கற்றுக்கொள்ளும் அமைப்புகளை உருவாக்குவதில் கவனஞ்செலுத்துகிறது. இயந்திரக்கற்றல் அமைப்புகளை மாற்றியமைக்கவும் மேம்படுத்தவும் உதவுகிறது. இயந்திரக்கற்றலில் உள்ள வினைச்சரங்கள் தரவுகளில் உள்ள உறவுகள் மற்றும் வடிவங்களை அடையாளம் கண்டு, கணிப்புகளை உருவாக்கி, தகவலை வகைப்படுத்துகின்றன.

**6. அண்மையில், MACE கூர்நோக்ககம் திறக்கப்பட்ட மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**



**அ. லடாக் ☑**

ஆ. உத்தரகாண்ட்

இ. இமாச்சல பிரதேசம்

ஈ. இலட்சத்தீவுகள்

★ லடாக்கின் ஹான்லேயில் DAEஇன் செயலாளரும் அணுசக்தி ஆணையத்தின் தலைவருமானவரால் MACE கூர் நோக்ககம் திறந்துவைக்கப்பட்டது. ஆசியாவின் மிகப்பெரிய இமேஜிங் செரென்கோவ் தொலைநோக்கியைக் கொண்டுள்ள இது, உலகின் அதிக உயரத்தில் நிறுவப்பட்டுள்ள தொலைநோக்கியாகும்; இது சுமார் 4,300 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. **M**ajor **A**tmospheric **C**herenkov **E**xperiment (**MACE**) ஆனது பன்னாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும் விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியாவின் பங்கை வலுப்படுத்துவதையும் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. ECIL மற்றும் பிற இந்திய தொழில்துறை பங்காளர்களின் உதவியுடன் பாபா அணு ஆராய்ச்சி மையத்தால் (BARC) உள்நாட்டில் கட்டப்பட்ட இது, வானியற்பியல் மற்றும் துகள் முடுக்கம்பற்றிய ஆய்வுகளை மேம்படுத்தும். சூப்பர்நோவாக்கள், கருந்துளைகள் மற்றும் காமா–கதிர் வெடிப்புகள்போன்ற நிகழ்வுகள் குறித்த உலகளாவிய ஆராய்ச்சிக்கு உதவும் MACE, உயராற்றல்கொண்ட காமா கதிர்களைக் கண்காணிக்கும்.

**7. உலக ஊறுபந்து (Pickleball) சாம்பியன்ஷிப் தொடரை நடத்தும் நாடு எது?**



அ. மியான்மர்


**ஆ. இந்தியா ☑**

இ. சீனா

ஈ. நேபாளம்

★ அகில இந்திய ஊறுபந்து சங்கம் (AIPA) முதன்முறையாக இந்தியாவில் உலக ஊறுபந்து சாம்பியன்ஷிப் தொடரை நடத்துகிறது. இந்த நிகழ்வு, 2024 நவ.12–17 வரை மும்பையில் நடைபெறவுள்ளது. வியட்நாம் மற்றும் பாலியில் நடந்த போட்டிகளைத் தொடர்ந்து, உலகெங்கிலும் உள்ள சிறந்த ஊறுபந்து வீச்சாளர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர். ஆஸ்திரேலியா, வியட்நாம், தைவான், போலந்து, சிங்கப்பூர் உள்ளிட்ட 6 முதல் 7 நாடுகளைச் சேர்ந்த சுமார் 650 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

**8. லோத்தலில் தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகத்தை உருவாக்கவுள்ள அமைச்சகம் எது?**



அ. பாதுகாப்பு அமைச்சகம்


ஆ. ஜல் சக்தி அமைச்சகம்

**இ. துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகம் ☑**

ஈ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்

★ மத்திய அமைச்சரவை 2024 அக்.09 அன்று குஜராத்தின் லோத்தலில் தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகத்தை உருவாக்க ஒப்புதலளித்தது. இவ்வளாகம் பழங்கால சிந்து சமவெளி லோத்தலில் 2 கட்டங்களாக உருவாக்கப்படும். பண்டைய காலம் முதல் நவீன காலம் வரை இந்தியாவின் கடல்சார் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் ஒரு சர்வதேச சுற்றுலாத்தலமாக இது திகழும். மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப் போக்குவரத்துகள் அமைச்சகம், குஜராத் அரசுடன் இணைந்து, சாகர்மாலா திட்டத்தின்கீழ் திட்டத்தை மேற்பார்வையிட்டு வருகிறது. 400 ஏக்கர் பரப்பில், சுமார் ₹4500 கோடி செலவில் 2024 மார்ச்சில் இத்திட்டம் தொடங்கும்.

**9. அண்மையில், ருவாண்டாவில் அதிக இறப்பு விகிதத்துடன் தோன்றியுள்ள வைரஸ் எது?**



அ. குரங்கம்மை

**ஆ. மார்பர்க் ☑**

இ. எபோலா

ஈ. ஜப்பானிய மூளையழற்சி

★ ஃபிலோவைரஸ் குடும்பத்தின் ஒருபகுதியான மார்பர்க் வைரஸ், கொடிய நோய்க்கிருமிகளுள் ஒன்றாகும்; இதில் இறப்பு விகிதம் 24%–88% வரை இருக்கும். அண்மையில் ருவாண்டாவில் நிகழ்ந்த இதன் பாதிப்பு 46 நோய்த் தொற்றுகளில் 12 இறப்புகளை ஏற்படுத்தியுள்ளது; இது முக்கியமாக மருத்துவ ஊழியர்களை பாதிக்கிறது.

★ பாதிக்கப்பட்ட உடல் திரவங்கள் மற்றும் அசுத்தமான பொருட்களுடனான நேரடி தொடர்புமூலம் மார்பர்க் பரவுகிறது. அதீத காய்ச்சல் மற்றும் கடுமையான தலைவலி ஆகியவை இதன் ஆரம்ப அறிகுறிகளில் அடங்கும்; இரத்தப்போக்கு அடுத்த அறிகுறியாகும். தற்போது, அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளென இதற்கு எதுவும் இல்லை.

**10. அண்மையில், இந்தியக்கடற்படையில் பணியில் சேர்க்கப்பட்ட உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இரண்டாவது ஆய்வுக்கப்பலின் பெயர் என்ன?**



**அ. நிர்தேஷக் ☑**

ஆ. விக்ராந்த்

இ. காவேரி

ஈ. கலஹாரி

★ அண்மையில், கொல்கத்தாவில் உள்ள கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் & பொறியாளர்கள் நிறுவனத்தால் கட்டப்பட்ட நான்கு ஆய்வுக்கப்பல்களில் இரண்டாவதான நிர்தேஷக்கை இந்தியக்கடற்படை பெற்றது. 'தற்சார்பு இந்தியா' மீதான உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் 'நிர்தேஷக்' 80%க்கும் அதிகமான உள்நாட்டு உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது.

★ இந்தியாவின் மிகப்பெரிய ஆய்வுக்கப்பலான இது, துறைமுகங்கள் மற்றும் கடலோர மற்றும் ஆழமான நீர்நிலை ஆய்வுகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. கப்பல் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டுப் பயன்பாடுகளுக்கு கடல்சார் மற்றும் புவி இயற்பியல் தரவுகளையும் இது சேகரிக்கும்.

### 11. உலக அஞ்சல் நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ. அக்டோபர்.08

**ஆ. அக்டோபர்.09 ☑**

இ. அக்டோபர்.10

ஈ. அக்டோபர்.11




★ அன்றாட வாழ்வில், உலகளாவிய தகவல் தொடர்பு & பொருளாதார வளர்ச்சியில் அஞ்சலமைப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் அக்.09 அன்று உலக அஞ்சல் நாள் கொண்டாடப்படுகிறது. சர்வதேச அஞ்சல் பரிமாற்றத்தை மாற்றியமைத்த சுவிட்சர்லாந்தின் பெர்னில் 1874இல் நிறுவப்பட்ட உலகளாவிய அஞ்சல் ஒன்றியத்தின் (UPU) 150ஆவது ஆண்டு நிறைவை இந்த ஆண்டு குறிக்கிறது. இந்த ஆண்டுக்கான கருப்பொருள், "150 Years of Enabling Communication and Empowering People Across Nations" என்பதாகும்.

★ பன்னாட்டு அஞ்சல் சேவைகளை நெறிப்படுத்தவும், நாடுகளுக்கு இடையே எளிதான அஞ்சல் பரிமாற்றத்திற்காக ஓர் ஒருங்கிணைந்த அஞ்சலமைப்பை உருவாக்கவும் UPUஇன் முயற்சிகளுக்கு இது மதிப்பளிக்கிறது.

### 12. சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்வதற்காக, 'தட்பவெப்பநிலை நிறுவனத்தைத்' தொடங்கியுள்ள பல்கலை எது?

அ. லக்னோ பல்கலைக்கழகம்

**ஆ. ஆமதாபாத் பல்கலைக்கழகம் ☑**

இ. மும்பை பல்கலைக்கழகம்

ஈ. மெட்ராஸ் பல்கலைக்கழகம்

★ ஆமதாபாத் பல்கலைக்கழகம் 'தட்பவெப்பநிலை நிறுவனம் – The Climate Institute' என்றவொன்றைத் தொடங்கி உள்ளது. இது ஆராய்ச்சி, கல்வி மற்றும் தட்பவெப்பநிலை சிக்கல்களைத் தீர்ப்பதற்கான தாக்கத்தை மையமாகக் கொண்டுள்ளது. எதிர்காலத் தலைமைகளுக்காக இந்தியாவின் முதல் விரிவான தட்பவெப்பநிலை, ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் கல்வித்திட்டத்தை இந்நிறுவனம் உருவாக்கி வருகிறது. இது 3 பகுதிகளில் இயங்குகிறது: ஆற்றல் மற்றும் தட்பவெப்பநிலை மாற்றம்; நகரங்கள் & குடியிருப்புகள்; மற்றும் காற்று மற்றும் நீர். கொள்கை வடிவமைப்பு மற்றும் கண்டுபிடிப்புகளைத் தெரிவிக்க பல்துறைசார் ஆராய்ச்சி மற்றும் கூட்டாண்மைகளை இது ஊக்குவிக்கிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்தியா–ASEAN உறவை வலுப்படுத்த 10 அம்ச செயல்திட்டம் – பிரதமர் நரேந்திர மோதி அறிவிப்பு.**

இந்தியா மற்றும் ASEAN நாடுகள் இடையிலான விரிவான கூட்டுறவை வலுப்படுத்த 10 அம்ச செயல்திட்டத்தை பிரதமர் நரேந்திர மோதி அறிவித்தார். மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, புரூணே, கம்போடியா, இந்தோனேசியா, மியான்மர், பிலிப்பின்ஸ், வியத்நாம், லாவோஸ் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கும் ASEAN கூட்டமைப்புக்கு நடப்பு ஆண்டில் லாவோஸ் தலைமை வகிக்கிறது. அந்நாட்டின் தலைநகர் வியன்டியனில், 21ஆவது இந்தியா–ASEAN உச்சிமாநாடு அக்.10 நடைபெற்றது.

---

**2. TN – ALERT செயலி:**

பருவமழை பாதிப்புகளை எதிர்கொள்வதற்காக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் தனியாக செயலி (TN–ALERT) உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலியில் வானிலை முன்னறிவிப்பு குறித்த தகவல்களையும், அடுத்த 5 நாள்களுக்கான வானிலை முன்னெச்சரிக்கை தகவல்களையும் பெறலாம். மேலும் பெறப்பட்ட மழையளவு, அணைகளின் நீர்மட்டம், வெள்ளம் பாதிக்கும் வசிப்பிட பகுதிகள், பேரிடர் தொடர்பான புகார் பதிவு என பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், இச்செயலியில் உதவி எண்கள் என்ற பிரிவு தனியாக உள்ளது. அதிலிருந்து, மாநில அவசரக்கட்டுப்பாட்டு மையத்தையும், மாவட்ட கட்டுப்பாட்டு மையத்தையும் தொடர்புகொள்ளலாம்.

---

**3. கொரிய சுற்றுலா அமைப்புடன் IRCTC ஒப்பந்தம்.**

இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலா கழகத்துடன் (IRCTC) கொரிய சுற்றுலா அமைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. 2024 – உலக மனநல நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**




**அ. Mental Health at Work ☑**

ஆ. Mental Health in an Unequal World

இ. Make Mental Health & Well-being for All a Global Priority

ஈ. Mental Health for All

★ உலக மனநல நாள் அக்.10 அன்று அனுசரிக்கப்படுகிறது; இது முதன்முதலில் 1992இல் மனநலத்திற்கான உலக கூட்டமைப்பால் தொடங்கப்பட்டது. இந்த நாள் மனநலப்பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், உலகளவில் மனநலப்பாதுகாப்புக்கு ஆதரவளிப்பதையும் நோக்கமாகக்கொண்டுள்ளது. மனநலப் பராமரிப்பில் நீடித்த மாற்றத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கங்கள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடையே ஒத்துழைப்பிற்கான குறிப்பிடத்தக்க தளமாக இது மாறியுள்ளது. 2024ஆம் ஆண்டின் கருப்பொருள், "Mental Health at Work" என்பதாகும். மனநலத்தை மேம்படுத்துவதற்கும் தேவைப்படுபவர்க்கு ஆதரவளிப்பதற்கும் பாதுகாப்பான மற்றும் உள்ளடக்கிய பணிச்சூழலின் அவசியத்தை இது வலியுறுத்துகிறது.

**2. வியாழனின் நிலவை ஆராய்வதற்காக யூரோபா கிளிப்பர் திட்டத்தைத் தொடங்கியுள்ள விண்வெளி அமைப்பு எது?**



அ. ISRO

**ஆ. NASA ☑**

இ. ESA

ஈ. CNSA

★ NASA வியாழனின் நிலவான யூரோபாவையும் அதன் உயிர்களை நிலைநிறுத்தும் திறனையும் ஆராய யூரோபா கிளிப்பர் விண்கலத்தை ஏவியது. இந்த விண்கலம் சுமார் 10 ஆண்டு பயணத்தில் 3 பில்லியன் கிமீ பயணிக்கும். யூரோப்பாவில் அதன் பனிக்கட்டி மேற்பரப்புக்குக்கீழே 120 கிமீ ஆழத்தில் கடல் இருப்பதாக நம்பப்படுகிறது. 2013ஆம் ஆண்டில், ஹப்பிள், யூரோபாவில் வெந்நீரூற்றுகளைக் கண்டறிந்தது; உயிர்களை ஆதரிக்கும் வெப்பத்துளைகள் இருக்கலாம் எனப்பரிந்துரைத்தது. யூரோபா கிளிப்பர் என்பது NASAஇன் மிகப்பெரிய விண்கலமாகும்; இது சூரிய ஒளி தகடுகளால் இயக்கப்படுகிறது. இதன் மதிப்பீட்டு செலவு $5.2 பில்லியன் ஆகும்.

**3. அகஸ்தியமலை மூங்கில்வாலி என்பது சார்ந்த இனம் எது?**



**அ. ஊசித்தட்டான் ☑**

ஆ. மீன்

இ. சிலந்தி

ஈ. வண்டு

★ கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள மஞ்சாதிநின்னவிலாவில் அகஸ்தியமலை மூங்கில்வாலி (*Agasthyamalai Bambootail*) என்ற பெயருடைய புதிய ஊசித்தட்டான் இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். மூங்கில் வாலி குழுவிற்குச்சொந்தமான இந்த அரிய வகை ஊசித்தட்டான், மூங்கில் தண்டுகளை ஒத்த நீண்ட உருளை அடி வயிற்றுக்குப் பெயர்பெற்றது. இது மேற்குத்தொடர்ச்சிமலையின் அகஸ்தியமலை நிலப்பரப்பில் காணப்பட்டது. குடகு–வயநாட்டில் அமைந்துள்ள மலபார் மூங்கில்வாலி மட்டுமே இவ்வினத்தில் உள்ள ஒரே இனமாகும்.

**4. 38ஆவது கோடைக்கால தேசிய விளையாட்டுப்போட்டிகளை நடத்தும் மாநிலம் எது?**




**அ. உத்தரகாண்ட் ☑** ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கேரளா ஈ. கர்நாடகா

★ உத்தரகாண்ட் 38ஆவது கோடைக்கால தேசிய விளையாட்டுப் போட்டிகளை 2025 ஜனவரி.28 முதல் பிப்ரவரி.14 வரையிலும், அடுத்த குளிர்கால விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தும். 37ஆம் தேசிய விளையாட்டுப் போட்டிகள் கோவாவில் 2023 செப்.25 முதல் நவ.09 வரை நடைபெற்றது. ஜம்மு & காஷ்மீர் மற்றும் லடாக்கிற்கு வெளியே குளிர்கால விளையாட்டுப்போட்டிகள் நடைபெறுவது இதுவே முதல்முறையாகும். இந்திய ஒலிம்பிக் சங்கத்தால் (IOA) நடத்தப்படும் தேசிய விளையாட்டுப் போட்டிகள், கோடைகால ஒலிம்பிக்கிற்கான திறமைகளை அடையாளம் காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. முதல் தேசிய விளையாட்டுப் போட்டிகள் 1924ஆம் ஆண்டு லாகூரில் நடைபெற்றன; இது முன்னர் அகில இந்திய ஒலிம்பிக் விளையாட்டு என்று அழைக்கப்பட்டது.

**5. Lunar Polar Exploration (LUPEX) என்பது எந்த இரு விண்வெளி நிறுவனங்களின் கூட்டுத்திட்டமாகும்?**



அ. NASA மற்றும் ISRO

**ஆ. ISRO மற்றும் JAXA ☑**

இ. ESA மற்றும் NASA

ஈ. CNSA மற்றும் ISRO

★ திங்களுக்கான இந்தியாவின் ஐந்தாவது திட்டமான Lunar Polar Exploration (LUPEX)க்கு இந்திய தேசிய விண்வெளி ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது. 2023 ஆகஸ்டில் சந்திரயான்–3 நிலவில் தரையிறங்கியதை அடுத்து, நிலவில் தரையிறங்கிய 4ஆவது நாடாக இந்தியா ஆனது. இது இந்தியாவின் ISRO மற்றும் ஜப்பானின் JAXA ஆகியவற்றின் கூட்டுத்திட்டமாகும்; இது சந்திர வள ஆய்வில் கவனம் செலுத்துகிறது. நிலவின் மேற்பரப்பிலும் அதன் மறுகோடியின் கீழும் நீரின் இருப்பு மற்றும் பரவலை ஆய்வதே முக்கிய நோக்கமாகும்.

**6. 2024 – வேதியியலுக்கான நோபல் பரிசு யாருக்கு வழங்கப்பட்டது?**



அ. டொனால்ட் ஜி. ட்ருஹ்லர் மற்றும் டோபின் ஜே. மார்க்ஸ்

ஆ. குலமணி பரிதா மற்றும் பராக் ஆர். கோகேட்

**இ. டேவிட் பேக்கர், டெமிஸ் ஹசாபிஸ் மற்றும் ஜான் எம் ☑**

ஈ. மைக்கேல் கிராட்செல் மற்றும் ஜார்ஜ் எம்

★ புரத அறிவியலுக்கான பங்களிப்புகளுக்காக டேவிட் பேக்கர், டெமிஸ் ஹசாபிஸ் மற்றும் ஜான் M ஜம்பர் ஆகியோருக்கு 2024 – வேதியியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. டேவிட் பேக்கர் கணக்கீட்டு புரத வடிவமைப்பிற்கான பரிசைப்பெற்றார்; 2003 முதல் முற்றிலும் புதிய புரதங்களை உருவாக்கினார். டெமிஸ் ஹசாபிஸ் மற்றும் ஜான் ஜம்பர் ஆகியோர் AlphaFold2, 3D புரதக்கட்டமைப்புகளை முன்னறிவிக்கும் AI மாதிரியை உருவாக்குவதற்காக அங்கீகரிக்கப்பட்டனர். AlphaFold2ஆல் கிட்டத்தட்ட 200 மில்லியன் இனங்காணப்பட்ட புரதங்களின் கட்டமைப்பை கணிக்க முடியும். இக்கண்டுபிடிப்புகள் மருந்துகள், தடுப்பூசிகள் மற்றும் ஆண்டிபயாடிக் எதிர்ப்பு மற்றும் நெகிழிச் சிதைவுபோன்ற சவால்களைத் தீர்க்கும் துறைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

**7. IBSAMAR பயிற்சியானது அண்மையில் எந்தெந்த நாடுகளுக்கு இடையே நடத்தப்பட்டது?**



அ. ஈரான், பெலாரஸ் மற்றும் செர்பியா

ஆ. அயர்லாந்து, புருனே மற்றும் சுவீடன்

**இ. இந்தியா, பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்கா ☑**

ஈ. இஸ்ரேல், வங்கதேசம் மற்றும் செனகல்

★ 2024 அக்.06 முதல் 18 வரை திட்டமிடப்பட்டுள்ள இந்திய, பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்க கடற்படைகளின் கூட்டு பன்னாட்டு கடல்சார் பயிற்சியான இப்சாமரின் எட்டாவது பதிப்பில் பங்கேற்க, இந்தியக்கடற்படையின் முன்னணி போர்க்கப்பல், INS தல்வார் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றடைந்தது.

★ இந்தப்பயிற்சி 3 கடற்படைகளுக்கு இடையிலான இயங்குதன்மையை மேம்படுத்துவதையும், ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. துறைமுக கட்டத்தில் நடக்கும் இப்பயிற்சியில் தொழில்முறை பரிமாற்றங்கள், சேதக்கட்டுப்பாடு மற்றும் தீயணைப்புப் பயிற்சிகள், தேடல் மற்றும் பறிமுதல் பயிற்சிகள், விமான பாதுகாப்பு விரிவுரைகள், கூட்டு நீர்மூழ்கி நடவடிக்கைகள், பெருங்கடல் ஆளுமை கருத்தரங்கு, விளையாட்டு தொடர்புகள், சிறப்புப்படைகள் மற்றும் இளநிலை அதிகாரிகளிடையே கலந்துரையாடல் ஆகியவை அடங்கும்.

### 8. ஒவ்வோர் ஆண்டும் தேசிய அஞ்சல் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. அக்டோபர் 09

**ஆ. அக்டோபர் 10 ☑**

இ. அக்டோபர் 11

ஈ. அக்டோபர் 12

★ இந்தியா ஒவ்வோர் ஆண்டும் அக்.10ஆம் தேதி தேசிய அஞ்சல் நாளாகக் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் இந்திய அஞ்சல் சேவையையும் நாட்டை இணைப்பதில் அதன் பங்கையும் மதிக்கிறது. இது 1854 அக்.10இல் கிழக்கிந்திய நிறுவனத்தால் நிறுவப்பட்ட சேவையின் நினைவாக உள்ளது. இந்திய அஞ்சல் சேவை உலகின் மிகப்பெரிய வலையமைப்புகளில் ஒன்றாக வளர்ந்துள்ளது. இது எளிய அஞ்சல் விநியோகத்திலிருந்து நாடு முழுவதும் உள்ள மில்லியன் கணக்கானவர்களுக்கு பரந்த அளவிலான சேவைகளை வழங்குவதற்குப் பரிணமித்துள்ளது.

### 9. சம்பதா 2.0 என்ற பெயரில் அதிநவீன மின்-பதிவு முறையை இந்தியாவில் முதலில் அறிமுகப்படுத்திய மாநிலம் எது?

அ. இராஜஸ்தான்

ஆ. உத்தரகாண்ட்

**இ. மத்திய பிரதேசம் ☑**

ஈ. உத்தர பிரதேசம்

★ மத்திய பிரதேசம் அதன் புதிய மின்-பதிவு முறையான சம்பதா 2.0மூலம் ஆவணப்பதிவை முழுமையாக டிஜிட்டல் மயமாக்கிய இந்தியாவின் முதல் மாநிலமாக மாறியுள்ளது. மென்பொருள் மற்றும் திறன்பேசி செயலியின் இந்த நவீன பதிப்பு, ஆவணப்பதிவை இணையவழிலேயே (online) நிறைவுசெய்ய அனுமதிப்பதோடு துணைப்பதிவாளர் அலுவலகங்களுக்கு நேரில் செல்லவேண்டிய தேவையை நீக்குகிறது. இந்தச் செயல்முறை இப்போது முற்றிலும் எண்மமயமானது, பாதுகாப்பானது மற்றும் தாளற்றது.

### 10. அண்மையில், 'லிவிங் பிளானட்' என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?

**அ. உலகளாவிய நிதியம் ☑**

ஆ. உலக வங்கி

இ. ஐநா வளர்ச்சித் திட்டம்

ஈ. ஐநா சுற்றுச்சூழல் திட்டம்

★ இயற்கைக்கான உலகளாவிய நிதியம் அதன் ஈராண்டுக்கொருமுறை வெளியிடும் 'வாழும் கோள்' அறிக்கையை வெளியிட்டது. கடந்த 50 ஆண்டுகளில் (1970–2020) வனவிலங்குகளின் எண்ணிக்கை 73% குறைந்துள்ளது. நன்னீர் இனங்கள், அதைத்தொடர்ந்து நிலவாழ் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் பெருஞ்சரிவை எதிர்கொண்டன. இந்த வீழ்ச்சிக்கான முக்கிய காரணங்களில் வாழ்விட இழப்பு, காலநிலை மாற்றம் மற்றும் ஆக்கிரமிப்பு இனங்கள் ஆகியவை அடங்கும். ஆந்திர பிரதேசத்தின் சமூக–நிர்வகிக்கப்பட்ட இயற்கை விவசாயம் (APCNF) நேர்மறையான சமூக–பொருளாதார தாக்கங்களைக் காட்டுகிறது. இயற்கை–சார்ந்த உணவு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக இந்தியாவின் தினை பணி பாராட்டைப்பெற்றது.

### 11. 2024 – ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில் இந்தியா வென்ற பதக்கம் என்ன?

அ. தங்கம்

ஆ. வெள்ளி

**இ. வெண்கலம் ☑**

ஈ. மேற்கூறியவை எதுவுமில்லை



★ 2024 – ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் இந்திய ஆடவர் அணி அரையிறுதியில் சீன தைபேயிடம் 3–0 என தோற்று வெண்கலத்தை வென்றது. 2021 மற்றும் 2023ஆம் ஆண்டுகளைத் தொடர்ந்து, இந்திய ஆடவர் குழு வெல்லும் மூன்றாவது தொடர்ச்சியான வெண்கலம் இதுவாகும். ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில் இந்தியா மொத்தம் ஏழு வெண்கலங்களை வென்றுள்ளது.

### 12. 2024 – உலக வாழ்விட நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Engaging youth to create a better urban future ☑

ஆ. Resilient urban economies

இ. Mind the Gap: Leave No one and Place Behind

ஈ. Accelarating Urban Action for a carbon-free world




★ உலக வாழ்விட நாள் முதன்முதலில் 1985இல் அக்டோபர் முதல் திங்கட்கிழமையன்று கொண்டாடப்பட்டது. உலக வாழ்விட நாள் இந்த ஆண்டு அக்.7ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. இது அனைவருக்கும் கண்ணியமான மற்றும் பாதுகாப்பான வீட்டுரிமையை எடுத்துக்காட்டுகிறது. "Engaging youth to create a better urban future" என்பது நடப்பு 2024இல் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்; இது விரைவான நகர்ப்புற வளர்ச்சியின் வாய்ப்புகள் மற்றும் சவால்களை மையமாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. திருப்பத்தூர் அருகே 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த போர்வீரன் நடுகல் கண்டெடுப்பு.**

திருப்பத்தூர் அருகே 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த போர்வீரன் நடுகல் கண்டெடுக்கப்பட்டது. பண்டைய காலத்தில் வீரமரணமடைந்த அரசர்களுக்கும் வீரர்களுக்கும் நடுகல் வைத்துப் போற்றும் வழக்கம் இருந்துள்ளது.

நிரை கவர்தல், நிரை மீட்டல், ஊரை எதிரிகளிடமிருந்து காத்தல், விலங்குகளுடன் சண்டையிட்டு விளை நிலங்களையும் மக்களையும் காத்தல் மற்றும் அரசரின் வெற்றிக்காகப் போரிடும்போது உயிரிழந்த வீரர்களின் நினைவாகவும் நடுகற்கள் நட்டு வழிபாடு செய்வது தொல்காப்பியர் காலம் முதல் தமிழர்களிடையே காணப்படும் வழக்கமாகும்.

---

**2. உலக பட்டினிக்குறியீடு: "தீவிர பகுப்பாய்வு" பிரிவில் இந்தியா! 127 நாடுகளில் 105ஆவது இடம்.**

உலகின் 127 நாடுகளுக்கு இடையேயான நிகழாண்டின் உலக பட்டினிக்குறியீட்டில் இந்தியா 105ஆவது இடத்தில் உள்ளது. இதன்மூலம் பட்டினி விவகாரத்தில் தீவிர பகுப்பாய்வுக்கு உள்படுத்தும் பரிவில் இந்தியா இடம்பெற்றுள்ளது. கடந்த ஆண்டு வெளியான பட்டியலில் மிகவும் பின்தங்கிய 111 இடத்தில் 'தீவிர அளவில்' இருந்த இந்தியா, தற்போது 105 இடத்தில் உள்ளது.

---

**3. ஜம்மு–காஷ்மீர் முதல்வரானார் ஒமர் அப்துல்லா.**

ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் முதலாவது முதல்வராக தேசிய மாநாட்டுக் கட்சி துணைத்தலைவர் ஒமர் அப்துல்லா பதவியேற்றார். அவருடன், துணை முதல்வராக நியமிக்கப்பட்ட சுரீந்தர் சௌதரியும் பதவியேற்றார். கடந்த 2019இல் ஜம்மு–காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து இரத்து செய்யப்பட்டு, இரு யூனியன் பிரதேசங்களாக (ஜம்மு–காஷ்மீர், லடாக்) பிரிக்கப்பட்ட பிறகு நடந்த முதல் பேரவைத்தேர்தல் இதுவாகும்.

---

**4. தமிழ்நாட்டிற்கு மூன்று பிரிவுகளில் தேசிய தண்ணீர் விருது.**

2023ஆம் ஆண்டுக்கான தேசிய நீர் விருதுகளை மத்திய ஜல் சக்தி துறை அமைச்சர் CR பாட்டீல் அறிவித்தார். இதில், மூன்று பிரிவுகளில் தமிழ்நாட்டிற்கு விருதுகள் கிடைத்துள்ளன. நீர்வளத்துறையில் பொதுமக்களின் சிறந்த பணிகளை அங்கீகரிக்கும் வகையிலும், நீர் பாதுகாப்பு, மேலாண்மை தொடர்பான விஷயங்களில் பணியாற்ற மக்களை தொடர்ந்து ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் தேசிய நீர் விருதுகளை மத்திய ஜல் சக்தி துறை அமைச்சகம் கடந்த 2018ஆம் ஆண்டில் இருந்து வழங்கி வருகிறது.

'சிறந்த மாநிலம்' பிரிவில் ஒடிஸாவுக்கு முதலிடமும், உத்தர பிரதேசத்திற்கு இரண்டாமிடமும் குஜராத், புதுச்சேரி ஆகியவை இணைந்து மூன்றாடமிடத்திற்கான விருதுக்கும் தேர்வுசெய்யப்பட்டன.

**தமிழ்நாட்டிற்கு மூன்று விருதுகள்:** 'சிறந்த தொழில் நிறுவனங்கள் பிரிவில்' தமிழ்நாட்டின் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த அப்பல்லோ டயர்ஸ் நிறுவனத்திற்கு 2ஆவது இடத்திற்கான விருதும், 'சிறந்த நீர் பயனர் சங்கத்திற்கான' பிரிவில் தமிழ்நாட்டின் புதுக்கோட்டையைச்சோ்ந்த பரம்பூர் பிக் டேங்க் நீர் பயனர் சங்கத்திற்கு மூன்றாமிடத்திற்கான விருதும், சிறந்த கல்வி நிறுவனங்கள் (கல்லூரி/பள்ளிகள் அல்லாத) பிரிவில் கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திற்கு முதலிடத்திற்கான விருதும், சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்திற்கு (IIT) மூன்றாமிடத்திற்கான (இணைந்த) பிரிவிலும் விருது கிடைத்துள்ளது.

---


# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. 2024 – இராணுவத் தளபதிகள் மாநாட்டின் முதல் கட்டம் ஏற்பாடு செய்யப்பட்ட இடம் எது?**



அ. டேராடூன்

**ஆ. காங்டாக் ☑**

இ. கோஹிமா

ஈ. ஷில்லாங்

★ 2024ஆம் ஆண்டிற்கான இரண்டாவது இராணுவத் தளபதிகள் மாநாட்டின் முதல் கட்டம் சிக்கிமின் காங்டாக்கில் நடைபெற்றது. இந்த இரண்டு நாள் மாநாடு, மூத்த தளபதிகளுக்கு செயல்பாட்டுத் தயார்நிலையை மறுபரிசீலனை செய்யவும், உத்திகளைப்பற்றி விவாதிக்கவும் மற்றும் எதிர்கால ஆணைகளை கோடிட்டுக்காட்டவும் ஒரு மன்றமாக செயல்பட்டது. இரண்டாம் கட்ட மாநாடு தில்லியில் அக்.28–29 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது.

**2. 2024 – இலக்கியத்திற்கான நோபல் பரிசு யாருக்கு வழங்கப்பட்டது?**



அ. கேப்ரியல் கார்சியா

ஆ. அலெக்சாண்டர் புஷ்கின்

**இ. ஹான் காங் ☑**

ஈ. ஹருகி முரகாமி

★ தென்கொரிய எழுத்தாளர் ஹான் காங் 2024–இலக்கியத்திற்கான நோபல் பரிசை வென்றார். இந்தப் பெருமையைப் பெறும் முதல் கொரியர் இவர்தான். அவரது படைப்பு அதன் "தீவிரமான கவிதை உரைநடை" என்று அறியப்படுகிறது, இது வரலாற்று அதிர்ச்சிகள் மற்றும் வாழ்க்கையின் பலவீனம் ஆகியவற்றைக் குறிக்கிறது. அவரது குறிப்பிடத்தக்க படைப்புகளில் தி வெஜிடேரியன் (2016–மேன் புக்கர் பரிசு வென்ற படைப்பு), தி ஒயிட் புக், மனித செயல்கள் மற்றும் கிரேக்க பாடங்கள் ஆகியவை அடங்கும்.

**3. யுவ சங்கம் இணையதளத்தைத் தொடங்கியுள்ள அமைச்சகம் எது?**

அ. பாதுகாப்பு அமைச்சகம்

**ஆ. கல்வி அமைச்சகம் ☑**

இ. இளையோர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகம்

ஈ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்




★ "ஒரே பாரதம் உன்னத பாரதம்" திட்டத்தின்கீழ் யுவ சங்கத்தின் ஐந்தாம் கட்டத்திற்கான பதிவு இணையதளத்தை கல்வி அமைச்சகம் தொடங்கியுள்ளது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த இளையோரிடையே, மக்களுக்கு இடையிலான தொடர்பை வலுப்படுத்துவதற்காக, மத்திய அரசின் முன்முயற்சியே யுவ சங்கம் ஆகும். 18–30 வயதுக்குட்பட்ட ஆர்வமுள்ள இளையோர்கள் 2023ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தத் தனித்துவமான முயற்சியின் வரவிருக்கும் கட்டத்தில் பங்கேற்க, யுவ சங்கம் இணையதளம்மூலம் பதிவுசெய்யலாம். 2024 அக்.21 வரை பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

★ யுவ சங்கம் சுற்றுப்பயணங்களின்போது, பங்கேற்பாளர்கள் 5–7 நாட்களில் பரியாதன் (சுற்றுலா), பரம்பரா (பாரம்பரியம்), பிரகதி (முன்னேற்றம்), பரஸ்பர் சம்பார்க் (இணைப்பு) மற்றும் புரோத்யோகி (தொழில்நுட்பம்) ஆகிய ஐந்து பகுதிகளில் அறிவினைப் பெறுவார்கள்.

**4. 2024 – உலக புலம்பெயர் பறவைகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**




அ. Sing, Fly, Soar – Like a Bird

ஆ. Dim the Lights for Birds at Night

**இ. Protect Insects, Protect Birds ☑**

ஈ. Water: Sustaining Bird Life

★ உலக புலம்பெயர் பறவைகள் நாள் என்பது புலம்பெயர்ந்த பறவைகளின் பாதுகாப்பிற்கான சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான உலகளாவிய பிரச்சாரமாகும். 2024ஆம் ஆண்டில், இது மே.11 & அக்.12 ஆகிய தேதிகளில் கொண்டாடப்படுகிறது; இது வெவ்வேறு அரைக்கோளங்களில் பறவைகள் புலம்பெயர்வதை பிரதிபலிக்கிறது.

★ 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "பூச்சிகளைப் பாதுகாத்தல், பறவைகளைப் பாதுகாத்தல்" என்பதாகும். இந்நாள் பறவைகள் உயிர்வாழ்வதில் பூச்சிகள் வகிக்கும் பங்குபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

**5. தட்பவெப்பநிலை தொடர்பான தரவுகளுக்காக இந்திய ரிசர்வ் வங்கி (RBI) உருவாக்கத் திட்டமிட்டுள்ள தரவுக் களஞ்சியத்தின் பெயர் என்ன?**

**அ. ரிசர்வ் வங்கியின் தட்பவெப்பநிலை இடர் தகவல் அமைப்பு (RB-CRIS) ☑**

ஆ. ரிசர்வ் வங்கியின் தட்பவெப்பநிலை நடவடிக்கை அமைப்பு (RB-CAS)

இ. ரிசர்வ் வங்கியின் சுற்றுச்சூழல் தரவுக்களஞ்சியம் (RB-EDR)

ஈ. ரிசர்வ் வங்கியின் பசுமை தரவு மையம் (RB-GDH)

★ தட்பவெப்பநிலை தொடர்பான தரவுகளில் உள்ள இடைவெளிகளைக் குறைக்க ரிசர்வ் வங்கியின் தட்பவெப்பநிலை இடர் தகவலமைப்பை (RB–CRIS) RBI முன்மொழிந்தது. தற்போதைய தட்பவெப்பநிலை தரவு பல்வேறு ஆதாரங்கள், வடிவங்கள் என துண்டு துண்டாக உள்ளது. RB–CRIS இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்: தரவுமூலங்களின் பொது வலை அடைவு மற்றும் தரப்படுத்தப்பட்ட தரவுத்தொகுப்புகளுடன் கூடிய தரவு இணையம். RBI ஆனது RB–CRISஐ, தரவுத்திரட்டியில் தொடங்கி, அதைத்தொடர்ந்து ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களுக்கான இணையத்தைத் தொடங்கும்.

**6. 2024 – பேரிடர் அபாயக் குறைப்புக்கான பன்னாட்டு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. அக்டோபர் 11

ஆ. அக்டோபர் 12

**இ. அக்டோபர் 13 ☑**

ஈ. அக்டோபர் 14

★ பேரிடர் அபாயக்குறைப்புக்கான பன்னாட்டு நாள் ஆண்டுதோறும் அக்.13 அன்று கொண்டாடப்படுகிறது. பேரிடர் குறைப்பு மற்றும் இடர்–விழிப்புணர்வுக்கான உலகளாவிய கலாசாரத்தை மேம்படுத்துவதற்காக 1989இல் அந்நாள் நிறுவப்பட்டது. உலகெங்கிலுமுள்ள சமூகங்கள் மற்றும் மக்கள் பேரிடர்களில் தங்கள் வெளிப்பாட்டைக் குறைக்கும் முயற்சிகளை இந்நாள் கொண்டாடுகிறது.

**7. ஹிஸ்புத் தஹ்ரிரை (HuT) பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ள அமைச்சகம் எது?**

அ. பாதுகாப்பு அமைச்சகம்

ஆ. வெளியுறவு அமைச்சகம்

**இ. உள்துறை அமைச்சகம் ☑**

ஈ. சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம்

★ மத்திய உள்துறை அமைச்சகம் Hizb–ut–Tahrir (HuT)ஐ சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் (UAPA)கீழ் பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ளது. இந்தக் குழுவானது இந்தியாவின் தேசியப்பாதுகாப்புக்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்தும் பயங்கரவாதத்தின்மூலம் உலகளாவிய இசுலாமிய அரசையும் கலிபாவையும் நிறுவ எண்ணுகிறது. HuT இளையோர்களை தீவிரமயமாக்குவதிலும், சமூக ஊடகங்கள் வழியாக பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதிலும் ஈடுபட்டுள்ளது; இது இந்திய அரசாங்கத்திற்கு தீவிர கவலையளிக்கிறது.

**8. செறிவூட்டப்பட்ட அரிசி முன்னெடுப்பின் முதன்மை நோக்கம் என்ன?**



**அ. ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்த்துப் போராடுவது ☑**

ஆ. அரிசி ஏற்றுமதியை அதிகரிப்பது

இ. அரிசி இறக்குமதியை அதிகரிப்பது

ஈ. மேற்குறிப்பிட்ட எதுவும் இல்லை

★ பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை, பிரதமரின் ஏழைகள் நல்வாழ்வு உணவுத்திட்டம் மற்றும் இதர நலத்திட்டங்கள் உட்பட அரசின் அனைத்து திட்டங்களின்கீழும் வழங்கப்படும் செறிவூட்டப்பட்ட அரிசியை அதன் தற்போதைய வடிவத்தில் 2024 ஜூலை முதல் 2028 டிசம்பர் வரை தொடர ஒப்புதல் அளித்தது. அரிசி செறிவூட்டும் முன்முயற்சி, பிரதமரின் ஏழைகள் நல்வாழ்வு உணவுத் திட்டத்தின் (உணவு மானியம்) ஒருபகுதியாக, நடுவண் அரசின் 100% நிதியுதவியுடன் கூடிய நடுவணரசின் ஒரு முயற்சியாக தொடரும்.

★ இரும்பு, விட்டமின் B12 மற்றும் போலிக் அமிலம் ஆகியவற்றில் பரவலான குறைபாடுகளுடன், குறிப்பாக பெண்கள் மற்றும் சிறார்களிடையே, அதிக ஊட்டச்சத்து குறைபாடுகளை இந்தியா எதிர்கொள்கிறது. தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு (NFHS–5) உயர் இரத்தசோகை விகிதங்களைக் காட்டுகிறது; 1/2 பெண் இரத்தசோகையாலும், 1/3 குழந்தை வளர்ச்சிகுன்றிய நிலையிலும் பாதிக்கப்படுகின்றனர். இந்தியச்சூழலில், அரிசி, நுண்ணூட்டச்சத்துக்களை வழங்குவதற்கான ஒரு சிறந்த வழியாக திகழ்கிறது. ஏனெனில் இந்திய மக்கள்தொகையில் 65% பேர் அரிசியை முதன்மை உணவாக உட்கொள்கிறார்கள்.

**9. 2021–22–க்கான அகில இந்திய கிராமப்புற நிதி உள்ளடக்கக் கணக்கெடுப்பை (NAFIS) வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

**அ. NABARD ☑**

ஆ. RBI

இ. FCI

ஈ. SEBI

★ NABARDஇன் 2021–22–க்கான இரண்டாவது அனைத்திந்திய கிராமப்புற நிதி உள்ளடக்கக்கணக்கெடுப்பு (NAFIS) COVID தொற்றுக்குப் பிறகு, இந்தியா முழுவதும் 1 லட்சம் கிராமப்புற குடும்பங்களை ஆய்வுசெய்தது. குடும்பங்களின் சராசரி மாத வருமானம் 2016–17இல் இருந்த ₹8,059இலிருந்து 57.6% உயர்ந்து 2021–22இல் ₹12,698ஆக 9.5% CAGRஉடன் உயர்ந்துள்ளது. வேளாண் குடும்பங்கள் ₹13,661உம் விவசாயம் சாராத குடும்பங்கள் ₹11,438உம் வருவாயாக ஈட்டியுள்ளன. ஊதியம் பெறும் வேலை அனைத்து குடும்பங்களுக்கும் (37%) மிகப்பெரிய வருவாய் ஆதாரமாக இருந்துள்ளது. விவசாயக்குடும்பங்களுக்கு, பயிரிடுதல், வருமானத்தில் 1/3 பங்கையும், அரசு / தனியார் சேவைகள் 1/4 பங்கையும் வழங்குகின்றன. விவசாயம் அல்லாத குடும்பங்கள் முதன்மையாக அரசு / தனியார் சேவைகள் (57%) மற்றும் கூலித்தொழிலை (26%) நம்பியுள்ளன.

**10. டெலி–மனஸ் என்ற முன்னெடுப்புடன் தொடர்புடைய துறை எது?**

அ. வேளாண்மை

**ஆ. மனநலம் ☑**

இ. கல்வி

ஈ. விளையாட்டு


★ சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் உலக மனநல நாளை அனுசரித்ததோடு டெலி–மனஸின் ஈராண்டு நிறைவைக் கொண்டாடியது. "It is time to prioritize Mental Health at Workplace" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டின்

கருப்பொருளாகும். டெலி–மனஸ் என்பது, இந்தியா முழுவதும் 24*7 தொலைநிலை மனநலச்சேவைகள்மூலம் மனநலப்பாதுகாப்புக்கான உலகளாவிய அணுகலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**11. கீழ்க்காணும் எந்த ஆராய்ச்சி நிறுவனம் அண்மையில் TDP1 (டைரோசில்–டிஎன்ஏ பாஸ்போடிஸ்டேரேஸ் 1)ஐ புற்றுநோய் சிகிச்சைக்கான ஒரு நம்பிக்கைக்குரிய இலக்காக அடையாளம் கண்டுள்ளது?**

அ. IISc, பெங்களூரு

**ஆ. இந்திய அறிவியல் வளர்ச்சிக் கழகம், கொல்கத்தா ☑**



இ. AIIMS, தில்லி

ஈ. TATA நினைவு மருத்துவமனை, மும்பை

★ கொல்கத்தாவில் உள்ள இந்திய அறிவியல் வளர்ச்சிக் கழகத்தின் அறிவியலாளர்கள் DNAஐ சரிசெய்யும் நொதியை TDP1ஐ செயல்படுத்துவதன்மூலம் அதனை புற்றுநோய் சிகிச்சைக்கான ஒரு புதிய இலக்காகக் கண்டுபிடித்துள்ளனர். TDP1 (**T**yrosyl–**D**NA **p**hosphodiesterase1) என்பது சேதமடைந்த DNA தளங்களை நீக்குவதால், மனிதர்களில் DNA சரிசெய்தலுக்கு அவசியமாகிறது. இக்கண்டுபிடிப்பு புற்றுநோய் சிகிச்சையில் துல்லியமான மருத்துவத்திற்கான ஒரு நம்பிக்கைக்குரிய பாதையைத் திறக்கிறது; குறிப்பாக தற்போதுள்ள சிகிச்சைகளை எதிர்க்கும் புற்றுநோய்களுக்கு.

**12. ஆந்திர பிரதேச மாநிலத்தின் எந்த மாவட்டத்தில் அண்மையில் ஒரு பிராமி கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது?**

**அ. பாலநாடு ☑**



ஆ. நெல்லூர்

இ. குண்டூர்

ஈ. கர்னூல்

★ ஆந்திர பிரதேச மாநிலம், பாலநாடு மாவட்டம், அமராவதி மண்டலம், தரணிகோட்டா கிராமத்தில் பிராமி கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பொ.ஆ 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமி எழுத்துக்களில் வெட்டப்பட்டுள்ள இக் கல்வெட்டு, பிராகிருத மொழியில் உள்ளது. 'பிராமி' என்பது மௌரியர் காலத்திலிருந்து தோன்றிய பழமையான இந்திய எழுத்து முறைகளுள் ஒன்றாகும். இது தமிழ், தேவநாகரி, வங்காளம் & மலையாளம் உட்பட தற்போதைய இந்திய எழுத்துக்களுக்கு அடித்தளமாக பார்க்கப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வியாழன் கோளின் நிலவுக்கு விண்கலம் அனுப்பியது** NASA.

வியாழன் கோளைச்சுற்றிவரும் 'யுரோப்பா' நிலவில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக விண்கலம் ஒன்றை அமெரிக்க விண்வெளி ஆய்வுமையமான NASA அனுப்பியுள்ளது. ஸ்பேஸ்–X நிறுவனத்தின் ஃபால்கன் ஹெவி பிளாக்–5 ஏவுகலம்மூலம் அது விண்ணில் செலுத்தப்பட்டது. 'யுரோப்பா கிளிப்பர்' என்று பெயரிடப்பட்டுள்ள அந்த விண்கலம், வியாழன் கோளை அடைவதற்கு 5 ½ ஆண்டுகள் ஆகும். அதையடுத்து அக்கோளின் சுற்றுப்பாதைக்குச் சென்று அதை சுற்றிவரத்தொடங்கும் அந்த விண்கலம், 'யுரோப்பா' நிலவை 44 முறை நெருக்கமாகக் கடந்து ஆய்வுகளை மேற்கொள்ளும்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. தெற்காசிய வளர்ச்சி முன்னேற்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. உலக வங்கி ☑**

ஆ. IMF

இ. UNDP

ஈ. UNEP

★ உலக வங்கி தெற்காசிய வளர்ச்சி முன்னேற்ற அறிக்கையை வெளியிட்டது. இது தெற்காசியாவில் உற்பத்தி வளர்ச்சி மற்ற வளர்ந்துவரும் சந்தைப்பகுதிகளைவிட அதிகமாக இருக்கும் என்பதைக் குறிக்கிறது. தட்பவெப்பநிலை மாற்றம் தெற்காசியாவை கடுமையான வெப்பம், வெள்ளம் மற்றும் பிற வானிலை தொடர்பான சிக்கல்களுக்கு ஆட்படுத்துகி–றது. இந்தப் பகுதியில் பெண் தொழிலாளர் பங்கேற்பு 32% குறைவாக உள்ளது; இது பாலின சமத்துவத்தின்மூலம் வருமான வளர்ச்சிக்கான சாத்தியத்தை எடுத்துக்காட்டுகிறது. பூடானின் பொருளாதாரம் 2024–25 நிதியாண்டில் 7.2% வளர்ச்சியடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

**2. ஜார்க்கண்டில் உள்ள எந்த நிலக்கரி வயல், நிலக்கரி படுகை மீத்தேன் உற்பத்திக்கு அதிக சாத்தியம் உள்ளதென அடையாளம் காணப்பட்டுள்ளது?**

அ. ஜாரியா நிலக்கரி வயல்

**ஆ. தெற்கு கரன்புரா நிலக்கரி வயல் ☑**

இ. கிரிடி நிலக்கரி வயல்

ஈ. ஔரங்கா நிலக்கரி வயல்



★ லக்னோவில் உள்ள பீர்பால் சகானி இன்ஸ்டிடியூட் ஆப் பேலியோ சயின்சஸ் அறிவியலாளர்கள் நடத்திய ஆய்வில், ஜார்க்கண்டில் உள்ள கிழக்கத்திய தெற்கு கரன்புரா நிலக்கரி வயல்களில் ஹைட்ரோகார்பன் உற்பத்திக்கான குறிப்பிடத்தக்க சாத்தியக்கூறுகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சி நுண்ணிய பாலினோமார்ப் பகுப்பாய்வு மற்றும் புவி வேதியியல் மதிப்பீடுகளைப் பயன்படுத்தியது; கிழக்கு சிர்கா நிலக்கரி வயல் கிடி நிலக்கரி வயல்களை விட அதிக ஹைட்ரோகார்பன் திறனைக் கொண்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. தெற்கு கரன்புரா நிலக்கரி வயல் 28 முக்கிய நிலக்கரித் தொகுதிகளைக் கொண்டுள்ளது; அது இந்தியாவின் எரிசக்தித்துறைக்கு இன்றியமையாதது.

**3. ஐக்கிய அரபு அமீரகத்தின் எந்த நகரத்தில் இந்தியா, 'ஸ்டடி இன் இந்தியா' பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது?**

அ. துபாய்

ஆ. அபுதாபி

**இ. ஷார்ஜா ☑**

ஈ. அல் ஐன்

STUDY IN INDIA

★ பன்னாட்டு மாணவர்களை தனது பல்கலைக்கழகங்களுக்கு ஈர்ப்பதற்காக ஷார்ஜாவில் நடந்த 20ஆவது பன்னாட்டு கல்விக் கண்காட்சியில் இந்தியா, 'இந்தியாவில் படிப்பது' என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியது. EdCILஆல் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப்பிரச்சாரமானது, இந்தியாவை உலகளாவிய கல்வி மையமாக நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியாவில் உள்ள ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் பல்வேறு படிப்புகள் மற்றும் உதவித்தொகைபோன்ற பலன்களை வழங்குகின்றன.

★ மையப்படுத்தப்பட்ட, 'ஸ்டடி இன் இந்தியா' என்ற இணைய நுழைவு, மாணவர் சேர்க்கைகளை எளிதாக்குவதோடு மாணாக்கர் திட்டங்களை ஆராயவும், விண்ணப்பிக்கவும், விசாக்களை ஒரே இடத்தில் நிர்வகிக்கவும் உதவுகிறது. இந்தத் திட்டம் 2024–25 கல்வியாண்டில் 69,000 மாணவர்களை ஈர்த்துள்ளது. ஏற்கனவே இந்தியாவில் 4,000 அயல்நாட்டு மாணாக்கர் பயின்று வருகின்றனர்.

**4. வயநாடு வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா ☑**

இ. கர்நாடகா

ஈ. சிக்கிம்




★ வயநாடு வனவிலங்கு சரணாலயத்தில் சமீபத்தில் நடத்தப்பட்ட இரண்டு நாள் கழுகுகள் கணக்கெடுப்பில் ஒன்பது இடங்களில் எண்பது (80) கழுகுகள் பதிவாகின. வயநாடு வனவிலங்கு சரணாலயம் கேரளாவில் மேற்குத்தொடர்ச்சி மலைகளின் தெற்குப்பகுதியில் அமைந்துள்ளது. இது UNESCOஇன் உலக பாரம்பரிய தளமான நீலகிரி உயிர்க்கோள காப்பகத்தின் ஒருபகுதியாகும். இச்சரணாலயம் கர்நாடகாவின் நாகர்ஹோல் மற்றும் பந்திப்பூர் மற்றும் தமிழ்நாட்டில் முதுமலைபோன்ற பாதுகாக்கப்பட்ட பகுதிகளால் சூழப்பட்டுள்ளது. இக்காடுகளில் பணியர், குருமக்கள், ஊராளிகள், காட்டுநாயக்கன், அடியார்கள், குறிச்சியர்கள் உட்பட பல்வேறு ஆதிவாசிகள் வாழ்கின்றனர்.

**5. அண்மையில், 'அக்னியஸ்த்ரா' என்ற பல்லிலக்கு வெடிக்கும் கருவியை, கீழ்க்காணும் எந்த நகரத்தில் வைத்து இராணுவத்தலைவர் அறிமுகப்படுத்தினார்?**

அ. புது தில்லி

**ஆ. காங்டாக் ☑**

இ. கோகிமா

ஈ. ஷில்லாங்




★ காங்டாக்கில் நடைபெற்ற இராணுவத்தளபதிகள் மாநாட்டில் இராணுவத்தளபதி உபேந்திர திவிவேதி, பல்–இலக்கு வெடிக்கும் கருவியான, 'அக்னியஸ்திராவை' வெளியிட்டார். இது பதுங்குக்குழிகளை அழிப்பதை மேம்படுத்துகிறது மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் உதவுகிறது. WEDC என அழைக்கப்படும் இச்சாதனம், 400 மீ வரை தூர வரம்பைக்கொண்ட பழைய கருவியைவிட அதிக நம்பகத்தன்மை வாய்ந்தது. மேஜர் ராஜ்பிரசாத் உருவாக்கிய புதிய நுண்செயலி அடிப்படையிலான இவ்வெடிப்பு அமைப்பு, 2.5 கிமீ வரம்பில் கம்பி மற்றும் கம்பியில்லா ஆகிய 2 முறைகளிலும் செயல்படுகிறது. இது பல்–இலக்குகளைத் தேர்ந்தெடுத்து ஒரே நேரத்தில் சுட அனுமதிக்கிறது.

**6. 2024 – உலக புலம்பெயர்ந்த பறவைகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Protect Insects, Protect Birds ☑**

ஆ. Water: Sustaining Bird Life

இ. Dim the Lights for Birds at Night

ஈ. Sing, Fly, Soar – Like a Bird




★ உலக புலம்பெயர்ந்த பறவைகள் நாள் என்பது புலம்பெயர்ந்த பறவைகளைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான உலகளாவிய நாளாகும். அவற்றின் பாதுகாப்பிற்கு சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை இது வலியுறுத்துகிறது. 2024ஆம் ஆண்டில், இது இரண்டு அரைக்கோளங்களிலும் பருவகால புலம்பெயர்வுகளைக் குறிக்கும் வகையில், மே.11 மற்றும் அக்.12 ஆகிய தேதிகளில் கொண்டாடப்பட்டது. 2024ஆம் ஆண்டின் கருப்பொருள் "பூச்சிகளைப் பாதுகாத்தல், பறவைகளைப் பாதுகாத்தல்" என்பதாகும்.

**7. 2024 – இந்தியா டிஜிட்டல் வேளாண் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்ட இடம் எது?**

**அ. புது தில்லி ☑** ஆ. சென்னை இ. ஹைதராபாத் ஈ. கொல்கத்தா

★ ICFA மற்றும் IIT ரோபார் இணைந்து ஏற்பாடு செய்த 2024 – இந்திய டிஜிட்டல் வேளாண் மாநாடு புது தில்லியில் நடைபெற்றது. சிறந்த முடிவெடுப்பதற்கும் கிராமப்புற வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் நிகழ்நேர தகவல்களை விவசாயிகளுக்கு உடனுக்குடன் வழங்குவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. பாரம்பரிய விவசாயத்தை புதுமைப்படுத்தவும், நிலைத்தன்மையை மேம்படுத்தவும் மற்றும் காலநிலை–நெகிழ் அமைப்புகளை உருவாக்கவும் தொழில்நுட்பம் மற்றும் ஒத்துழைப்பைப் பயன்படுத்துவதை இந்த நிகழ்வு வலியுறுத்தியது.

### 8. ஆண்டுதோறும் உலக மூட்டுவலி நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. அக்டோபர் 11

**ஆ. அக்டோபர் 12 ☑**

இ. அக்டோபர் 13

ஈ. அக்டோபர் 14




★ மூட்டுவலி மற்றும் முடக்குவாத நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த அக்.12ஆம் தேதி உலக மூட்டுவலி நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நிலைமைகள் மற்றும் அன்றாட வாழ்வில் அவற்றின் தாக்கம்பற்றிய புரிதலை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆரம்பகால நோயறிதல், சுய மேலாண்மை மற்றும் சரியான சிகிச்சைக்கான அணுகல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது. 2024ஆம் ஆண்டிற்கான கருப்பொருள், "Informed Choices, Better Outcomes" என்பதாகும்.

### 9. டாரஸ் ஏவுகணையை கூட்டாக உருவாக்கிய நாடுகள் எவை?

அ. ரஷ்யா மற்றும் சீனா

**ஆ. ஜெர்மனி மற்றும் சுவீடன் ☑**

இ. மியான்மர் மற்றும் நேபாளம்

ஈ. பிரான்ஸ் மற்றும் இந்தியா



★ ரஷ்யாவை எதிர்கொள்வதற்காக உக்ரைன் டாரஸ் ஏவுகணைகளை கேட்டுவரும் நிலையில், தென்கொரிய வான் படை ஜெர்மனியின் டாரஸ் ஏவுகணையைக்கொண்டு நேரடி துப்பாக்கிச்சூடு பயிற்சியை நடத்தியுள்ளது. டாரஸ் ஏவுகணை என்பது 1990களின் நடுப்பகுதியில் ஜெர்மன் மற்றும் சுவீட நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட ஒரு துல்லியமான–வழிகாட்டப்பட்ட, நீண்டதூரம் செல்லும் ஓர் ஏவுகணையாகும். நிலையான இது, இலக்குகளை அதீத துல்லியத்துடன் தாக்கும். 1,400 கிகி எடையும் சுமார் 5.1 மீ நீளமும் கொண்ட இதனை பல்வேறு தளங்களிலிருந்து ஏவலாம்.

### 10. சிக்கிம் வெள்ளத்தில் சிக்கி இன்னுயிரிழந்த வீரர்களுக்காக திறக்கப்பட்டுள்ள நினைவிடத்தின் பெயர் என்ன?

**அ. பிரேர்னா ஸ்தலம் ☑**

ஆ. வீர் ஸ்மாரக்

இ. அமர் ஜவான் ஜோதி

ஈ. மேற்கூறியவை எதுவுமில்லை



★ சிக்கிம் மாநிலத்தின் தெற்கு லோனக் ஏரியில் கடந்த ஆண்டு அக்டோபரில் ஏற்பட்ட பனிப்பாறை வெடிப்பால் ஏற்பட்ட வெள்ளத்தில் உயிரிழந்த 22 வீரர்களின் நினைவாக பர்டாங்கில் பிரேர்னா ஸ்தலத்தை பாதுகாப்பு அமைச்சர் இராஜ் நாத் சிங் 2024 அக்.11 அன்று திறந்து வைத்தார். இந்த நினைவுச்சின்னம் அவர்களின் தைரியம் மற்றும் தியாகத்தை அடையாளப்படுத்துவதோடு தேசிய பெருமையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் உள்ளது. புது தில்லியில் உள்ள தேசிய போர் நினைவுச் சின்னத்தைப் போலவே, இது மறைந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

**11. 2024 – அமைதிக்கான நோபல் பரிசுபெற்ற ஜப்பானிய அமைப்பின் பெயர் என்ன?**




அ. தியான்சுய் சங்கம்

**ஆ. நிஹான் ஹிடாங்கியோ ☑**

இ. சோம்போ நல அறக்கட்டளை

ஈ. ஜப்பானிய சமூகநலக் கவுன்சில்

★ அணுவாயுதங்களை ஒழிப்பதற்கும், அவற்றைப் பயன்படுத்துவதால் ஏற்படும் ஏற்கத்தகா விளைவுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் மேற்கொண்ட முயற்சிகளுக்காக அணுகுண்டுகளில் இருந்து தப்பியவர்களின் ஜப்பானிய அமைப்பான, 'நிஹான் ஹிடாங்கியோ' 2024 – அமைதிக்கான நோபல் பரிசு பெற்றது. ஹிபாகுஷாவை பிரதிநிதித்துவப்படுத்தும் இக்குழு, கடந்த 1956ஆம் ஆண்டு நிறுவப்பட்டதில் இருந்து, அணுவாயுதக்குறைப்புக்கான உலகளாவிய இயக்கத்தில் முக்கியப்பங்காற்றியுள்ளது.

**12. பதுகம்மா திருவிழா கொண்டாடப்படுகிற மாநிலம் எது?**



**அ. தெலுங்கானா ☑**

ஆ. கர்நாடகா

இ. மகாராஷ்டிரா

ஈ. கேரளா

★ 'பதுகம்மா' என்பது தெலுங்கானா மாநிலத்திலும் ஆந்திராவின் சிலபகுதிகளிலும் கொண்டாடப்படும் ஒரு திருவிழா ஆகும். இது சரத் அல்லது ஷரத் ருத்து பருவத்தின் தொடக்கத்தைக் கொண்டாடும் மலர் திருவிழாவாகும். பொதுவாக செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதங்களில் துர்கா நவராத்திரியின்போது ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுகிறது. தெலுங்கானாவின் கலாசார அடையாளத்தின் சின்னமாக பதுகம்மா உள்ளது. கண்கவர் மலர்கள், இனிய பாடல்கள் மற்றும் மதநல்லிணக்கத்துடன் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது.


## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. விண்வெளி அடிப்படையிலான கண்காணிப்பு பணியின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. விண்வெளி ஆய்வு

**ஆ. படைத்துறை மற்றும் இராணுவப் பயன்பாடுகளுக்கு சிறந்த நிலம் மற்றும் கடல்சார் கள விழிப்புணர்வு ☑**

இ. செயற்கைக்கோள் தொடர்பு மேம்பாடு

ஈ. வழிசெலுத்தல் உதவி

★ படைத்துறை & இராணுவப் பயன்பாட்டிற்கான அதிநவீன நிலம் மற்றும் கடல்சார் விழிப்புணர்வுக்கான விண்வெளி அடிப்படையிலான கண்காணிப்பு பணியின் மூன்றாம் கட்டத்திற்கு பாதுகாப்புக்கான அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. தேசிய பாதுகாப்புக் கவுன்சில் செயலகம் மற்றும் பாதுகாப்பு விண்வெளி நிறுவனம் இந்தத் திட்டத்தை கையாள்கின்றன. SBS–1 2001இல் நான்கு கண்காணிப்பு செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியது; SBS–2 2013இல் 6 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியது. SBS–3, அடுத்த 10 ஆண்டுகளில் 52 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தும்; இதன் மதிப்பீடு ₹26,968 கோடியாகும். ISRO 21 செயற்கைக்கோள்களையும், தனியார் நிறுவனங்கள் 31 செயற்கைக்கோள்களையும், ராணுவம், கடற்படை மற்றும் வான்படைக்கென செலுத்தும்.

**2. 2024 – உலகளாவிய பட்டினிக் குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?**



அ. 102

ஆ. 103

இ. 104

**ஈ. 105 ☑**

★ 27.3 மதிப்பெண்களுடன் 'தீவிரமான' பிரிவில் 2024 – உலகளாவிய பட்டினிக் குறியீட்டில், 127 நாடுகளில் இந்தியா 105ஆவது இடத்தில் உள்ளது. அதன் பொருளாதார வளர்ச்சி இருந்தபோதிலும், பசி & ஊட்டச்சத்து குறைபாட்டைக் கையாள்வதில் பல தெற்காசிய அண்டை நாடுகளைவிட இந்தியா பின்தங்கியுள்ளது. இக்குறியீடானது பட்டினியின் பல்வேறு பரிமாணங்களை பிரதிபலிக்கும் வகையில், உலகளாவிய, பிராந்திய மற்றும் தேசிய அளவில் பட்டினியை அளவிடுகிறது மற்றும் கண்காணிக்கிறது. கடந்த 2006ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இது, ஆரம்பத்தில் IFPRI மற்றும் Welthungerhilfe ஆல் வெளியிடப்பட்டது; இப்போது Welthungerhilfe மற்றும் Concern Worldwide ஆகியவற்றால் இணைந்து வெளியிடப்படுகிறது.

**3. இந்திய அரசியலமைப்பின் 75ஆவது ஆண்டுவிழாவை நினைவுகூரும் வகையில் அறிவிக்கப்பட்ட பிரச்சாரத்தின் பெயரென்ன?**




அ. அரசியலமைப்பு விழிப்புணர்வு இயக்கம்

**ஆ. அரசியலமைப்பு மேன்மைப்படுத்தல் பிரச்சாரம் ☑**

இ. ஜனநாயக இலட்சிய திட்டம்

ஈ. மேற்குறிப்பிட்ட எதுவும் இல்லை

★ நடுவண் அமைச்சர் கிரண் ரிஜிஜு நவம்பர்.26 அன்று இந்திய அரசியலமைப்பின் 75ஆவது ஆண்டு விழாவிற்காக "அரசியலமைப்பு மேன்மைப்படுத்தல் பிரச்சாரத்தை" அறிவிக்கவுள்ளார். இந்தப் பிரச்சாரம் நாடு முழுவதும் ஒவ்வொரு கிராமத்திலும் நடைபெறும். அரசியலமைப்பு, அதன் முக்கியத்துவம் & சட்டசபை விவாதங்கள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் குறிக்கோள். அரசியலமைப்புச் சட்டத்தை அரசாங்கம் எவ்வாறு பலப்படுத்தியுள்ளது என்பதை எடுத்துக்காட்டுவதே இந்த முயற்சியின் நோக்கமாகும். பிரச்சாரத்தை மத்திய கலாசார அமைச்சகம் நிர்வகிக்கும்.

**4. நாடாளுமன்றங்களுக்கு இடையிலான சங்கத்தின் 149ஆவது பேரவை நடைபெற்ற இடம் எது?**

**அ. ஜெனீவா ☑**

ஆ. லண்டன்

இ. பாரிஸ்

ஈ. புது தில்லி

Inter-Parliamentary Union
For democracy. For everyone.

★ ஜெனீவாவில் நடந்த நாடாளுமன்றங்களுக்கு இடையிலான சங்கத்தின் 149ஆவது பேரவையில் நாடாளுமன்றக் குழு ஒன்று கலந்துகொண்டது. அமைதியான மற்றும் நிலையான எதிர்காலத்திற்காக அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமைகளைப் பயன்படுத்துவதில் அவை கவனம் செலுத்தியது. உயர்மட்ட முடிவெடுக்கும் அமைப்பான IPU இன் நிர்வாகக்குழுவின் கூட்டங்களில் தூதுக்குழு பங்கேற்றது. அவர்கள் சட்டசபையின்போது மற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தனர். ஜெனீவாவில் உள்ள புலம்பெயர்ந்த இந்தியர்களுடனும் தூதுக்குழு உரையாடியது. பெரிய மற்றும் சிறிய நாடுகள் என 180 உறுப்பினர்கள் மற்றும் 15 துணை உறுப்பினர்களை IPU உள்ளடக்கியது.

**5. சாதி அடிப்படையிலான மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தும் மூன்றாவது மாநிலம் எது?**

அ. கேரளா

ஆ. மகாராஷ்டிரா

**இ. தெலுங்கானா ☑**

ஈ. குஜராத்

★ தெலுங்கானா மாநில அரசு அனைத்து சமூகத்தினரிடையேயும் நியாயமான வள விநியோகத்தை உறுதிசெய்யும் நோக்கத்திற்காக ஒரு விரிவான குடும்ப சாதி கணக்கெடுப்பைத் தொடங்கியுள்ளது. இதன்மூலம் ஆந்திரா மற்றும் பீகாரைத் தொடர்ந்து சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பை நடத்தும் 3ஆவது மாநிலமாக தெலுங்கானா ஆனது. OBC, SC, ST மற்றும் பிற நலிவடைந்த பிரிவினரின் சமூகப்பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்கான பல்வேறு வாய்ப்புகளைத் திட்டமிட்டு செயல்படுத்துவதை இக்கணக்கெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது. இது மாநிலத்தில் இச்சமூகங்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் அரசியல் வாய்ப்புகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

**6. ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் முதலாவது பதக்கத்தை வென்று வரலாறு படைத்த இரண்டு வீரர்கள் யார்?**

**அ. அய்ஹிகா முகர்ஜி மற்றும் சுதிர்தா முகர்ஜி ☑**

ஆ. மதுரிகா பட்கர் மற்றும் இந்து பூரி

இ. மாணிக்க பத்ரா மற்றும் சத்தியன் ஞானசேகரன்

ஈ. நேஹா அகர்வால் மற்றும் பவினா படேல்



★ கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெற்ற ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில், இந்தியாவின் முன்னணி மகளிர் இரட்டையர் ஜோடியான அய்ஹிகா முகர்ஜி மற்றும் சுதிர்தா முகர்ஜி வெண்கலப்பதக்கம் வென்று வரலாறு படைத்தனர். இந்தச் சாதனை, சாம்பியன்ஷிப் பெண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியா பெற்ற முதலாவது பதக்கத்தைக் குறிக்கிறது. இந்தப் போட்டியில் பதக்கம் வென்ற முதல் அகில இந்திய பெண்கள் இரட்டையர் ஜோடி என்ற பெருமையை இவ்விருவர் பெற்றனர். மகளிர் இரட்டையர் பிரிவில் கடைசியாக கடந்த 1952இல் ஜப்பானின் யோஷிகோ தனகா மற்றும் கோல் நாசிக்வாலா இணை தங்கம் வென்றது.

### 7. '*Tenkana Jayamangali*' என்பது சார்ந்த இனம் எது?



அ. பாம்பு

**ஆ. சிலந்தி ☑**

இ. தவளை

ஈ. பல்லி

★ தேவராயனதுர்கா காப்புக்காட்டில் ஜெயமங்கலி ஆற்றின் தோற்றுவாயில், '*Tenkana Jayamangali*' என்ற புதிய வகை சிலந்திகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தச் சிலந்தியானது '*Tenkana*' குதிக்கும் சிலந்திகளின் புதிய இனமாக சிலந்திப் பேரின ஆராய்ச்சியாளர்களால்அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்புதிய இனமானது தற்போது 'மனு' குழுவிற்குள் வகைப்படுத்தப்பட்டுள்ள ஈரினங்களைக் கொண்டுள்ளது. நிலத்தில் வாழும் இச்சிலந்தி, தென்னிந்திய மாநிலங்கள் மற்றும் வட இலங்கையில் காணப்படுகிறது. காய்ந்த மக்குகளுடன்கூடிய நிழல்தரும் புற்கள் மற்றும் பாறை, வறண்ட பகுதிகளில் குட்டையான புற்களைக்கொண்ட எளிமையான பகுதிகள்போன்ற சிக்கலான நுண்ணுயிரிகளில் இது வாழ்கிறது.

### 8. EnviStats India – 2024 அறிக்கையின்படி, சிறுத்தைகளின் எண்ணிக்கையில் முதலிடத்தைப் பிடித்துள்ள புலிகள் காப்பகம் எது?

அ. தடோபா அந்தாரி புலிகள் காப்பகம்

**ஆ. நாகார்ஜுன சாகர்-ஸ்ரீசைலம் புலிகள் காப்பகம் ☑**

NSTR
NAGARJUNASAGAR
SRISAILAM TIGER RESERVE

இ. சரிஸ்கா புலிகள் காப்பகம்

ஈ. பெஞ்ச் புலிகள் காப்பகம்

★ சமீபத்தில் வெளியிடப்பட்ட, 'EnviStats India–2024' என்ற அறிக்கையானது, நாகார்ஜுனா சாகர்–ஸ்ரீசைலம் புலிகள் காப்பகம் (NSTR) அதன் சிறுத்தைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தியாவின் 55 புலிகள் காப்பகங்களில், முதலிடத்தில் உள்ளது. அந்தக்காப்பகத்தில் 360 சிறுத்தைகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தல் காப்பகத்தில் 270 சிறுத்தைகள் வசிப்பதாகவும், மேலும் 90 சிறுத்தைகள் அப்பகுதியில் நடமாடுவதாகவும் அவ்வறிக்கை கூறுகிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த சிறுத்தைகள் எண்ணிக்கை 13,874 என மதிப்பிடப்பட்டுள்ளது; ஆந்திர பிரதேசத்தில் 569 சிறுத்தைகள் உள்ளன. NSTR ஆனது 1,401 சகிமீ பரப்பளவில் 80–க்கும் மேற்பட்ட புலிகளைக்கொண்டுள்ளது.

### 9. அண்மையில், மத்திய புவி அறிவியல் அமைச்சகம் கேரளாவின் எந்த மாவட்டத்தில் X–கற்றை ரேடாரை நிறுவ ஒப்புதல் அளித்தது?

**அ. வயநாடு ☑**



ஆ. கண்ணூர்

இ. மலப்புரம்

ஈ. அங்கமாலி

★ அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுக்குப்பிறகு கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் X–கற்றை ரேடார் நிறுவ மத்திய புவி அறிவியல் அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. ஒரு X–கற்றை ரேடார் 8–12 GHz அதிர்வெண் வரம்பில் கதிர்வீச்சை வெளியிடுகிறது; அது அதன் குறைந்த அலைநீளங்கள் காரணமாக உயர்–தெளிவுத்திறன் நிழற்படங்களை உருவாக்குகிறது. அதிக அதிர்வெண்கள் விரைவான தணிப்புக்கு வழிவகுக்கும் அதே வேளையில், ரேடாரின் பயன்பாடுகளில் நிலச்சரிவு எச்சரிக்கைகளை வழங்ககுவதற்கு, மண்போன்ற துகள் இயக்கங்களைக் கண்காணிப்பதும் அடங்கும். X–கற்றை ரேடார்கள் பெரும்பாலும் மேக உருவாக்கம் மற்றும் ஒளிவீழ்படிவைப் ஆராய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

**10. "சிறார்கள் மற்றும் இளையோரின் மனநலம் – சேவை வழிகாட்டுதல்" என்ற அறிக்கையை கூட்டாக வெளியிட்ட நிறுவனங்கள் எவை?**

அ. IMF மற்றும் UNDP

ஆ. WMO மற்றும் ILO

**இ. WHO மற்றும் UNICEF ☑**

ஈ. FAO மற்றும் WHO

★ WHO மற்றும் UNICEF ஆனது "சிறார்கள் மற்றும் இளையோரின் மனநலம் – சேவை வழிகாட்டுதல்" என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிட்டுள்ளன. 1992ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர்.10ஆம் தேதி கொண்டாடப்படும் உலக மனநல நாளன்று இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. 10–19 வயதுடைய 7 சிறார்களில் 1 சிறார் மனநல நிலைமைகளால், கவலை, மனச்சோர்வு மற்றும் நடத்தை கோளாறுகளால் பாதிக்கப்பட்டுகின்றனர். மனநல நிலைமைகளில் 1/3 பங்கு 14 வயதிற்கு முன்பாகவும், சரிபாதி 18 வயதிற்கு முன்பாகவும் வெளிப்படுகிறது.

**11. 2025இல் ISSF ஜூனியர் உலகக்கோப்பையை நடத்தும் நாடு எது?**

அ. நேபாளம்

ஆ. மியான்மர்

**இ. இந்தியா ☑**

ஈ. பூட்டான்



★ ISSF ஜூனியர் உலகக்கோப்பைக்கான போட்டிகள் 2025இல் இந்தியாவில் நடத்தப்படும் என்பதை ISSF தலைவர் லூசியானோ ரோஸி உறுதிப்படுத்தினார். புது தில்லியில் நடைபெறும் ISSF உலகக்கோப்பை இறுதிப்போட்டிக்கு முன்னதாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் லூசியானோ ரோஸி இந்த அறிவிப்பை வெளியிட்டார். இந்திய தேசிய துப்பாக்கிச் சுடுதல் சங்கத்தின் தலைவர் கலிகேஷ் நாராயண் சிங் தியோ செய்தியாளர் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

**12. iDEX என்பது கீழ்க்காணும் எந்த அமைச்சகத்தின் திட்டமாகும்?**

அ. உள்துறை அமைச்சகம்

ஆ. விவசாய அமைச்சகம்

**இ. பாதுகாப்பு அமைச்சகம் ☑**

ஈ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

★ பாதுகாப்பு அமைச்சகம் innovations for Defence EXcellence (iDEX) திட்டத்தை விரிவுபடுத்த அதிக நிதியை நாடுகிறது. iDEX என்பது சிறந்த பாதுகாப்புக்கான கண்டுபிடிப்புகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்தின் முக்கிய முயற்சியாகும். iDEX ஆனது தற்காப்பு மற்றும் விண்வெளியில் தன்னம்பிக்கை மற்றும் புதுமைகளை மேம்படுத்துவதற்காக 2018 ஏப்ரலில் தொடங்கப்பட்டது. இது MSME–கள், புத்தொழில்கள், தனிப்பட்ட கண்டுபிடிப்பாளர்கள், R&D நிறுவனங்கள் மற்றும் கல்வித்துறை உட்பட பல்வேறு துறைகளை ஈடுபடுத்துகிறது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. உலக உணவு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




**அ. அக்டோபர் 16 ☑**


ஆ. அக்டோபர் 17

இ. அக்டோபர் 18

ஈ. அக்டோபர் 20

★ உலக உணவு நாள் ஒவ்வோர் ஆண்டும் அக்.16 அன்று ஐநா உணவு மற்றும் வேளாண்மை அமைப்பால் (FAO) கொண்டாடப்படுகிறது. உலக அளவில் உணவு & ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான அர்ப்பணிப்பை இது எடுத்துக்காட்டுகிறது. சிறந்த விதைகள், நீர்ப்பாசனம் மற்றும் திறமையான பண்ணை இயந்திரங்கள்மூலம் உணவு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சுமார் 2.33 பில்லியன் மக்கள் இன்னமும் உணவுப்பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர்; இது உலகளாவிய உணவுப்பாதுகாப்பை அடைவதற்கான மிகப்பெரிய சவாலாகும். "Right to Foods for a Better Life and a Better Future" என்பது நடப்பாண்டின் கருப்பொருள் ஆகும். 2013இல் நிறைவேற்றப்பட்ட தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (NFSA), இந்தியாவின் மூன்றில் இரண்டு பங்கு மக்களுக்கு மானிய விலையில் தானியங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.

**2. 2024 – பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு யாருக்கு வழங்கப்பட்டது?**



**அ. டேரன் அசெமோக்லு, சைமன் ஜான்சன் மற்றும் ஜேம்ஸ் ராபின்சன் ☑**

ஆ. ஜோசப் ஈ. ஸ்டிக்லிட்ஸ் மற்றும் ஜேம்ஸ் ஜே. ஹெக்மேன்

இ. பால் க்ரூக்மேன் மற்றும் எஸ்தர் டஃப்லோ

ஈ. ஜேம்ஸ் ஜே. ஹெக்மேன் மற்றும் ஆண்ட்ரி ஷ்லீஃபர்

★ 2024 – பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசு, நிறுவனங்கள் பொருளாதார வளத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பது குறித்த ஆராய்ச்சிக்காக டேரன் அசெமோக்லு, சைமன் ஜான்சன் மற்றும் ஜேம்ஸ் ஏ ராபின்சன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. உலக நாடுகளின் வளமைக்கு இடையேயுள்ள வித்தியாசத்தை புரிந்துகொள்ள மூவரின் ஆராய்ச்சி உதவியதற்காகவும், நாட்டின் வளமைக்கு சமூக நிறுவனங்கள் எந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை மூவரின் ஆராய்ச்சி எடுத்துரைத்ததற்காகவும் அவர்களுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

**3. அன்ன பாக்யா திட்டத்தைத் தொடங்கிய மாநில அரசு எது?**



அ. இராஜஸ்தான்

ஆ. குஜராத்

**இ. கர்நாடகா ☑**

ஈ. மகாராஷ்டிரா

★ அன்ன பாக்யா திட்டம் என்பது கர்நாடகாவில் தொடங்கப்பட்ட பணப்பரிமாற்ற முயற்சியாகும்; இது பயனாளிகளுக்கு நிபந்தனையற்ற பணப்பரிமாற்றங்களை வழங்குவதன்மூலம் உணவுப்பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கம் எனக்கொண்டது. இந்தப் புதுமையான அணுகுமுறை குடும்பநலனை மேம்படுத்தவும், நிதி உள்ளடக்கலை அதிகரிக்கவும், விளிம்புநிலை சமூகங்களிடையே சேமிப்பையும் எளிதாக்குகிறது. வழக்கமான உணவுப்பொருள் வழங்கல் முறைகளிலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றத்தைக்குறிக்கும் வகையில், விநியோகிப்பதற்கான கூடுதல் அரிசி கிடைக்காததற்குப் பதிலளிக்கும் வகையில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

**4. 'eMigrate V2.0' இணைய நுழைவு மற்றும் திறன்பேசி செயலியை அறிமுகப்படுத்திய அமைச்சகம் எது?**

அ. உள்துறை அமைச்சகம்

**ஆ. வெளியுறவு அமைச்சகம் ☑**

இ. பாதுகாப்பு அமைச்சகம்

ஈ. சுற்றுலா அமைச்சகம்

विदेश मंत्रालय
MINISTRY OF
EXTERNAL AFFAIRS

★ தில்லியில் வெளியுறவுத்துறை அமைச்சர் Dr S ஜெய்சங்கர் 'eMigrate V2.0' இணைய நுழைவு மற்றும் திறன்பேசி செயலியை தொடங்கி வைத்தார். 'eMigrate' இணைய நுழைவானது இந்திய தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சட்டப்பூர்வ குடியேற்றத்தை ஊக்குவிக்கிறது. புதிய பதிப்பு இந்திய புலம்பெயர்ந்தோரின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாப்பதில் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. இது ஐநா வளங்குன்றா வளர்ச்சி இலக்குகளின் இலக்கு–10 (பாதுகாப்பான மற்றும் பொறுப்பான இடம்பெயர்வு) உடன் இணைகிறது. திறமையான தொழிலாளர்களுக்கான உலகளாவிய தேவை அதிகரித்து வரும் நிலையில், இந்தியா, 2015ஆம் ஆண்டு முதல் இடம்பெயர்வுக்கான ஒப்பந்தங்களுக்கு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

**5. இந்தியக்கடற்படையால் இரண்டு பல்நோக்குக்கப்பல் திட்டத்தின்கீழ் பணியில் சேர்க்கப்பட்ட முதலாவது கப்பலின் பெயர் என்ன?**



அ. விக்சித்

ஆ. காவேரி

**இ. சமர்த்தக் ☑**

ஈ. சமுத்திரா

★ சமீபத்தில் இரண்டு பல்நோக்குக்கப்பல் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட 'சமர்த்தக்' என்ற முதல் கப்பலை காட்டுப்பள்ளியில் உள்ள L&T கப்பல்கட்டுந்தளத்தில் இந்தியக்கடற்படை அறிமுகப்படுத்தியது. இந்த முயற்சியானது இந்தியாவின் தற்சார்பு இந்தியா மற்றும் இந்தியாவில் தயாரிப்போம் ஆகிய திட்டங்களின் ஒருபகுதியாகும்; இது உள்நாட்டு கப்பல் கட்டுமானத்தை ஊக்குவிக்கிறது. "ஆதரவாளர்" என்று பொருள்படும் "சமர்த்தக்" கப்பல்களை இழுத்துச்செல்வது, ஏவுகணைகளை செலுத்துவது மற்றும் ஆயுதங்களைச் சோதனைசெய்வது உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. 106 மீ நீளம், 16.8 மீ அகலம் கொண்ட இந்தக் கப்பல் 15 நாட் வேகத்தில் பயணிக்கும்.

**6. 5ஆவது தேசிய நீர் விருதுகள் – 2023இல், 'சிறந்த மாநிலம்' பிரிவில் விருதைப் பெற்ற மாநிலம் எது?**



**அ. ஒடிசா ☑**

ஆ. ஜார்கண்ட்

இ. பீகார்

ஈ. குஜராத்

★ 5ஆவது தேசிய நீர் விருதுகள் – 2023 ஆனது புது தில்லியில் அறிவிக்கப்பட்டது. அதில் சிறந்த மாநிலத்திற்கான முதல் பரிசை ஒடிசாவும், இரண்டாம் பரிசை உத்தரபிரதேசமும் பெற்றன. குஜராத் மற்றும் புதுச்சேரி கூட்டாக மூன்றாவது இடத்தைப்பிடித்தன. மத்திய அமைச்சர் சி ஆர் பாட்டீல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, நீர் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கான முயற்சிகளை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டது. வளங்குன்றா நீர் நடைமுறைகள் பற்றிய விழிப்புணர்வை ஊக்குவித்த மொத்தம் 38 வெற்றியாளர்கள் பல்வேறு பிரிவுகளின்கீழ் கௌரவிக்கப்பட்டனர்.

**7. ITU – உலக தொலைத்தொடர்பு தரநிலைப்படுத்தல் கூட்டம், 2024 தொடங்கப்பட்ட இடம் எது?**

அ. ஹைதராபாத்

ஆ. சென்னை

**இ. புது தில்லி ☑**

ஈ. கொல்கத்தா

★ இந்தியா சமீபத்தில் உலக தொலைத்தொடர்பு தரநிலைப்படுத்தல் கூட்டம் (WTSA) 2024ஐ புது தில்லியில் நடத்தியது. இந்தியாவிலும் ஆசிய–பசிபிக் பிராந்தியத்திலும் இந்த முக்கிய நிகழ்வு நடைபெறுவது இதுவே முதல்முறையாகும்.

★ 6G, செயற்கை நுண்ணறிவு மற்றும் இணையவெளிப் பாதுகாப்புபோன்ற தொழில்நுட்பங்களுக்கான எதிர்கால தர நிலைகளை விவாதிக்கவும் நிறுவவும் WTSA 190க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து தொழில்துறை தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களை ஒன்றிணைத்தது.

**8. மின்சார வாகன தொழில்நுட்பத்தை மேம்படுத்த அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை (ANRF) தொடக்கிய இயக்கத்தின் பெயர் என்ன?**

**அ. MAHA-EV இயக்கம் ☑**

ஆ. வளங்குன்றா EV இயக்கம்

இ. EMPS இயக்கம்

ஈ. சார்தக் இயக்கம்



★ அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளையானது (Anusandhan National Research Foundation) அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் பகுதிகளில் முன்னேற்றத்திற்கான இயக்கம் – மின்சார வாகனம் (MAHA–EV) இயக்கத்தை அறிவித்தது. MAHA–EV இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கும், உள்நாட்டு கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கும், EV துறையில் இந்தியாவை உலகளாவிய தலைவராக நிலைநிறுத்துவதற்கும் முக்கிய EV தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. MAHA–EV இயக்கம் மின்சார வாகன (EV) கூறுகளுக்கான வலுவான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சுற்றுச்சூழலமைப்பை உருவாக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மின்கலங்கள், பவர் எலக்ட்ரானிக்ஸ், இயந்திரங்கள் மற்றும் இயக்கிகள் (PEMD) மற்றும் மின்னேற்ற உள்கட்டமைப்பு.

★ MAHA– EV இயக்கம் என்பது முக்கியமான அறிவியல் சவால்களைச் சமாளிக்க பல நிறுவன, பல ஒழுங்குமுறை மற்றும் பல புலனாய்வாளர் ஒத்துழைப்பை ஊக்குவிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. இது அரசின் தற்சார்பு இந்தியா தொலைநோக்குடன் ஒத்துப்போவதுடன் இப்பகுதியில் உலகளாவிய நிலைப்பாட்டை உருவாக்க, நாட்டின் எதிர்கால வளர்ச்சியில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கியத் துறைகளில் தொழில்நுட்ப முன்னேற்றத்தை விரைவுபடுத்தி செல்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**9. அண்மையில், உத்தரபிரதேச மாநில அரசு கீழ்க்காணும் எந்த நகரத்தில், ஹிந்தி இலக்கியத்திற்கான நாட்டின் முதல் மொழி அருங்காட்சியகத்தை நிறுவியுள்ளது?**

**அ. வாரணாசி ☑**

ஆ. கோரக்பூர்

இ. அயோத்தி

ஈ. பிரயாக்ராஜ்




★ பிரதமர் நரேந்திர மோதியின் நாடாளுமன்றத் தொகுதியான காசியில் ஹிந்தி இலக்கியத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்தியாவின் முதல் மொழி அருங்காட்சியகத்தை உத்தர பிரதேச அரசு தொடங்கியுள்ளது. இந்த அருங்காட்சியகம் கபீர்தாஸ் மற்றும் முன்ஷி பிரேம்சந்திராபோன்ற புகழ்பெற்ற ஹிந்திமொழி அறிஞர்களின் கையெழுத்துப்பிரதிகள், நிழற்படங்கள் மற்றும் ஆவணங்களை காட்சிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ₹25 கோடி மதிப்பீட்டில், இப்பகுதியின் கலாச்சார பாரம்பரியத்தை வளப்படுத்தும் விதமாக இது நிறுவப்பட்டுள்ளது.

**10. 2024 – உலக தரநிலைகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Protecting the planet with standards

**ஆ. Shared Vision for a Better World: Standards for the Changing Climate ☑**

இ. Shared Vision for a Better World

ஈ. Video standards create a global stage



★ பாதுகாப்பு & நுகர்வோர் திருப்திக்காக தன்னார்வத் தரங்களை உருவாக்கும் நிபுணர்களை கௌரவிப்பதற்காக அக்.14 அன்று உலக தரநிலைகள் நாள் கொண்டாடப்படுகிறது. கடந்த 1946ஆம் ஆண்டில் உருவான இது, 1947இல் தரநிலைப்படுத்தலுக்கான பன்னாட்டு அமைப்பு (ISO) உருவாவதற்கு வழிவகுத்தது. முதல் அதிகாரப்பூர்வ உலக தரநிலை நாள் 1970இல் அனுசரிக்கப்பட்டது. தேசிய தரநிலை அமைப்புகளும் ISO, ITU, ASME மற்றும் IESBA போன்ற அமைப்புகளும் இந்நாளைக் குறிக்கின்றன. "Shared Vision for a Better World: Standards for the Changing Climate" என்பது நடப்பாண்டின் கருப்பொருளாகும்.

**11. ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பெண்டிகோ இன்டர்நேஷனல் சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் யார்?**



அ. ஆகர்ஷி காஷ்யப்

ஆ. அஷ்மிதா சாலிஹா

**இ. தன்யா ஹேமந்த் ☑**

ஈ. மானசி ஜோஷி

★ ஆஸ்திரேலியாவில் நடந்த பெண்டிகோ இன்டர்நேஷனல் சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் தன்யா ஹேமந்த் பட்டம் வென்றார். அவர் 21–17, 21–17 என்ற நேர் செட்களில் தைபேயின் துங் சியோ–டாங்கை தோற்கடித்தார். இது தன்யாவின் மூன்றாவது பன்னாட்டு அளவிலான பட்டமும் 2024இல் அவரது முதல் பட்டமும் ஆகும். அவர் போலந்து ஓபன் மற்றும் அஜர்பைஜான் இன்டர்நேஷனல்–2024இல் இரண்டாம் இடத்தைப் பிடித்தார். 2022இல் இந்தியா இன்டர்நேஷனல் மற்றும் 2023இல் ஈரான் ஃபஜ்ர் இன்டர்நேஷனல் பட்டங்களை அவர் வென்றார். ஆடவர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் ஹரிஹரன் அம்சகருணன் மற்றும் ரூபன் குமார் ரெத்தினசபாபதி ஆகியோர் தைபேயின் சென் செங் குவான் மற்றும் பொலி–வேயிடம் தோற்றனர்.

**12. மருந்து ஒழுங்குமுறை ஆணையங்களின் (ICDRA) 19ஆவது பன்னாட்டு மாநாட்டை நடத்திய நாடு எது?**

**அ. இந்தியா ☑**




ஆ. ரஷ்யா

இ. சீனா

ஈ. ஆஸ்திரேலியா

★ இந்தியாவால் நடத்தப்படும் மருந்து ஒழுங்குமுறை ஆணையங்களின் (ICDRA) 19ஆவது பன்னாட்டு மாநாடானது மருந்துக்கட்டுப்பாடு, அறிவைப்பகிர்ந்துகொள்வது மற்றும் நுண்ணுயிரெதிர்ப்பு மறுப்பு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பில் AIஇன் பங்குபோன்ற சவால்களை எதிர்கொள்ள உலகளாவிய ஒழுங்குமுறை ஆணையங்களை ஒன்றிணைத்தது. COVID–19–க்குப் பிந்தைய தரமான மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளுக்கான அணுகலை உறுதிசெய்வதன்மூலம் "உலகின் மருந்தகம்" என்ற அதன் நிலையை இந்தியா அங்கீகரித்துள்ளது.

---

**IMPORTANT LINKS**

TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

WINMEEN: INSTALL THE WINMEEN APP
DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில், இந்தியக்கடற்படையின் 2ஆவது மிகத்தாழ் அதிர்வெண்கொண்ட ரேடார் நிலையம் திறக்கப்பட்ட மாநிலம் எது?**

அ. மகாராஷ்டிரா

**ஆ. தெலுங்கானா ☑**

இ. குஜராத்

ஈ. கேரளா



★ தெலுங்கானா மாநிலம் தாமகுடம் வனப்பகுதியில் இந்தியக்கடற்படையின் இரண்டாவது மிகத்தாழ் அதிர்வெண் கொண்ட ரேடார் நிலையத்தை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் திறந்து வைத்தார். இது இந்தியக்கடற்படையின் இரண்டாவது மிகத்தாழ் அதிர்வெண்கொண்ட தொடர்பு பரிமாற்ற நிலையமாகும். முதலாவது மிகத்தாழ் அதிர்வெண் கொண்ட ரேடார் நிலையமான INS கட்டபொம்மன், தமிழ்நாட்டின் திருநெல்வேலியில் அமைந்துள்ளது.

**2. அண்மையில், 75ஆவது பன்னாட்டு விண்வெளி மாநாடு நடைபெற்ற இடம் எது?**

அ. லண்டன், இங்கிலாந்து

**ஆ. மிலன், இத்தாலி ☑**

இ. பாரிஸ், பிரான்ஸ்

ஈ. புது தில்லி, இந்தியா

★ 75ஆவது பன்னாட்டு விண்வெளி மாநாடு (IAC) இத்தாலியின் மிலன் நகரில் தொடங்கியது. 10,000–க்கும் மேற்பட்ட விண்வெளி நிபுணர்கள், அறிஞர்கள், தொழில்முனைவோர் மற்றும் வல்லுநர்கள் அதில் கலந்துகொண்டனர். சுற்றுச் சூழல் பாதுகாப்புடன் விண்வெளி ஆய்வுகளை சமநிலைப்படுத்துவதில் கவனம் செலுத்தும் விதமாக, "Responsible Space for Sustainability" என்பது இம்மாநாட்டின் கருப்பொருளாக அமைந்தது.

★ திங்கள் மற்றும் செவ்வாய் கோள் ஆய்வு, தட்பவெப்பநிலை மாற்றம், தனியார் நிறுவனங்களின் பாத்திரங்கள் மற்றும் விண்வெளியில் செயற்கை நுண்ணறிவு பயன்பாடுகள்போன்ற தலைப்புகளில் 200–க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப அமர்வுகள் நடத்தப்பட்டன.

**3. தமன்கங்கா–வைதரணா–கோதாவரி ஆறுகளை இணைக்கும் திட்டத்திற்கு அண்மையில் ஒப்புதலளித்த மாநில அரசு எது?**

**அ. மகாராஷ்டிரா ☑**

ஆ. கர்நாடகா

இ. இராஜஸ்தான்

ஈ. ஒடிசா



★ தமன்கங்கா–வைதரணா–கோதாவரி & தமன்கங்கா–ஏகதாரே–கோதாவரி ஆறுகளை இணைக்கும் திட்டங்களுக்கு மகாராஷ்டிர மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்கள் வடக்கு மகாராஷ்டிரா மற்றும் மராத்வாடா பகுதிகளில் நீர் பற்றாக்குறைக்கு தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. திட்டங்களின் மொத்த மதிப்பீடு ₹15,710 கோடி ஆகும். தமன்கங்கா–வைதரணா–கோதாவரி திட்டத்திற்கு ₹13,497 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டம் 160.97 MLD நீரைத்தருவதோடு 33,110 ஹெக்டேர் பரப்பிற்கு பாசன வசதியும் அளிக்கும். தமன்கங்கா–ஏகதாரே–கோதாவரி திட்டத்திற்கு ₹2,213 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டம் 100 MLD நீரைத்தருவதோடு 12,998 ஹெக்டேர் பரப்பிற்கு பாசன வசதியும் அளிக்கும். இந்தத் திட்டங்கள் குறிப்பாக நாசிக் மாவட்டத்தில் உள்ள சின்னார் வட்டத்தில் பாசனம் மற்றும் நீரிருப்பைக் கணிசமாக மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

**4. 2024 – சரஸ் ஆஜீவிகா மேளா நடத்தப்படுகிற நகரம் எது?**

அ. புது தில்லி

**ஆ. குருகிராம் ☑**

இ. இந்தூர்

ஈ. ஜெய்ப்பூர்

★ 2024 அக்.13–29 வரை குருகிராமில் ஊரக வளர்ச்சி அமைச்சகம் மற்றும் NIRDPRமூலம் SARAS ஆஜீவிகா மேளா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 30 மாநிலங்களிலிருந்து 900–க்கும் மேற்பட்ட கிராமப்புற பெண் கைவினைஞர்கள் இதில் பங்கேற்கின்றனர். இந்தக்கண்காட்சியில் டஸ்ஸார் சேலைகள், பாக் ஆடைகள், பட்டோலா சேலைகள், கதா சேலைகள் மற்றும் இராஜஸ்தானி ஆடைகள் உட்பட பல்வேறு தயாரிப்புகள் காட்சிப்படுத்தப்படுகின்றன. காட்சிப்படுத்தப்படும் தயாரிப்புகளில் கர்நாடகம் மற்றும் ஆந்திர பிரதேசத்தின் மர கைவினைப்பொருட்கள், ஜம்மு & காஷ்மீரின் உலர் பழங்கள் மற்றும் கைத்தறி பொருட்கள், மற்றும் ஜார்கண்டின் பாலாஷ் மற்றும் இயற்கை உணவு ஆகியவை இந்தியா முழுவதும் உள்ள கிராமப்புற கலாசாரத்தை பிரதிபலிக்கின்றன.

**5. அண்மையில், US–இந்தியா வியூகக் கூட்டாண்மை மன்றம் (USISPF) அதன் வருடாந்திர, 'இந்திய தலைமைத்துவ உச்சிமாநாடு–2024'ஐ கீழ்க்காணும் எந்த நகரத்தில் நடத்தியது?**

அ. கொல்கத்தா

**ஆ. புது தில்லி ☑**

இ. சென்னை

ஈ. ஹைதராபாத்

★ US–இந்தியா வியூகக்கூட்டாண்மை மன்றம் (USISPF) புது தில்லியில் 'இந்திய தலைமைத்துவ உச்சிமாநாடு, 2024'ஐ நடத்தியது. இது இருதரப்பு வர்த்தகம், விநியோகச்சங்கிலிகள், குறைகடத்தி முதலீடு, AI மற்றும் அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்களை அதிகரிப்பதில் கவனஞ்செலுத்தியது. குவாட் உச்சிமாநாடு மற்றும் UNGA ஆகியவற்றிற்காக பிரதமர் நரேந்திர மோதியின் சமீபத்திய அமெரிக்க பயணத்தைத் தொடர்ந்து இந்த உச்சி மாநாடு நடைபெற்றது. இது பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்தவும், தூய ஆற்றலை மேம்படுத்தவும், கட்டற்ற இந்தோ–பசிபிக் பகுதியை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டது. இந்தியாவின் உற்பத்திப்பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், உலகளாவிய விநியோகச்சங்கிலிகளை சீரமைக்கவும் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பை இந்த உச்சிமாநாடு வலியுறுத்தியது.

**6. அண்மையில், SCO உச்சிமாநாட்டை நடத்திய நகரம் எது?**

**அ. இஸ்லாமாபாத் ☑**

ஆ. புது தில்லி

இ. பெய்ஜிங்

ஈ. மாஸ்கோ



★ 2024 அக்.16 அன்று SCO அரசாங்கத்தலைவர்கள் கவுன்சிலின் 23ஆவது கூட்டத்தை இஸ்லாமாபாத் நடத்தியது. வர்த்தகம் & பொருளாதார ஒத்துழைப்பில் கவனஞ்செலுத்தும் இந்தக்கூட்டத்திற்கு பாகிஸ்தான் தலைமைதாங்கியது. இந்தியக்குழுவிற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் S. ஜெய்சங்கர் தலைமைதாங்கினார். இது இந்தியா, சீனா, ரஷ்யா மற்றும் மத்திய ஆசியநாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற ஒரு முக்கியமான அரசியல் ரீதியான நிகழ்வைக் குறிக்கிறது. இந்த உச்சிமாநாடு, குறிப்பாக இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நிலவும் பதட்டங்களை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது; அதே நேரத்தில் பலதரப்பு உரையாடலை ஊக்குவிக்கிறது.

★ கடந்த 2001ஆம் ஆண்டு நிறுவப்பட்ட SCO, யூரேசியா முழுவதும் நிலவும் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கான ஒரு முக்கிய தளமாக உருவெடுத்துள்ளது.

**7. அண்மையில், சந்திரயான்–3 திட்டத்திற்காக IAF உலக விண்வெளி விருதைப் பெற்ற இந்தியர் யார்?**

அ. மனோஜ் கோவில்

**ஆ. S சோம்நாத் ☑**

இ. P K மிஸ்ரா

ஈ. பவன் குமார் கோயங்கா



★ ISRO தலைவர் Dr S சோமநாத், சந்திரயான்–3 வெற்றிக்காக பன்னாட்டு விண்வெளி கூட்டமைப்பு (IAFF) வழங்கும் உலக விண்வெளி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். விண்வெளி ஆய்வில் இந்தியாவின் சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் இத்தாலியின் மிலன் நகரத்தில் இந்த விருது வழங்கப்பட்டது. சந்திரயான்–3 ஆனது 2023 ஆக.23 அன்று நிலவின் தென்துருவத்திற்கு அருகே தரையிறங்கியது. இதன்மூலம் நிலவின் தென்துருவத்திற்கு அருகில் தரையிறங்கிய முதல் நாடாக இந்தியா ஆனது; மேலும் நிலவில் தரையிறங்கும் திறன்கொண்ட உயரடுக்கு குழுவிலும் இணைந்தது.

**8. வியாழனின் நிலவை ஆராய்வதற்காக யூரோபா கிளிப்பர் மிஷனை ஏவிய விண்வெளி அமைப்பு எது?**

அ. ISRO

**ஆ. NASA ☑**

இ. CNSA

ஈ. ESA



★ NASA ஆனது வியாழனின் நிலவான யூரோபாவையும் அதன் உயிர்களை நிலைநிறுத்தும் திறனையும் ஆராயும் நோக்கோடு யூரோபா கிளிப்பர் விண்கலத்தை ஏவியது. இவ்விண்கலம் சுமார் பத்தாண்டு பயணத்தில் 3 பில்லியன் கிமீட்டர்கள் பயணிக்கும். யூரோபாவில் பனிக்கட்டி மேற்பரப்புக்குக் கீழே 120 கிலோமீட்டர் ஆழத்தில் கடலிருப்பதாக நம்பப்படுகிறது. 2013ஆம் ஆண்டில், ஹப்பிளால் யூரோபாவில் வெந்நீர் ஊற்றுகள் இருப்பது கண்டறியப்பட்டது. உயிர்கள் இருப்பதற்கான அறிகுறிகளுக்காக இந்த ஊற்றுகளை ஆராய்வதை இந்த விண்கலம் நோக்கமாகக் கொண்டுள்ளது. யூரோபா கிளிப்பர் என்பது NASAஇன் மிகப்பெரிய விண்கலமாகும்; சூரியவொளித் தகடுகளால் இயக்கப்படுகிற இதன் மொத்த மதிப்பீடு $5.2 பில்லியன் ஆகும்.


**9. ஓர் அரிய பிறவிக்கோளாறான நெமலின் மயோபதி என்பது முதன்மையாக உடலின் எப்பகுதியைப் பாதிக்கிறது?**

அ. சிறுநீரகங்கள்

ஆ. நுரையீரல்

**இ. எலும்புத்தசைகள் ☑**

ஈ. இதயம்



★ இந்தியத்தலைமை நீதிபதி DY சந்திரசூட் தனது வளர்ப்பு மகள்களை பாதிக்கும் ஒரு மரபணு நோயான நெமலின் மயோபதி பற்றி விவாதித்தார். நெமலின் மயோபதி, அல்லது ராட் மயோபதி, எலும்புத்தசைகளை பலவீனப்படுத்தும் ஓர் அரிய பிறவிக்கோளாறு ஆகும். இது பாதிக்கப்பட்ட நபர்களின் தசைச்செல்களில் காணப்படும் நூல்போன்ற அமைப்புகளைக் குறிப்பிடுவதனால் இந்நிலைக்கு, "நெமலின்" என்று பெயரிடப்பட்டது. ஓர் அரிய கோளாறான இது, தோராயமாக 50,000 பேர்களில் ஒருவருக்கு ஏற்படுகிறது. முகம், கழுத்து மற்றும் உடற்பகுதியில் தசை பலவீனம், உணவு மற்றும் சுவாசிப்பதில் சிரமம் ஆகியவை இதன் அறிகுறிகளாகும்.

★ நோயறிதல் முறை பெரும்பாலும் தசை பயாப்ஸிகள்போன்ற வலிமிகுந்த செயல்முறைகளை உள்ளடக்கியதாகும். எந்தச் சிகிச்சையும் இல்லை என்றாலும், இயன்முறை சிகிச்சை மற்றும் சுவாச ஆதரவுபோன்ற சிகிச்சைகள் இதன் அறிகுறிகளை நிர்வகிக்க உதவும்.

**10. அண்மையில் அமெரிக்காவிடமிருந்து இந்தியா கொள்முதல்செய்த MQ-9B பிரிடேட்டர் டிரோன்களின் முதன்மை நோக்கம் என்ன?**

**அ. கண்காணிப்பு மற்றும் உளவு ☑**

ஆ. வேளாண் கண்காணிப்பு

இ. வானிலை முன்னறிவிப்பு

ஈ. மேற்கூறியவை எதுவுமில்லை



★ கண்காணிப்பு மற்றும் உளவுத்துறைக்காக அமெரிக்காவிடமிருந்து 31 MQ-9B பிரிடேட்டர் டிரோன்களை இந்தியா வாங்கியுள்ளது. ஜெனரல் அட்டாமிக்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இந்த டிரோன்களை நீர்மூழ்கிக்கப்பல் எதிர்ப்பு மற்றும் தரைநிலை எதிர்ப்புப் போருக்குப் பயன்படுத்தப்படலாம். 40,000 அடிக்கும் மேல் பறக்கும் திறன்கொண்ட அவை, 40 மநே வரை வான்வெளியில் தங்கி, நிகழ்நேர தகவல்களை வழங்குகின்றன. இந்தியக்கடற்படை மற்றும் வான்படையின் திறன்களை மேம்படுத்தும் வகையில் இது செயல்படும்.

**11. பன்னாட்டு வறுமை ஒழிப்பு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. அக்டோபர் 16

**ஆ. அக்டோபர் 17 ☑**

இ. அக்டோபர் 18

ஈ. அக்டோபர் 19

END POVERTY INTERNATIONAL DAY for the ERADICATION of POVERTY 17 OCTOBER

★ பன்னாட்டு வறுமை ஒழிப்பு நாளானது ஒவ்வோர் ஆண்டும் அக்.17 அன்று அனுசரிக்கப்படுகிறது. வறுமையை அதன் அனைத்து வடிவங்களிலும் அகற்றுவதன் அவசியம்குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கம். இந்த நாள் மிகவும் நியாயமான, உள்ளடக்கிய மற்றும் சமமான உலகத்தை உருவாக்குவதற்கான பெருமுயற்சிகளை ஊக்குவிக்கிறது. மிக வறுமையில் வாடும் மக்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.


**12. ஹெல்ஃபயர் ஏவுகணைகளை உருவாக்கும் நாடு எது?**

**அ. அமெரிக்கா ☑**

ஆ. ரஷ்யா

இ. சீனா

ஈ. ஆஸ்திரேலியா



★ 170 AGM-114R ஹெல்ஃபயர் ஏவுகணைகளை வாங்க அமெரிக்காவுடன் இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது. AGM-114 ஹெல்ஃபயர் என்பது லேசர்-வழிகாட்டப்பட்ட, குறுகிய தூரமே செல்லும், வானிலிருந்து தரைநோக்கி ஏவப்படும் ஏவுகணை ஆகும்; இது அமெரிக்க இராணுவம் மற்றும் 30 நட்பு நாடுகளால் பயன்படுத்தப்படுகிறது. இது 1972இல் அமெரிக்காவால் சோவியத் பீரங்கிகளை எதிர்கொள்ள உருவாக்கப்பட்டது. கவச வாகனங்கள், ரேடார் அமைப்புகள், ஹெலிகாப்டர்கள் மற்றும் பலவற்றிற்கு எதிராக இது பயன்படுத்தப்படுகிறது. ஹெல்ஃபயர் ஏவுகணைகள் பிரிடேட்டர் மற்றும் ரீப்பர் டிரோன்கள்போன்ற ஆளில்லா விமானங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

**13. அண்மையில், "Pathways out of the Polycrisis: Poverty, Prosperity, and Planet" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. உலக வங்கி ☑**

ஆ. IMF

இ. UNDP

ஈ. UNEP

★ உலக வங்கியானது "Pathways out of the Polycrisis: Poverty, Prosperity, and Planet – 2024" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது. பொருளாதார வளர்ச்சியில் உள்ள சவால்களை இவ்வறிக்கை எடுத்துக்காட்டுகிறது. "பாலிக்ரிசிஸ்" காரணமாக கடந்த 5 ஆண்டுகளில் உலகளாவிய வறுமைக் குறைப்பு கிட்டத்தட்ட நிறுத்தப்பட்டுள்ளது.

★ பாலிக்ரிசிஸ் என்பது மெதுவான வளர்ச்சி, பலவீனம், தட்பவெப்பநிலை இடர்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைபோன்ற ஒன்றுடன் ஒன்று சேர்ந்த நெருக்கடிகளைக் குறிக்கிறது. 2030ஆம் ஆண்டில் தீவிர வறுமை 7.3%ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. COVID–19 தொற்றுநோய்க்குப் பிறகு வருமான வளர்ச்சி குறைந்து வருவதால், உலக அளவிலான செழிப்பு இடைவெளி விரிவடைந்துள்ளது. இந்தியாவில், 1990இல் 431 மில்லியனாக இருந்த, 'தீவிர வறுமை' நடப்பு 2024இல் 129 மில்லியனாகக் குறைந்துள்ளது.

**14. 2024 – பேரிடர் அபாயக் குறைப்பு தொடர்பான ஆசிய–பசிபிக் அமைச்சர்கள் அளவிலான மாநாடு நடைபெற்ற இடம் எது?**

அ. ஜகார்த்தா, இந்தோனேசியா

ஆ. பெய்ஜிங், சீனா

**இ. மணிலா, பிலிப்பைன்ஸ் ☑**

ஈ. புது தில்லி, இந்தியா

★ மத்திய அமைச்சர் நித்யானந்த் ராய் தலைமையிலான இந்தியக்குழு மணிலாவில் நடந்த 2024 – பேரிடர் அபாயக் குறைப்பு (APMCDRR) தொடர்பான ஆசிய–பசிபிக் அமைச்சர்கள் அளவிலான மாநாட்டில் பங்கேற்றது. இம்மாநாட்டை பிலிப்பைன்ஸ் அதிபர் போங்பாங் மார்கோஸ் தொடக்கிவைத்தார். "Surge to 2030: Enhancing ambition in Asia Pacific to accelerate disaster risk reduction" என்பது இம்மாநாட்டிற்கானக் கருப்பொருளாகும். 2015–2030 பேரிடர் அபாயக் குறைப்புக்கான செண்டாய் கட்டமைப்பில் ஒத்துழைப்பைக் கண்காணிக்கவும் அதனை மேம்படுத்தவும் ஆசிய–பசிபிக் பிராந்தியத்திற்கான முதன்மை தளமாக APMCDRR உள்ளது.

**15. அனைத்து ஊழியர்களுக்கும் இணையவழி கற்றலை எளிதாக்க iGOT ஆய்வகத்தை நிறுவியுள்ள அமைச்சகம் எது?**

**அ. தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் ☑**

ஆ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

இ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. பாதுகாப்பு அமைச்சகம்

★ தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் அதன் ஊழியர்களுக்கு இணையவழி கற்றலை மேம்படுத்துவதற்காக iGOT ஆய்வகத்தை நிறுவியுள்ளது. இந்த முன்முயற்சியானது அனைத்து ஊழியர்களையும் அக்.19ஆம் தேதிக்குள் iGOT இணைய நுழைவுக்குள் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது பட்ஜெட் மேலாண்மை மற்றும் தலைமைத்துவம் உட்பட பதினாறு தேர்ந்தெடுக்கப்பட்ட படிப்புகளை வழங்குகிறது. பணிக்கடப்பாட்டை ஊக்குவிக்க, ஒவ்வொரு காலாண்டிலும் அதிக படிப்புகளை முடித்த ஊழியர்களை அமைச்சகம் அங்கீகரிக்கும்.

★ இந்த நடவடிக்கை அமைச்சகத்தின் திறன் மேம்பாட்டு நாட்காட்டியின் மதிப்பாய்வைத் தொடர்ந்து, திறன் மேம்பாடு, வெளிப்படைத்தன்மை மற்றும் சரியான நேரத்தில் குறைகளைத் தீர்ப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

**16. ஐந்தாவது உலகளாவிய தரநிலைகள் கருத்தரங்கம் (GSS–24) தொடங்கிய இடம் எது?**

**அ. புது தில்லி ☑**

ஆ. சென்னை

இ. ஹைதராபாத்

ஈ. போபால்

★ ஐந்தாவது உலகளாவிய தரநிலைகள் கருத்தரங்கம் (GSS–24) புது தில்லியில் மத்திய அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியாவால் தொடக்கி வைக்கப்பட்டது. இது பன்னாட்டு தொலைத்தொடர்பு ஒன்றியத்தால் (ITU) ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிய–பசிபிக் பிராந்தியத்திற்கான ஒரு நிகழ்வாகும். டிஜிட்டல் மாற்றத்தின் எதிர்காலம் குறித்து விவாதிக்க சுமார் 1500 கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் உலகளாவிய அமைச்சர்கள் இதில் கலந்துகொண்டனர். வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை செயல்படுத்துவதில் பன்னாட்டு தரநிலைகளின் முக்கிய பங்கை இது மையப்படுத்தியது.

**17. ஆண்டுதோறும் உலக மாணாக்கர் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ. அக்டோபர் 14

**ஆ. அக்டோபர் 15 ☑**

இ. அக்டோபர் 16

ஈ. அக்டோபர் 17



★ உலக மாணாக்கர் நாள் ஆண்டுதோறும் அக்.15 அன்று கொண்டாடப்படுகிறது. இந்த நாள் உலகம் முழுவதும் உள்ள மாணாக்கரை கௌரவிப்பதோடு அவர்களின் சவால்கள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இது இந்தியாவின் முன்னாள் குடியரசுத்தலைவரும் கல்வியாளருமான டாக்டர் ஆ. ப. ஜெ. அப்துல் கலாமின் பிறந்தநாளைக் குறிக்கிறது. கல்வியின் முக்கியத்துவத்தையும் சமூகத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் அதன் பங்கையும் இந்த நாள் எடுத்தியம்புகிறது. இது மாணாக்கர் தங்கள் கனவுகளைத் தொடரவும் தடைகளை கடக்கவும் ஊக்குவிக்கிறது.

**18. அண்மையில் லாம்லாய் திருவிழாவை கொண்டாடிய மாநிலம் எது?**

**அ. மணிப்பூர் ☑**

ஆ. ஒடிசா

இ. சிக்கிம்

ஈ. மிசோரம்



★ மணிப்பூரின் தெங்னௌபால் மாவட்டத்தில் உள்ள மாரிங் சமூகத்தினர் ஆண்டுதோறும் லாம்லாய் திருவிழாவைக் கொண்டாடுகின்றனர். கிராமம் வழியாக பாரம்பரிய கௌசாப் பவனியுடன் இந்தத் திருவிழா தொடங்கியது. மாரிங் பழங்குடியினருக்கு குறிப்பிடத்தக்க நிகழ்வான இது, முன்னோர்களை மதித்து, ஒற்றுமையை மேம்படுத்துகிறது. இதன் கொண்டாட்டத்தின்போது கிராமத்தினர் வடிகால், சாலைகள் & வழிகள் உட்பட தங்கள் சுற்றுப்புறங்களை சுத்தம் செய்கிறார்கள். லாம்லாய் திருவிழா அறுவடை காலத்திற்கான தயாரிப்புகளின் தொடக்கத்தைக் குறிக்கிறது.

**19. உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் அதிவேக ரெயிலை தயாரித்த நிறுவனம் எது?**

**அ. பாரத் எர்த் மூவர்ஸ் லிமிடெட் (BEML) ☑**

ஆ. பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL)

இ. ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL)

ஈ. ரெயில்பெட்டி இணைப்புத் தொழிற்சாலை, பெரம்பூர் (ICF)

★ BEML ஆனது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட மணிக்கு 280 கிமீட்டர் வேகத்தில் பயணிக்கும் இந்தியாவின் முதல் அதிவேக ரெயிலைத் தயாரித்துள்ளது. சோவியத் யூனியன் உதவியுடன் 1964 மே.11இல் நிறுவப்பட்ட BEML, தொடக்கத்தில் முழுவதுமாக இந்திய அரசாங்கத்திற்குச் சொந்தமானதாக இருந்தது.

★ பெங்களூருவைத் தலைமையிடமாகக் கொண்ட இது, மண்ணள்ளுதல், ரெயில்வே, போக்குவரத்து மற்றும் சுரங்கத் துறைகளுக்கான கனரக உபகரணங்களைத் தயாரித்து வருகிறது. 1992ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் தனது பங்குகளில் 25%த்தை விலக்கிக் கொண்டது. BEML ஆசியாவின் இரண்டாவது பெரிய மண்ணள்ளும் கருவிகளை உற்பத்தி செய்கின்றது.

**20. அண்மையில் ஈராண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்ட சமர்த் திட்டம், கீழ்க்காணும் எந்தத்துறையில் திறன் மேம்பாட்டில் கவனஞ்செலுத்துகிறது?**

அ. விவசாயம்

**ஆ. ஜவுளி ☑**

இ. ஆயுதங்கள்

ஈ. தகவல் தொழில்நுட்பம்



★ சமர்த் திட்டம் என்பது 2024–25 மற்றும் 2025–26 நிதியாண்டுகளுக்கு ₹495 கோடி செலவீனத்தில் ஜவுளித் துறையில் திறன் மேம்பாட்டை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட ஓர் அரசாங்க முயற்சியாகும். நூற்பு மற்றும் நெசவுத்தொழிலைத் தவிர்த்து, ஒழுங்கமைக்கப்பட்ட ஜவுளித்தொழில்களில் வேலைவாய்ப்பை உருவாக்குவதில் கவனஞ்செலுத்தி, 3 இலட்சம் பேருக்குப் பயிற்சியளிப்பதை இது தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் தற்போதுள்ள தொழிலாளர்களை மேம்படுத்துவதை வலியுறுத்துகிறது மற்றும் பாரம்பரிய ஜவுளித்துறைகளான கைத்தறி மற்றும் கைவினைத்துறைகளை ஆதரிக்கிறது; பெண்களின் வேலைவாய்ப்பில் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்துகிறது. தற்போது வரை 2.89 இலட்சம் பெண்களுக்கு இது பயிற்சியளித்துள்ளது.

**21. அண்மையில், இந்தியாவின் இரண்டாவது பட்டாம்பூச்சி பன்மய மையமாக உருவான தேசியப்பூங்கா எது?**

**அ. காசிரங்கா தேசியப்பூங்கா ☑**

ஆ. கேவலாதேவ் தேசியப்பூங்கா

இ. பெரியாறு தேசியப்பூங்கா

ஈ. இராஜாஜி தேசியப்பூங்கா



★ அஸ்ஸாமின் காசிரங்கா தேசியப்பூங்காவில் 446-க்கும் மேற்பட்ட பட்டாம்பூச்சி இனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன; இது அருணாச்சல பிரதேசத்தின் நம்தபா தேசியப்பூங்காவிற்கு அடுத்தபடியாக இந்தியாவில் இரண்டாவது இடத்தில் உள்ளது. அஸ்ஸாமின் கோலாகாட் மற்றும் நாகோன் மாவட்டங்களில் காசிரங்கா அமைந்துள்ளது. பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு வெள்ளப்பெருக்கில் ஆட்படாத மிகப்பெரிய பரப்பு இதுவாகும். 1985ஆம் ஆண்டில் UNESCO இதனை உலகப் பாரம்பரிய களமாக அறிவித்தது. புலிகளின் முதன்மை வாழ்விடமான இதன் வழியாக டிஃபாலு ஆறு பாய்கிறது; அதே வேளையில் மொராடிஃபாலு ஆறு அதன் தென்னெல்லையில் ஓடுகிறது.

**22. பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியின் (ISA) ஏழாவது அமர்வு நடைபெறும் நகரம் எது?**

அ. ஹைதராபாத்

**ஆ. புது தில்லி ☑**

இ. மும்பை

ஈ. சென்னை

isa INTERNATIONAL SOLAR ALLIANCE

★ பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணி (ISA) பேரவையின் ஏழாவது அமர்வுக்கான முற்காட்சி புது தில்லியில் நடந்தது. 2024 நவ.03–06 வரை புது தில்லியிலுள்ள பாரத மண்டபத்தில், இந்தியத்தலைவர் மற்றும் பிரான்சின் இணைத் தலைவர் தலைமையில் அமர்வு நடக்கும். ISA பேரவை அனைத்து உறுப்புநாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ISAஇன் முடிவெடுக்கும் அமைப்பாகும். இது ISAஇன் கட்டமைப்பை செயல்படுத்துவது பற்றி விவாதிக்கிறது, பொது இயக்குநரைத் தேர்ந்தெடுக்கிறது, பட்ஜெட்டை அங்கீகரிக்கிறது மற்றும் சூரிய ஆற்றல் திட்டங்களை மதிப்பிடுகிறது. ISA ஆனது 120 ஒப்பளித்த நாடுகளைக் கொண்டுள்ளது; அதில் 102 முழுநேர உறுப்புநாடுகள் அடங்கும். இந்தியா தலைமைப் பொறுப்பையும் பிரான்ஸ் இணை தலைமைப் பொறுப்பையும் வகிக்கிறது.

**23. மேரா ஹௌ சோங்பா விழா கொண்டாடப்பட்ட மாநிலம் எது?**



அ. நாகாலாந்து


**ஆ. மணிப்பூர் ☑**

இ. அஸ்ஸாம்

ஈ. சிக்கிம்

★ ஆண்டுதோறும் கொண்டாடப்படும் மேரா–ஹௌ–சோங்பா திருவிழாவை மணிப்பூர் கொண்டாடியது; இது அதன் மலையக மற்றும் பள்ளத்தாக்கு சமூகங்களுக்கு இடையிலான ஒற்றுமைக்கான மாநிலத்தின் உறுதிப்பாட்டைக் குறிக்கும் ஒரு கலாசார நிகழ்வாகும். இது ஆண்டுதோறும் மெய்தே நாட்காட்டியில் மேரா மாதத்தின் 15ஆவது திங்கள் நாளில் அனுசரிக்கப்படுகிறது. சானா கோனுங்கில் பட்டத்தரசரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லீஷெம்பா சனஜோபா தலைமையில் கொடியேற்றத்துடன் இந்நிகழ்வு தொடங்கியது. பாரம்பரிய சடங்குகளான மென் டோங்பா மற்றும் யென்காங் தம்பா ஆகியவை காங்லா உத்ராவில் நிகழ்த்தப்பட்டன.

**24. பன்னாட்டு மெத்தனால் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி – 2024ஐ ஏற்பாடு செய்த நிறுவனம் எது?**



**அ. NITI ஆயோக் ☑**

ஆ. இந்திய ரிசர்வ் வங்கி (RBI)

இ. வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (NABARD)

ஈ. அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் (CSIR)

★ NITI ஆயோக் புது தில்லியில் இருநாள் பன்னாட்டு மெத்தனால் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி – 2024ஐ நடத்தியது. அமெரிக்க மெத்தனால் நிறுவனத்துடன் இணைந்து இது நடத்தப்பட்டது. இது மெத்தனால் உற்பத்தி, பயன்பாடுகள் மற்றும் உலகளாவிய தொழில்நுட்ப வளர்ச்சியில் கவனம் செலுத்தியது. இந்தக் கருத்தரங்கு ஆற்றல் மாற்றத்தில் மெத்தனாலின் பங்கையும், பசுமையான கப்பல் போக்குவரத்தில் குறைந்த கார்பன் எரிபொருளாக அதன் பங்கையும் எடுத்துக்காட்டியது.

**25. அண்மையில், "வேளாண்மை மற்றும் வளங்காப்பு" என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. ஐநா வளர்ச்சித் திட்டம் (UNDP) ☑**

ஆ. பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் (IUCN)

இ. ஐநா சுற்றுச்சூழல் திட்டம் (UNEP)

ஈ. உலக வங்கி

★ பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் (IUCN) "வேளாண்மை மற்றும் வளங்காப்பு" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது. வேளாண்மைக்கும் பல்லுயிர் பாதுகாப்புக்கும் இடையிலான சிக்கலான உறவை இந்த அறிக்கை ஆராய்கிறது. விளைநிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், தோட்டங்கள் மற்றும் நீர்ப்பாசனமாக வாழ்விடம் மாற்றப்படுவதால் IUCN சிவப்புப்பட்டியலில் உள்ள 34% உயிரினங்களை வேளாண்மை நேரடியாக அச்சுறுத்துகிறது.

★ மறைமுக அச்சுறுத்தல்களில் ஆக்கிரமிப்பு இனங்கள், ஊட்டச்சத்து ஏற்றுதல், மண் அரிப்பு, வேளாண் இரசாயனங்கள் மற்றும் தட்பவெப்பநிலை மாற்றம் ஆகியவை அடங்கும். நேர்மறையான பக்கத்தில், IUCN சிவப்புப்பட்டியலில் உள்ள சுமார் 17% உயிரினங்களுக்கு வேளாண்மை வாழ்விடத்தை வழங்குகிறது.

**26. கலாசார அமைச்சகத்தால் அபிதம்ம திவாஸ் என்று கொண்டாடப்பட்ட நாள் எது?**

அ. அக்டோபர் 16

**ஆ. அக்டோபர் 17☑**

இ. அக்டோபர் 18

ஈ. அக்டோபர் 19



★ அபிதம்ம திவாஸ் 2024 அக்.17 அன்று கலாசார அமைச்சகம் மற்றும் பன்னாட்டு பௌத்த கூட்டமைப்பு ஆகியவற்றால் கொண்டாடப்பட்டது. இது புத்தர் அபிதம்மத்தைக் கற்பித்தபின், தாவதிம்ச உலகத்திலிருந்து திரும்பியதை நினைவு கூருகிறது. மேம்பட்ட போதனைகளை அவர் சீடர்களுடன் பகிர்ந்துகொண்டதை இந்த நாள் குறிக்கிறது. அபிதம்ம திவாஸ் முதல் பருவமழைப்பின்னடைவைக் குறிக்கும் பவரண திருவிழாவுடன் ஒத்துப்போகிறது. பாரம்பரியமாக, புத்தர் தவடிசாவில் தனது தாயார் மாயாவுக்கு மூன்று மாதங்கள் கற்பித்தார். இந்தக் காலகட்டம் தியானத்திற்கான பௌத்த தவக்காலமான வஸ்ஸாவுடன் ஒத்துப்போகிறது.

★ ஏழாவது திங்கள் மாதத்தின் முழு நிலவில் கொண்டாடப்படுகிற இது, மியான்மர், தாய்லாந்து, லாவோஸ், கம்போடியா மற்றும் இலங்கைபோன்ற நாடுகளில் அனுசரிக்கப்படுகிறது.

**27. ஐரோப்பிய விண்வெளி முகமையின் (ESA) PROBA-3 திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. நிலவின் மேற்பரப்பை ஆராய்வது

**ஆ. சூரியனின் வில்லொளி வட்டத்தை விரிவாக**

**கூர் நோக்குவதற்காக ஒரு செயற்கை கிரகணத்தை உருவாக்குவது ☑**

இ. பூமியின் வளிமண்டலத்தை ஆய்வு செய்வது

ஈ. சிறுகோள்களை ஆய்வு செய்வது



★ ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) தலைமையிலான PROBA-3 திட்டம், 2024 நவம்பர் மாதத்தில் ஏவப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் இரண்டு ஒருங்கிணைந்த செயற்கைக்கோள்களைப் பயன்படுத்தி ஒரு செயற்கை கிரகணத்தை உருவாக்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இந்தப்புதுமையான அணுகுமுறை சூரியனின் வில் ஒளி வட்டத்தை (corona) விரிவாக கூர்நோக்க அனுமதிக்கிறது. வில்லொளி வட்டமானது பொதுவாக சூரியனின் பிரகாசத்தால் மறைக்கப்படுகிறது. இந்தக்கூட்டிணைவில் பல்வேறு ஐரோப்பிய நாடுகள் மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) ஈடுபட்டுள்ளது.

**28. அண்மையில், இந்திய மொபைல் காங்கிரஸின் 8ஆவது பதிப்பு நடைபெற்ற நகரம் எது?**

அ. மும்பை

ஆ. பெங்களூரு

**இ. புது தில்லி ☑**

ஈ. சென்னை

★ பாரத மண்டபத்தில் நிகழ்ந்த 2024 – உலக தொலைத்தொடர்பு தரநிலைப்படுத்தல் பேரவையின்போது பிரதமர் நரேந்திர மோதி, 8ஆவது இந்திய மொபைல் காங்கிரஸைத் தொடக்கிவைத்தார். இந்நிகழ்வை தொலைத்தொடர்புத் துறை, மத்திய தகவல் தொடர்பு அமைச்சகம் மற்றும் இந்தியாவின் செல்லுலர் இயக்கிகள் சங்கம் ஆகியவை ஏற்பாடு

செய்தன. இது குவாண்டம் தொழில்நுட்பம், சுழற்சிப்பொருளாதாரம், 6G, 5G, இணைய உலகம், இணையவெளிப் பாதுகாப்பு மற்றும் பலவற்றில் இந்தியாவின் கண்டுபிடிப்புகளை எடுத்துக்காட்டுகிறது.

★ 120–க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 400–க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் மற்றும் சுமார் 900 புத்தொழில் நிறுவனங்கள் பங்கேற்றன. இந்தக் காங்கிரஸில் 900–க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப அமர்வுகள் மற்றும் 600–க்கும் மேற்பட்ட பேச்சாளர்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இந்திய மொபைல் காங்கிரஸ் ஆசியாவின் மிகப் பெரிய டிஜிட்டல் தொழில்நுட்ப மன்றமாகும்; இது அதிநவீன தீர்வுகள் மற்றும் சேவைகளைக் காட்சிப்படுத்துகிறது.

**29. 2024இல் கைதழுவுதல் முதலீட்டு மன்றத்தை ஆரம்பித்த அமைப்பு எது?**

அ. உலக சுகாதார அமைப்பு (WHO)

**ஆ. உணவு மற்றும் உழவு அமைப்பு (FAO) ☑**

இ. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு (ILO)

ஈ. உலக வர்த்தக அமைப்பு (FAO)

★ உணவு மற்றும் உழவு அமைப்பு (FAO) 2024இல் கைதழுவுதல் முதலீட்டு மன்றத்தைத் தொடங்கியது. 2019ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கைதழுவுதல் முன்முயற்சி, உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், வறுமையைக் குறைப்பதற்கும், குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் கூட்டாண்மை மற்றும் முதலீடுகளில் கவனம் செலுத்தியது. இந்த முயற்சியானது மூன்று வளங்குன்றா வளர்ச்சி இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது: வறுமையை ஒழித்தல் (SDG–1), பட்டினியை ஒழித்தல் (SDG–2) மற்றும் ஏற்றத்தாழ்வுகளைக்குறைத்தல் (SDG–10). இந்த முயற்சியில் இந்தியா அணிசேரவில்லை.

**30. ஜீரோ டிஃபெக்ட் மற்றும் ஜீரோ எஃபெக்ட் என்ற முன்னெடுப்பைத் தொடங்கிய அமைச்சகம் எது?**

**அ. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சகம் ☑**

ஆ. AYUSH அமைச்சகம்

இ. மின்சார அமைச்சகம்

ஈ. வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகம்

★ மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் இந்திய தரமேலாண்மைக்கான (IFQM) கருத்தரங்கத்தில், 'ஜீரோ டிஃபெக்ட் அண்ட் ஜீரோ எஃபெக்ட்' (ZED) என்ற முன்னெடுப்பை எடுத்துரைத்தார். இது MSME அமைச்சகத்தால் 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ZED முன்னெடுப்பு என்பது ஓர் ஒருங்கிணைந்த சான்றிதழ் அளிப்புத் அமைப்பாகும். மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தரமான தயாரிப்புகளை உற்பத்திசெய்ய MSMEகளை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஊக்கத்தொகைமூலம் அதிக ZED சான்றுநிலைகளை அடைவதை இந்த முயற்சி ஊக்குவிக்கிறது. இது தயாரிப்பு தரத்தை உயர்த்தி, சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதன்மூலம், "இந்தியாவில் தயாரிப்போம்" என்ற பிரச்சாரத்தை ஆதரிக்கிறது.

**31. இந்தியாவின் முதலாவது வானூர்தி நிலையம் சார்ந்த தானியங்கி உள்ளரங்க காற்றுத் தர கண்காணிப்பு வசதி தொடங்கப்பட்டுள்ள இடம் எது?**

அ. சென்னை

ஆ. கோயம்புத்தூர்

**இ. திருவனந்தபுரம் ☑**

ஈ. கொச்சி

★ இந்தியாவின் முதலாவது விமான நிலையம் சார்ந்த தானியங்கி உள்ளரங்க காற்றுத் தர கண்காணிப்பு வசதியான 'பவன சித்ரா'வை திருவனந்தபுரம் பன்னாட்டு விமான நிலையத்தில் மத்திய அறிவியல் & தொழில்நுட்பத்துறை

அமைச்சர் Dr ஜிதேந்திர சிங் நாட்டுக்கு அர்ப்பணித்தார். CSIR–NIISTஆல், உள்ளூரில் கிடைக்கும் பொருட்களிலில் இருந்து வடிவமைக்கப்பட்ட உள்நாட்டு உட்புற சூரிய மின்கலங்களால் இக்காற்றுத் தர மானிட்டர் இயக்கப்படுகிறது. இது வெப்பநிலை, ஈரப்பதம், கரியமிலம் ($CO_2$), கார்பன் மோனாக்சைடு (CO) மற்றும் ஆவியாகும் கரிம சேர்மங்களை அளவிடும் பல உணரிகளைக்கொண்டுள்ளது. காற்றின் தரக்குறியீட்டைக் கணக்கிடுகிற இது, இருக்கும் அனைத்து அளவீடுகளையும் ஒரே திரையில் காட்டும்.

**32. ஆயுர்வேத ஆராய்ச்சிக்கான சிறப்பு மையம் நிறுவப்பட்டுள்ள மாநிலம் எது?**



அ. மகாராஷ்டிரா

**ஆ. கேரளா ☑**

இ. பீகார்

ஈ. தெலுங்கானா

★ கேரளாவின் பாப்பனம்கோடில் உள்ள CSIR–National Institute for Interdisciplinary Science and Technology (NIIST)இல் ஆயுர்வேத ஆராய்ச்சிக்கான புதிய மையம் நிறுவப்படும். இந்த மையம் ஆயுர்வேத தயாரிப்புகளை சர்வதேச தரத்தை பூர்த்தி செய்ய அறிவியல் பூர்வமாக சோதித்து சரிபார்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆயுர்வேத சூத்திரங்கள் பன்னாட்டு தரம், பாதுகாப்பு மற்றும் செயல்திறன் தரங்களை பூர்த்திசெய்வதை இது உறுதிசெய்யும்.

★ AYUSH நிறுவனங்களை ஆதரிப்பதற்கும், நவீன சுகாதாரப்பாதுகாப்பு அமைப்புகளில் ஆயுர்வேதத்தின் உலகளாவிய வரவேற்புக்கு மத்தியில், உயர்தர ஆயுர்வேத தயாரிப்புகளுக்கான மையமாக கேரளாவை நிலைநிறுத்துவதற்கும் இந்த முயற்சி முக்கியமானதாகும்.

**33. பின்வரும் நாடுகளில் எந்தெந்த நாடுகள் ஐந்து கண்கள் கூட்டணியில் உறுப்பினராக உள்ளன?**

**அ. ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ☑**



ஆ. ரஷ்யா, இந்தியா, மியான்மர், உக்ரைன் மற்றும் பிரான்ஸ்

இ. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சீனா, இந்தியா மற்றும் பூட்டான்

ஈ. ரஷ்யா, சீனா, இந்தியா, பிரான்ஸ் மற்றும் இந்தோனேஷியா

★ ஐந்து கண்கள் கூட்டணியானது கனடாவின் சட்ட நடவடிக்கைகளுக்கு இந்தியா ஒத்துழைக்க வலியுறுத்தி கனட நாட்டுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய 5 ஆங்கிலம் பேசும் நாடுகளின் இந்தக் கூட்டணி என்பது ஒரு பலதரப்பு உளவுத்துறை–பகிர்வு வலையமைப்பாகும். கடந்த 1946ஆம் ஆண்டு UK–USA உடன்படிக்கையின் அடிப்படையில், இரண்டாம் உலகப்போருக்குப்பிறகு இது உருவாக்கப்பட்டது. இந்தக் கூட்டணி செயற்கைக்கோள்கள், தொலைபேசி வலையமைப்புகள் மற்றும் ஒளியிழை வடங்களைப் பயன்படுத்தி உலகளாவிய கண்காணிப்பை மேற்கொள்வதற்குப் பெயர்பெற்றது.

**34. வாலோங் போர் என்பது கீழ்க்காணும் எந்தப் போரின் ஒருபகுதியாக இருந்தது?**



அ. 1971இல் நடந்த இந்தியா-பாகிஸ்தான் போர்

**ஆ. 1962இல் நடந்த சீன-இந்திய போர் ☑**

இ. 1947இல் நடந்த இந்திய-பாகிஸ்தான் போர்

ஈ. 1999இல் நடந்த கார்கில் போர்

★ 1962ஆம் ஆண்டு நடந்த சீன–இந்தியப்போரின் ஒரு பகுதியாக நிகழ்ந்த வாலோங் போரின் 62ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் ஒருமாத நிகழ்வுகளை நடத்த இராணுவம் திட்டமிட்டுள்ளது. இந்தியா–சீனா–மியான்மர் முச்சந்தி அருகே அருணாச்சல பிரதேச மாநிலத்தில் இந்தப் போர் நடந்தது. மிகப்பெரிய அளவிலான சீனத் தாக்குதலுக்கு எதிராக வாலோங்கை இந்தியப்படைகள் காத்தன.

★ சுமார் 830 இந்திய வீரர்கள் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர் அல்லது கைப்பற்றப்பட்டனர். இந்தப் போர் இந்திய வீரத்திற்காக நினைவுகூரப்படுகிறது.

**35. முதலாவது ASEAN–இந்தியா டிராக்–1 இணையவெளிக் கொள்கை குறித்த பேச்சுவார்த்தை நடைபெற்ற இடம் எது?**

அ. புது தில்லி

**ஆ. சிங்கப்பூர் ☑**

இ. பாரிஸ்

ஈ. லண்டன்



★ இந்தியாவின் வெளியுறவு அமைச்சகத்தைச் சேர்ந்த அமித் A சுக்லா தலைமையில் முதல் ASEAN–இந்தியா டிராக்–1 இணையவெளிக்கொள்கை குறித்த பேச்சுவார்த்தை சிங்கப்பூரில் நடைபெற்றது. இருதரப்பினரும் இணைய அச்சுறுத்தல், தேசிய இணையவெளிக் கொள்கைகள், அச்சுறுத்தல் மதிப்பீடுகள் மற்றும் ஐநாஇல் அண்மைய ICT முன்னேற்றங்கள் குறித்து விவாதித்தனர். இப்பேச்சுவார்த்தை திறன் மேம்பாடு மற்றும் பயிற்சியில் ஒத்துழைப்பை மையப்படுத்தியது. இணையவெளிப்பாதுகாப்பில் கூட்டு நடவடிக்கைகளுக்கான குறிப்பிட்ட பகுதிகளை இனம் காண்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**36. ஓர் அண்மைய ஆய்வின்படி, உலகில் மிகமோசமான இணைய சுதந்திரம் உள்ள இரு நாடுகள் எவை?**

**அ. மியான்மர் மற்றும் சீனா ☑**

ஆ. பூடான் மற்றும் நேபாளம்

இ. சீனா மற்றும் வங்காளதேசம்

ஈ. மியான்மர் மற்றும் இலங்கை



★ ஃப்ரீடம் ஹௌஸின் 2024 – 'ஃப்ரீடம் ஆன் தி நெட்' அறிக்கையில் இணைய சுதந்திரத்தில் சீனா கடைசி இடத்தில் உள்ளது. அணுகல் தடைகள், உள்ளடக்க வரம்புகள் மற்றும் பயனர் உரிமை மீறல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் 2023 ஜூன் முதல் 2024 மே மாதம் வரை இணைய சுதந்திரத்தை இது மதிப்பிட்டுள்ளது. சீனா அதன் தரநிலையை மியான்மருடன் பகிர்ந்துகொண்டது; இவ்விரு நாடுகளும் 9/100 மதிப்பெண்களைப் பெற்றன.

★ உலக வலையமைப்பிலிருந்து தனது உள்நாட்டு இணையவெளியை தனிமைப்படுத்தும் முயற்சிகளை சீனா தீவிரப்படுத்தியுள்ளது. சீன அரசாங்கம் பன்னாட்டு இணையதள அணுகலைத் தடுத்தத்தோடு VPN பயனர்களுக்கு கடுமையான அபராதமும் விதிக்கிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. புதிய நீதி தேவதை.**

இந்திய உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகள் நூலகத்தில் திறக்கப்பட்ட கண்களுடன், அரசியல் சாசனத்தை ஏந்திய 'நீதி தேவதை' சிலையை தலைமை நீதிபதி DY சந்திரசூட் திறந்து வைத்தார். காலனித்துவ பாரம்பரியத்தை அகற்றும் முயற்சியாக, உச்சநீதிமன்ற நீதிபதிகள் நூலகத்தில் கருப்புத்துணியால் கண்கள் கட்டப்பட்டு, கையில் வாளுடன் இருந்த பழைய நீதி தேவதை சிலை அகற்றப்பட்டுள்ளது.

---

**2. அஸ்ஸாம் குடியுரிமை சட்டப்பிரிவு செல்லும்! – உச்சநீதிமன்றம் தீர்ப்பு.**

"அஸ்ஸாம் மாநிலத்தில் கடந்த 1966 ஜனவரி.01ஆம் தேதிமுதல் 1971 மார்ச்.25ஆம் தேதி வரை சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க வகைசெய்யும் குடியுரிமைச்சட்டத்தின் பிரிவு 6ஏ செல்லும்" என்று உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு வியாழக்கிழமை தீர்ப்பளித்தது. இதன்மூலம், 1971 மார்ச்.25ஆம் தேதிக்கு முன்பாக அஸ்ஸாம் மாநிலத்துக்குப் புலம்பெயர்ந்து குடியிருந்து வருபவர்கள் இந்திய குடியுரிமையைப்பெற முடியும் என்பதை உச்சநீதிமன்றம் உறுதிசெய்துள்ளது.

---

**3. அடுத்த தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கன்னா பெயர் பரிந்துரை!**

உச்சநீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கன்னா பெயரை தற்போதைய தலைமை நீதிபதி DY சந்திரசூட் பரிந்துரைத்தார். கடந்த 2022 நவம்பர் முதல் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி வகித்துவரும் DY சந்திரசூட், வருகின்ற நவ.11ஆம் தேதியுடன் ஓய்வுபெறவுள்ளார். அடுத்த ஆறுமாதகாலம் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பதவி வகிக்கவுள்ள சஞ்சீவ் கன்னா, அடுத்தாண்டு மே.13ஆம் தேதியுடன் ஓய்வுபெறவுள்ளார்.

---

**4. BRICS மாநாட்டில் பங்கேற்க ரஷியா செல்கிறார் பிரதமர்!**

16ஆவது BRICS உச்சிமாநாட்டில் பங்கேற்க இரண்டு நாள் பயணமாக பிரதமர் நரேந்திர மோதி அக்.22 ரஷியா செல்கிறார். பிரேஸில், ரஷியா, இந்தியா, தென்னாப்பிரிக்கா, சீனா, ஈரான், சவூதி அரேபியா, எத்தியோப்பியா, எகிப்து, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் BRICS கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன. இந்தக் கூட்டமைப்பின் 16ஆவது உச்சிமாநாடு ரஷியாவின் கசான் பகுதியில் அக்.22 & 23 தேதிகளில் நடைபெறுகிறது. உச்சிமாநாட்டின் நிகழாண்டு கருப்பொருள், "உலகளாவிய வளர்ச்சி மற்றும் பாதுகாப்புக்கான பலதரப்பு வாதத்தை வலுப்படுத்துதல்" என்பதாகும்.

---

**5. கடற்படை நாள்: சென்னை – கன்னியாகுமரி இடையே கார் பேரணி.**

இந்தியக்கடற்படை நாளை முன்னிட்டு சென்னை முதல் கன்னியாகுமரி வரையிலான கார் பேரணி அடையாறில் தொடங்கியது. 1971ஆம் ஆண்டு நடந்த இந்தியா–பாகிஸ்தான் இடையேயான போரின்போது, டிச.04 அன்று நடந்த தாக்குதலில் கராச்சி துறைமுகத்தில் பாகிஸ்தானுக்கு சொந்தமான நான்கு போர்க்கப்பல்களை இந்தியக்கடற்படை மூழ்கடித்தது. இது இந்தத் தாக்குதல், இந்தியாவின் வெற்றியில் முக்கிய பங்காற்றியது. இதை நினைவுகூரும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் டிச.04ஆம் தேதி இந்தியக்கடற்படை நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

---

**6. தேசிய மகளிர் ஆணையத் தலைவராக விஜயா கிஷோர் ரஹத்கர் நியமனம்.**

தேசிய மகளிர் ஆணைய (NCW) தலைவராக விஜயா கிஷோர் ரஹத்கர் நியமிக்கப்பட்டுள்ளார். தேசிய மகளிர் ஆணையச்சட்டம், 1990இன் பிரிவு–3இன்கீழ், ஆணையத்தின் தலைவராக விஜயா கிஷோர் ரஹத்கர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவருடைய பதவிக்காலம் 3 ஆண்டுகள் அல்லது அவர் 65 வயதை எட்டும் வரை நீடிக்கும்.

---

**7. டாணா புயல்.**

டாணா புயல் (TANA) என்பது வங்கக்கடலில் உருவாகிய புயலாகும். இது நடப்பு 2024 – வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் ஏற்பட்ட முதலாவது புயலும், 2024ஆம் ஆண்டின் மூன்றாவது புயலுமாகும். 'டாணா' என்பது கத்தார் நாடு பரிந்துரைத்த பெயர் ஆகும். இந்தப்புயல் தீவிர புயலாக வடக்கு ஒடிசா – மேற்கு வங்க கடற்கரை பகுதிகளில், பூரி – சாகர் தீவுகளுக்கு இடையே கரையைக் கடந்தது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில், SARTHI அமைப்பை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. தேசிய உணவுத் தொழில்நுட்ப தொழில்முனைவு மற்றும் மேலாண்மை, குண்ட்லி (NIFTEM-K) ☑



ஆ. IIT, தில்லி

இ. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR)

ஈ. தேசிய தோட்டக்கலை வாரியம்

★ தேசிய உணவுத்தொழில்நுட்ப தொழில்முனைவு மற்றும் மேலாண்மை நிறுவனம் (NIFTEM–K) Solar Assisted Reefer Transportation with Hybrid Controls and Intelligence (SARTHI) அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. கெட்டுப் போகும் உணவுகளை எடுத்துச்செல்வதில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்புகளைக் குறைப்பதே இதன் நோக்கம்.

★ SARTHI கொள்கலன்களில் வெவ்வேறு வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் தேவைகளுக்கு இடமளிக்கும் வகையில், பழங்கள் மற்றும் காய்கறிகளை சேமிக்க இரட்டைப்பெட்டிகள் இருக்கும். இது நிகழ்நேர கண்காணிப்புக்கான இணைய தொழில்நுட்பங்களை ஒருங்கிணைக்கிறது. உணரிகள் வெப்பநிலை, ஈரப்பதம், எத்திலீன் மற்றும் $CO_2$ அளவைக் கண்காணிக்கும். கெட்டுப்போவது கண்டறியப்பட்டால், விளைபொருட்களை அருகிலுள்ள சந்தைகளுக்கு மாற்றுவதுபோன்ற தகவலறிந்த முடிவுகளை எடுக்க இது உதவுகிறது.

**2. இந்தோ–துருக்கியே நட்புறவு சங்கம் தொடங்கப்பட்ட நகரம் எது?**

அ. மும்பை

ஆ. ஹைதராபாத் ☑

இ. சென்னை

ஈ. கொல்கத்தா

★ இந்தியா–துருக்கியே நட்புறவு சங்கமானது (ITFA) 2024 அக்டோபர்.16 அன்று ஐதராபாத்தில் இந்தியா–துருக்கியே உறவுகளை வலுப்படுத்தும் நோக்கோடு தொடக்கப்பட்டது. பொருளாதாரம், வர்த்தகம், கலாசாரம், சுற்றுலா, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கல்வி ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதை ITFA நோக்கமாகக் கொண்டுள்ளது. துருக்கிய சுற்றுலாப்பயணிகளின் முக்கிய இடமாக ஹைதராபாத்தை மேம்படுத்துவது ஒரு முக்கிய நோக்கமாகும். இந்தத் தொடக்கம் ஹைதராபாத் நிஜாம்களின் 300 ஆண்டுகள் மற்றும் ஒட்டோமான் சுல்தானகம் ஒழிக்கப்பட்டதில் இருந்து நூறு ஆண்டுகள் எனக் குறிப்பிடத்தக்க வரலாற்று மைல்கற்களுடன் ஒத்துப்போகிறது. இந்த முயற்சி இரு நாடுகளுக்கும் இடையே பல துறைகளில் இருதரப்பு உறவுகளை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**3. அண்மையில், 2024 – உலக எரிசக்தி கண்ணோட்ட அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. பன்னாட்டு எரிசக்தி நிறுவனம் (IEA) ☑

ஆ. உலக வங்கி

இ. பன்னாட்டு செலாவணி நிதியம் (IMF)

ஈ. ஐநா வளர்ச்சித் திட்டம் (UNDP)

★ உலக எரிசக்தி கண்ணோட்டம் – 2024இன்படி, அடுத்த பத்தாண்டுகளில் உலகளவில் இந்தியாவுக்கு அதிக ஆற்றல் தேவை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பன்னாட்டு எரிசக்தி நிறுவனத்தால் (IEA) வெளியிடப்பட்ட இந்த அறிக்கை, முதன்மை ஆற்றல் போக்குகள் மற்றும் கணிப்புகளை வழங்குகிறது. குறைந்த உமிழ்வுடைய ஆற்றல்மூலங்கள் 2030ஆம் ஆண்டளவில் உலகின் மின்னுற்பத்தியில் பாதிக்கும் மேல் உற்பத்தி செய்யும் என்று கணிக்கப்பட்டுள்ளது. 2035ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த எரிசக்தி தேவை 35% உயரும், தொழில்துறையில் நிலக்கரி பயன்பாடு 50% அதிகரிக்கும். நிலக்கரி அடிப்படையிலான மின்னுற்பத்தி 15% அதிகரிக்கும்.


**4. AROHA-2024 மாநாடு தொடங்கப்பட்ட இடம் எது?**

**அ. புது தில்லி ☑**

ஆ. குருகிராம்

இ. இந்தூர்

ஈ. ஜெய்ப்பூர்




★ இந்தியத் தலைமை நீதிபதி DY சந்திரசூட், ஆயுர்வேதத்தின் முன்னேற்றங்களை மையமாகக்கொண்ட, 'AROHA-2024' மாநாட்டை புது தில்லியில் தொடக்கி வைத்தார். மூன்று நாள் நடைபெறும் இந்த நிகழ்வு ஆயுர்வேதத்தை உலகளாவிய அனைத்து நலத்தின் முக்கிய தூணாக நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மருத்துவத்தில் ஆயுர்வேதத்தின் முக்கியத்துவத்தை நீதிபதி DY சந்திரசூட் வலியுறுத்தினார். அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்ய பத்து புதிய ஆயுர்வேத மையங்களை திறக்க அரசு திட்டமிட்டுள்ளது. இந்த மாநாட்டில் ஆயுர்வேதத்தின் தரக் கட்டுப்பாடு, தரப்படுத்தல், உலகமயமாக்கல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகள் விவாதிக்கப்பட்டது.

**5. இந்தியாவில் அதிகரித்து வரும் இணையவழி மோசடிகளை எதிர்த்து மெட்டா நிறுவனத்தால் அண்மையில் தொடங்கப்பட்ட பிரச்சாரத்தின் பெயர் என்ன?**

**அ. ஸ்கேம் சே பச்சோ ☑**

ஆ. சுரக்ஷித் பாரத்

இ. சேஃப்டி ஃபர்ஸ்ட்

ஈ. மென்டார் மெட்டா

Meta

★ இணையவழி பாதுகாப்புகுறித்து நாட்டு மக்களுக்குக் கற்பிப்பதற்காக இந்திய அரசாங்கத்துடன் இணைந்து, 'ஸ்கேம் சே பச்சோ' பிரச்சாரத்தை மெட்டா தொடங்கியது. 2023ஆம் ஆண்டில் 1.1 மில்லியன் வழக்குகளை எட்டிய இணைய மோசடிகளின் அதிகரித்து வரும் அச்சுறுத்தலுக்கு இம்முன்முயற்சி தீர்வுகாண எண்ணுகிறது. 900 மில்லியனுக்கும் அதிகமான இணைய பயனர்களுடன், டிஜிட்டல் இந்தியா திட்டத்தின்கீழ் இந்தியாவின் டிஜிட்டல் வளர்ச்சி குறிப்பிடத் தக்கதாக இருந்தாலும், அதிக இடர்களும் அதிலுள்ளது. டிஜிட்டல் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான முழு அரசாங்க அணுகுமுறையையும் பிரதிபலிக்கும் வகையில், தங்களைக் காத்துக்கொள்வதற்கான அறிவு மற்றும் கருவிகளைக் கொண்டு நாட்டு மக்களுக்கு அதிகாரமளிக்க இந்தப் பிரச்சாரம் எண்ணுகிறது.

**6. ஹோலோங்கபார் கிப்பன் சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. சிக்கிம்

**ஆ. அஸ்ஸாம் ☑**

இ. மிசோரம்

ஈ. நாகாலாந்து



★ வனவிலங்குகளுக்கான தேசிய வாரியம், அஸ்ஸாமின் ஹோலோங்கபார் கிப்பன் சரணாலயத்தில் எண்ணெய் புத்தாய்வுக்கான அனுமதியை ஒத்திவைத்துள்ளது. இந்தியாவில், இச்சரணாலயத்தில்தான் ஹூலாக் கிப்பன் என்ற குரங்குகள் காணப்படுகின்றன. ஹூலாக் கிப்பன்களில் இரண்டு வகைகள் உள்ளன: மேற்கு ஹூலாக் கிப்பன் (*Hoolock hoolock*) மற்றும் கிழக்கு ஹூலாக் கிப்பன் (*Hoolock leuconedys*). மேற்கு ஹூலாக் கிப்பன் குரங்குகள் அனைத்து வடகிழக்கு மாநிலங்களிலும் காணப்படுகிறது. கிழக்கு ஹூலாக் கிப்பன் குரங்குகள் அருணாச்சல பிரதேச மாநிலம் மற்றும் அஸ்ஸாமின் குறிப்பிட்ட பகுதிகளில் காணப்படுகிறது.

**7. உலகளாவிய பல பரிமாண வறுமைக்குறியீடு அறிக்கையை கூட்டாக வெளியிட்ட நிறுவனங்கள் எவை?**

**அ. ஐநா வளர்ச்சித் திட்டம் (UNDP) மற்றும் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித வளர்ச்சி முன்னெடுப்பு (OPHI) ☑**

ஆ. உலக வங்கி மற்றும் பன்னாட்டு செலாவணி நிதியம் (IMF)

இ. ஐநா குழந்தைகள் நிதியம் (UNICEF) மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO)

ஈ. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் உலக வர்த்தக அமைப்பு (WTO)

★ உலகளாவிய பல பரிமாண வறுமைக் குறியீடு – 2024ஐ ஐநா வளர்ச்சித் திட்டமும் (UNDP) ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித வளர்ச்சி முன்னெடுப்பும் (OPHI) வெளியிட்டன. "Poverty Amid Conflict" என்ற கருப்பொருளில் கவனம் செலுத்துகிற இந்த அறிக்கை, வறுமைத்தரவை வன்முறை மோதலுடன் இணைக்கிறது. மோதலில்லா நாடுகளுடன் ஒப்பிடுகையில், போரிலுள்ள நாடுகள் அனைத்து 10 MPI குறிகாட்டிகளிலும் அதிக பற்றாக்குறையைக் காட்டுகின்றன.

★ 112 நாடுகளில் 1.1 பில்லியன் மக்கள் (~18%) கடுமையான பல பரிமாண வறுமையில் வாழ்கின்றனர். இந்தியாவில் 234 மில்லியன் மக்கள் தீவிர வறுமையில் உள்ளனர். MPI கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்க்கைத்தரம் முழுவதும் வறுமையை அளவிடுகிறது. தாய்வழி ஆரோக்கியம் மற்றும் வங்கிக்கணக்கை குறிகாட்டிகளாகச் சேர்த்து, இந்தியா தனது தேசிய பல பரிமாண வறுமைக் குறியீட்டை (NMPI) கடந்த 2021ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது.

**8. அனைத்து பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகளையும் 'மகரிஷி வான்மீகி உறைவிடப் பள்ளிகள்' எனப் பெயர் மாற்றஞ்செய்துள்ள மாநில அரசு எது?**



அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

**இ. கர்நாடகா ☑**

ஈ. உத்தரபிரதேசம்

★ வான்மீகி ஜெயந்தி அன்று, கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா, அனைத்து பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகள் மற்றும் ராய்ச்சூர் பல்கலைக்கழகத்திற்கு, 'மகரிஷி வான்மீகி'யின் பெயர் சூட்டப்படும் என்று அறிவித்தார். மகரிஷி வான்மீகி வேட்டைக்காரனாக இருந்து அறிஞராகவும், இராமாயணத்தை இயற்றியவராகவும் இருந்த பயணத்தை சித்தராமையா பாராட்டினார். சமத்துவம், நீதி மற்றும் அனைவருக்கும் சம வாய்ப்புகள் ஆகியவற்றில் வான்மீகியின் முக்கியத்துவத்தை அவர் எடுத்துரைத்தார்.

**9. அண்மையில், இந்தியப்பிரதமரால் தொடங்கப்பட்ட, 'கர்மயோகி சப்தா'வின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. தொழில்நுட்பத் துறையை மேம்படுத்துவது

**ஆ. அரசு ஊழியர்களுக்கான தனிநபர் மற்றும் நிறுவன திறன் மேம்பாட்டை மேம்படுத்துவது ☑**

இ. கலாசார பாரம்பரியத்தை ஊக்குவிப்பது

ஈ. ரஷ்யாவுடனான பன்னாட்டு உறவுகளை மேம்படுத்துவது

★ புது தில்லியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் பன்னாட்டு மையத்தில், 'கர்மயோகி சப்தா' (அ) தேசிய கற்றல் வாரத்தை பிரதமர் நரேந்திர மோதி தொடக்கி வைத்தார். இந்த முயற்சியானது அரசு ஊழியர்களின் தனிப்பட்ட மற்றும் நிறுவன திறன் மேம்பாட்டை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. 2020 செப்டம்பரில் தொடங்கப்பட்ட, 'மிஷன் கர்மயோகி', இந்திய மதிப்புகள் மற்றும் உலகளாவிய கண்ணோட்டத்துடன் எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் குடிமை சேவையை உருவாக்குவதில் கவனஞ்செலுத்தியது. தேசிய கற்றல் வாரம் ஓர் ஒருங்கிணைந்த "ஓர் அரசு" அணுகுமுறை கற்றலை ஊக்குவித்தது. குடிமக்களை மையப்படுத்திய சேவையை வழங்குவதற்கான திறன்களை மேம்படுத்த அமைச்சகங்கள் மற்றும் நிறுவனங்கள் கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகளை நடத்தின.

**10. மத்திய ரெயில்வே அமைச்சரால் அண்மையில் தொடங்கி வைக்கப்பட்ட, 'சேத்தகாரி சம்ருத்தி' சிறப்பு ரெயிலின் மூலம் கீழ்க்காணும் எந்த இரண்டு இடங்கள் இணைக்கப்பட்டுள்ளன?**



அ. தமிழ்நாடு – உத்தரபிரதேசம்

**ஆ. மகாராஷ்டிரா – பீகார் ☑**

இ. இராஜஸ்தான் – மத்திய பிரதேசம்

ஈ. கர்நாடகா – ஒடிஸா

★ மத்திய ரெயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், காணொலிக்காட்சிமூலம் 'சேத்தகாரி சம்ருத்தி' சிறப்பு ரயிலை கொடியசைத்துத் தொடக்கி வைத்தார். இந்த ரெயில் மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள தேவ்லாலியை பீகாரில் உள்ள டானாபூருடன் இணைக்கிறது. இதன் நோக்கம் உழவர்பெருமக்களுக்கு குறைந்த விலையில் கெட்டுப்போகக்கூடிய பொருட்களை புதிய சந்தைகளுக்கு கொண்டுசெல்ல உதவுவதாகும். கெட்டுப்போகும் பொருட்களை எளிதாகவும் பாதுகாப்பாகவும் கொண்டுசெல்ல சிறிய சிப்ப வாகனங்கள் இந்த ரெயிலில் இடம்பெற்றுள்ளன.

**11. பணியாளர்கள் வைப்புத்தொகையுடன் இணைக்கப்பட்ட காப்பீட்டுத்திட்டத்தை நிர்வகிக்கிற நிறுவனம் எது?**

அ. ஆயுள் காப்பீட்டு நிறுவனம் (LIC)

**ஆ. பணியாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் (EPFO) ☑**

இ. தேசிய ஓய்வூதிய அமைப்பு (NPS)

ஈ. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்

★ EPFO சந்தாதாரர்கள் & அவர்களது குடும்பத்தினருக்கான பணியாளர்கள் வைப்புத்தொகையுடன் இணைக்கப்பட்ட காப்பீட்டுத் திட்டத்தின் (EDLI) நன்மைகளை மறு அறிவிப்பு வரும் வரை நடுவணரசு நீட்டித்துள்ளது. தனியார் துறை ஊழியர்களுக்கு சமூக பாதுகாப்பு சலுகைகளை வழங்குவதற்காக 1976இல் EDLI தொடங்கப்பட்டது. பணியாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தால் (EPFO) நிர்வகிக்கப்படுகிற இந்தத் திட்டம், ஊழியர்களுக்கு தவணை முறை ஆயுள் காப்பீட்டை வழங்குகிறது.

★ இது EPF மற்றும் இதர விதிகள் சட்டம், 1952இன்கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களை உள்ளடக்கியது. EDLI EPF மற்றும் பணியாளர்கள் ஓய்வூதியத்திட்டத்துடன் செயல்படுகிறது. பயன்தொகையானது ஊழியரின் இறுதியாகப் பெற்ற சம்பளத்தைப்பொறுத்தது. EPF உறுப்பினர் சேவையின்போது இறந்தால், அவரால் முன்மொழியப்பட்ட நபர் மொத்தத் தொகையையும் பெறுவார்.

**12. ஒன்றையொன்று சுற்றிவருவதாக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட ஓரிணை பழுப்பு குள்ள விண்மீன்களின் பெயர் என்ன?**



**அ. Gliese 229B ☑**

ஆ. டிராப்பிஸ்ட்-1

இ. பாலாஸ் 35

ஈ. ஜூனோ

★ முப்பது ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்ட, 'Gliese 229B', என்பது உண்மையில் இரட்டை பழுப்பு குள்ள விண்மீன்கள் ஒன்றையொன்று சுற்றிவருவதாக அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பழுப்பு குள்ள விண்மீன்கள் "தோல்வியுற்ற விண்மீன்கள்" என்று அழைக்கப்படுகின்றன; ஏனெனில் அவை விண்மீன்களைவிட இலகுவானவை, ஆனால் வாயுக்கோள்களைவிட கனமானவை. அவை வியாழன்போன்ற கோள்களைவிடவும் பெரியவை ஆனால் விண்மீன்களைவிட சிறியவை.

★ கோள் வரையறைக்குள் வராத இந்தப் பழுப்பு குள்ளர்கள், விண்மீன்கள்போன்ற பொருட்களைச் சேகரிக்கின்றன; மேலும் சிலிகேட்டுகளால் ஆன சூடான மேகங்களைக் கொண்டுள்ளன. அவை ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் போன்ற இலகுவான தனிமங்களைத் தக்கவைத்துக்கொள்கின்றன. அணு எரிபொருளை எரிக்க போதுமான நிறை இல்லாததால், அவை விண்மீன் போன்று ஒளியை உமிழ்வதில்லை.

13. **இந்திய நடனம் பற்றிய முதலாவது பன்னாட்டு விழாவை நடத்திய அமைப்பு எது?**

**அ. சங்கீத நாடக அகாதெமி ☑**

ஆ. தேசிய நாடகப்பள்ளி

இ. லலித் கலா அகாதெமி

ஈ. கலாசார அமைச்சகம்

★ சங்கீத நாடக அகாதெமி தனது முதல் பன்னாட்டு இந்திய நடன விழாவை நடத்தியது. இதில் உலகளாவிய கலைஞர்கள் பங்கேற்றனர். இந்தியாவின் செழுமையான நடன மரபுகளைக் கொண்டாடும் வகையில், ஆறு நாள் நிகழ்ந்த இந்நிகழ்வு புது தில்லியில் உள்ள NASC வளாகத்தில் நடைபெற்றது. இத்திருவிழா கலாசார பரிமாற்றத்தை ஊக்குவிக்கிறது. கலைஞர்கள், அறிஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு இந்திய நடன வடிவங்களை இவ்விழா காட்சிப்படுத்தியது. இது இந்தியாவின் கலாசார பாரம்பரியத்தில் நடனத்தின் முக்கியத்துவத்தையும் இளையோரை ஈடுபடுத்துவதில் அதன் பங்கையும் எடுத்துக்காட்டுகிறது.

14. **அண்மையில், 'முதியோர் உரிமைகள்' குறித்த தேசிய மாநாடு ஏற்பாடு செய்யப்பட்ட இடம் எது?**

**அ. புது தில்லி ☑**



ஆ. சென்னை

இ. ஹைதராபாத்

ஈ. பெங்களூரு

★ தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC) புது தில்லி விஞ்ஞான பவனில் தனது 31ஆவது நிறுவன நாளிற்காக முதியோர்களின் உரிமைகள் குறித்த விழா மற்றும் தேசிய மாநாட்டை ஏற்பாடு செய்தது. 1993 அக்.12இல் NHRC நிறுவப்பட்டது. இந்தியக்குடியரசுத்துணைத்தலைவர் ஜக்தீப் தன்கர், தலைமை விருந்தினராக கலந்துகொண்டார். குறிப்பாக சிறுபான்மையினர், விளிம்புநிலை மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழு மக்களுக்கு, இந்தியாவின் மனித உரிமைகள் சாதனைகள் ஒப்பிட முடியாதவை என்று அவர் கூறினார். வளர்ந்து வரும் மூத்தோர் மக்கள்தொகை வாய்ப்புகள் மற்றும் சவால்கள் என இரண்டையும் முன்வைக்கிறது.

15. **அண்மையில், சாகர் கவாச் பயிற்சி நடைபெற்ற இடம் எது?**

அ. விசாகப்பட்டினம்



ஆ. சென்னை மற்றும் இலட்சத்தீவுகள்

**இ. குஜராத் மற்றும் டாமன் & டையூ ☑**

ஈ. கோவா

★ இந்தியக் கடலோரக் காவல்படை அக்.16–17 தேதிகளில் குஜராத் மற்றும் டாமன் & டையூவில் கடலோரப் பாதுகாப்புப் பயிற்சியான 'சாகர் கவாச்' நடத்தியது. காந்திநகரிலுள்ள கடலோரக்காவல்படையின் பிராந்திய தலைமையகத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட இந்த வருடாந்திர பயிற்சியின் இரண்டாவது பதிப்பு இதுவாகும். இந்தப் பயிற்சியானது கடல் மற்றும் கடலோரப் பாதுகாப்பை மேம்படுத்துவதையும், தற்போதுள்ள நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை சரிபார்க்கவும் நோக்கம் கொண்டது. இந்தியக்கடற்படை, மாநிலக்காவல்துறை, கடல்சார் காவல்துறை, BSF, NSG, குஜராத் கடல்சார் வாரியம், IB மற்றும் துறைமுக அதிகாரிகள் உட்பட பல்வேறு துறையினர்கள் பங்கேற்றனர்.

**16. பூரியில் 2024 – கலங்கரை விளக்க சுற்றுலா மாநாட்டை நடத்திய அமைச்சகம் எது?**

அ. சுற்றுலா அமைச்சகம்

ஆ. பாதுகாப்பு அமைச்சகம்

**இ. துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப்போக்குவரத்துகள் அமைச்சகம் ☑**

ஈ. உள்துறை அமைச்சகம்



★ 2ஆவது தேசிய கலங்கரை விளக்க விழாவானது மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தால் நடத்தப்பட்ட 2024 – கலங்கரை விளக்க சுற்றுலா மாநாட்டில் பூரியில் தொடங்கியது. இதில், அரசு அதிகாரிகள், சுற்றுலாத்துறை நிபுணர்கள், பாதுகாவலர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். கலங்கரை விளக்க சுற்றுலாவை மேம்படுத்துதல் மற்றும் கடல்சார் பாரம்பரியத்தை பாதுகாப்பது குறித்து இந்நிகழ்வு கவனஞ்செலுத்தியது. 75 வரலாற்றுச் சிறப்புமிக்க கலங்கரை விளக்கங்களை அருங்காட்சியகங்கள் & பூங்காக்கள் போன்ற நவீன வசதிகளுடன் சுற்றுலாத்தளங்களாக மாற்றுவது இதன் நோக்கமாகும்.

★ இம்முன்முயற்சியானது இக்குறிப்பிட்ட கலங்கரை விளக்கங்களைப் பாதுகாப்பதையும், உள்ளூர் வேலைவாய்ப்பை உருவாக்குவதையும், பொருளாதாரத்தை உயர்த்துவதையும் நோக்கமாகக்கொண்டுள்ளது. 9 கடலோர மாநிலங்கள் மற்றும் 1 யூனியன் பிரதேசத்தில் 75 கலங்கரை விளக்கங்களில் சுமார் ₹65 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

**17. உயிரியல் பல்வகைமை மாநாட்டிற்கான உறுப்புத்துவ நாடுகளின் 16ஆவது மாநாடு (COP16) தொடங்கப்பட்ட இடம் எது?**

அ. சென்னை, இந்தியா

**ஆ. காலி, கொலம்பியா ☑**

இ. மாஸ்கோ, ரஷ்யா

ஈ. பாரிஸ், பிரான்ஸ்




★ உயிரியல் பல்வகைமை மாநாட்டிற்கான (CBD) உறுப்புத்துவ நாடுகளின் 16ஆவது மாநாடு (COP16) கொலம்பியா நாட்டின் காலியில் தொடங்கியது. CBD ஆனது 196 உறுப்புத்துவ நாடுகளைக் கொண்டுள்ளது. இயற்கைப் பாதுகாப்பு குறித்த மிகவிரிவான பன்னாட்டு பிணைப்பாகும் இது. 1992இல் ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாடு தொடர்பான ஐநா மாநாட்டில் ஒப்பமிடுவதற்காக இது உருவாக்கப்பட்டது. CBD ஆனது உயிரியல் பல்வகைமையைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது; அது நிலையான பயன்பாட்டை ஊக்குவிப்பது மற்றும் மரபணு வளங்களின் பயன்களை நியாயமான முறையில் பகிர்வதை உறுதிசெய்கிறது.

★ நிர்வாகக்குழுவான COP, முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்து முன்னுரிமைகளை அமைக்க ஒவ்வோர் இரண்டு ஆண்டுகளுக்கும் ஒருமுறை கூடுகிறது. கனடாவின் மாண்ட்ரீலில் அமைந்துள்ள இதன் செயலகம், கார்டஜினா மற்றும் நகோயா நெறிமுறைகள்மூலம் செயல்படுத்துவதை ஆதரிக்கிறது.

**18. சோளகர் பழங்குடியினர் முதன்மையாக வசிக்கின்றன மாநிலங்கள் எவை?**

**அ. தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ☑**

ஆ. மணிப்பூர் மற்றும் நாகாலாந்து

இ. குஜராத் மற்றும் இராஜஸ்தான்

ஈ. பீகார் மற்றும் ஜார்கண்ட்



★ கர்நாடக மாநிலம் சாமராஜநகர் மாவட்டத்தில் வாழும் சோளகர் பழங்குடியினருக்கு தூய குடிநீர் பெறும் கிடைப்பது பெருஞ்சவாலாக உள்ளது. தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலத்தில் வாழும் பூர்வீக ஆதிவாசிக்குடியான சோளகர், இயற்கையுடன் ஆழமான தொடர்பு காரணமாக, "மூங்கிலின் குழந்தைகள்" என்று அழைக்கப்படுகிறார்கள்.

★ அவர்கள் பிலிகிரி ரங்கனா மலைகள் மற்றும் மலே மகாதேஷ்வரா மலைகளுக்கு அருகில் வாழ்கின்றனர். புலிகள் காப்பகத்தில் வாழ்வதற்கு சட்டப்பூர்வமாக வன உரிமைகள் பெற்ற முதல் பழங்குடி சமூகம் சோளகர் ஆவர். 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, அவர்களின் எண்ணிக்கை கர்நாடகத்தில் சுமார் 33,871 ஆகவும், தமிழ்நாட்டில் 5,965 ஆகவும் உள்ளது. அவர்கள் சோளகர், தமிழ் மற்றும் கன்னடம் பேசுகிறார்கள்.


**19. மூன்லைட் லூனார் கம்யூனிகேஷன்ஸ் மற்றும் நேவிகேஷன் சர்வீசஸ் (LCNS) திட்டத்தைத் தொடங்கியுள்ள விண்வெளி நிறுவனம் எது?**

அ. NASA

ஆ. ISRO

**இ. ESA ☑**

ஈ. CNSA



★ ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) மூன்லைட் லூனார் கம்யூனிகேஷன்ஸ் மற்றும் நேவிகேஷன் சர்வீசஸ் (LCNS) திட்டத்தைத் தொடங்கியுள்ளது. அடுத்த இருபது ஆண்டுகளில் விண்வெளி முகமைகள் மற்றும் தனியார் நிறுவனங்களால் திட்டமிடப்பட்ட 400–க்கும் மேற்பட்ட நிலவுப்பயணங்களுக்கு ஆதரவளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. மூன்லைட் திட்டம் சுமார் 5 சந்திர செயற்கைக்கோள்களின் தொகுப்பை ஏவும். இந்தச் செயற்கைக் கோள்கள் துல்லியமான தானியங்கு தரையிறக்கம், அதிவேக தகவல் தொடர்பு மற்றும் நிலவில் மேற்பரப்பு இயக்கம் ஆகியவற்றை அளிக்கும். பூமிக்கும் திங்களுக்கும் இடையே 4,00,000 கிமீ (2,50,000 மைல்கள்) தொலைவில் தரவு பரிமாற்றத்தை இந்தச் செயற்கைக்கோள்கள் செயல்படுத்தும்.

**20. அண்மையில், ஜான்சியில் சுதர்சன் சக்ரா படைப்பிரிவு நடத்திய பயிற்சியின் பெயர் என்ன?**

**அ. ஸ்வவ்லம்பன் சக்தி ☑**

ஆ. ரஹத்

இ. சக்தி

ஈ. யுத் அபியாஸ்



★ ஜான்சிக்கு அருகில் உள்ள பாபினா ஃபீல்ட் ஃபைரிங் ரேஞ்சில் சுதர்சன் சக்ரா படைப்பிரிவால், 'ஸ்வவ்லம்பன் சக்தி' என்ற பயிற்சி நடத்தப்படுகிறது. இப்பயிற்சியானது இந்திய இராணுவத்தின் தாக்குதல் உத்திகளில் முக்கிய மற்றும் வளர்ந்துவரும் நுட்பங்களை ஒருங்கிணைப்பதில் கவனம் செலுத்துகிறது. ஏறக்குறைய 1800 பணியாளர்களை ஈடுபடுத்திய இது, அதிநவீன டிரோன்கள் மற்றும் ரோபோ அமைப்புகள் உட்பட நாற்பதுக்கும் மேற்பட்ட தொழில் கூட்டாளர்களிடமிருந்து ஐம்பதுக்கும் மேற்பட்ட புதிய தொழில்நுட்ப உபகரணங்களை பயன்படுத்துகிறது. போர் தயார்நிலையை மேம்படுத்துவதும், இந்திய ராணுவம் மற்றும் பாதுகாப்புத்துறைக்கு இடையேயான ஒத்துழைப்பை வளர்ப்பதும், உள்நாட்டு பாதுகாப்பு உற்பத்தி திறன்களை அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும்.

**21. உலக புள்ளியியல் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. அக்டோபர் 19

**ஆ. அக்டோபர் 20 ☑**

இ. அக்டோபர் 21

ஈ. அக்டோபர் 22



★ ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கும் அக்.20ஆம் தேதி உலக புள்ளியியல் நாள் கொண்டாடப்படுகிறது. ஐநா புள்ளியியல் ஆணையம் சமூக மற்றும் பொருளாதார வாழ்வில் புள்ளிவிவரங்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாளை உருவாக்கியது. 2010 அக்டோபர்.20 அன்று முதல் கொண்டாட்டத்துடன் ஐநா பொதுச்சபை

இந்த நிகழ்வை நிறுவியது. உலகளாவிய சவால்களைச் சமாளிப்பதற்கும் வளங்குன்றா வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கும் துல்லியமான மற்றும் சரியான நேரத்திய தரவுகளின் முக்கிய பங்கை இந்நாள் வலியுறுத்துகிறது.

**22. இந்தியாவில் அடுத்த தலைமுறை ஏவுகணைக் கப்பல்களை உருவாக்குவதற்குப் பொறுப்பான கப்பல்கட்டும் தளம் எது?**

**அ. கொச்சி கப்பல்கட்டும் நிறுவனம் ☑**

ஆ. ஹிந்துஸ்தான் கப்பல்கட்டும் நிறுவனம்

இ. மசாகன் கப்பல்கட்டும் நிறுவனம்

ஈ. கார்டன் ரீச் கப்பல்கட்டும் நிறுவனம்

★ பொறி உற்பத்தி நிறுவனமான ஜெனரல் எலக்ட்ரிக் தனது LM2500 கடல் இயந்திரங்கள் இந்தியக்கடற்படையின் அடுத்த தலைமுறை ஏவுகணை ஏவும் கப்பல்களுக்கு ஆற்றலளிக்கும் என அறிவித்துள்ளது. ₹9,805 கோடி செலவில் கொச்சின் கப்பல்கட்டும் நிறுவனம் கட்டிய இந்த ஆயுதந்தாங்கியக் கப்பல்கள், மறைந்திருந்து தாக்குதல் மேற்கொளல் மற்றும் அதிவேக தாக்குதல் திறன்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

**23. தேசிய பெண்கள் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. அனிதா சர்மா

ஆ. உமா தேவி



**இ. விஜய ரஹத்கர் ☑**

ஈ. மீனாட்சி நேகி

★ தேசிய பெண்கள் ஆணையத்தின் (NCW) தலைவராக விஜயா ரஹத்கர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனத்தை பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்த நியமனத்திற்கு முன்பு மகாராஷ்டிர மாநில பெண்கள் ஆணையத்தின் தலைவராகவும், ஔரங்கபாத் மேயராகவும் விஜயா ரஹத்கர் பணியாற்றியுள்ளார். பாஜக தேசியச்செயலாளராகவும், அக்கட்சியின் பெண்கள் பிரிவின் தலைவராகவும் அவர் பதவி வகித்துள்ளார். டாக்டர் அர்ச்சனா மஜும்தார் NCWஇன் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**24. பெண்களின் பாதுகாப்பிற்காக அரசு நடத்தும் மாவட்ட மருத்துவமனை மற்றும் மருத்துவக்கல்லூரியில் இளஞ் சிவப்பு எச்சரிக்கை மணியை (Pink Alarm) நிறுவியுள்ள மாநில அரசு எது?**

அ. கர்நாடகா




ஆ. மேற்கு வங்காளம்

**இ. மத்திய பிரதேசம் ☑**

ஈ. உத்தர பிரதேசம்

★ மத்திய பிரதேச மாநிலத்தின் தாதியா மாவட்ட மருத்துவகம் & மருத்துவக்கல்லூரியில் பெண்களின் பாதுகாப்பிற்காக 'இளஞ்சிவப்பு எச்சரிக்கை மணி' பொருத்தப்பட்டுள்ளது. கொல்கத்தாவில் பயிற்சி மருத்துவர் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு கொலைசெய்யப்பட்டதை அடுத்து இந்த முயற்சி அறிமுகப்படுத்தப்பட்டது. மாவட்ட ஆட்சியர் சந்தீப் மகின் உருவாக்கிய இந்த அமைப்பு, இயக்கப்பட்ட ஐந்து நிமிடங்களில் பாதுகாவலரை எச்சரிக்கிறது.

★ மகப்பேற்றுப்பிரிவு, விபத்துப் பிரிவு மற்றும் புதிய OPD தொகுதி முழுவதும் உள்ள ஊழியர்களின் பணி அறைகளில் இந்த எச்சரிக்கை மணிகள் நிறுவப்பட்டுள்ளது. மகளிரின் பாதுகாப்பிற்காக இதுபோன்றதொரு வசதியை வழங்கும் மாநிலத்தின் முதல் அரசு மருத்துவமனை இதுவாகும்.

**25. அண்மையில், லண்டனில் நடந்த WR செஸ் மாஸ்டர்ஸ் கோப்பையை வென்ற இந்திய வீரர் யார்?**

**அ. அர்ஜுன் எரிகைசி ☑**

ஆ. பெண்டாலா ஹரிகிருஷ்ணா

இ. விதித் குஜராத்தி

ஈ. கிருஷ்ணன் சசிகிரண்



★ லண்டனில் நடைபெற்ற WR செஸ் மாஸ்டர்ஸ் கோப்பையை இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி வென்றார். அவர் இறுதிப்போட்டியில் மேக்சிம் வச்சியர்–லாக்ரேவ்வை தோற்கடித்தார். 2 கிளாசிக்கல் ஆட்டங்கள் டிரா செய்யப்பட்ட பிறகு, அர்ஜுன் டை பிரேக்கரை நேர அழுத்தத்தின்கீழ் வென்றார். இந்தப் போட்டியானது 16 வீரர்கள் பங்கேற்கும் நாக்–ஔட் போட்டியாக இருந்தது. அர்ஜுன் இப்போது FIDE சுற்றை வழிநடத்துகிறார்.

**26. 2024 – உலக எலும்புத்துளை நோய் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Say No to Fragile Bones ☑**

ஆ. Step Up for Bone Health - Build Better Bones

இ. Protect your future

ஈ. Take action for bone health




★ எலும்புத்துளை நோய் மற்றும் வளர்சிதை மாற்ற எலும்பு நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.20 அன்று உலக எலும்புத்துளை நோய் நாள் அனுசரிக்கப்படுகிறது. பன்னாட்டு எலும்புத் துளை நோய் அறக்கட்டளையால் (IOF) ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பிரச்சாரம், உள்ளூர் மக்களின் முயற்சிகளுடன் 90–க்கும் மேற்பட்ட நாடுகளிலுள்ள சமூகங்களை இதில் ஈடுபடுத்துகிறது. எலும்புத்துளை நோயானது எலும்புகளை வலுவிழக்கச் செய்து, அவற்றை உடையக்கூடியதாகவும், எலும்பு முறிவுகளுக்கு ஆளாகக்கூடியதாகவும் ஆக்குகிறது.

★ குறிப்பாக மாதவிடாய் நின்ற பெண்கள் மற்றும் வயதானவர்களிடையே இந்நோய் காணப்படுகிறது. 2024ஆம் ஆண்டுக்கானக் கருப்பொருள், "Say No to Fragile Bones" என்பதாகும். இந்தக் கருப்பொருள் எலும்பு நலத்தைப் பாதுகாப்பதற்கும் எலும்பு முறிவு அபாயங்களைக் குறைப்பதற்கும் செயலூக்கமான நடவடிக்கைகளின் அவசியத்தை வலியுறுத்துகிறது.


**27. '*Coelogyne tripurensis*' என்பது சார்ந்த இனம் எது?**

**அ. மந்தாரை ☑**

ஆ. பட்டாம்பூச்சி

இ. சிலந்தி

ஈ. மீன்



★ '*Coelogyne tripurensis*' என்ற ஒரு புதிய மந்தாரை இனம், திரிபுராவின் ஜம்புய் மலைகளில் கண்டுபிடிக்கப்பட்டது. இது இந்தோ–மியான்மர் பல்லுயிர் பெருக்கத்தின் வளமையமான ஈரப்பதமான அகன்ற இலைக்காடுகளைச் சார்ந்த உயிரினமாகும். இந்திய துணைக்கண்டம், தென்கிழக்காசியா மற்றும் பசிபிக் தீவுகளை தாயகமாகக்கொண்ட '*Coelogyne*' மரபினமானது சுமார் 600 இனங்களைக் கொண்டுள்ளது. இந்த மந்தாரைகள் பெரும்பாலும் மேலொட்டி வேரமைப்பு கொண்டவையாகும். '*Fuliginosae*' பிரிவைச் சேர்ந்த இந்தப் புதிய இனங்கள், ஈரப்புமிகு பூக்கள் மற்றும் தனித்துவமான சிற்றுதட்டிற்கு பெயர்பெற்றதாகும்.

**28. அண்மையில், ICC மகளிர் T20 உலகக்கோப்பையை வென்ற நாடு எது?**

அ. தென்னாப்பிரிக்கா

**ஆ. நியூசிலாந்து ☑**

இ. இந்தியா

ஈ. ஆஸ்திரேலியா



★ தென்னாப்பிரிக்காவை 32 இரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி நியூசிலாந்து தனது முதல் பெண்கள் T20 உலகக் கோப்பையை வென்றது. முதலில் வங்கதேசத்தில் நடத்துதற்கு திட்டமிடப்பட்ட 9ஆவது ICC பெண்கள் T20 உலகக் கோப்பைப் போட்டிகள், அரசியல் உறுதியற்ற தன்மைகாரணமாக பின்னர் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு மாற்றப்பட்டது. 2024 அக்.03–20 வரை துபாய் மற்றும் ஷார்ஜாவில் நடைபெற்ற போட்டிகளுடன், வங்கதேசம் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் போட்டியை நடத்தும் உரிமைகளைப் பகிர்ந்துகொண்டன.

**29. ஸ்ரீ சிங்கீஸ்வரர் திருக்கோவில் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கேரளா

இ. மகாராஷ்டிரா

ஈ. கர்நாடகா



★ தமிழ்நாட்டின் திருவள்ளூரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சிங்கீஸ்வரர் திருக்கோவிலில் 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செப்புத்தகடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மப்பேடு கிராமத்தில் சிவபெருமானுக்கென அர்ப்பணிக்கப்பட்ட திருக்கோவிலான இது, முதலில் சோழப்பேரரசர் ராஜராஜ சோழனின் தந்தையான பொ.ஆ 976இல் 2ஆம் ஆதித்த கரிகாலனால் கட்டப்பட்டது. கிருஷ்ணதேவராயரின் அரசப் பிரதிநிதியான, தளவாய் அரியநாத முதலியார், 1501ஆம் ஆண்டில் ராஜகோபுரம், சுற்றுச்சுவர் மற்றும் 16 தூண்கள்கொண்ட மண்டபத்தைக் கட்டினார். இந்தத் திருக்கோவில் ஐந்தடுக்கு ராஜகோபுரத்துடன்கூடிய திராவிடக்கட்டிடக்கலைப்பாணியைக் கொண்டுள்ளது. முதன்மை தெய்வமான ஸ்ரீ சிங்கீஸ்வரர், பெரிய சிவலிங்க வடிவில் வழிபடப்படுகிறார்.

**30. அண்மையில், 129 சதுப்புநிலங்களை புதுப்பிப்பதற்காக SWIFT திட்டத்தைத் தொடங்கியுள்ள வடகிழக்கு மாநிலம் எது?**

**அ. அஸ்ஸாம் ☑**

ஆ. மிசோரம்

இ. மணிப்பூர்

ஈ. நாகாலாந்து



★ அஸ்ஸாம் மாநில முதலமைச்சர் ஹிமந்தா பிஸ்வா சர்மா ₹800 கோடி பட்ஜெட்டில் 129 ஈரநிலங்களைப் புதுப்பிக்க Sustainable Wetland and Integrated Fisheries Transformation (SWIFT) திட்டத்தைத் தொடங்கினார். ஆசிய வளர்ச்சி வங்கியுடன் இணைந்து இந்தத் திட்டம் நீர் மேலாண்மையை மேம்படுத்தி மீன் உற்பத்தியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது 4,000 ஹெக்டேர் பரப்பில் ஈரநில மீன்வளத்தை மீட்டெடுக்கும்; இது வெள்ளக் கட்டுப்பாடு, நிலத்தடிநீர் நிறைவாக்கல் மற்றும் ஆற்று நீரோட்ட ஒழுங்குமுறை ஆகியவற்றிற்கு முக்கியமானது. இந்த முயற்சியானது உள்நாட்டு மீன் உற்பத்தியை ஆண்டுதோறும் ஹெக்டேருக்கு 1,200 கிகிராம் வரை அதிகரிக்கும். அஸ்ஸாமின் சுற்றுச்சூழல் இலக்குகளை ஆதரிக்கவும், உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் நிலையான நிர்வாகத்தில் இந்தத் திட்டம் கவனம் செலுத்துகிறது.

**31. அண்மையில் முதலாவது G–7 பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தை நடத்திய நாடு எது?**

அ. ஐக்கிய இராச்சியம்

**ஆ. இத்தாலி ☑**

இ. ஜப்பான்

ஈ. கனடா

★ முதலாவது G7 பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம் இத்தாலியின் நேபிள்ஸில் 2024 அக்டோபர்.19 அன்று இத்தாலிய பாதுகாப்பு அமைச்சர் கைடோ குரோசெட்டோவால் நடத்தப்பட்டது. அக்.07 அன்று இஸ்ரேல் மீது நடந்த தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வாரைக் கொல்வதாக இஸ்ரேல் அறிவித்துள்ள இந்நிலையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் மற்றும் NATO, ஐரோப்பிய ஒன்றியம், உக்ரைன் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் கூட்டத்தில் கலந்துகொண்டனர். 2024ஆம் ஆண்டிற்கான G7 தலைமைப்பதவியை இத்தாலி கொண்டுள்ளது. G7 என்பது இத்தாலி, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், கனடா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட மேம்பட்ட தொழில்மயமான நாடுகளின் குழுமமாகும்.

**32. அண்மையில், இந்தியாவின் முதல் நிலக்கரி காட்சியகம் திறக்கப்பட்ட இடம் எது?**

**அ. தேசிய அறிவியல் மையம், புது தில்லி ☑**

ஆ. நேரு அறிவியல் மையம், மகாராஷ்டிரா

இ. பிராந்திய அறிவியல் மையம், போபால்

ஈ. தார்வாடு அறிவியல் மையம், கர்நாடகா



★ புது தில்லியில் அமைந்துள்ள தேசிய அறிவியல் மையத்தில் இந்தியாவின் முதல் நிலக்கரி காட்சியகத்தை மத்திய அமைச்சர்கள் கஜேந்திர சிங் செகாவத் மற்றும் சதீஷ் சந்திர துபே ஆகியோர் திறந்து வைத்தனர். "Black Diamond – Unveiling the Depths" எனப் பெயரிடப்பட்டுள்ள இக்காட்சியகம், நிலக்கரி மற்றும் பிற கனிமங்களின் கண்டுபிடிப்பு, பிரித்தெடுக்கும் செயல்முறை மற்றும் சுரங்க நுட்பங்களை வெளிப்படுத்துகிறது. நிலக்கரி மற்றும் கனிம சுரங்கத்தின் மெய்யுலக அனுபவத்தை இக்காட்சியகம் வழங்குகிறது. இக்காட்சியகம் தினமும் காலை 9:30 மணி முதல் மாலை 6.00 மணி வரை திறந்திருக்கும்.

**33. ஜீலாட் வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. மணிப்பூர் ☑**

ஆ. அஸ்ஸாம்

இ. ஒடிசா

ஈ. பீகார்



★ மணிப்பூரின் தமெங்லாங் மாவட்டத்தில் உள்ள ஜீலாட் வனவிலங்கு சரணாலயத்தில் எண்ணெய் ஆய்வு செய்வதை ரோங்மேய் நாகா கவுன்சில் மணிப்பூர் (RNCM) எதிர்க்கிறது. 1982இல் நிறுவப்பட்ட இந்தச் சரணாலயம், இந்திய–மியான்மர் எல்லைக்கு அருகில் அமைந்துள்ளது. 21 சகிமீ பரப்பளவைக் கொண்டுள்ள இது, பராக் ஆற்றுப்படுகையில் மலைப்பாங்கான நிலப்பரப்பில் அமைந்துள்ளது. ஜீலாட் வனவிலங்கு சரணாலயமானது ஏழு ஏரிகளுக்கு தாயகமாக உள்ளது; அதில் ஜீலாட் ஏரி மிகப்பெரியதும் மிகவும் பிரபலமானதுமாகும்.

**34. நசீம்–அல்–பஹ்ர் என்ற பயிற்சியானது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடத்தப்படுகிறது?**

அ. குவைத்

ஆ. இஸ்ரேல்

**இ. ஓமன் ☑**

ஈ. ஈரான்



★ INS திரிகந்த் மற்றும் டார்னியர் கடல்சார் ரோந்து விமானங்கள் சமீபத்தில் கோவாவில் நடைபெற்ற இந்தோ–ஓமன் கடற்படைப் பயிற்சியான நசீம்–அல்–பஹ்ரில் பங்கேற்றன. 1993இல் தொடங்கப்பட்ட இந்தப் பயிற்சி, இந்தியாவுக்கும் ஓமனுக்கும் இடையிலான வலுவான உத்திசார் உறவுகளை பிரதிபலிக்கிறது. இந்தியாவுடன் இருதரப்பு கடற்படை பயிற்சிகளை நடத்தும் முதல் GCC நாடு ஓமன் ஆகும். இரு கட்டங்களை உள்ளடக்கியது இப்பயிற்சி: தொழில்முறை தொடர்புகள் மற்றும் விளையாட்டுகளுடன் கூடிய துறைமுகஞ்சார் கட்டம்; அதைத்தொடர்ந்து கடல்சார் கட்டம். கடல்சார் கட்டத்தில், இருநாட்டு கடற்படைகளும் துப்பாக்கிச்சூடு, வான் அச்சுறுத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகளை போன்றவற்றை மேற்கொண்டன.


### 35. அண்மையில், ஐரோப்பிய ஸ்கை ஷீல்ட் முன்னெடுப்பில் (ESSI) இணைந்த நாடு எது?

அ. சுவிட்சர்லாந்து ☑

ஆ. உக்ரைன்

இ. இந்தியா

ஈ. ஆஸ்திரேலியா



★ ஐரோப்பிய ஸ்கை ஷீல்ட் முன்னெடுப்பில் (ESSI) சுவிட்சர்லாந்து இணைந்துள்ளது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பிற்குப்பிறகு 2022ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ESSI, ஜெர்மனியால் வழிநடத்தப்படுகிறது. வான்வழித் தாக்குதல்களுக்கு எதிராக ஐரோப்பாவின் பாதுகாப்பை வலுப்படுத்துவதையும், NATOஇன் ஒருங்கிணைந்த வான் மற்றும் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை மேம்படுத்துவதையும் இந்த முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

★ ESSIஇல் UK உட்பட 21 உறுப்புநாடுகள் இடம்பெற்றுள்ளன. அதன் முக்கிய அங்கமாக ஏரோ–3 ஏவுகணை பாதுகாப்பு அமைப்புள்ளது. இது நீண்டதூரம் செல்லும் எறிகணைகளை இடைமறிப்பதற்கென வடிவமைக்கப்பட்ட இஸ்ரேலிய – அமெரிக்க தொழில்நுட்பமாகும்.

### 36. ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும் 14ஆவது ஏரி மாநாட்டின் கருப்பொருள் என்ன?

அ. Wetlands for Human Wellbeing ☑

ஆ. Biodiversity Management

இ. Water Conservation Strategies

ஈ. Ecosystem Restoration




★ 2024 அக்.17 முதல் 20 வரை கர்நாடக மாநிலத்தின் மூட்பித்ரியில் 14ஆவது ஏரி மாநாடு நடைபெற்றது. "Lake 2024 – wetlands for human wellbeing" என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986 இன் பிரிவு 5 (1)இன்கீழ், சிறந்த சுற்றுச்சூழல் அமைப்பு நலத்திற்காக, சூழல் உணர்திறன்கொண்ட பஞ்சாயத்துகளை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்று அது கோரியது. பல்லுயிர் சட்டம், 2002இலிருந்து பெரும்பாலான கிராமப் பஞ்சாயத்து பல்லுயிர் மேலாண்மை குழுக்களின் செயலற்ற தன்மையை மாநாடு எடுத்துக்காட்டியது. சுற்றுச்சூழல் நலம் மற்றும் வளமேலாண்மையை மேம்படுத்த மாநில பல்லுயிர் வாரியங்களின் ஒரு திட்டத்தின்மூலம் மாவட்டப் பஞ்சாயத்துகள் இந்தக் குழுக்களை மேற்பார்வையிட பரிந்துரைக்கப்பட்டது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'முத்ரா' கடன் வரம்பு ₹20 இலட்சமாக உயர்வு: அறிவிக்கை வெளியிட்டது நிதியமைச்சகம்**

நாட்டில் வேளாண் சாராத சிறுதொழில்களை ஊக்குவிக்கும் பிரதமரின் 'முத்ரா' திட்டத்தின்கீழ், கடன் வரம்பு ₹10 இலட்சத்தில் இருந்து ₹20 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. முத்ரா திட்டத்தில் 'தருண்' பிரிவின்கீழ் பெற்ற முந்தைய கடன்களை முறையாகச் செலுத்திய தொழில்முனைவோர், ₹20 இலட்சம் வரை கடன்பெற முடியும். இந்நிலையில், ₹20 இலட்சம் வரை கடன்பெற முத்ரா திட்டத்தில் 'தருண்+' என்ற புதிய பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. முந்தைய கடன்களை முறையாகச் செலுத்தியவர்கள் இப்பிரிவில் கடன்பெறலாம்.

முத்ரா திட்டம் கடந்த 2015ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் சிஷு (₹50,000 வரை), கிஷோர் (₹50,000 முதல் ₹5 லட்சம் வரை), தருண் (₹10 லட்சம்) ஆகிய பிரிவுகளில் கடன்கள் அளிக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

---

## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8


**1. தோல் நிறமியிழத்தல் (Vitiligo) என்பது என்ன வகையான நோயாகும்?**

அ. தோல் கோளாறு ☑

ஆ. இருதய நோய்

இ. அரிதான நோய்

ஈ. மரபணுக் கோளாறு



★ ஒரு புதிய கன்னடத் திரைப்படம், இந்தியாவில் பொதுவாக தவறாகப் புரிந்துகொள்ளப்படும் ஒரு நாள்பட்ட தோல் நோயான தோல் நிறமியிழத்தலைச் (Vitiligo) சுற்றியுள்ள களங்கத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தோல் நிறமியை உருவாக்கும் மெலனோசைட்டுகள் அழிக்கப்படும்போது தோல் நிறமியிழத்தல் நோய் ஏற்படுகிறது; இது தோல், முடி மற்றும் வாயில் நிறமிகுந்த திட்டுகளுக்கு வழிவகுக்கிறது. இக்கோளாறுக்கான சரியான காரணம் தெளிவாக தெரியவில்லை; ஆனால் தன்எதிர்ப்புத் துலக்கம், மரபணுக்காரணிகள் மற்றும் அதிர்ச்சி அல்லது சூரிய ஒளிபோன்ற சுற்றுச்சூழல் தூண்டுதல்கள் இதற்குக் காரணமாக இருக்கலாம். எவ்வயதிலும் வரும் இது, பொதுவாக 30 வயதிற்குக் குறைவான மக்களிடையே காணப்படுகிறது. உலக மக்கள்தொகையில் 0.5% முதல் 2% (100 மில்லியன்) வரை இக்கோளாறால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**2. ஒவ்வோர் ஆண்டும் காவலர் நினைவு நாளாக அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. அக்டோபர் 20

**ஆ. அக்டோபர் 21 ☑**

இ. அக்டோபர் 22

ஈ. அக்டோபர் 23




★ லடாக்கின் ஹாட் ஸ்பிரிங்ஸ் என்ற இடத்தில் 1959ஆம் ஆண்டு சீனப்படைகள் நடத்திய தாக்குதலில் வீரமரணம் அடைந்த காவலர்களை கௌரவிக்கும் வகையில் அக்டோபர்.21ஆம் தேதி அன்று காவலர் நினைவுநாளை இந்தியா அனுசரிக்கிறது. நாட்டைக்காக்கும் காவலர்களின் துணிச்சலையும் தியாகத்தையும் இந்நாள் அங்கீகரிக்கிறது. 1959 அக்டோபர்.21 அன்று, உளவுப்பணியில் ஈடுபட்டிருந்த இந்தியக்காவலர்கள் சீனப் படைகளால் தாக்கப்பட்டனர்; இதன் விளைவாக பலர் வீரமரணம் எய்தினர். 1960 ஜனவரியில் காவல்துறை தலைமை இயக்குநர்களின் வருடாந்திர மாநாட்டின்போது இந்த நாள் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

**3. இந்தியா–சிங்கப்பூர் இடையேயான 12ஆவது கூட்டு இராணுவப்பயிற்சி நடத்தப்பட்ட இடம் எது?**

அ. விமானப்படை நிலையம் பிதார், கர்நாடகா

**ஆ. விமானப்படை நிலையம் கலைகுந்தா, மேற்கு வங்காளம் ☑**

இ. விமானப்படை நிலையம் பேகம்பேட், தெலுங்கானா

ஈ. விமானப்படை நிலையம் ஜோத்பூர், இராஜஸ்தான்




★ இந்திய வான்படை மற்றும் சிங்கப்பூர் குடியரசு வான்படை ஆகியவை மேற்கு வங்கத்தின் கலைகுந்தா வான்படை நிலையத்தில் கூட்டு இராணுவப்பயிற்சியின் 12ஆவது பதிப்பைத் தொடங்கின. பயிற்சியின் இருதரப்பு கட்டம் நவம்பர்.13–21 வரை நடத்தப்படும்; இது இருபடைகளுக்கும் இடையே தீவிர ஒத்துழைப்பை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; ஏனெனில் அவை மேம்பட்ட வான் போர் உருவகப்படுத்துதல்கள், கூட்டுப் பணி திட்டமிடல் மற்றும் விளக்க அமர்வுகளில் ஈடுபடுகின்றன.

★ எஃப்–16, எஃப்–15 ஸ்குவாட்ரன்கள், ஜி–550 வான்வழி முன்கூட்டிய எச்சரிக்கை மற்றும் கட்டுப்பாடு மற்றும் சி–130 விமானங்களைச்சேர்ந்த விமானப்பணியாளர்கள் மற்றும் ஆதரவு வீரர்களை உள்ளடக்கிய சிங்கப்பூர் வான்படை இன்று வரை அதன் மிகப்பெரிய குழுவுடன் பங்கேற்கிறது. ரஃபேல், மிராஜ் 2000 ஐடிஐ, சுகோய் –30 எம்கேஐ, தேஜஸ், மிக் –29 மற்றும் ஜாகுவார் விமானங்களுடன் இந்திய வான்படை பங்கேற்கிறது.

**4. அண்மையில், 15ஆவது ITU கலையுருக்கருவி கல்வி மாநாடு நடைபெற்ற இடம் எது?**

**அ. புது தில்லி ☑**

ஆ. குருகிராம்

இ. இந்தூர்

ஈ. ஜெய்ப்பூர்




★ 15ஆவது ITU கலையுருக்கருவி கல்வி மாநாடு புது தில்லியில் அக்.21 அன்று தொடங்கியது. ITU கலையுருக்கருவி – 2024 என்பது சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) நடத்திய ஒரு சர்வதேச மாநாடு ஆகும். கண்டுபிடிப்பு மற்றும் கூட்டுறவை மேம்படுத்துவதற்காக தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பங்களில் (ICT) கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்துறையினரிடையே பேச்சுவார்த்தையை இது வளர்க்கிறது. இந்த நிகழ்வானது உலகளாவிய ஆராய்ச்சியாளர்கள், தொழில்துறை தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் ICT தீர்வுகளை ஆராயவும், வளர்ந்துவரும் போக்குகளைப்பற்றி விவாதிக்கவும் கூடியது. உலகளாவிய தகவல் தொடர்பு வலையமைப்புகள் மற்றும் தரப்படுத்தலை பாதிக்கும் எதிர்கால தொழில்நுட்பங்களில் இது கவனம் செலுத்துகிறது. "Innovation and Digital Transformation for a Sustainable World" என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.

**5. அண்மையில், அஸ்ஸாமின் எந்தத் தேசியப்பூங்காவில், '*Crepidium assamicum*' என்ற புதிய மந்தாரை இனம் கண்டுபிடிக்கப்பட்டது?**

அ. ஓராங் தேசியப்பூங்கா

ஆ. மனாஸ் தேசியப்பூங்கா

**இ. திப்ரு-சைகோவா தேசியப்பூங்கா ☑**

ஈ. மனாஸ் தேசியப்பூங்கா



★ அஸ்ஸாம் மாநிலத்தின் திப்ரு–சைகோவா தேசியப்பூங்காவில், '*Crepidium assamicum*' என்ற புதிய மந்தாரை இனம் கண்டுபிடிக்கப்பட்டது. "அஸ்ஸாமின் மந்தாரை மனிதன்" என்று அழைக்கப்படும் Dr ஜிந்து சர்மா மற்றும் கியன்ஜீத் கோகோய் ஆகியோரால் இந்தக் கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்டது. '*Crepidium assamicum*' என்பது '*Crepidium*' இனத்தைச் சேர்ந்தது. இக்கண்டுபிடிப்பு இந்தியாவில் அதன் மொத்த இனங்களின் எண்ணிக்கையை 19ஆகவும், உலகளவில் மொத்தம் 281ஆகவும் அதிகரித்துள்ளது. உலகளவில், சுமார் 27,000 மந்தாரை இனங்கள் உள்ளன; அவற்றில் இந்தியாவில் சுமார் 1,265உம் வடகிழக்கிந்தியாவில் மட்டும் 800உம் உள்ளன. அஸ்ஸாமில் மட்டும் சுமார் 414 இனங்கள் உள்ளன.

**6. 2024 – பொருளாதார சுதந்திர அறிக்கையில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**

அ. 34ஆவது

ஆ. 65ஆவது

இ. 74ஆவது

**ஈ. 84ஆவது ☑**




★ ஃப்ரேசர் நிறுவனமானது 2024 – உலக பொருளாதார சுதந்திர அறிக்கையை வெளியிட்டது. பொருளாதார தேர்வு அடிப்படையில் 165 நாடுகளை இவ்வறிக்கை தரவரிசைப்படுத்தியுள்ளது. ஹாங்காங், சிங்கப்பூர், சுவிச்சர்லாந்து, நியூசிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகியவை பொருளாதார ரீதியாக சுதந்திரமான முதல் ஐந்து நாடுகளாகும். இந்த அறிக்கையில் இந்தியா 84ஆவது இடத்தில் உள்ளது. அரசாங்க அளவு, சொத்துரிமைகள், பணவியல் கொள்கை மற்றும் வர்த்தக சுதந்திரம் உட்பட 42 மாறிகளை இந்த அறிக்கை பயன்படுத்துகிறது.

**7. அண்மையில், நமோ பாரத் திவாஸ் கொண்டாடப்பட்ட இடம் எது?**



அ. சென்னை

**ஆ. புது தில்லி ☑**

இ. கோயம்புத்தூர்

ஈ. ஹைதராபாத்

★ நமோ பாரத் ரெயில்களின் முதலாமாண்டு நினைவுநாள் நமோ பாரத் திவாஸ் என தில்லியில் கொண்டாடப்பட்டது. நமோ பாரத் ரெயில்கள் இந்தியாவின் முதல் பிராந்திய விரைவுப்போக்குவரத்து அமைப்பாகும் (RRTS). சாகிபாபாத் மற்றும் துகாய் டிப்போ (17 கிலோமீட்டர்) இடையேயான முதல் பகுதி 2023 அக்டோபர்.20 அன்று பிரதமர் நரேந்திர மோதியால் தொடங்கி வைக்கப்பட்டது. துகாய் முதல் மோதிநகர் வடக்கு (2024 மார்ச்) மற்றும் மீரட் தெற்கு (ஆகஸ்ட் 2024) உட்பட மேலும் இருபிரிவுகள் செயல்பாட்டுக்கு வந்தன. தற்போதைய 42 கிலோமீட்டர் வழித்தடம் ஒன்பது நிலையங்களை உள்ளடக்கியுள்ளது. RRTS என்பது அதிவேக, திறமையான புறநகர் இணைப்பை வழங்குவதோடு, நிலையான நகர்ப்புற போக்குவரத்து தீர்வுகளை ஊக்குவிக்கிறது.

**8. 2024 – வில்வித்தை உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற இந்தியர் யார்?**



**அ. தீபிகா குமாரி ☑**

ஆ. பாம்பேலா தேவி

இ. பர்னீத் கெளர்

ஈ. முஸ்கன் கிரார்

★ நான்கு முறை ஒலிம்பிக்கில் பங்கேற்ற தீபிகா குமாரி, மெக்சிகோவின் டிலாக்ஸ்காலாவில் நடைபெற்ற 2024ஆம் ஆண்டு வில்வித்தை உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் பெண்களுக்கான ரீகர்வ் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றார். இறுதிப்போட்டியில் சீன வில்வித்தை வீரர் லி ஜியாமானிடம் 6–0 என்ற கணக்கில் தோல்வியடைந்தார். 2024 – பாரீஸ் ஒலிம்பிக்கில் வெள்ளி வென்ற சீன வில்வித்தை அணியில் லீ ஜியாமன் இடம்பெற்றிருந்தார். 18ஆம் வில்வித்தை உலகக்கோப்பை இறுதிப்போட்டி உலக வில்வித்தை அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டு 2024 அக்.19–20 வரை மெக்சிகோவில் உள்ள டிலாக்ஸ்கலாவில் நடைபெற்றது.

**9. அண்மையில், உயிரொளி உமிழ்வு அலைகளைக் கண்ட இந்திய நகரம் எது?**



**அ. சென்னை ☑**

ஆ. கன்னியாகுமரி

இ. திருவனந்தபுரம்

ஈ. கோழிக்கோடு

★ இருகசை உயிரிகள்போன்ற கடல்வாழ் உயிரினங்களால் ஏற்படும் இயற்கையான நிகழ்வான உயிரொளி உமிழ்வு (bioluminescent) அலைகளை சென்னை அண்மையில் கண்டது. இந்த நுண்ணிய அலைவாழிகள் இரவில் ஒளியை வெளியிடுகின்றன; அது கடலின் மேற்பரப்பில் தெரியும். ஜெல்லிமீன்கள், மீன்கள் மற்றும் பாசிகள்போன்ற பல கடல் வாழ் விலங்குகளிடையே பொதுவாக காணப்படுகிற இந்த உயிரொளி உமிழ்வு நிகழ்வு, வேட்டையாடுபவர்களைத் தவிர்ப்பதற்கு, இரையை ஈர்ப்பதற்கு அல்லது இனச்சேர்க்கைக்கு பயன்படுத்தப்படுகிறது. லூசிஃபெரேஸ் நொதி உயிர்வளி முன்னிலையில் லூசிஃபெரினுடன் வினைபுரியும்போது இது நிகழ்கிறது. இந்த நிகழ்வு மிகவெப்பமான வானிலை மற்றும் குறைவான வெளிச்சத்தில் அடிக்கடி தெரியும்.

**10. அண்மையில், மலேரியா இல்லாத நாடாக உலக சுகாதார அமைப்பால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட நாடு எது?**

அ. கியூபா

ஆ. இந்தியா

இ. கென்யா

**ஈ. எகிப்து ☑**



★ உலக சுகாதார அமைப்பு (WHO) மூலம் எகிப்து 'மலேரியா இல்லாத நாடு' என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. பிளாஸ்மோடியம் ஒட்டுண்ணிகளால் ஏற்படுகிற மலேரியா, பாதிக்கப்பட்ட பெண் அனோபிலிஸ் கொசுக்கள்மூலம் பரவுகிறது. முதன்மையாக வெப்பமண்டலப் பகுதிகளில் காணப்படுகிற இது, உயிருக்கு ஆபத்தானது என்றாலும் தொற்றக்கூடியது அன்று. ஐந்து ஒட்டுண்ணி இனங்கள் மலேரியாவை ஏற்படுத்துகின்றன; அதில் *Plasmodium falciparum* மற்றும் *Plasmodium vivax* ஆகியவை மிகவும் ஆபத்தானவை. காய்ச்சல், தலைவலி மற்றும் குளிர்போன்ற அறிகுறிகள் கொசுக்கடித்த 10–15 நாட்களுக்குப்பிறகு தோன்றும். மலேரியா நோய் பரவும் பகுதிகளில் சிலருக்கு எந்த அறிகுறிகளும் இல்லாமலும் இத்தொற்று இருக்கலாம். மலேரியாவைத் தடுப்பதற்கும் பரவுவதைக் குறைப்பதற்கும் ஏந்திகள் கட்டுப்பாடு முக்கிய முறையாக உள்ளது.

**11. ஒவ்வோர் ஆண்டும் உலக அயோடின் குறைபாடு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. அக்டோபர் 21 ☑**

ஆ. அக்டோபர் 22

இ. அக்டோபர் 23

ஈ. அக்டோபர் 24



★ ஆரோக்கியத்திற்கு அயோடினின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அக்.21ஆம் தேதி உலக அயோடின் குறைபாடு நாள் அனுசரிக்கப்படுகிறது. தைராய்டு ஹார்மோன்களை (T3 மற்றும் T4) உற்பத்தி செய்வதற்கு அயோடின் அவசியம், இது வளர்சிதை மாற்றத்தை ஒழுங்குபடுத்துகிறது மற்றும் கரு மற்றும் குழந்தை வளர்ச்சிக்கு உதவுகிறது. இது உணவுகள் மற்றும் அயோடிய உப்பு ஆகியவற்றில் காணப்படுகிறது; இது முக்கியமாக வயிற்றில் அயோடைடாக உறிஞ்சப்பட்டு தைராய்டால் பயன்படுத்தப்படுகிறது.

**12. அண்மையில், உடான் திட்டத்தின்கீழ், உத்தரபிரதேசத்தின் எந்த மாவட்டத்தில் புதிய விமான நிலையத்தை இந்தியப்பிரதமர் திறந்து வைத்தார்?**

அ. ரேபரேலி

**ஆ. சஹரன்பூர் ☑**

இ. மிர்சாபூர்

ஈ. மீரட்

★ பிராந்திய இணைப்புத் திட்டத்தின்கீழ் (RCS) மூன்று விமான நிலையங்களை பிரதமர் நரேந்திர மோதி திறந்து வைத்தார் – வாரணாசியில் இருந்து உடான் (உதே தேஷ் கா ஆம் நாக்ரிக்): ரேவா (எம்பி), அம்பிகாபூர் (சத்தீஸ்கர்), மற்றும் சஹாரன்பூர் (உபி). RCS–UDAN திட்டத்தின் கீழ் இந்த விமான நிலையங்களில் இருந்து விமானங்கள் விரைவில் இயக்கப்படும். RCS–UDAN ஆனது இந்தியாவின் தேசிய சிவில் விமானப் போக்குவரத்துக் கொள்கையின் கீழ் 2016 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தொலைதூர மற்றும் குறைவான பிராந்தியங்களில் இணைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. முதல் RCS–UDAN விமானம், சிம்லாவிலிருந்து டெல்லிக்கு 2017 இல் தொடங்கியது. இந்தத் திட்டம் 144 லட்சத்திற்கும் அதிகமான பயணிகளுக்கு பயணத்தை எளிதாக்கியுள்ளது, இந்தியா முழுவதும் விமானப் பயண அணுகலை அதிகரிக்கிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அரசமைப்புச்சட்ட 75 ஆண்டுகள் நிறைவு: நவ.26இல் நாடாளுமன்ற சிறப்பு அமர்வு.**

அரசியல் நிர்ணய சபையால் அரசமைப்புச்சட்டம் கடந்த 1949ஆம் ஆண்டு நவ.26ஆம் தேதி ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர், 1950 ஜன.26ஆம் தேதி நடைமுறைக்கு வந்தது.

நவ.26ஆம் தேதி தேசிய சட்ட நாள் கொண்டாடப்பட்டு வந்தது. 2015ஆம் ஆண்டு B R அம்பேத்கரின் 125ஆவது பிறந்தநாளில் (ஏப்.14) அரசமைப்புச்சட்ட விழுமியங்களைப் பின்பற்ற மக்களை ஊக்குவிக்க நவ.26ஆம் தேதியை அரசமைப்புச் சட்ட விழிப்புணர்வு நாளாக நடுவண் அரசு அறிவித்தது.

---

**2. குறைவான காற்று மாசு: தமிழ்நாட்டின் 3 நகரங்கள் சாதனை!**

ஒவ்வொரு நாளும் இந்தியாவில் அதிகம் / குறைவான காற்று மாசுடைய நகரங்களின் பட்டியலை மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டு வருகிறது. அண்மையில் வெளியிடப்பட்ட காற்று தரக் குறியீட்டில் (AQI) பட்டியலில் சுத்தமான காற்றுடைய பகுதியாக திருச்சியின் பல்கலைப்பேரூர் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

அதேபோல் காற்று மாசு அதிகமுள்ள நகரங்களின் பட்டியலில் தலைநகரம் தில்லி முதலிடத்தில் உள்ளது. தேசிய தலைநகரத்தின் அண்டை மாநிலங்களான ஹரியானா, பஞ்சாப், உத்தர பிரதேசத்தில் அறுவடைக்குப்பின் மீதமாகும் பயிர்க்கழிவுகளை எரிப்பதால், அந்தப்புகையானது குளிர்கால புகையுடன் சேர்ந்து தில்லியை பனிப்புகை மூட்டமாக சூழ்ந்துகொள்கிறது. இப்படிப்பட்ட அதிகப்படியான வளிமாசின் பாதிப்பில் தலைநகர் தில்லி முதலிடத்தில் இருக்கிறது.

**பிரிவுகள்:** AQIஇல் பல்வேறு பிரிவுகளின்கீழ் காற்று மாசுபாடு அளவீடு செய்யப்படுகிறது.

0–50: சிறப்பு.

51–100: திருப்திகரம்.

101–200: மிதமானது.

201–300: மோசம்.

301–400: மிகமோசம்.

401–500: கடுமையான பாதிப்பு.

**காற்று மாசு குறைவான தமிழ்நாட்டு நகரங்கள்.**

முதலிடம் – பல்கலைப்பேரூர், திருச்சி.

நான்காமிடம் – இராமநாதபுரம்.

ஏழாமிடம் – மதுரை.

---

**3. 70 வயதுக்கு மேற்பட்டோருக்கு இலவச மருத்துவக் காப்பீடு!**

மத்திய அரசின், 'ஆயுஷ்மான் பாரத்' இலவச மருத்துவக் காப்பீட்டின்கீழ், 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் அனைவருக்கும் காப்பீடு வழங்கும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோதி அக்.29 அன்று தொடங்கவுள்ளார். ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் ₹5 லட்சம் வரை மருத்துவக் காப்பீடு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் ஏழை, எளிய மக்களுக்கு இலவசமாக மருத்துவக்காப்பீடு வழங்கப்படுகிறது.

கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் முறையாக செலுத்தப்படுவதை பதிவுசெய்யும் யு–வின் வலைத் தளத்தையும் பிரதமர் நரேந்திர மோதி தொடங்கவுள்ளார். கரோனா காலத்தில் தடுப்பூசி செலுத்தப்பட்டதை பதிவு செய்ய தொடங்கப்பட்ட 'CO–WIN' இணையதளத்தை முன்மாதிரியாகக்கொண்டு இத்தடுப்பூசியைப் பதிவுசெய்யும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. 18ஆவது வெளிநாடுவாழ் இந்தியர் நாள் கொண்டாட்டங்கள் நடத்தப்படவுள்ள நகரம் எது?**

அ. மதுரை

**ஆ. புவனேசுவரம் ☑**

இ. கொல்கத்தா

ஈ. நவகாளி

★ ஒடிஸா 2024 ஜன.08–10 வரை புவனேசுவரத்தில் 18ஆவது வெளிநாடுவாழ் இந்தியர் நாள் கொண்டாட்டங்களை நடத்தவுள்ளது. வெளியுறவு அமைச்சகத்தின் முன்மொழிவுக்கு முதல்வர் மோகன் சரண் மாஜி ஒப்புதல் அளித்தார். குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோதி மற்றும் பிற முக்கியஸ்தர்கள் கலந்துகொள்ளும் இந்த நிகழ்ச்சி புவனேசுவரத்தில் உள்ள ஜனதா மைதானத்தில் நடைபெறும். வெளிநாடுவாழ் இந்தியர் நாள் 1915 ஜன.09 அன்று தென்னாப்பிரிக்காவிலிருந்து மகாத்மா காந்தி இந்தியா திரும்பியதைக் கொண்டாடுகிறது; மேலும் இந்திய புலம்பெயர்ந்தோரின் பங்களிப்புகளை இது அங்கீகரிக்கிறது. சென்ற முறை மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

**2. அண்மையில், ககாடு என்ற பயிற்சியை நடத்திய நாடு எது?**

**அ. ஆஸ்திரேலியா ☑**



ஆ. அமெரிக்கா

இ. இந்தியா

ஈ. ஜப்பான்

★ குவாட் நாடுகளான இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகியவை நீர்மூழ்கிக்கப்பல் எதிர்ப்புப் போரில் கவனம் செலுத்தும் கடற்படைப்பயிற்சிகளை நடத்தின. அக்.08–18 வரை விசாகப்பட்டினம் கடற்கரையில் 'மலபார் பயிற்சி' நடந்தது. இது சிக்கலான செயல்பாட்டுக் காட்சிகளுடன் இன்னும் விரிவான பதிப்பாக நடந்தேறியது. முன்னதாக ஆஸ்திரேலியா நடத்திய, 'ககாடு பயிற்சி'யில் 30 நாடுகளைச்சேர்ந்த 3,000 பேர் கலந்துகொண்டனர். இந்தப் பயிற்சிக்காக இந்தியக்கடற்படை P–8I கடல்சார் ரோந்து விமானத்தை வழங்கியது.

**3. SPADEX திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. பெரிய விண்கலத்தை உருவாக்குவது

**ஆ. இரண்டு விண்கலங்களை இணைக்கும் உள்நாட்டு தொழில்நுட்பத்தை உருவாக்குதல் ☑**

இ. செவ்வாய் கோளுக்கு மனிதர்களை அனுப்புவது

ஈ. ஆழ்கடலை ஆராய்வது

★ விண்வெளி பொருத்து சோதனைகளில் கவனஞ்செலுத்தும் SPADEX திட்டத்திற்காக இந்திய விண்வெளி நிறுவனம் இரண்டு 400 கிலோ செயற்கைக்கோள்களை வாங்கியுள்ளது. இந்தச் செயற்கைக்கோள்கள் ஒரே ஏவுகலம்மூலம் சற்று வித்தியாசமான சுற்றுப்பாதையில் செலுத்தப்படும். தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது மற்றும் 'சேசர்' மற்றும் 'டார்கெட்' எனப் பெயரிடப்பட்ட இரண்டு விண்கலங்களுக்கிடையில் இணைப்பை நிரூபிப்பது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். சந்திரயான்–4 மற்றும் முன்மொழியப்பட்ட பாரதீய அந்தரிக்ஷா விண்வெளி நிலையம்போன்ற எதிர்கால பயணங்களுக்கு இந்தச் சோதனை மிக முக்கியமானதாகும்.

**4. 27ஆவது அகில இந்திய வன விளையாட்டுப் போட்டிகள் – 2024இல் ஒட்டுமொத்த சாம்பியனாக உருவெடுத்த மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. சத்தீஸ்கர் ☑**

இ. கேரளா

ஈ. அருணாச்சல பிரதேசம்

★ சத்தீஸ்கர் மாநிலம் ராய்பூரில் 27ஆவது அகில இந்திய வன விளையாட்டுப் போட்டிகள் நிறைவுபெற்றன. சத்தீஸ்கர் 174 பதக்கங்களை வென்று ஒட்டுமொத்த சாம்பியனானது. கேரளா 103 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தையும், மத்திய பிரதேசம் 88 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்தையும் பிடித்தன. பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து சுமார் 3,000 விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டனர். ஐந்து நாட்கள் நடைபெற்ற இந்த நிகழ்வில் 26 பிரிவுகளில் சுமார் 300 போட்டிகள் நடத்தப்பட்டன.

**5. அண்மையில், 16ஆவது BRICS உச்சிமாநாடு – 2024 நடைபெற்ற இடம் எது?**

அ. பெய்ஜிங், சீனா

ஆ. சால்வடார், பிரேசில்


**இ. கசான், ரஷ்யா ☑**

ஈ. புது தில்லி, இந்தியா

★ 16ஆவது BRICS உச்சிமாநாடு ரஷ்யாவின் கசானில் 2024 அக்டோபர் 22 முதல் 24 வரை நடந்தது. BRICS ஆனது முதலில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்காவை உள்ளடக்கியிருந்தது. 2024இல், BRICS நான்கு புதிய உறுப்பினர்களை ஏற்றுக்கொண்டது: எகிப்து, எத்தியோப்பியா, ஈரான் மற்றும் UAE. BRICS இப்போது உலக மக்கள்தொகையில் கிட்டத்தட்ட பாதியையும் உலகப்பொருளாதாரத்தில் கால்பகுதியையும் கொண்டுள்ளது. மேற்கத்திய நாடுகளால் ஆதிக்கம் செலுத்தப்படும் உலக வங்கி மற்றும் IMF போன்ற நிறுவனங்களுக்கு ஒரு சமநிலையாக இந்தக் குழு செயல்படுகிறது. "BRIC" என்ற சொல் முதன்முதலில் 2001ஆம் ஆண்டு கோல்ட்மேன் சாக்ஸ் தாளில் பயன்படுத்தப்பட்டது.

**6. '*Caenorhabditis elegans*' என்றால் என்ன?**

**அ. நூற்புழு ☑**



ஆ. சிலந்தி

இ. ஆக்கிரமிப்புக்களை

ஈ. மந்தாரை

★ உடலியல் / மருத்துவத்துக்கான நோபல் பரிசை பெறும்போது கேரி ருவ்குன், சிறிய நூற்புழுவான '*Caenorhabditis elegans*' குறித்து தெரிவித்தார். ஒரு சிறிய, எளிய உயிரினமான '*Caenorhabditis elegans*' என்பது அதன் துல்லியமான அமைப்பு மற்றும் விரைவான வளர்ச்சிக்காக (3–5 நாட்கள்) ஆராய்ச்சியில் பயன்படுத்தப்படுகிறது. அதன் முழு மரபணுவும் வரிசைப்படுத்தப்பட்ட மற்றும் நரம்பியல் தொகுப்பு வரைபடமாக்கப்பட்ட முதல் பலசெல் உயிரினம் இது ஆகும். இது இரண்டு பாலினங்களைக் கொண்டுள்ளது: இருபாலினம் மற்றும் ஆண். ஏராளமாக உள்ள நூற்புழு இனங்கள், ஒட்டுண்ணிகளாகவும் மண் மற்றும் கடல் சுற்றுச்சூழல் அமைப்புகள் போன்ற பல்வேறு சூழல்களிலும் சுதந்திரமாக வாழ்கின்றன.

**7. அண்மையில், இந்தியாவின் எப்பகுதியில் 'Tenkana' என்ற புதுவகை குதிக்கும் சிலந்திகள் கண்டுபிடிக்கப்பட்டது?**

அ. லடாக்



ஆ. வடகிழக்கிந்தியா

**இ. தென்னிந்தியா ☑**

ஈ. மேற்கூறியவை எதுவுமில்லை

★ தென்னிந்தியா முழுவதும் குதிக்கும் சிலந்திகளின் புதிய இனமான, '*Tenkana*' கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வினத்தில் இரண்டு அறியப்பட்ட இனமும் ஒரு புதிய இனமுமான, '*Tenkana jayamangali*', கர்நாடகாவில் கண்டறியப்பட்டதாகும்.

★ '*Tenkana*' என்ற பெயர் கன்னடத்திலிருந்து பெறப்பட்டதாகும்; அதன் பொருள் "தெற்கு" என்பதாகும். தென்னிந்தியா மற்றும் வட இலங்கை இருப்பை இது பிரதிபலிக்கிறது. வறண்ட, நிலத்தடி வாழ்விடங்களில் வாழ்கின்ற இந்தச் சிலந்திகள் தமிழ்நாடு, கர்நாடகா, தெலுங்கானா மற்றும் ஆந்திர பிரதேசத்தில் காணப்படுகின்றன.

**8. அகில இந்திய குடிமக்கள் பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படை மாநாடு நடைபெற்ற இடம் எது?**

**அ. காந்திநகர் ☑**

ஆ. ஜெய்ப்பூர்

இ. போபால்

ஈ. பாட்னா




★ காந்திநகரில் அமைந்துள்ள மகாத்மா மந்திரில் 14ஆவது அகில இந்திய குடிமக்கள் பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படையினர் மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைத்தார். 19 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த மாநாடு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பல்வேறு மாநிலங்களில் இருந்து 60க்கும் மேற்பட்ட மூத்த அதிகாரிகள் மற்றும் 1,200 உறுப்பினர்கள் பங்கேற்றனர். வரைவு குடிமக்கள் பாதுகாப்பு மசோதா மற்றும் மாதிரி ஊர்க்காவல் படை மசோதா குறித்து விவாதிப்பதில் இதில் கவனம் செலுத்தப்பட்டது. இந்தியா முழுவதும் சிவில் பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் நடவடிக்கைகளில் நவீன தொழில்நுட்பத்தின்மூலம் செயல்திறனை மேம்படுத்துவதை இந்த மாநாடு தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**9. அண்மையில், மேற்கு இமயமலையில் கண்டுபிடிக்கப்பட்ட '*Anguiculus dicaprioi*' என்றால் என்ன?**

அ. சிலந்தி

ஆ. தட்டான்பூச்சி

**இ. பாம்பு ☑**

ஈ. தவளை



★ நடிகர் லியோனார்டோ டிகாப்ரியோவின் நினைவாக பெயரிடப்பட்ட '*Anguiculus dicaprioi*' என்ற புதிய பாம்பினத்தை மேற்கு இமயமலையில் அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். '*Colubridae*' குடும்பத்தைச் சேர்ந்த இந்தப் பாம்பு இனத்தில், 1800க்கும் மேற்பட்ட பாம்பு இனங்கள் உள்ளன. பல சிறிய பற்களைக் கொண்டுள்ள இந்தப்புதிய இனம், சுமார் 22 அங்குல நீளம் வரை வளர்கிறது. வலுவான மண்டையோடு மற்றும் செங்குத்தான குவிமாடம் போன்ற மூக்கு கொண்ட இது, சுமார் 6000 அடி உயரத்தில் வாழ்கிறது. பொதுவாக, 'டிகாப்ரியோவின் இமயமலைப் பாம்பு' என்று அழைக்கப்படும் இது இமாச்சல பிரதேசம், உத்தரகண்ட் மற்றும் நேபாளத்தில் காணப்படுகிறது. மே மாத இறுதியில் இருந்து ஆகஸ்ட் வரை மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும் இந்த பாம்புகள் நஞ்சற்றவையாகும்.

**10. 392 புள்ளிகளுடன் 2024 – தேசிய பாரா–நீச்சல் சாம்பியன்ஷிப்பை வென்ற மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. கர்நாடகா ☑**

இ. கேரளா

ஈ. மகாராஷ்டிரா




★ 24ஆவது தேசிய பாரா நீச்சல் போட்டியில் கர்நாடகா 392 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டம் வென்றது. மகாராஷ்டிரா 378 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும், ராஜஸ்தான் 248 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தையும் பிடித்தன. 2024 – தேசிய பாரா–நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டிகள் கோவா மாநிலத்தின் பனாஜியில் நடந்தது.

**11. அண்மையில், ஐம்பது ஏகலைவன் மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகளில் அமேசான் எதிர்கால பொறியாளர் திட்டத்தை அறிமுகப்படுத்திய அமைப்பு எது?**

அ. பழங்குடி மாணாக்கருக்கான தேசிய கல்விச் சங்கம் (NESTS) ☑

ஆ. CBSE

இ. ISRO

ஈ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

★ பழங்குடியின மாணாக்கருக்கான தேசிய கல்விச்சங்கமும் (NESTS) அமேசான் நிறுவனமும் இணைந்து அமேசான் எதிர்கால பொறியாளர் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை 50 ஏகலைவன் மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகளில் (EMRS) அறிமுகப்படுத்தியது. ஆந்திர பிரதேசம், குஜராத், கர்நாடகா, மத்திய பிரதேசம், ஒடிசா, தெலங்கானா மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களில் உள்ள பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இது பிளாக்செயின், செயற்கை நுண்ணறிவு, பிளாக் புரோகிராமிங் மற்றும் கோடிங்போன்ற வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களில் பயிற்சியளித்தலில் கவனம் செலுத்துகிறது. நவீன தொழில்நுட்ப கல்வியறிவுமூலம் பழங்குடியின மாணாக்கரை STEM வாழ்க்கைக்கு தயார்படுத்துவதே இதன் முதன்மை நோக்கமாகும்.

**12. வேளாண்மையில் நீர்ப்பற்றாக்குறை குறித்த ரோம் பேரறிவிப்பை சமீபத்தில் ஏற்றுக்கொண்ட அமைப்பு எது?**

அ. பன்னாட்டு வேளாண்மை மற்றும் உயிரி-அறிவியல்கள் மையம் (CABI)

**ஆ. உணவு மற்றும் உழவு அமைப்பு (FAO) ☑**

இ. மண் மற்றும் நீர் பாதுகாப்பு சங்கம் (SWCS)

ஈ. நீர் மற்றும் வேளாண் தகவல் மையம் (WAIC)

★ ஐநா அவையின் உணவு மற்றும் உழவு அமைப்பின் (FAO) உறுப்புநாடுகள், பிரதிநிதிகள் குழுவின் தலைவர்கள் மற்றும் வேளாண்மையில் நீர்ப்பற்றாக்குறைகுறித்த உலகளாவிய கட்டமைப்பின் பங்காளர்கள் உயர்மட்ட ரோம் நீர் உரையாடலின்போது வேளாண்மையில் நீர்ப்பற்றாக்குறைகுறித்த ரோம் பேரறிவிப்பை ஏற்றுக்கொண்டனர். இந்த நிகழ்வு FAOஇன் வருடாந்திர உலக உணவு மன்றத்துடன் இணைந்து நடந்தது. தட்பவெப்பநிலை நெருக்கடியால் மோசமடைந்து வரும் நீர்ப்பற்றாக்குறையை சமாளிப்பதை இந்த பேரறிவிப்பு நோக்கமாகக்கொண்டுள்ளது.

★ 2016இல் மராகேஷில் நடந்த ஐநா தட்பவெப்பநிலை மாநாட்டில் நீர்ப்பற்றாக்குறை சவால்களை எதிர்கொள்ளும் நாடுகளுக்கு உதவுவதற்காக வேளாண்மையில் நீர்ப்பற்றாக்குறைகுறித்த உலகளாவிய கட்டமைப்பு (WASAG) தொடங்கப்பட்டது. நீர்ப்பற்றாக்குறை பிரச்சினைகளை திறம்பட நிர்வகிப்பதில் நாடுகளுக்கு ஆதரவளிப்பதில் இந்த முயற்சி கவனம் செலுத்துகிறது.

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. 2024 – பெண்கள் இந்தியா ஓபன் கோல்ஃப் நிகழ்வு நடைபெறும் நகரம் எது?**

அ. சென்னை

ஆ. இந்தூர்

**இ. குருகிராம் ☑**

ஈ. ஜெய்ப்பூர்

★ ஹரியானா மாநிலம் குருகிராமில் 16ஆவது பெண்கள் இந்திய ஓபன் கோல்ஃப் போட்டியை இந்தியா நடத்தியது. இந்தப் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த 27 பேர் உட்பட 31 நாடுகளைச் சேர்ந்த 114 வீரர்கள் கலந்துகொண்டனர். இந்திய வீராங்கனைகளுள் ஹிட்டாஷி பக்ஷி, வாணி கபூர், கௌரிகா பிஷ்னோய், அமந்தீப் டிரால் மற்றும் ரிதிமா திலாவாரி ஆகியோர் அடங்குவர். அதிதி அசோக் 2016இல் இந்த மதிப்புமிக்க போட்டியில் வென்ற முதல் இந்தியர் என்ற வரலாறு படைத்தார். 2007இல் நிறுவப்பட்ட மகளிர் இந்திய ஓபன், இந்தியாவின் மிகவும் மதிப்புமிக்க மகளிர் கோல்ஃப் போட்டியாகும்.


**2. Remove Debris In–Orbit Servicing (RISE) திட்டத்துடன் தொடர்புடைய விண்வெளி அமைப்பு எது?**

அ. ISRO

**ஆ. ESA ☑**

இ. CNSA

ஈ. NASA



★ Remove Debris In–Orbit Servicing (RISE) திட்டம் என்பது ஓர் ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) திட்டமாகும்; இது புவிநிலை துணைக்கோள்களின் சுற்றுப்பாதையில் பொருத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் திறனை நிரூபிக்கும். எரிபொருள் நிரப்புதல் மற்றும் புதுப்பித்தல்மூலம் செயற்கைக்கோள்களின் ஆயுளை நீட்டிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. RISE ஆனது புதிய விண்வெளிக் குப்பைகளைத் தடுக்கும் மற்றும் சுற்றுப்பாதையில் ஒரு சுழற்சிப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும். 2028இல் தொடங்கப்படும் இந்தப் பணிக்கு இணை–நிதியளிப்பதற்காக D–Orbit உடனான €119 மில்லியன் ஒப்பந்தத்தில் ESA கையெழுத்திட்டுள்ளது.

**3. ஒவ்வோர் ஆண்டும் ஐநா நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?**

அ. அக்டோபர் 22

ஆ. அக்டோபர் 23

**இ. அக்டோபர் 24 ☑**

ஈ. அக்டோபர் 25



★ ஐநா நாள் அக்.24 அன்று கொண்டாடப்படுகிறது; இது 1945இல் ஐநா நிறுவப்பட்டதைக் குறிக்கிறது. ஐநா சாசனம் என்பது பாதுகாப்பு அவையின் ஐந்து நிரந்தர உறுப்பினர்கள் உட்பட கையொப்பமிட்ட பெரும்பான்மையினரால் அங்கீகரிக்கப்பட்டது. உலக வங்கி மற்றும் WHO போன்ற சிறப்பு அமைப்புகளின்மூலம் பன்னாட்டு அமைதி மற்றும் ஓர் அமைதியான உலகத்தை உருவாக்க ஐநா முனைகிறது. முதல் ஐநா மாநாடு 1945இல் சான் பிரான்சிஸ்கோவில் நடைபெற்றது; அது ஐநா சாசனத்தை அங்கீகரிக்க வழிவகுத்தது. 1971ஆம் ஆண்டில், ஐநா பொதுச்சபை ஐநா நாளை பொது விடுமுறையாகக் கடைப்பிடிக்க பரிந்துரைத்தது.

**4. அண்மையில் இந்தியாவின் 13ஆவது பெரிய துறைமுகமாக அறிவிக்கப்பட்ட பன்னாட்டு கொள்கலன் ஊர்தி மாற்ற துறைமுகம் (International Container Transshipment Port) அமைந்துள்ள தீவு எது?**

**அ. கிரேட் நிகோபார் ☑** ஆ. இலட்சத்தீவுகள்

இ. திருவரங்கம் ஈ. பாம்பன்



★ கிரேட் நிகோபார் தீவின் கலாத்தியா விரிகுடாவில் உள்ள பன்னாட்டு கொள்கலன் ஊர்திமாற்ற துறைமுகம் (ICTP) தற்போது இந்தியாவின் 13ஆவது மிகப்பெரிய துறைமுகமாகும். இது சிங்கப்பூர், கிள்ளான் மற்றும் கொழும்புபோன்ற முக்கிய மையங்களுக்கருகில் கிழக்கு–மேற்கு பன்னாட்டு வர்த்தகப்பாதையில் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. இந்தத் துறைமுகம் மலாக்கா நீரிணையிலிருந்து 40 கடல்மைல் தொலைவில் உள்ளது; இது உலக கடல்சார் வர்த்தகத்தில் 35%ஐ கையாளுகிறது. இந்தியாவின் 75% ஊர்திமாற்றம் செய்யப்பட்ட சரக்குகள் தற்போது வெளிநாட்டில் கையாளப்பட்டு வருகிறது; இதனை ICTP வெகுவாகக் குறைப்பதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியாவின் கிழக்குக் கடற்கரை, வங்காளதேசம் மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளிலிருந்து சரக்குகளை ஏற்றிச்செல்லும் இடமாக இது பேராற்றலைக் கொண்டுள்ளது.

**5. '*Clostridioides difficile*' பாக்டீரியாவால் உடலின் எந்தப்பகுதியில் தொற்று ஏற்படுகிறது?**



அ. மூளை

ஆ. ஆசனவாய்

**இ. பெருங்குடல் ☑**

ஈ. மலக்குடல்

★ அதீத தொற்று பாக்டீரியமான '*Clostridioides difficile*'க்கு ஆராய்ச்சியாளர்கள், mRNA–அடிப்படையிலான தடுப்பூசியை உருவாக்கி வருகின்றனர். '*Clostridioides difficile*' என்பது பெருங்குடலின் மிகநீளப்பகுதியான முன்பெருங்குடலில் வயிற்றுப்போக்கு முதல் உயிருக்கு ஆபத்தான பெருங்குடல்சேதம் வரையிலான அறிகுறிகளுடன் தொற்றினை ஏற்படுத்துகிறது. இத்தொற்று பெரும்பாலும் நோய்க் கிருமி கட்டுப்படுத்தியின் பயன்பாட்டிற்குப் பிறகு ஏற்படுகிறது. முக்கியமாக மருத்துவமனைகள் அல்லது நீண்டகால பராமரிப்பிலிருந்த மூத்தோர்களை இது பாதிக்கிறது. அதே நேரம் பிற வயதினரும் இதனால் பாதிக்கப்படலாம்.

★ இதன் அறிகுறிகளில் நீர் வயிற்றுப்போக்கு, லேசான வயிற்றுப்பிடிப்பு, நீரிழப்பு மற்றும் கடுமையான சந்தர்ப்பங்களில், நச்சு மெகாகோலன் (பெருங்குடல் அழற்சி மற்றும் விரிவாக்கம்) ஆகியவை அடங்கும். இத்தடுப்பூசி இக்கடினமான–சிகிச்சையளிக்கக் கூடிய இத்தொற்றுநோயைச் சமாளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**6. அண்மையில், இந்திய இராணுவம், சாணக்கிய பாதுகாப்பு பேச்சுவார்த்தையை நடத்திய இடம் எது?**




அ. சென்னை

ஆ. ஜெய்ப்பூர்

இ. குருகிராம்

**ஈ. புது தில்லி ☑**

★ 2024 அக்.24–25 அன்று புது தில்லியில் இரண்டாவது சாணக்யா பாதுகாப்பு பேச்சுவாரத்தையை இந்திய ராணுவம் நடத்தியது. தேசிய மற்றும் பன்னாட்டுக் கொள்கை வகுப்பில் பாதுகாப்பை ஒருங்கிணைப்பதில் கவனம் செலுத்தும் இதன் கருப்பொருள், "Drivers in Nation Building: Fuelling Growth Through Comprehensive Security" என்பதாகும். அமெரிக்கா, ரஷ்யா, இஸ்ரேல் மற்றும் இலங்கையிலிருந்து கொள்கை வகுப்பாளர்கள், பாதுகாப்புப்பணியாளர்கள், அறிவியலாளர்கள் மற்றும் பேச்சாளர்கள் ஆகியோர் முக்கிய பங்கேற்பாளர்களாக உள்ளனர். இந்த நிகழ்வு, "விக்ஷித் பாரத் @2047"க்கான இந்தியாவின் உத்திசார் இலக்குகளை ஆராயும்.

**7. 2024 அக்டோபரில் உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. உலக வங்கி

**ஆ. பன்னாட்டு செலாவணி நிதியம் (IMF) ☑**

இ. ஐநா வளர்ச்சித் திட்டம் (UNDP)

ஈ. ஐநா சுற்றுச்சூழல் திட்டம் (UNEP)

★ பன்னாட்டு செலாவணி நிதியம் (IMF) நடப்பு 2024 – அக்டோபரில் உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட (WEO) அறிக்கையை வெளியிட்டது. 2024 & 2025ஆம் ஆண்டுகளில் உலகளாவிய வளர்ச்சி 3.2%ஆக நிலையானதாக இருக்கும் என கணித்துள்ளது. உலக GDP வளர்ச்சியின் மதிப்பீடுகளை வழங்கும் WEOஆனது IMFஆல் ஆண்டுக்கு இருமுறை வெளியிடப்படுகிறது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 2024இல் 7%ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்கப்பொருளாதாரம் 2024இல் 2.8%ஆகவும், 2025இல் 2.2%ஆகவும் இருக்கும். சீனாவின் வளர்ச்சி 2024இல் 4.8%ஆகவும், 2025இல் 4.5%ஆகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

**8. அண்மையில், 2024 – உலகளாவிய இனவெறி எதிர்ப்பு சாம்பியன்ஷிப் விருதை வென்ற ஊர்மிளா சௌத்ரி சார்ந்த நாடு எது?**

அ. மியான்மர்

ஆ. பூடான்

**இ. நேபாளம் ☑**

ஈ. இந்தியா



★ நேபாளத்தைச்சேர்ந்த ஊர்மிளா சௌத்ரி, 2024ஆம் ஆண்டுக்கான உலகளாவிய இனவெறி எதிர்ப்பு சாம்பியன்ஷிப் விருதை வென்றார்; இது அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ஆண்டனி J பிளிங்கனால் வழங்கப்பட்டது. இன சமத்துவம், நீதி மற்றும் மனித உரிமைகளை முன்னேற்றுவதில் அவராற்றிய பணிக்காக இவ்விருது வழங்கப்பட்டு உள்ளது. ஊர்மிளா சௌத்ரி 17 வயதில் குழந்தை அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டு, முன்னாள் கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு அதிகாரமளித்து, 'Freed Kamlari Development Forum'ஐ இணைந்து நிறுவினார்.

★ நேபாளத்தில் ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்காகப் போராடும் அவர், தனது நோக்கத்தை மேம்படுத்துவதற்காக சட்டம் பயின்றுவருகிறார். சிறுமிகளை அடிமைத்தனத்திற்கு விற்கும் சட்டத்திற்குப் புறம்பான 'கமலாரி' அமைப்பு, மக்கள் எதிர்ப்புகளுக்குப்பிறகு 2013இல் ஒழிக்கப்பட்டது.


**9. Laser Interferometer Space Antenna (LISA) திட்டமானது NASAஉக்கும் எந்த விண்வெளி நிறுவனத்திற்கும் இடையிலான கூட்டுத்திட்டமாகும்?**

அ. ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம் (JAXA)

ஆ. சீன தேசிய விண்வெளி நிர்வாகம் (CNSA)

இ. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO)

**ஈ. ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) ☑**



★ Laser Interferometer Space Antenna (LISA) திட்டத்திற்கான ஆறு தொலைநோக்கிகளின் முன்மாதிரியை NASA அறிமுகப்படுத்தியது. LISA என்பது நேஷனல் ஏரோநாட்டிக்ஸ் மற்றும் ஸ்பேஸ் அட்மினிஸ்ட்ரேஷன் (NASA) மற்றும் ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு கூட்டுத்திட்டமாகும்; இது 2030களின் நடுப்பகுதியில் தொடங்கப்படவுள்ளது. 1.6 மில்லியன் மைல்கள் இடைவெளியில் முக்கோண (△) வடிவில் நிலை நிறுத்தப்பட்ட மூன்று விண்கலங்களைப் பயன்படுத்தி ஈர்ப்பலைகளைக் கண்டறிவதே இதன் இலக்காகும். கருந் துளைகள், புவியீர்ப்பு மற்றும் பேரண்டத்தின் விரிவாக்கம் ஆகியவற்றை ஆராய்வதில் இது பங்குவகிக்கிறது.

**10. ஆண்டுதோறும் உலக போலியோ நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. அக்டோபர் 23

**ஆ. அக்டோபர் 24 ☑**

இ. அக்டோபர் 25

ஈ. அக்டோபர் 26



★ முதல் போலியோ தடுப்பூசியை உருவாக்கிய ஜோனஸ் சாக்கை கௌரவிப்பதற்காக ரோட்டரி இன்டர்நேஷனலால் நிறுவப்பட்ட உலக போலியோ நாள் ஆண்டுதோறும் அக்டோபர்.24 அன்று அனுசரிக்கப்படுகிறது. போலியோ என்பது மிகவும் தொற்றக்கூடிய வைரஸ் நோயாகும்; இதனால் பக்கவாதம் மற்றும் மரணம்கூட ஏற்படுகிறது. பெரும்பாலும் குழந்தைகளில் காணப்படும் இந்த நோய்த்தொற்றுக்கு எந்தச் சிகிச்சையும் கிடையாது. தடுப்பூசியின்மூலம் மட்டுமே இதனை தடுக்கமுடியும். கடந்த 2009ஆம் ஆண்டில் இந்தியாவில் 741 போலியோ பாதிப்புகள் பதிவாகியுள்ளன; இது உலகளவில் அதிகம். இந்தியாவில் கடைசியாக 2011 ஜனவரியில் மேற்கு வங்க மாநிலம் ஹௌராவில் போலியோ பாதிப்பு ஏற்பட்டது.

11. **சமீபத்தில், 2024 – சமத்துவமின்மையைக் குறைப்பதற்கான உறுதிப்பாட்டுக் குறியீட்டை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. உலக வங்கி

**ஆ. ஆக்ஸ்பாம் மற்றும் டெவலப்மெண்ட் ஃபைனான்ஸ் இன்டர்நேஷனல் ☑**

இ. பன்னாட்டு செலாவணி நிதியம்

ஈ. ஐநா வளர்ச்சித் திட்டம்

★ 2024 – சமத்துவமின்மையைக் குறைப்பதற்கான உறுதிப்பாட்டுக் குறியீடானது பல நாடுகள் சமூக–பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கத் தவறிவருகின்றன என்பதைக் காட்டுகிறது. ஆக்ஸ்பாம் மற்றும் டெவலப்மெண்ட் ஃபைனான்ஸ் இன்டர்நேஷனல் (DFI) வெளியிட்ட அறிக்கை, பொதுச்சேவைகள், முற்போக்கு வரிவிதிப்பு மற்றும் தொழிலாளர் உரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் 164 நாடுகளை தரவரிசைப்படுத்துகிறது. நார்வே, கனடா மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை சிறந்த செயல்திறன் கொண்டவை; தெற்கு சூடான் மற்றும் நைஜீரியா ஆகியவை மோசமான செயல்திறன் கொண்டவை. இக்குறியீட்டில் இந்தியா 127ஆவது இடத்தில் உள்ளது.

★ பெலாரஸ், கோஸ்டாரிகா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகியவை குறைந்த மற்றும் நடுத்தர வருமானங்கொண்ட நாடுகளில் முன்னணியில் உள்ளன.

12. **இந்தியாவின் 55ஆவது பன்னாட்டு திரைப்பட விழாவில் (IFFI) 'கவனம் செலுத்தப்படும் நாடு – Country of Focus' என்று அறிவிக்கப்பட்ட நாடு எது?**

அ. ரஷ்யா

**ஆ. ஆஸ்திரேலியா ☑**

இ. பிரான்ஸ்

ஈ. நியூசிலாந்து



★ இந்தியாவின் 55ஆவது பன்னாட்டு திரைப்பட விழாவில் (IFFI) ஆஸ்திரேலியா "கவனம் செலுத்தப்படும் நாடு" என்று தகவல் & ஒலிபரப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது. இப்பிரிவில் ஆஸ்திரேலியாவின் கதைசொல்லல் மரபுகள் மற்றும் பழங்குடி மற்றும் சமகால கதைகளை முன்னிலைப்படுத்துகிற ஏழு ஆஸ்திரேலிய திரைப்படங்கள் இடம்பெறும்.

★ இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையிலான ஓர் ஒலியும்–ஒளியும் இணை தயாரிப்பு ஒப்பந்தத்திற்குப் பிறகு, இணை–தயாரிப்புகளை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த அறிவிப்பு வந்துள்ளது. இந்த ஒப்பந்தம் திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு சலுகைகள், கலாச்சார பரிமாற்றம் மற்றும் புதுமையான சினிமா திட்டங்களில் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும். 55ஆவது IFFI கோவாவில் 2024 நவ.20 முதல் 28 வரை நடைபெறும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்திய பொருளாதாரம் 7% வளரும்: மத்திய நிதியமைச்சகம்.**

நிகழ் நிதியாண்டில் நாட்டின் பொருளாதாரம் 6.5 சதவீதம் முதல் 7 சதவீதம் வரை வளர்ச்சியடையும் என்று மத்திய நிதியமைச்சக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு மாத பணவீக்க சரிவுக்குப்பின்னர், கடந்த செப்டம்பரில் நுகர்வோர் விலை பணவீக்கம் அதிகரித்தது. இதற்கு சீரற்ற பருவமழையால் சில காய்கறி விநியோகத்தில் ஏற்பட்ட பாதிப்புகளே பிரதான காரணம்.

செப்டம்பர் இறுதியில் அந்நிய செலாவணி கையிருப்பு $700 பில்லியன் டாலர்களை (சுமார் ₹58.85 இலட்சம் கோடி) தாண்டியது. இந்த அளவுக்கு அந்நிய செலாவணியை கையிருப்பு வைத்திருக்கும் முதல் 4 நாடுகளில் இந்தியாவும் இடம்பெற்றுள்ளது. வேலைவாய்ப்பு சந்தையைப் பொருத்தவரை, உற்பத்தித்துறையில் வேலைவாய்ப்பு தொடர்ந்து அதிகரித்துள்ளது.

---

**2. குஜராத்தில் டாடா ராணுவ விமான ஆலை.**

குஜராத்தின் வதோதரா நகரில் நாட்டின் முதல் தனியார் ராணுவ விமான தயாரிப்பு ஆலையை ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸுடன் இணைந்து பிரதமர் நரேந்திர மோதி தொடங்கி வைத்தார்.

கடந்த 5–6 ஆண்டுகளில் இந்தியாவில் ஏறக்குறைய 1,000 பாதுகாப்புத்துறை புத்தொழில் நிறுவனங்கள் (ஸ்டார்ட்–அப்) உருவாகியுள்ளன. கடந்த பத்து ஆண்டுகளில், இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதி 30 மடங்கு அதிகரித்துள்ளது. இந்தியா தற்போது 100க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பாதுகாப்பு உபகரணங்களை ஏற்றுமதி செய்கிறது.

---

**3. வெப்ப அலை வீச்சு பேரிடராக அறிவிப்பு: தமிழ்நாடு அரசு.**

வெப்ப அலை வீச்சை மாநிலம் சார்ந்த பேரிடராக அறிவித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி, வெப்ப அலை வீச்சால் பாதிக்கப்பட்டு உயிரிழப்போரின் குடும்பத்தினருக்கு ₹4 இலட்சம் நிவாரண நிதி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

---

**4. கபீர் புரஸ்கார் விருது.**

சமுதாய மற்றும் வகுப்பு நல்லிணக்கத்துக்கான கபீர் புரஸ்கார் விருது ஒவ்வோராண்டும், முதலமைச்சரால் குடியரசு நாள் விழாவின்போது வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் வசிக்கும் அனைத்து இந்திய குடிமக்களும் (ஆயுதப்படை வீரர்கள், காவல், தீயணைப்புத்துறை மற்றும் அரசுப்பணியாளர்களின் சமுதாய நல்லிணக்க செயல், அவர்கள் ஆற்றும் அரசுப்பணியின் ஒருபகுதியாக நிகழும் பட்சத்தில் நீங்கலாக) இவ்விருதினைப் பெறத்தகுதியுடையவராவர்.

இந்த விருது ஒரு சாதி, இனம், வகுப்பைச் சார்ந்தவர்கள் பிற சாதி, இன, வகுப்பைச் சார்ந்தவர்களையோ அல்லது அவர்களது உடைமைகளையோ வகுப்புக்கலவரத்தின்போதோ அல்லது தொடரும் வன்முறையிலோ காப்பாற்றியது தெரிகையில் அவரது உடல் மற்றும் மனவலிமையைப் பாராட்டும் வகையில் வழங்கப்படுகிறது. மூன்று பிரிவுகளில், தலா ஒரு நபர் வீதம் மூவருக்கு வழங்கப்படுகிறது. முறையே ₹20,000, ₹10,000 மற்றும் ₹5 ஆயிரத்துக்கான காசோலை இதில் அடங்கும்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8